# காளையார்கோயில் புராணம்
# (உரைச் சுருக்கம்)

## முனைவர். கி. காளைராசன்
## முனைவர். நா. வள்ளி



உ
சிவமயம்
புலிக்கரை ஐயனார் துணை

பாண்டி நாட்டிலுள்ள
திருக்கானப்பேர், சோதிவனம், தக்கனகாளிபுரம் என்ற

# காளையார்கோயில் தல புராணம் (கதைச் சுருக்கம்)



இந்நூல்
தஞ்சாவூர், சதாவதானம் பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் இயற்றி,

தேவகோட்டை ஜமீன்தார்
ஸ்ரீமான் – அள.அரு. இராமசாமிச் செட்டியாரவர்கள்
விருப்பத்தின்படி, சென்னை வெ.நா.ஜுபிலி அச்சுக்கூடத்தில்
**1899** ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட காளையார்கோயில் புராணப் பாடல்களின் கதைச் சுருக்கம் ஆகும்.



சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பரம்பரை அறங்காவலர் மாட்சிமை
பொருந்திய ராணி சாகிபா கெளரிவல்லப
து**.**ச**.**கா**.** மதுராந்தகி நாச்சியார் அவர்கள்

## நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | காளையார்கோயில் புராணம்<br>(கதைச் சுருக்கம்) |
| மூல நூல் ஆசிரியர் | : | தஞ்சாவூர், சதாவதானம் பிர்ம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரவர்கள் |
| காளையார்கோயில் புராணம் (கதைச் சுருக்கம்) ஆசிரியர் | : | **1)** முனைவர் நா. வள்ளி அவர்கள்,<br>(மேனாள் முதல்வர், இராமசாமி தமிழ்க்கல்லூரி), **7,**<br>லெட்சுமணன் செட்டியார் வீதி, காரைக்குடி **630 001,**<br>**(94437 48241)**<br><br>**2)** திருப்பூவணம் காசிஸ்ரீ. முனைவர் நா.ரா.கி.<br>காளைராசன் அவர்கள்,<br>**28** அ, குருநாதர்கோயில் தெரு,<br>கோட்டையூர் **630 106, (9443501912)**<br>**kalairajan26@gmail.com** |
| வெளியிடு | : | **FreeTamilEbooks.com** |
| நூலாக்கத்திற்கு உதவியவர்கள் | : | **1)** தேவகோட்டை ஜமீன்தார் ஸ்ரீமான்<br>அள.அரு.சோம. நாராயணன் செட்டியார் அவர்கள்,<br>தேவகோட்டை<br><br>**2)** பேராசிரியர். ராம. திண்ணப்பன் செட்டியார்<br>அவர்கள், **5, P.L.S** சாலை, தேவகோட்டை |
| மூலநூல் தட்டச்சு செய்து உதவியவர் | : | திருமதி. ச. சொர்ணம் அவர்கள்,<br>அழகப்பா பல்லைக்கழகம்,காரைக்குடி |
| பதிப்பகம் | : | சோ.நாகலெட்சுமி, 28 அ, குருநாதர்கோயில் தெரு,<br>கோட்டையூர் 630106<br>சிவகங்கை மாவட்டம். |
| **உரிமை** | : | *Creative Commons Attribution-NonCommercial-NoDerivatives 4.0 International License.*<br>*கிரியேட்டிவ்காமன்ஸ். எல்லாரும்படிக்கலாம், பகிரலாம்.* |

**காளையார்கோயில் புராணம்**
**(கதைச்சுருக்கம்)**

## பொருளடக்கம்

*காளையார்கோயில் திருத்தல இருப்பிடம்.................................8*
*கோயில் அமைப்பு சந்நிதிகளும் தீர்த்தங்களும்.........................9*
*அணிந்துரை..............................................................................10*
*பதிப்புரை.................................................................................11*
*வாழ்த்துரை..............................................................................12*
*அருளுரை..................................................................................13*
*மதிப்புரை.................................................................................14*
*நூலாசிரியர் உரை.....................................................................15*
*திருக்கானப்பேர் என்னும் காளையார்கோயில்........................19*
*தேவாரப் பதிகங்கள்..................................................................19*
*திருப்புகழ் திருக்கானப்பேர் (1332)..........................................24*
*திருக்கானப்பேர் என்ற...............................................................26*
*காளையார்கோயில் புராணம் கதைச்சுருக்கம்...........................26*
*(2) நாட்டுப் படலம்.....................................................................31*
*(3) நகரப் படலம்..........................................................................32*
*(4) நைமிசப் படலம்......................................................................33*
*(5) அகத்தியர் ஞானோபதேசம் பெற்ற படலம்.........................36*
*(6) காளி திரு அவதாரப் படலம்...................................................38*
*(7) காளி பட்டாபிடேகப் படலம்....................................................41*
*(8) சண்டாசுரன் வதைப் படலம்...................................................43*
*(9) காளி பூசனைப் படலம்............................................................49*
*(10) சொர்ணவல்லி திருமணப்படலம்..........................................51*
*(11) தேவர்கள் பூசித்த படலம்......................................................54*
*(12) தேவதாசப் படலம்..................................................................56*
*(13) இலக்குமி சாபந்தீர்ந்த படலம்..............................................58*
*(14) உருத்திர சாபம் தீர்ந்த படலம்...........................................59*
*(15) வீரசேன பாண்டியப் படலம்..................................................61*
*(16) வரகுண பாண்டியப் படலம்..................................................64*

*(17) சுகந்தகேசிப் படலம்...............................................................66*
*(18) விக்கிரமசோழன் சிவலிங்கப் பிரதிட்டைப் படலம்......69*
*(19) புட்கரப் படலம்.....................................................................71*
*(20) பேய்கள் சாபம் நீக்கிய படலம்.........................................73*
*(21) கங்கை பாபந்தீர்த்த படலம்.............................................74*
*(22) கவுதமப் படலம்....................................................................75*
*(23) வெள்ளையானை சாபந்தீர்த்த படலம்..............................77*
*(24) இந்திரன் சாபம் நீங்கு படலம்...........................................78*
*(25) கண்ணுவப் படலம்..............................................................80*
*(26) தேவசேனப் படலம்..............................................................81*
*(27) மகா காளேசப் படலம்.........................................................82*
*(28) சோம நாதப் படலம்..............................................................83*
*(29) சுந்தரமூர்த்திப் படலம்........................................................84*
*(30) தேவராதப் படலம்.................................................................85*
*(31) காந்த புராண சங்கர சங்கிதையில் உள்ள...........................86*
*கதாசங்கிரகப் படலம்.................................................................86*
*(32) தல விசேடப் படலம்............................................................87*
*(33) முனிவர் பூசித்த படலம்......................................................88*
*காளையார்கோயிலில் நகரத்தார் திருப்பணிகள்......................90*
*சங்ககாலப் பாடல்களில் கானப்பேர்.........................................93*


# காளையார்கோயில் திருத்தல இருப்பிடம்

**மதுரை,சிவகங்கை – தொண்டி நெடுஞ்சாலையில்**, மதுரையிலிருந்து கிழக்கே **60 .**கி**.**மீ**.** தொலைவிலும்**,** சிவகங்கையிலிருந்து கிழக்கே **19.**கி**.**மீ**.** தொலைவிலும் காளையார்கோயில் உள்ளது**. காரைக்குடியிலிருந்து – இளையாங்குடி வழியாகப் பரமக்குடி செல்லும் சாலையில்**, காரைக்குடியிலிருந்து தெற்கே **38** கி**.**மீ தொலைவிலும்**,** பரமக்குடியிலிருந்து வடக்கே **38** கி**.**மீ**.** தொலைவிலும் காளையார்கோயில் உள்ளது**.** சென்னை**,**திருச்சியிருந்து காரைக்குடி வழியாக இராமேச்சுரம் செல்லும் **அனைத்துத் தொடர்வண்டிகளும் சிவகங்கையில் நிற்கும்** . மதுரை**,** சிவகங்கையில் இருந்து காளையார்கோயிலுக்கு அதிக எண்ணிக்கையில் பேருந்துகள் உள்ளன**.**




**1.**பாண்டியர்கோட்டை **2.**உருத்தரதீர்த்தம்**, 3.**வாள்மேல்நடந்தாள் அம்மன்கோயில் **, 4.**ஊரணி**, 5.**பேருந்து நிலையம் **6.**கோயில்**, 7.**யானைமடு தெப்பம் **, 8** பெருமாள்கோயில்**.**

# கோயில் அமைப்பு சந்நிதிகளும் தீர்த்தங்களும்




**1.** யானைமடு, பிள்ளையார்கோயில், **2.** சந்திர தீர்த்தம், **3.** செல்வகணபதி, **4.** சோமேசர் சந்நிதி, **5.**சிவகங்கை தீர்த்தம், **6.**காளீசர் சந்நிதி, **7.**கௌரி தீர்த்தம், **8.** நவகிரகங்கள், சரசுவதி தீர்த்தம், **9.** சுந்தரேசுவரர் சந்நிதி, **10.**மீனாட்சி சந்நிதி, **11.**சொர்ணவல்லி சந்நிதி, **12.** சண்முகநாதர் சந்நிதி, **13.** மருதுமன்னர்கள் கட்டிய ராசகோபுரம், **14.** வரகுணபாண்டியன் கட்டிய ராசகோபுரம், **15.** சின்னதேர் **16.**பெரியதேர். **17.** சவுந்தரநாயகி சந்நிதி.

காளையார்கோயில் தல புராணம் (கதைச் சுருக்கம்)

சிவகங்கை **சமஸ்தானம்** தேவஸ்தானம்



பா. இளங்கோ, பி.காம்., பி.எல்.,
மேலாளர்

நாள் **09.11.2015**

# அணிந்துரை

காளையார்கோயிலும் மதுரையும் கிழக்கு மேற்காக ஒரே நேர்கோட்டில் உள்ளன. இதனால், காலையில் காளையார்கோயில் கோபுரத்திலிருந்து மேற்கே பார்த்தால் மதுரைக் கோபுரம் நன்கு தெரிந்திடும், மாலையில் மதுரைக் கோபுரத்திலிருந்து கிழக்கே பார்த்தால் காளையார்கோயில் கோபுரம் நன்கு தெரிந்திடும். இவ்வாறாகக் காளையார்கோயிலின் கோபுரத்தை உயர்த்திக் கட்டினர் மருது சகோதரர். அந்தக் கோபுரத்தை வெள்ளையர்களிடமிருந்து காப்பதற்காகத் தங்களது உயிரையே ஈந்தனர். இந்தியப் பெருநாட்டில் வாழ்ந்த அரசர்கள் தங்களது ஆளுகைக்கு உட்பட்ட கோயில்களை எல்லாம் அரசிடம் கையளித்து விட்ட நிலையில், எவ்வளவோ இடர்ப்பாடுகள் இருந்த போதிலும், சிவகங்கை மன்னர்கள் தங்களது கோயில்களைத் தாங்களே நிருவாகம் செய்து, இறைத்தொண்டு செய்திடும் பண்டைய பாரம்பரியப் பெருமையைக் காத்து வருகின்றனர். அவ்வகையில், காளையார்கோயிலானது சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்தில் மேதகு து.ச.கா. மதுராந்தகி நாச்சியார் அவர்களது ஆளுகைக்கு உட்பட்டது. தொன்மைக்காலம் தொட்டே காளையார்கோயில் பாண்டியர்களின் துணைத் தலைநகரமாகவும், கடல்வணிகத் தலைநகரமாகவும் திகழ்ந்துள்ளது. வேங்கைமார்பன், வீரசேனன், வரகுணபாண்டியன், கோச்சடையான் முதலான பண்டைய பாண்டிய மன்னர்களது நேரடி ஆட்சியின் கீழ் திருக்கோயிலில் பல்வேறு திருப்பணிகள் நடைபெற்றுள்ளன. தேவசேனன் என்ற சிங்கள மன்னனின் பாவங்கள் நீங்கப் பெற்ற திருத்தலம். மேதகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களது நல்லாசியுடன் காளையார்கோயிலுக்குச் சிறப்பான முறையில் கும்பாபிடேகம் **09.09.2015** அன்று நடைபெற்றது. இப்போது, காளையார்கோயிலின் தொன்மைச் சிறப்புகள் அனைத்தையும் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் முனைவர்.நா.வள்ளி மற்றும் கி.காளைராசன் அவர்கள் காளையார்கோயில் புராணத்திற்கு உரை எழுதிக் கதைச்சுருக்கமாகப் புத்தகமாக வெளியிடுவதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சி அடைந்து பாராட்டுகிறேன்.

(பா. இளங்கோ)

## தேவகோட்டை திருப்பணிச் செம்மல் ஜமீன்தார்
## ஸ்ரீமான் அள.அரு.சோம. நாராயணன் செட்டியார்,

# *பதிப்புரை*

நாள் **....11.2015**



இராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேதுபதி அவர்களின் நெருங்கிய நண்பராகத் தேவகோட்டை ஸ்ரீமான் அள.அரு.இராமசாமிச் செட்டியார் அவர்கள் இருந்தார் . 1870 ஆம் ஆண்டளவில் மைனராக இருந்த பாஸ்கரசேதுபதி அவர்களுக்கு அள.அரு.இராமசாமிச் செட்டியார் அவர்கள் எவ்வித எழுத்துபூர்வமான ஆதாரமும் இல்லாமல் ரூபாய் 3½ இலட்சம் வரை பணம் கொடுத்துள்ளார். பின்னர் பாஸ்கரசேதுபதி அவர்கள் மன்னராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டவுடன் தேவகோட்டையையும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும் செட்டியாருக்குக் கொடுத்து , "ஜமீன்தார்" ஆக்கிச் சன்னது வழங்கியுள்ளார் . ஜமீன்தார் குடும்பத்தினர் உப்பூர், இராமேச்சுரம், ஆவுடையார்கோயில், வைகல், கொடுமுடி முதலான பல திருத்தலங்களில் திருப்பணிகள் செய்துள்ளனர் . மன்னர் முத்துவடுகநாதத் தேவர் மற்றும் மருதுசகோதரர் இவர்களுடன் ஆங்கிலேயர் போரிட்ட காரணத்தினால் மக்கள் நடமாட்டம் இல்லாமல் இருந்த காளையார்கோயில் ஊரை மீண்டும் உருவாக்கியவர்கள் ஜமீன்தார் குடும்பத்தினர்.

ஸ்ரீமான்.அள.அரு.இராமசாமிச் செட்டியார் அவர்கள் பெரும் பொருட்செலவில், **1900** ஆம் ஆண்டு திருப்பணிகள் பல செய்து நகரத்தார் பெருமக்களுடன் இணைந்து காளையார்கோயில் கும்பாபிடேகத்தைச் சிறப்பான முறையில் நடத்தியுள்ளார். அதன் தொடர்ச்சியாக ஸ்ரீமான்.அள.அரு.இராம. அவர்களது விருப்பத்தின்படி தஞ்சாவூர் சதாவதானம் பிர்ம்மஸ்ரீ.சுப்பிரமணிய ஐயரவர்களால் காளையார்கோயில் புராணம் பாடப்பெற்று வெளியிடப் பெற்றுள்ளது. அதேபோன்று, **2015** ஆம் ஆண்டு நடைபெற்றுள்ள கும்பாபிடேகத்தின் தொடர்ச்சியாகச் சுமார் **115** ஆண்டுகளுக்குப் பின்னர் காளையார்கோயில் தலபுராணத்திற்கு உரை எழுதி, **"காளையார்கோயில் புராணம் (கதைச் சுருக்கம்)"** என்ற பெயரில் நூலாக்கம் செய்து, வெளியிடுவது சிறப்புடையதாக உள்ளது.

**(ஜமீன்தார் அள.அரு.சோம.நா.)**

**ALAGAPPA UNIVERSITY**
(Re-accredited with 'A' Grade by NAAC)
ALAGAPPA NAGAR, KARAIKUDI- 630 003, TAMIL NADU, INDIA.

Prof. S.Subbiah, M.A., M.Ed., M.Phil., Ph.D.,
VICE- CHANCELLOR

Off : 04565 - 225200
Resi : 04565 - 225201
Fax : 04565 - 225202
Mobile : 94890 79080, 94422 82517
E-mail : vicechancelloralu@gmail.com



நாள் **03.11.2015**

# வாழ்த்துரை

அழகப்ப செட்டியார் அவர்களது மிகப் பெரிய கல்விக் கொடையால் தோன்றிய கல்விநிறுவனங்களை உள்ளடக்கி, தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர்.எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களால் **1985-**ஆம் ஆண்டு மே மாதம் அழகப்பா பல்கலைக்கழகம் உருவாக்கப் பெற்றது. பின்னர் தமிழக முதல்வர் செல்வி.ஜெ.ஜெயல்லிதா அவர்களது நல்லாட்சியில் இராமநாதபுரம் சிவகங்கை மாவட்டக் கல்லூரிகள் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றன. இதனால், பல்கலைக்கழகம் நல்லதொரு விருட்சமாகச் செழித்து வளர்ந்து, இந்தியாவில் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

பல்கலைக்கழகம் துவங்கப்பெற்ற **1985-**ஆம் ஆண்டே பல்கலைக்கழகப் பணியில் சேர்ந்து, தமிழில் முனைவர் பட்டம் பெற்று, துணைப்பதிவாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார் முனைவர்.கி. காளைராசன் அவர்கள். இவர், இவருடைய குலதெய்வமான தமராக்கிநாடு கண்டாங்கிபட்டி கிராமம் அருள்மிகு புலிக்கரை ஐயனாரிடமும், தான் பிறந்த காளையார்கோயிலிடத்திலும், தான் வளர்ந்த திருப்பூவணத்திடமும், தான் படித்த மதுரை மீதும் பாச நேசம் மிகுந்தவர். இதனால் திருப்பூவணம் கோயிலை ஆய்வு செய்து "திருப்பூவணக்காசி", "திருப்பூவணப் புராணம்", "பாவம்போக்கும் பூவணம்" என்று மூன்று நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இவரது நூல்களைக் கண்ட ஆங்கிலப் பேராசிரியர் செல்லப்பன் அவர்கள், "நீ வளர்ந்த ஊருக்கு உரிய புராணத்தைப் புத்தகமாகப் போட்டுவிட்டாய், நீ பிறந்த ஊரான காளையோர்கோயில் புராணத்தை வெளியிட வேண்டாமா?" என்று கேட்க, அவரது சொல்லையே சொர்ணகாளீசுவரருடைய ஆணையாக எடுத்துக் கொண்டு, பெரிதும் முயன்று, இவரது நெறியாளர் முனைவர்.நா.வள்ளி அவர்களுடன் காளையார்கோயில் புராணத்திற்கு உரை எழுதி நூலாக்கம் செய்து வெளியிடுவது பாராட்டுதற்கு உரியது. கி.காளைராசன் அவர்கள் இதுபோன்றே திருவாப்புடையார் புராணத்தையும் மற்றும் சூரைமாநகர்ப் புராணத்தையும் நூலாக்கம் செய்து வெளியிட வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

சொ. சுப்பையா

**காளையார்கோயில் திருக்கோயில்**
**பரம்பரை ஸ்தானிகம் காளீசுவர குருக்கள்**

# அருளுரை

நாள் **....11.2015**

காளையார்கோயில், மதுரையைப் போன்றே மிகவும் பழமையான பாண்டிய நாட்டுத் திருத்தலம். **48** சதுர் யுகங்களுக்கு முன்பே சுயம்புவாகத் தோன்றியவர் காளீசர். “பரத கண்டத்தில் **1008** காளிபுரங்கள் இருந்தாலும், அவற்றில் மிகவும் புகழுடையன இரண்டு. ஒன்று வடநாட்டில் உள்ள உத்தரகாளிபுரம், மற்றது தென்னாட்டில் உள்ள தக்கன காளிபுரம் என்ற காளையார்கோயில் ஆகும்“ என்று சிவபெருமானால் திருக்கைலாயத்தில் அருளிச் செய்யப்பெற்ற சிறப்புடையது. திசை தெய்வங்களால் எட்டுத் திசைகளிலும் சிவலிங்கங்கள் அமையப் பெற்ற திருத்தலம்.

பதினெட்டு மகாபுராணங்களுள் ஒன்றான உன்னதம் நிறைந்த பிரமகைவர்த்த புராணத்தில், காளையார்கோயில் புராணம் இடம் பெற்றுள்ளது. இதில் காளீசரின் திருமேனியில் வல்லிக்கொடி படர்ந்துள்ளது போன்ற தோற்றத்தில், காளிதேவியின் கிங்கிணியும் சதங்கையும் வடிவுடன் தெரிகின்றன என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. இவ்வாறு சிவலிங்கத்தில் காளிதேவி ஐக்கியமாகி உள்ளதை உலகின் வேறு எந்தச் சிவலிங்கத்திலும் காண இயலாது. சுயம்புலிங்கம், காரணலிங்கம், காரியலிங்கம் என மூன்று சிவலிங்கங்களும் மூன்று அம்மன்களும் ஒன்றாக ஒரு ஆலயத்தினுள் உள்ளதே காளையார்கோயிலின் சிறப்பை எடுத்துக்கூறப் போதுமானது.

"காளைதேட, சோமர் அழிக்க, சொக்கர் சுகிக்க"

என்றொரு சொலவடை உண்டு. காளையார்கோயிலைத் “தலையினால் வணங்குவார், நாளும் நாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே“ என்பது திருஞானசம்பந்தன் திருவாக்கு. இது இன்றளவும் நடைபெற்று வருகிறது.

**33** படலங்களில் உள்ள **1207** பாடல்களையும் படித்துச் சீர்பிரித்து உரைசெய்து, அதை அனைத்து மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் கதைச்சுருக்கமாக எழுதியுள்ள முனைவர் நா.வள்ளி மற்றும் கி.காளைராசன் அவர்களது திறத்தைப் பாராட்டுகிறேன். புராணக் கதைகளுடன் தேவராப்பதிகங்கள் திருப்புகழ் புறநானூற்றுப் பாடல்களையும் இந்நூலுடன் இணைத்துள்ளது சிறப்புடையது.

(காளீசுவர குருக்கள்)

காளையார்கோயில் தல புராணம் (கதைச் சுருக்கம்)
**திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள்**
**அன்னதான அறக்கட்டளைத் தலைவர்,**
**தேவகோட்டை பேராசிரியர் ராம. திண்ணப்பன் செட்டியார்**

# *மதிப்புரை*

நாள்.....**11.2015**



மானாமதுரை வேதியாரேந்தல் விலக்கு ஸ்ரீ ப்ரித்தியங்கிராதேவி கோயில் சுவாமிஜி அவர்கள், "திருப்பூவணத்தில் **36** ஆவது திருவிளையாடலில் நடைபெற்ற அன்னதானத்தைத் தொடர்ந்து செய்ய வேண்டும்" என்ற உயர்ந்த சிந்தனையில் திருப்பூவணம் ஸ்ரீ பொன்னனையாள் அன்னதான அறக்கட்டளையை நிறுவினார்கள். அடியேனை அந்த அறக்கட்டளையின் தலைவனாக நியமனம் செய்தார்கள். ஒவ்வொரு வருடமும் திருப்பூவணத்தில் திருக்கல்யாணம் நடைபெறும் பங்குனி உருத்திரப் பெருவிழாவிற்கு மதுரையிலிருந்து அருள்மிகு சோமசுந்தரேசுவரர் புறப்பட்டு திருப்பூவணம் வந்து அன்னதானத்தில் கலந்து கொண்டு திரும்புவர். இத் திருவிழாவை மீண்டும் நடத்திட வேண்டி சுவாமிஜி அவர்கள் பெரிதும் முயன்று வருகிறார்.

திருப்பூவணத் திருத்தலத்தையும் புராணத்தையும் ஆய்வு செய்து, அத்திருத்தலச் சிறப்புகளை நூலாக்கம் செய்து வெளிக்கொணர்ந்தவர் கி.காளைராசன் ஆவார். இவரும் இவரது ஆய்வு நெறியாளர் முனைவர் நா.வள்ளி அவர்களும் காளையார்கோயில் புராணத்திற்கு உரை எழுதி, "காளையார்கோயில் புராணம் (கதைச் சுருக்கம்)" என்ற பெயரில் நூலாக்கம் செய்து வெளியிடுவது, காளையார்கோயிலின் சிறப்புகளை உலகுக்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது. காளிதேவியின் வழிபாடும், வாள்மேல்நடந்தாள் வழிபாடும், தீர்த்தங்களின் சிறப்புகளும், வந்து வழிபட்டுப் பயனடைந்தோர் பெற்ற பலன்களும் சிறப்பான முறையில் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. சிவபெருமான் அகத்திய முனிவருக்கு உபதேசம் வழங்கிய திருத்தலம் காளையார்கோயில் ஆகும். இதனால் குருஉபதேசத் தலமாகவும் காளையார்கோயில் விளங்குகின்றது.

தி.இராம.சு. **&** தி.இராம.தி. குடும்பத்தினர் பெரும்பொருள் செலவில் சொர்ணவல்லி அம்மன் கோயிலுக்கு, **1900** ஆம் ஆண்டு கும்பாபிடேகத்தின்போது திருப்பணிகள் செய்துள்ளனர். தி.இராம.தி. குடும்பத்தினர் சொர்ணவல்லி அம்மனுக்கு வைரத்தோடு, சொர்ணஅங்கி, பள்ளியறைக்குப் பொன்னூஞ்சல் வழங்கியுள்ளனர். மேலும், அம்மன் தேரையும் சீர் செய்து கொடுத்துள்ளனர். அன்றுதொட்டு இன்றளவும் அருள்மிகு காளீசுவரர் திருவருளால் திருப்பணிகளில் பங்குபெற்று வருகின்றனர்.

மெய்யன்பர்கள் அனைவரும் புராணக் கதைகளில் கூறப்பட்டுள்ள நிகழ்ச்சிகளை மனத்திற் கொண்டு அவ்வாறே தாங்களும் வழிபட்டுச் சிவனருள் மற்றும் காளிதேவியின் திருவருள் பெற்று உய்வடைய இந்நூல் பெரிதும் துணைநிற்கும்.

(ராம. திண்ணப்பன் செட்டியார்)

# நூலாசிரியர் உரை

நாள் **....11.2015**

**1899** ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற காளையார்கோயில் புராணம் புத்தகத்தின் ஒளிப்படநகல் ஒன்றை சென்னையைச் சேர்ந்த திரு.மனோகரன் அவர்களும், அவரது நண்பர் திரு.உத்திராடம் அவர்களும், **07.01.2014** அன்று சென்னையில் உள்ள ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் சந்நிதியில் வைத்து காளைராசனிடம் கொடுத்துள்ளனர். நூலைப் பெற்றுக் கொண்ட காளைராசன் அவர்கள் காளையார்கோயில் புராணப் பாடல்களைச் சீர் பிரித்து உரை எழுதி வெளியிட வேண்டும் என விருப்பம் கொண்டார். இவரது முனைவர் பட்ட ஆய்விற்கு நெறியாளராக இருந்தபடியால், எனது மாணவர் என்ற முறையில், அவர் என்னிடம் காளையார்கோயில் புராணத்திற்கு உரை எழுதிடும்படி வேண்டிக் கொண்டார். நான் சில படலங்களுக்கும், காளைராசன் சில படலங்களுக்கும் என உரை எழுதி முடித்தோம்.



காளையார்கோயில் புராணம் **110** ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட காரணத்தினால் அதில் உள்ள சொற்களுக்கான பொருள்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டு கதைகளின் சீர்மை மாறாமல் கதைச் சுருக்கம் எழுதுவது ஒரு பெரிய சவாலாகவே விளங்கியது. என்னிடமிருக்கும் கலைச்சொல் அகராதிகள் மிகவும் பயனுடையனவாக அமைந்தன. மிகவும் பொறுமையாகக் காளையார்கோயில் கதைச் சுருக்கம் எழுதி முடிக்கப் பெற்றது. கி.காளைராசன் அவர்களே இவற்றைத் தட்டச்சு செய்து நூலாக்கம் செய்துள்ளார்.

இந்நூல் வெளிவரப் பெரிதும் துணைநின்ற இராமசாமி தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வர் தெ.முருகசாமி அவர்களுக்கும், மூலநூல் சீர்பிரித்தலில் பிழைத்திருத்தம் செய்து கொடுத்து உதவிய தேவகோட்டை இலக்கியமேகம் அவர்களுக்கும், காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரி தமிழ் உதவிப் பேராசிரியர் சி.பரமேசுவரி அவர்களுக்கும், தேவகோட்டை பேராசிரியர் தேவநாவே அவர்களுக்கும், அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தரின் நேர்முக உதவியாளர் க.பழனியப்பன் அவர்களுக்கும், தேவகோட்டை அருள்நிதி க.தில்லைநாதன் அவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி திரு.மு.ஜெயக்குமார் அவர்களுக்கும் நன்றி.

இந்நூலாக்கத்திற்காகக் காளைராசனது உழைப்பிற்கு ஒத்துழைப்பு நல்கிய அவரது மனைவி திருமதி.நாகலெட்சுமி, மகள் நித்தியா, திருப்பூவணம் முத்துப்பாண்டி கலையரசி தம்பதியர் மற்றும் அனைவருக்கும் நன்றி.

(நா. வள்ளி)

<u>காளையார்கோயிலில் உள்ள தெய்வங்கள் :</u>

**சிங்காரகணபதி, காளீசர், மாகாளேச்சுரன்** (காளிதேவியால் பூசிக்கப்பட்டவர்)
**சொர்ணவல்லி அம்மை, சோமேசர் , சோமநாதர்** (சோமன், சந்திரனால் பூசிக்கப்பட்டவர்), **சவுந்தரநாயகி அம்மை, சுந்தரேசர் - மீனாட்சி அம்மை,**
**பூதேவி ஸ்ரீதேவி சமேத சுகந்தவனப் பெருமாள்,**
**சபாநாயகர், சிவகாமி அம்மை., தட்சணா மூர்த்தி, வயிரவர், வாள் மேல் நடந்த அம்மை** (சோழனின் வாள்கோட்டை மேல் நடந்த காளிதேவி), **செல்வ விநாயகர், சுப்பிரமணியர், திருநந்திதேவர், சண்டேசர், கலைமகள்**

<u>புராணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள தெய்வங்கள் :</u>

**அகத்திய லிங்கம்** – அகத்தியமுனிவரால் **வெற்றியூரில்** நிறுவப் பெற்றுள்ளது.
**அகிலாண்டநாயகி** – திருவானைக்கா அம்மன்,
**அமந்தகன்** – சித்திரகுப்தன் போன்று எமலோகத்தில் உள்ள பணியாள்.
**அரியநாயகி** – காளையார்கோயிலுக்கு மேற்கே தாளவனம் என்ற இடத்தில் காளிதேவி தவம் செய்தாள். இங்குள்ள காளிதேவிக்கு அரியநாயகி என்று பெயர்.
**அன்னபூரணி** – காளிதேவி, ஏழுகன்னிமார்களுடன் தேவ கணங்களுக்கும் பூத கணங்களுக்கும் அன்னம் இட்டதால் அன்னபூரணி , வெற்றியூர்.
**இந்திரன்** – தேவர்களின் தலைவன். காளையார்கோயில் திருப்பணிகள் செய்தவன்.
**ஏகாம்பரேச்சுரன்** – காஞ்சிபுரம் சிவலிங்கம்

**கண்ணுடையாள் –** அசுரர்கள் மறைந்திருந்தாலும் அவர்களுடைய மாயா உருவத்தைக் காணும் கண்களைப் பெற்றதால் கண்ணுடையாள் என்ற பெயர், நாட்டரசன்கோட்டை
**காலர்கள் –** எம தூதுவர்கள்
**சப்த மாதர் –** சாமுண்டி, மாகேச்சுரி, வைணவி, மாகேந்திரி, பிராமி, கௌமாரி, வராகி
**சாரங்க நாயகி,**
**சிவகாமி** தன்னொடும் **கனகசபேசன்**
**சூலினி –** சூலத்தை ஆயுதமாகக் கொண்ட காளிதேவி
**சேதுமாதவன் –** இராமநாதபுரம் அருகே உள்ள சேதுக்கரையில் உள்ள பெருமாள். **ராமலிங்கம்**
**பருவதவர்த்தனி**
**தியாகேசர் –** திருவாரூர் சிவலிங்கம்
**பிரம்மா –** முதன்முதலில் திருப்பணிகள் செய்தவர், காளையார்கோயில் நகரை உண்டாக்கியவர்
**பெரியநாயகி –** பெரிய வடிவம் எடுத்துத் பெருந்தவம் செய்த காரணத்தினால் பெரியநாயகி என்ற பெயர் பெற்றாள் காளிதேவி, உருவாட்டி
***மகேச்சுரி மகேந்திரி***
**மங்களேச்சுரன் –** உத்தரகோசமங்கை சிவலிங்கம்
**வசிட்டமுனிவரும் அருந்ததியும்** தனித்தனியாக வெற்றியூரில் வரம் அருளும் சிவலிங்கம் நிறுவியுள்ளனர்**.**
**வாள் மேல் நடந்தாள் –** சோழனின் வாள்கோட்டை மேல் நடந்து அதைத் தகர்த்த அம்மன், காளையார்கோயில்
**விண்டுவீச்சுரன் –** திருமால் **கண்டதேவியில்** நிறுவிய சிவலிங்கம்**.**
**வெங்குமாகாளி** - காளிதேவி விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே பெரியவடிவம் எடுத்து நின்ற காரணத்தினால்
**<u>பூதங்கள் :</u>** இடாகினி**,** சாகினி**,** தாகினி
**<u>சமயக் குரவர்கள் :</u>**
*திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்**,*** *தி*ருநாவுக்கரசு சுவாமிகள்**,** மாணிக்கவாசக சுவாமிகள்**,** அறுபத்து மூவர்**,** சுந்தரமூர்த்தி நாயனார்**,** தமிழாசிரியர்**,** அருணகிரிநாதர்
**<u>ஊர்கள், தேசங்கள் :</u>**
**இந்திரபுரம் –** திருவாடானை திருப்புனவாயில் அருகே உள்ள ஓர் ஊர்.
**உத்தர காளிபுரம் –** வட நாட்டில் உள்ள காளீசர்**,** சண்டாசுரனைக் கொல்ல காளிதேவி தவமிருந்து சிவபெருமானிடம் சூலாயுதம் பெற்ற திருத்தலம்**.**
**உருவாட்டி - பெரியநாயகி** - காளையார்கோயிலுக்குக் கிழக்கே காளிதேவி பெருந் தவம் செய்த இடம்**.** அங்கே அசுரர்கள் வைத்த தீயில் காளியின் உருவம் வாடியது**.**
**கண்டதேவி –** தேவர்கள் காளியைக் கண்டு வணங்கிக் காக்க வேண்டிய தலம்**.**
**கரவீரம்** . புட்கரன் வசித்த ஊர், கோதாவரி ஆற்றின் கரையில் உள்ளது.
**கலிங்கதேசம் –** காளையார்கோயிலில் முத்திபெற்ற **தோடசிகாமணி** என்ற பேய் வாழ்ந்த இடம்
**கொடிக்குளம் –** சண்டாசுரனின் தேர்க்கொடி விழுந்த இடம்
**சேதுக்கரை – சேதுமாதவன்,** இராமநாதபுரம் அருகே உள்ள கடற்கரைத் திருத்தலம், பேய்கள் கவுதம முனிவரைக் கண்ட இடம்
**சோழபுரம்** – வீரசோழன் பாண்டியனுடன் போர் செய்ய வேண்டி இங்கு வந்து தங்கிய காரணத்தினால் இப்பெயர் பெற்றது.
**தாளவனம் – அரியநாயகி** என்ற பெயரில் காளையார்கோயிலுக்கு மேற்கே காளிதேவி தவம் இருந்த இடம்**,**
**தேவிகோட்டை – தேவகோட்டை –** காளிதேவிக்கு முடிசூட்டிய பின்**,** தேவர்கள் மாயா கோட்டை அமைத்த ஊர்
**தேவிசாலபுரம்** – தேவர்கள் சூழக் காளி வீற்றிருந்த ஊர்**.**
**பாஞ்சால தேசம் –** காளையார்கோயிலில் முத்திபெற்ற பேய் வாழ்ந்த இடம்
**பூங்குடி** – காளி வெற்றி பெற்றவுடன் தேவர்கள் மலர்மாரித் தூவிய தலம்
**பூதபுரம் –** காளி பூத உருவம் பெற்ற இடம்,
**மலையாள**நாடு – காளையார்கோயிலில் முத்திபெற்ற ஒரு பேய் வாழ்ந்த நாடு.
**மாகிண்மதி –** நருமதி ஆற்றின் கரையில் உள்ள ஊர்
**மாளக்கண்டான்** – சண்டாசுரன் மாண்ட இடம்
**விசாலபுரம் –** காளையார்கோயில் அருகே உள்ள ஊர்,
**வெற்றியூர் –** காளிதேவி சண்டாசுரனை வெற்றி கொண்ட இடம்
**<u>நதிகள் தீர்த்தங்கள் :</u>**
**யானைமடு –** ஐராவதத்தினால் உருவாக்கப்பெற்ற தீர்த்தம். (காளையார்கோயில் தெப்பத்தின் ஈசானியம்)
**உருத்திரதீர்த்தம்** - காளையார்கோயிலில், மீன்கள் உருத்திரர் ஆன காரணத்தினால் இத் தீர்த்தத்திற்கு இப்பெயர் உண்டானது.

**கங்கை – இமாலய நதி**
**குண்டாறு –** திருச்சுழி அருகே ஓடும் ஆறு
**கோதாவரி –** வட நாட்டில் ஓடும் நதி
**கௌரி தீர்த்தம்** – கோயிலின் உள்ளே ஈசானியத்தில் உள்ள தீர்த்தம்.
**சந்திரபுட்கரணி , சோம தீர்த்தம் –** சோமேசர் சந்நிதி முன் உள்ள தீர்த்தம்
**சிவகங்கைத் தீர்த்தம்** – சிவபெருமானின் சடையில் உள்ள கங்கைக்கு நிகரான தீர்த்தம். (கோயிலின் தென்மேற்கே உள்ளது)
**நிருமதா நதி –** நருமதை நதி
**பாதலகங்கை –** காளையார்கோயில் தீர்த்தம்
**பாரதி தீர்த்தம் –** சோழபுரத்தில் உள்ள தீர்த்தம்
**பாற்குளம் –** காளையார்கோயிலுக்கு மேற்கே தாளவனம் என்ற இடத்திலுள்ள குளம்
**மாகிண்மதி –** வடநாட்டு நதி
**வையை –** பாண்டிய நாட்டில் பாயும் ஆறு
**சரசுவதி தீர்த்தம்** – மீனாட்சிசுந்தரேசுவரர் சந்தியில் நகவக்கிரக சந்நிதி அருகில் உள்ள கிணறு.

<u>முனிவர்கள் :</u>
**உதங்க மாமுனிவர் –** புராணக் கதை கூறிய முனிவர்
**ககோள முனி –** சந்திரனுக்கு உண்டான சாபம் தீரக் காளையார்கோயில் செல்லுமாறு கூறியவர்
**கண்ணுவ முனி** – யானை மடுவில் தீர்த்தமாடிக் கொடிய நோய் நீங்கப் பெற்றவர்.
**கவுதமமுனி –** காளையார்கோயில் வழிபாடு, பேய்களுக்கு முத்தி கொடுத்தவர்.
**காசிப முனிவர் –** இமயமலையில் உள்ள முனிவர், வேதங்கள் அனைத்தும் அறிந்தவர், இவருக்கும் திதிக்கும் பிறந்தவன் சண்டாசுரன்.
**காத்தியாயன முனிவர்** – நைந்திருவ முனிவருக்கு அடைக்கலம் கொடுத்த முனிவர்
**தக்கன்** – தனது 27 மகள்களைச் சந்திரனுக்கு மணம்முடித்துக் கொடுத்த அரசன்
**நைந்திருவன்** - ஒரு முனிவன். இவனுடைய மகளை வாயுபகவான் விரும்பினான்.
**ரோகினி** – சந்திரனின் 27 மனைவியருள் ஒருத்தி.
**விநதை**-கருடனின்தாய்

<u>**மன்னர்கள், வணிகர், அசுரர்கள், ஏனையோர் :**</u>
**காந்தன் –** விநதனின் மாமன், காளையார்கோயிலில் வாழ்ந்தவன்.
**கும்பன் –** ஒரு அசுரன், **குலபூடணன் –** பாண்டிய மன்னன்
**சண்டாசுரன் –** காளியால் கொல்லப்பட்ட அசுரன், **உரூபவதி** – சண்டாசுரனின் மனைவி
**சதாநிகன் –** வடநாட்டு அரசன், உதங்க முனிவரிடம் காளையார்கோயில் புராணக்கதைகளைக் கேட்ட மன்னன்
**சம்பன்** – இந்திரனால் கொல்லப்பட்ட அசுரன்.
**சிவ கர்ப்பன் –** காஞ்சிபுரத்திலிருந்த அந்தணன்
**சிவதத்தன்** – உத்தரகோசமங்கையில் கவுதமமுனிவன் கண்ட அந்தணன்
**சுகந்தகேசி –** சோழனின் மகள், வரகுண பாண்டியனின் மனைவி
**சுசரிதன் –** கண்ணுவ முனிவரின் மகன்
**தண்டன் –** ஒரு அசுரன்
**தருமசீலை –** தருமபந்துவின் பத்தினி
**தருமபந்து –** மாகின்மதி நகரத்தில் வசித்த அந்தணன்
**தாரகன் –** ஒரு அசுரன்
**திதி** – சண்டாசுரனின் தாய். காசிபமுனிவரின் ஒரு மனைவி.
**துன்மதன் –** பேயாக மாறி, காளையார்கோயிலில் முத்தி பெற்றவன்
**தேவசேனன் –** சிங்கள தேசத்து அரசன்
**தேவராதன் –** காளையார்கோயிலுக்கு அருகே இந்திரபுரம் என்ற ஊரைச் சேர்ந்தவன்.
**தோடசிகாமணி –** பேயாக மாறிய கலிங்கதேசத்தைச் சேர்ந்தவன், காளையார்கோயிலில் முத்தி பெற்றவன்
**பட்டபரண்** - மாகாளனுடைய துதிக்கு மகிழ்ந்து, காளீசர் அவனுக்கு வழங்கிய பட்டம்
**பாசண்டர்** - அவைதீக சமயக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்
**புட்கரன் – புஷ்கரன் –** வடநாட்டினன், காளையார்கோயிலில் முத்தி பெற்றவன்.
**மகோதரன் –** சண்டாசுரனின் சகோதரன்
**மருத்துவான் –** மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன், காளீசரை வழிபடுபவன்.
**வசுவனன் –** ஒரு அசுரன்
**வரகுண பாண்டியன் –** காளையார்கோயிலை ஆண்ட மன்னன்
**விக்கிரமசோழன்** - வரகுண பாண்டியனுடன் போர் செய்த சோழன்
**விசாலையா –** தேவசேனன் ஆண்ட சிங்களதேசத்தில் உள்ள ஓர் ஊர்.

**வினதன்** – காளீசரால் ஆட்கொள்ளப்பட்டவன், இவன் பொருட்டுக் காளீசர், இவனது தந்தை தேவராதன் வடிவில் தோன்றி அருளினார்.
**வீமாக்கன் –** ஒரு அசுரன்
**வீரசேன பாண்டியன்** – காளையார்கோயில் தீர்த்தத்தில் பொய்ப்பிள்ளை கொடுத்து மெய்ப்பிள்ளை பெற்றவன்.
**காலக்கியன்** – மதுரை பசுமலையில் வாழ்ந்த ஒரு முனிவன்,
**சோபனாங்கி** – வீரசேன பாண்டியனின் மனைவி
**சொர்ணபுத்திரன் –** மெய்ப்பிள்ளையாய் தோன்றிய வீரசேனபாண்டியனின் மகன்
**ஊர்திகள் : அன்ன வாகனம், சிம்மவாகனம், பிரேத வாகனம், வெள்ளையானை , ஐராவதம், வேதாள ஊர்தி (காளியின் வாகனம்)**
**விருட்சங்கள் : மந்தாரை** (காளிதேவி மந்தாரை மலர் கொண்டு காளீசரைப் பூசித்தாள்)
**திருவிழாக்கள் , முக்கிய நாட்கள் : உருத்திர சீர்த்தம் –** மார்கழி – திருவாதிரை நாள், இந்நாளில் உருத்திரதீர்த்தத்தில் தீர்த்தமாடுவது மிகுந்த நற்பலன்களைக் கொடுக்கும்.
**திங்கள் கிழமை – (சோமவாரத்தில்)** உருத்திரதீர்த்தத்தில் நீராடினால் அறுபத்தாறுகோடித் தீர்த்தங்களிலும் நீராடிய பலனை அடைவர்
**தை மதிப் பூசநாள் –** வீரசேன பாண்டியன் திருவிழா நடத்திய நாள்
**மாசி பூரணை**(பௌர்ணமி)யில் வழிபட்டால் வாயுபகவனால் ஏற்பட்ட சாபம் தீரும்.
**மார்கழி – திருவாதிரை பூரணை(பௌர்ணமி)**யில் கங்கை முதலான நதிகளும் உருத்திரதீர்த்தத்தில் மூழ்கித் தங்களது பாவங்களைப் போக்கிக் கொள்கின்றன.
**மேடம் ஓடு விடை வரும் மதியில்** காளீசற்கும் சோமேசற்கும் விழாக்கள்
**விடை மதியின் விசாக நாள் –**வீரசேனபாண்டியன் திருவிழா நடத்திய நாள்
**காளையார்கோயில் வேறு பெயர்கள்**
கானப்பேர், சோதிவனம், மந்தார மாவனம், உத்தம வைசகேந்திரம், காந்தாரவனம், அகத்தியசேத்திரம், தவசித்திகரம், தேவதாரு மாவனம், பூலோக கைலாயம், காளிபுரம், அழகிய மங்களம், ஐராவத நகர், சுகந்தவனம், மாகாளபுரம்.

# திருக்கானப்பேர் என்னும் காளையார்கோயில் தேவாரப் பதிகங்கள்

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்** (பண் – கொல்லி)
திருச்சிற்றம்பலம்

**1**
பிடி எலாம் பின்செலப், பெருங்கை மாமலர்த் தழீஇ,
விடியலே தடம் மூழ்கி, விதியினால் வழிபடும்,
கடி உலாம் பூம் பொழில், கானப்பேர் அண்ணல், நின்
அடி அலால் அடை சரண் உடையரோ, அடியரே.
**2**
நுண் இடைப், பேர் அல்குல், நூபுர மெல்லடிப்
பெண்ணின் நல்லாளை, ஓர் பாகமாப் பேணினான்,
கண்ணுடை நெற்றியான், கருதிய கானப்பேர்,
விண்ணிடை வேட்கையார், விரும்புதல் கருமமே.
**3**
வாவி வாய்த் தங்கிய நுண்சிறை வண்டு இனம்,
காவிவாய்ப் பண்செய்யும், கானப்பேர் அண்ணலை,
நாவிவாய்ச் சாந்து உள்ளும் பூ உள்ளும் ஞான நீர்
தூவி, வாய்ப்பெய்து, நின்று ஆட்டுவார் தொண்டரே.
**4**
நிறை உடை நெஞ்சு ளும், நீருளும், பூ ளும்,
பறை உடைய முழவு ளும், பலிவுளும், பாட்டுளும்,
கறை உடைய மிடற்று அண்ணல் கருதிய கானப்பேர்,
குறை உடையவர்க்கு அல்லால் களைகிலார் குற்றமே.
**5**
ஏனப் பூண்மார்பின் மேல், என்பு பூண்டு, ஈறு இலா
ஞானப்பேர் ஆயிரம் பேரினான் நண்ணிய
கானப்பேர் ஊர் தொழும் காதலார் தீது இலர்,
வானப் பேரூர் புகும் வண்ணமும் வல்லரே.
**6**
பள்ளமே படர்சடைப் பால் படப் பாய்ந்த நீர்
வெள்ளமே தாங்கினான், வெண்மதி சூடினான்,
கள்ளமே செய்கிலார் கருதிய கானப்பேர்,
உள்ளமே கோயிலாக உள்கும், என் உள்ளமே.
**7**
மான மா மடப்பிடி வன்கையால் அலகு இடக்
கானம் ஆர் கட கரி வழிபடும் கானப்பேர்,
ஊனம் ஆம் உடம்பினில் உறு பிணி கெட எண்ணின்
ஞானம் ஆம் மலர் கொடு நணுகுதல் நன்மையே. **7**
**8**
வாளினான், வேலினான், மால்வரை எடுத்த திண்
தோளினான், நெடுமுடி தொலையவே ஊன்றிய
தாளினான், கானப்பேர் தலையினால் வணங்குவார்,
நாளும் நாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே.
**9**
சிலையினான், முப்புரம் தீ எழச் செற்றவன்,

நிலையிலா இருவரை நிலைமை கண்டு ஓங்கினான்,
கலையினார் புறவில் தேன் கமழ் தரு கானப்பேர்
தலையினால் வணங்குவார் தவம் உடையார்களே.

**10.**

உறித் தலைச் சுரை யொடு, குண்டிகை பிடித்து உச்சி
பறித்தலும் போர்த்தலும் பயனிலை  பாவிகாள்,
மறித் தலை, மடப்பிடி, வளர் இளங் கொழுங் கொடி
கறித்து எழும், கானப்பேர் கைதொழல் கருமமே.

**11.**

காட்டு அகத்து ஆடலான், கருதிய கானப்பேர்,
கோட்டு அகத்து இளவரால் குதி கொளும் காழியான்,
நாட்டு அகத்து, ஓங்கு சீர் ஞானசம்பந்தன்
பாட்டு அகத்து இவை வல்லார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

**சுந்தரமூர்த்தி  நாயனார்**

பண் – புறநீர்மை.

---

திருச்சிற்றம்பலம்.

**1.**

தொண்டர் அடித் தொழலும், சோதி இளம் பிறையும்,
சூதன மென் முலையாள் பாகமும், ஆகிவரும்
புண்டரிகப் பரிசாம் மேனியும், வானவர்கள்
பூசலிடக், கடல் நஞ்சு உண்ட கருத்த மரும்
கொண்டல் எனத் திகழும் கண்டமும், எண் தோளும்,
கோல நறும் சடை மேல் வண்ணமும், கண் குளிரக்
கண்டு தொழப் பெறுவது என்று கொலோ அடியேன்,
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே

**2**

கூதல் இடும் சடையும், கோள் அரவும், விரவும்,
கொக்கு இறகும், குளிர் மா மத்தமும், ஒத்து உனது தாள்
ஓதல் உணர்ந்த அடியார் உன்பெருமைக்கு நினைந்து
உள் உருகா விரசும் ஓசையைப் பாடலும், நீ
ஆதல் உணர்ந்தவரோடு அன்பு பொருந்த, அடியேன்,
அங்கையின் மாமலர் கொண்டு எங்களது அல்லல் கெடக்
காதல் உறத் தொழுவது என்றுகொலோ, அடியேன்
கார்வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே.

**3**

நானுடை மாடு எனவே நன்மை தரும் பரனை,
நற்பதம் என்று உணர்வார் சொற்பதம் ஆர் சிவனைத்,
தேனிடை இன் அமுதை, மற்றதனில் தெளியைத்,
தேவர்கள் நாயகனைப், பூவுயர் சென்னியனை,
வானிடை மாமதியை, மாசறு சோதியனை,
மாருதமும் அனலும் மண்டலமும் ஆய
கான் இடை மா நடன் என்று எய்துவது, என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே.

**4**

செற்றவர் முப்புரம் அன்று அட்ட சிலைத் தொழிலார்,
சேவகம் முன் நினைவார் பாவகமும், நெறியும்,
குற்றமில் தன் அடியார் கூறும் இசைப் பரிசும்,
கோசிகமும், அரையில் கோவணமும், அதளும்
அற்று இகழ் திண்புயமும், மார்பிடை நீறு துதை
மாமலை மங்கை உமைசேர் சுவடும், புகழக்
கற்றனவும் பரவிக் கைதொழல் என்றுகொலோ
கார்வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே
**5**
கொல்லை விடைக்கு அழகும், கோல நறும் சடையில்
கொத்து அலரும், இதழித் தொத்தும், அதன் அருகே
முல்லை படைத்த நகை மெல்லியலாள் ஒருபால்
மோகம் மிகுத்து இலகும் கூறுசெய் ஒப்பரிசும்,
தில்லை நகர்ப் பொதுவுற்று ஆடிய சீர் நடமும்,
திண் மழுவும், கை மிசைக் கூர் எரியும், அடியார்
கல்லவடப் பரிசும் காணுவது என்றுகொலோ
கார்வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே
**6**
பண்ணு தலைப் பயனார் பாடலும், நீடுதலும்,
பங்கய மாது அனையார் பத்தியும், முத்தி அளித்து,
எண்ணுதலைப் பெருமான் என்று எழுவார், அவர்தம்
ஏசறவும், இறையாம் எந்தையையும் விரவி,
நண்ணுதலைப் படுமாறு எங்ஙனம் என்று அயலே
நைகிற என்னை மதித்து, உய்யும் வண்ணம் அருளும்
கண் நுதலைக், கனியைக் காண்பதும் என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே
**7**
மாவை உரித்த அதள் கொண்டு அங்கம் அணிந்தவனை,
வஞ்ச மனத்திறையும் நெஞ்சம் அணுகாதவனை,
மூவர் உருத் தனதாம் மூலமுதற் கருவை,
மூசிடும் மால் விடையின் பாகனை, ஆகம் உறப்
பாவகம் இன்றி மெய்யே பற்றும் அவர்க்கு அமுதைப்,
பால் நறு நெய் தயிர் ஐந்தாடு பரம்பரனைக்,
காவல் எனக்கு இறை என்று எய்துவது என்றுகொலோ
கார்வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே
**8**
தொண்டர் தமக்கு எளிய சோதியை, வேதியனைத்,
தூய மறைப் பொருளாம் நீதியை, வார்கடல் நஞ்சு
உண்டு அதற்கு இறவாது என்றும் இருந்தவனை,
ஊழி படைத்தவனோடு ஒள் அரியும் உணரா-
அண்டனை, அண்டர் தமக்காக நூல் மொழியும்
ஆதியை, மேதகு சீர் ஓதியை, வானவர் தம்
கண்டனை, அன்பொடு சென்று எய்துவது என்றுகொலோ
கார்வயல்சூழ் கானப்பேர் உறை காளையையே
**9**
நாதனை, நாதமிகுத்து ஓசை அது ஆனவனை,
ஞான விளக்கு ஒளியாம் ஊன் உயிரைப், பயிரை,
மாதனை, மேதகு தன் பத்தர் மனத்து இறையும்
பற்று விடாதவனைக், குற்றம் இல் கொள்கையனைத்,
தூதனை, என் தனை ஆள் தோழனை, நாயகனைத்,

தாழ் மகரக் குழையும் தோடும் அணிந்த திருக்
காதனை, நாயடியேன் எய்துவது என்றுகொலோ,
கார்வயல்சூழ் கானப்பேர் உறை காளையையே

**10**
கன்னலை, இன் அமுதைக், கார்வயல் சூழ் கானப்
பேர் உறை காளையை, ஒண் சீர் உறை தண் தமிழால்
உன்னி மனத்து அயரா உள் உருகிப் பரவும்
ஒண் பொழில் நாவலர் கோன் ஆகிய ஆரூரன்,
பன்னும் இசைக் கிளவி பத்து இவை பாட வல்லார்,
பத்தர் குணத்தினராய் எத்திசையும் புகழ
மன்னி இருப்பவர்கள், வானின் இழிந்திடினும்,
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே.

திருச்சிற்றம்பலம்

---

**திருஞானசம்பந்த மூர்த்திநாயனார்**
பொது
திருக்ஷேத்திரக்கோவை – பண் – இந்தளம்

ஆரூர், தில்லையம்பலம், வல்லம், நல்லம், வடகச்சியும், அச்சிறுபாக்கம், நல்ல
கூரூர், குடவாயில், குடந்தை, வெண்ணி, கடல்சூழ் கழிப்பாலை, தென்கோடி, பீடு ஆர்
நீரூர், வயல் நின்றியூர், குன்றியூரும், குருகா, வையூர், நாரையூர், நீடு **கானப்**
**பேரூர்**, நன்னீள்வயல் நெய்த்தானமும், பிதற்றாய் பிறைசூடி தன் பேரிடமே.

திருச்சிற்றம்பலம்.

---

**திருநாவுக்கரசு நாயனார்**
பொது
பாவநாசத் திருப்பதிகம் – பண் – பழம்பஞ்சுரம்

ஆனைக்காவில் அணங்கினை, ஆரூர் நிலாய அம்மானைக்,
**கானப்பேரூர்**க் கட்டியைக், கானூர் முளைத்த கரும்பினை,
வானப்பேரார் வந்து ஏத்தும் வாய்மூர் வாழும் வலம்புரியை,
மானக் கயிலை மழ களிற்றை, மதியைச், சுடரை, மறவேனே.

**க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்**.

ஆரூர், மூலட்டானம், ஆனைக்காவும், ஆக்கூரில், தான்றோன்றி மாடமாவூர்,
பேரூர், பிரமபுரம், பேராவூரும், பெருந்துறை, காம்பீலி, பிடவூர் பேணும்
கூரார், குறுக்கை வீரட்டானமும், கோட்டூர், குடமூக்கு, கோழம்பமும்,
காரார் கழுக்குன்றும் **கானப்பேரும்** கயிலாயநாதனையே காணலமே.

திருச்சிற்றம்பலம்.

---

**சுந்தரமூர்த்தி நாயனார்**.
திருநாட்டுத்தொகை - பண் - இந்தளம்.

தென்னூர், கைம்மைத் திருச்சுழி, அத் **திருக் கானப்பேர்,**
பன்னூர் புக்கு உறையும் பரமர்க்கு இடம், பாய் ஞலம்
என்னூர், எங்கள் பிரான் உறையும் திருத்தேவனூர்,

பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே.

**ஊர்த்தொகை – பண் - பழம்பஞ்சுரம்**

காட்டூர்க் கடலே, கடம்பூர் மலையே, **கானப்பேர்** ஊராய்,
கோட்டூர்க் கொழுந்தே, அழுந்தூர் அரசே, கொழுநற் கொல் ஏறே,
பாட்டூர் பலரும் பரவப் படுவாய், பனங்காட்டூர் ஊரானே,
மாட்டூர் அறவா, மறவாது உன்னைப் பாடப் பணியாயே.

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று.

---

### திருப்புகழ் திருக்கானப்பேர் *(1332)*

தனத்தானத்தா தனதன தனதன ...... தனதான
 தனத்தானத்தா தனதன தனதன ...... தனதான
அனத்தோடொப்பா மெனுநடை மடவியர் ...... அநுராகம்
 அதற்கேசிச்சீ இனமென துயிர்கெடல் ...... அழகாமோ
உனைப்பாடிப்பே றுறுமொரு வரமினி ...... உதவாயோ
 உவப்பாகத்தே வர்கள்சிறை விடவிடும் ...... அயிலோனே
முனைப்பாடிக்கே திரிதரும் அரிதிரு ...... மருகோனே
 முகிற்கே நத்தா விரிதரு கலபநன் ...... மயிலோனே
தினைக்காவற்கே உரியவள் மனமகிழ் ...... மணவாளா
 திருக்கானப்பேர் நகர்தனி லினிதுறை ...... பெருமாளே.

*அன்னத்தொடு ஒப்பா என்னும் நடை மடவியர்*(பெண்கள்), *அநுராகம், அதற்கே சிச்சீ இனம் எனது உயிர் கெடல் அழகாமோ,*
*உன்னைப் பாடிப் பேர் உறும் ஒரு வரம் இனி உதவாயோ,*
*உவப்பாகத் தேவர்கள் சிறை விட விடும் அயிலோனே,*
*முனைப்பாடிக்கே திரி தரும் அரிதிரு மருகோனே,*
*முகில்கே* (*மழைமேகம்*) *நத்தா* (*விரும்பி*) *விரிதரு கலப நன் மயிலோனே,*
*தினைக் காவற்கே உரியவள் மனம் மகிழ் மணவாளா,*
*திருக்கானப்பேர் நகர் தனில் இனிது உறை பெருமாளே.*

### திருப்புகழ் திருக்கானப்பேர் (1333)

தானத்தானத் ...... தனதானா
 தானத்தானத் ...... தனதானா
கோலக்காதிற் ...... குழையாலே
 கோதிச்சேர்மைக் ...... குழலாலே
ஞாலத்தாரைத் ...... துயரேசெய்
 நாரிக்காசைப் ...... படலாமோ
மேலைத்தேவர்க் ...... கரியோனே
 வீரச்சேவற் ...... கொடியோனே
காலப்பாசத் ...... துயர்தீராய் கானப்பேரிற் ...... பெருமாளே.

(*கோலக் காதில் குழையாலே*
 *கோதிச் சேர்மைக் குழலாலே*
*ஞாலத்தாரைத் துயரே செய் நாரி*(பெண்)*க்கு ஆசைப்படலாமோ ?*
*மேலைத் தேவர்க்கு அரியோனே*
 *வீரச் சேவற்கொடியோனே*
*காலப் பாசத் துயர் தீராய்*
 *கானப்பேரில் பெருமாளே !*)

---

சிவமயம்

## சிறப்புக்கவி

தேவகோட்டை வித்துவ சிகாமணி ஆகிய - ஸ்ரீமான்
வீர – லெ. **சிந்நயச் செட்டியார் அவர்கள்** இயற்றியது.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பூமணி ஆய தஞ்சைப் பூசுரமணி நூறு என்னும்
தூமணி அவதானம் தேர் சுப்பிரமணிய மேலோன்
பாமணி என்ன யாத்துப் பைம்மணி வண்ணற்கு ஒண்ணா
மாமணி வாழ் கானப்பேர் மான்மியம் அணி தந்தானே.

உ
சிவமயம்



காளைநகர் வாழும் காளையைப் போற்றுதற்கு
யானைமுகத்தானே அருள்.

# திருக்கானப்பேர் என்ற

# காளையார்கோயில் புராணம் கதைச்சுருக்கம்

**பாயிரம்**

காளையார்கோயில் புராணத்தின் முதற்பகுதியாக காளையார்கோயிலில் உள்ள சிங்காரகணபதி, காளீசர், சொர்ணவல்லி, சோமேசர், சவுந்தரநாயகியம்மை, சுந்தரேசர், மீனாட்சியம்மை, சபாநாயகர், சிவகாமியம்மை, தட்சணாமூர்த்தி, வயிரவர், வாள்மேல் நடந்த அம்மை, செல்வவிநாயகர், சுப்பிரமணியர், திருநந்திதேவர், சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், சண்டேசர், அறுபத்துமூவர், கலைமகள், தமிழாசிரியர் இவர்களது பெருமைகளைப் பாடிப் பணிந்து அவர்களது திருவடித்துணை வேண்டடப்படுகிறது. (காளையார்கோயிலில் உள்ள சந்நிதிகளில் முன் நின்று பாடிப்பரவிட இப்பாடல்கள் பெரிதும் துணைநிற்கும்).

**விநாயகர் துதி**

சீர்பூத்த மணிமார்பன், வியன்படையும் அயன்படையும் தேவர்கோமான்,
வார்பூத்த வயப்படையும், வியப்படையும், நுதித் தந்த வரைகோல் கொண்டு
பார்பூத்த புகழ்த்தாதை, கைச்சிலை சித்தரித்து ஆங்குப் பாரதம் தீட்டு
ஏர்பூத்த கானப்பேர்ச் **சிங்காரகணபதி** தாள் இறைஞ்சி வாழ்வாம்.

## காளையார்கோயில் தல புராணம் (கதைச் சுருக்கம்)

**காளீசர்**

மாமேவு மலர் அ(ன்)னம் காணாமுடி கண்டாம் என, உ(வ)ணம்
தேன் மேவு நறுங் கொன்றை முகம் மலரக், கங்கை அலை திரண்டு பொங்க,
மீ மேவு வெண் பிறையும் மெய் வளர்ந்து பூரிப்ப, வேணி தாங்கும்,
கா மேவு கானப்பேர்க் காளீசன் கால்மலரைக் கருத்துள் வைப்பாம்.

**சொர்ணவல்லி அம்மை**

கலைவல்லி, கடவுளர்கள் அமுதவல்லிக்கு
அரணிகொடு கடைந்து பண்டு கண்ட தீம்பால்,
அலைவல்லி, உடற்கண்ணான் இல் வாழ்வல்லி,
ஆதிய வல்லிகள் எல்லாம் அண்மிப் போற்றும்
தலைவல்லி, நகையெனும் தன் போதோடு அங்கை
தனம் மூக்கு என்றே அனைய முப்போதும் பூத்த
மலைவல்லி, சோதிவனச் சுவர்ணவல்லி,
மணவல்லி, மலர்த்தாள் உள்மலருள் வைப்பாம்.

**சோமேசர்**

இம்பரின் முன்னமைச் சரண்புக்கு
அருச்சித்த பனவச் சேயினைக் கறுத்த
வெம்பகடு ஊர்தியைக், கழலில் தேய்த்திட்டாம்,
இன்னும் நலம் வேண்டிப்பூசை
நம்பி உஞற்றிடும் அடியார்க்கு, எவ்விகன்
நேரினும் துமிப்பான், நாள் பேறு என்னாத்
தும்பை அணிந்து அருள் மவுலிச் சோமேசன்
துணை மலர்த்தாள் தொழுது வாழ்வாம்.

**சவுந்தர நாயகி அம்மை**

கரு வளரும் மூலத்து தருண ரவி நேர்வித்தில் கலைமான் ஆகி
இரு(ள்) வளரும் இதயத்து இந்திரகோபம் நேர்வித்து இன் இடைச்சீ ஆகித்
தரு வளரும் ஆஞ்ஞையின் இன் மதியினை நேர்வித்திற் சிற் சத்தி ஆய
திரு வளரும் கானப்பேர் சவுந்தரிய நாயகி தாள் சென்னி சேர்ப்பாம்.

**சுந்தரேசர்**

துன்னிய மெய் இடப்பாலில்
ஒருபெண்ணை மணந்ததுவும், தூய திங்கள்
பொன்னின் ஒளிர் வேணி மிசை
ஒருபெண்ணை மணந்ததுவும், போதா என்னாக்
கன், நவில் தோள் ஒருமாறன்
பெண்ணை முனம் மணந்தமையால், கானப்பேரில்
பின்னும் ஒரு தென்னவனின் பெண்
மணந்த சுந்தரனைப் பேணி வாழ்வாம்.

**மீனாட்சி அம்மை**

புயல் கண் நாயகி, நறைகமழ் பூங்குழல் பூவை,
அயர்க் கண் நாயகி, ஈசன் ஆருயிர் ஆனாள் அன்பர்
உயர்க் கண் நாயகி, இலங்கண் முற்றளித்து அருள் ஊட்டும்
கயல் கண் நாயகி, கழல் புணைகொடு பவங்கடப்பாம்.

**சபா நாயகர்**
உலகெலாம் என உதித்தது ஓர் ஓசையான் உலகத்து
அலகு இல்லாதவராம் திருத்தொண்டர் தம் அருமை
இலகும் மாக்கதை தோற்றுவித்த குணம் இன்றிச்
சுலவு சீர்ச்சிதா காயத்தில் நடிப்பவர்த் தொழுவாம்.

**சிவகாமி அம்மை.**
ஒரு மாமரை யில் இரு குவளை ஒளி சூழ்ந்தென்ன உயர் மன்றத்து,
அரு மா மறையின் உபநிடமும், அயனும், மாலும், நேட அரிய
பெருமான் நடன குஞ்சிதத் தாள், பெட்பால், துணைக் கண் நோக்கி, நலம்
வருமாறு நிற்கும் சிவகாமவல்லி துணைத் தாள்மலர் போற்றி

**தட்சணா மூர்த்தி**
வாலியர் சார் மாணாக்கர் வார்த்திகர் குரவராதன்,
மால் இயல், ஐயம் தீர்த்தல், வாய்திறந்து உரைத்தல், என்னும்
பால் இயல் அதற்கு மாறப் பண்டு மூப்பு அடைந்த நால்வர்க்கு
ஆல் இயல் அடிக்கீழ் மோனத்தால் பொருள் தெளித்தார்த் தாழ்வாம்.

**வயிரவர்**
குரைத்தலை மேவும் வேதக் குக்கன் ஆங்கு அயலில் சூழ
விரைத்தலை எழப் பல் வானோர் மெய்யினின்று இழி நெய்த்தோராற்
அரைத்தலை ஒட்டினுக்கும் அரையளவு என்ன ஏற்கும்
அரைத்தலை மா வாழ் சோதிவன வயிரவன் தாள் போற்றி.

**வாள் மேல் நடந்த அம்மை**
தோள் மேல் அடல் சூடிய தென்னவனோடு
ஏண் மேல் எதிரேற்ற புலிக் கொடியோன்
கோண் மேல் உயர் கோட்டை எனப்புரியும்
வாள்மேல் நடந்தாளை வணங்குவமால்.

**செல்வ விநாயகர்**
வில்வம் அறுகு அருக்கு இதழி முதலாய விரைமலர் தூய்
மேனாள் ஆற்று
நல்வினை ஆற்றனைப், பூசை புரிபவர்க்கு, ஐந்தரு நிழலும் நளின வீடும்
பல்வகைய பொறி விரவு பாப்பு அணையும் ஆதியவாப் பகரா நிற்கும்
செல்வம் எல்லாம் தந்து அருளும் செல்வவிநாயகன் அடியைச் சிந்தை செய்வாம்.

**சுப்பிரமணியர்**
பாமி நாதன் பதியென வாழ்பவன்
தோம் இனாத தொடர் தரக் குட்டியே
‘ஓம்‘இன் நாத உரைக்கு உரை ஓதிய
சாமினாதன் சரண் சரணாகுமே.

**திருநந்திதேவர்**
பண்டு அரன் வடிவில் பட்ட பாண்டியன் பிரம்பின் மொத்துக்
கண்டிடில் பொதுவே ஆகக் கயிலையுள் கோயில்சாரும்
அண்டர் மெய் தொறும் சிறப்பாம் அடிதரும் வேத்திரம் கைக்
கொண்டு உலா நந்திதேவன் குளிர் மலர்த் தாள்கள் போற்றி.

**திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்**
முன்பு கோதமன் மொய்வரச் சார்பினால்,
பின்பு கல்லினைப் பெண் என ஆக்கியோன்,
அன்பு காணுற மாது என அஃது இலாது
என்பை ஆக்கு சம்பந்தரை ஏத்துவாம்.

**திருநாவுக்கரசு சுவாமிகள்**
வேணி ஏறு அந்த வெள்ளத்து உமை ஒடு ஏர்
தோணி ஏறி தன் சொல் துணையால் கழு
நாணி ஏறுநர் வீழ்த்த நரலை கல்
தோணி ஏறிக் கடந்தார்த் தொழுவமால்.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள்**
பண்டு தான் தடுத்து ஆண்ட பரிசு என,
மண்டு சோதிவனத்து இறை காளையாய்த்,
தண்டி ஈர்ப்பத் தமிழ்ப் பதிகம் சொல், வன்
தொண்டர், தொண்டர்க்குத் தொண்டு செய்வாமரோ.

**மாணிக்கவாசக சுவாமிகள்**
வேதம் ஆதியுள் விட்டுணு என்றபேர்
மாதுபாதியற்கே என வையம் ஓர்ந்து
ஓத, மாறன் கொண்டு ஊங்கு அடிப்பித்த நம்
வாதவூரர் மலரடி வாழ்த்துவாம்.

**சண்டேசர்**
திண்ணனார் மென்று தின்று உள மிச்சில் உண்டு
அண்ணி எய்த வரும் கதி உய்த்தவன்
உண்ண எஞ்சிய உண்டு மற்றொன்று உண்ணாத்
திண்ணம் மேவு சண்டீசரைச் சேவிப்பாம்.

**அறுபத்து மூவர்**
தம்பிரானார் தனித்தோழர், சாற்று தொண்டத் தொகைக்கு அரும்பி,
நம்பியாண்டார்நம்பி, அன்பால் நவில் அந்தாதி வயிற்போதா,
எம்பிரான் சேக்கிழார் பெருமான் இசைத்த புராணத்து இடை மலர்ந்து,
பம்பி நீள் சீர்ப்பத்தர் அறுபத்துமூவர் பதம் பணிவாம்.

**கலைமகள்**
வலக்கையில் படிகமாலை, வாமக் கைம்மலரின் ஞானம்
இலக்கு புத்தகம் ஒன்று ஏந்தி, இயல் வரம் அபயம் காட்டி,
நலத்த தண் மதி நேர் தன்மெய்ந் நகைக்குக் கூம்பா வெண் கஞ்ச
மலர்க்கண் வாழ் கலைமானுக்கு என் மனக் கமலமும் புக்கு இல்லாம்.

**தமிழாசிரியர்**
சுத்த மெய், அறிவு ஆனந்த, சுந்தரக் கடவுள் கூடல்
நத்திய, சங்கத்தாருள் நக்கீரனாரை நோக்கி,
இத்தரை நம்மை ஒப்பான் என்ன வாய் மலரப்பெற்று,
முத்தமிழ்க் குரவு பூண்ட முனிவன் தாள் முடிமேல் கொள்வாம்

மேற்கண்ட **23** இறைமூர்த்தங்களையும் வணங்கி வாழ்த்துப்பா பாடப் பெற்றுள்ளது. அடுத்து மாமறை, மகவிசேடம், மழை, பயிர்கள், உயிர்கள், பூதிசாதனங்கள், சைவம், வேந்தரின் செங்கோல் ஆகியன வாழ்த்தப்படுகின்றன.

**வாழ்த்து**

மாமறைக் கீதம் வாழ்க, வளர் மகவிசேடம் வாழ்க,
தூமழை பொழிந்து வாழ்க, துன்னிய பயிர்கள் வாழ்க,
பூ மலி உயிர்கள் வாழ்க, பூதி சாதனங்கள் வாழ்க,
மீ மிசை சைவம் வாழ்க, வேந்தர் மெய்ச் செங்கோல் வாழ்க.

**நூற்பயன்**

கானப்பேர் மான்மியத்தைக் கனிந்த நல் அன்பில் கேட்போர்,
மீனப் பேர் உவரி சூழ் பூ மீது பன்னாள் வாழ் உம்பர்,
மானப் பேச அழியாச் செல்வ மன்னி, நன் மகார்ப் பெற்றுப், பின்
பூ நற் பேறுடன் மீட்டு எய்தா உயர் சிவகதியைச் சார்வார்.

இப்புராணக் கதைகளைக் கனிந்த நல்ல அன்புடன் கேட்போர், கடலால் சூழப்பெற்ற இப்பூவுலகில் செல்வச் செழிப்புடன், நன்மக்களைப் பெற்று நீண்டகாலம் தேவர்கள்போல் வாழ்ந்து மீண்டும் பிறவா உயர்சிவகதியைச் சார்வர்.

•••••

## அவையடக்கம்

பிரமன் முதலான தேவர்களும் “காளையார்கோயில் புராணக்கதைகளை முழுமையாகப் பாடமுடியாது“ என்று வெட்கி நிற்க, எனது குன்றிய அறிவு வெளிப்படும் வகையில் கானப்பேரின் புராணக் கதைகளைச் சொல்லி உள்ளேன்.

தாமரையில் வீற்றிருக்கும் மகாலெட்சுமியின் தனநிதிகள் என்றும் தங்கியிருக்கின்ற காரணத்தினாலும், என்றும் தானங்கள் பலவும் செய்வதாலும், சிவதருமங்கள் செய்வதாலும், பேரின்ப போகத்தையே பெரிதெனப் போற்றி வாழும் இந்த நகரத்தார் காளையார்கோயில் புராணக்கதைகளைச் சொல்ல, சிறியேன் ஆகிய நான் அக்கதைகளை இங்கே கூறியுள்ளேன்.

பற்பல இனிய நூல்களைக் கற்றறிந்த பெரியோர்கள் காளையார்கோயில் புராணக்கதைகளைப் பாடுக என்று அவர்கள் சொன்ன சொல் கேட்டு, அதனை மறுக்காமல் நானும் புராணக்கதைகளைப் பாடல்களாகப் பாடத் துணிந்த காரணத்தினால், என்மீது அன்பு கொண்டு எனது இப் பாடல்களையும் பாடல்களே என்று ஏற்றுக் கொள்வார்கள்.

சிப்பியில் விளையும் முத்துக்களோடு மூங்கிலில் விளையும் முத்துக்களையும் சேர்த்து எண்ணிக்கைக்குக் கணக்கில் எடுத்துக் கொள்வது போன்று, பேரறிவு மிகுந்த புலவர்கள் பாடிய பாடல்களுடன் எனது இந்தப் பாடல்களையும் பாடல்கள் என ஏற்றுக் கொள்வர். நல்ல கரும்பின் சாற்றை விரும்பினோர், கரும்பின் கணுவையும் சேர்த்தே பிழிந்து சாறு எடுப்பர். அதுபோன்று எனது பிழையான கவியைக் கருத்தில் கொள்ளாது, எனது இப்பாடல்களில் உள்ள காளீசனின் கதைச் சுவை விரும்புவர்.

## சிறப்புப் பாயிரம்

நான்குதிசைகளிலும் புகழ்விளங்கும் தஞ்சை நகரில் வசிக்கும் அந்தணன், சதாவதானத்தில் புலமை பெற்றவன், தோல்விகளைக் காணாத கலைகளைக் கற்றவன், சுப்பிரமணியன் என்ற பெயர் கொண்டவன், கானப்பேரூர்த் திருத்தலத்தின் தலபுராணத்தைப் பாடியுள்ளார்.

## *(2) நாட்டுப் படலம்*

காளையார்கோயில் புராணத்தின் இரண்டாவது படலமாக நாட்டுப்படலம் பாடப்பெற்றுள்ளது. இதில் 86 பாடல்களில் பாண்டியநாட்டின் சிறப்புகள் பலவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பிறைமுடிப் பெம்மான் ஆகிய இறைவன் அங்கயற்கண் அம்மையை மணந்து சோமசுந்தர பாண்டியனாக மதுரையை ஆண்டதும், அவர்களது இளைய குமாரனாகிய முருகப்பெருமான் உக்கிரகுமாரபாண்டியனாக ஆண்டதும், மற்றும் இம்முறைவழித் தோன்றிய பாண்டியர்கள் அரசாண்ட பெருமையுடையது பாண்டிநாடு. குழல் இசையிற் சிறந்த கண்ணனது தேசம் பல்வேறு தேசங்களிலும் சிறந்தது. செல்வச் செழிப்பில் கண்ணனது நாட்டிலும் சிறந்ததாகப் பாண்டிய நாடு விளங்குகிறது. ஆலவாய், கானப்பேரூர், ஆடானை, புனவாயில், குற்றாலம், ஏடகம், பரங்குன்றம், ஆப்பனூர், சுழியல், புத்தூர், இராமேச்சுரம், பூவணம், கொடுங்குன்றம், நெல்வேலி முதலான பாடல்பெற்ற பதினான்கு தலங்களை உறுப்பாகக் கொண்டது பாண்டியநாடு. இப்பதினான்கு தலங்களைப் போல் சிறப்புடைய தலங்கள் பல உடையது பாண்டியநாடு. கடல் நீரையெல்லாம் உண்ட அகத்தியர் உறையும் பொதியமலையையும், குற்றாலம் போன்ற சிறந்த அருவிகளும், தாமிரபரணி வையை முதலான நதிகளையும் உடையது பாண்டியநாடு.

வறியவர் மெலியவர் நோயர் வன்கணர் படிப்பறிவற்றோர் சிறுமதியர் மடைமைச் சிந்தனையுடையோர் இவர் போன்றோர் இல்லாதது பாண்டியநாடு.

வேடுவர் ஓடி வேட்டையாடும் ஓசையும், யானைகள் நீர் பருகும் ஓசையும், கொடிச்சிமார் தினை இடிக்கும் ஓசையும், உயரமான அருவிகளில் நீர் விழும் ஓசையும், பல விலங்குகளின் ஓசையுமாகிய ஐந்து ஓசைகளும் சேர்ந்து பஞ்சதுந்துபியின் இசையைத் தாழ்த்தும். முருகப் பெருமானாகிய சண்முகனின் படைவீடுகள் ஆறு. அவற்றுள் திருச்செந்தூர் திருப்பரங்குன்றம் பழமுதிர்சோலை என்ற மூன்று படைவீடுகளை உடையது பாண்டியநாடு.

பாண்டிய நாட்டின் முல்லை நிலத்தில், எள்ளு சாமை பயறு அவரை கொள்ளு உளுந்து இவற்றை மலைபோல் குவிப்பார் அவ்விடை உள்ளார். தெள்ளு சுவைப் பாலைக் காய்ச்சி உண்டாக்கிய தயிரிலிருந்து வெண்ணை எடுத்து மலைபோல் குவிப்பர் அவ்விடை இல்லார். ஆயர் இடையைத் தழுவி அடக்கி இடைச்சியரின் மார்பகத்துத் தோய வேண்டும் என்பதற்காக, ஏழுயானைகளையும் தன்தோள் மலைக்குள் அடக்குவர் அந்த நாயகர். குழலில் நாதஒலியினை எழுப்பும் நாயகர் வாய் நல்லார் ததிகடையும் மார்பினுக்குள் அடக்குவர்.

இந்திரன் புரந்து வாழும் எழில் வளமுடையது பாண்டியநாட்டின் மருத நிலம். உழவர்கள் தாம்பு மாட்டி, நுகத்தைப் பிடரியில் கட்டி, காளைமாட்டினை ஏரில் பூட்டித், தனது வலக்கையில் முள் உள்ள பிரம்பை நீட்டி, அழகிய மலர்களை இறைவனது முடிமேல் சூட்டிக், கூரிய கொழுவை உடைய ஏரை ஓட்டி, நாட்டின் குறைகளை எல்லாம் ஓட்டுவர் மருத நிலத்து உழவர். சொல்லினுள் பொருளாய் உள்ள தூய காளீசனது மெய்போன்று நெல்லுக்குள் பொருளாய் உள்ள நீண்ட முளை வளர்த்துத் தோன்றிச் சொல்லினது உருவாய் உள்ள சொர்ணவல்லியின் மெய்போன்று பயிர்கள் பச்சைநிறத்தில் வளர்ந்து இருப்பது பாண்டியநாடு. பரமனாரும் பரதவராகி ஓர் பரதவ குலத்து மாதினைக் கைப்பிடித்துத் திருமணம் செய்துள்ளதால், பரதவர் வாழும் பதி முதல் பலதலம் பரவு நெய்தல் நிலத்தின் பண்பினை எவர்தான் எடுத்துக் கூற இயலும். பாலைவனத்துத் தெய்வமான பத்திரகாளி வடிவான வாள்மேல்நடந்தாள் வீற்றிருந்து அருளுவது பாண்டியநாடு.

இவ்வாறாகக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலான நிலங்களும் அங்கு வாழும் உயிரினங்களின் சிறப்புகளும் மிகவும் அருமையாகப் பாடப் பெற்றுள்ளன. மேலும், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு திணை நிலங்கள் ஒன்றோடு

ஒன்று திணைகள் மயக்கம் அடைவதைத் திணைமயக்கம் என்ற தலைப்பில் ஆசிரியர் பாடியுள்ளார்.

## *(3) நகரப் படலம்*

கற்பகமாகக் காளீசரும் சொர்ணவல்லித் தாயாரும் என்றும் உறைந்துள்ள தலம். பாண்டியநாட்டில் உள்ள பாடல்பெற்ற பதினான்கு தலங்களில் ஒன்று திருக்கானப்பேர் நகரம். மலைமகளை இடப்பாகமாக் கொண்டவனின் தலைமேல் வீற்றிருக்கிறாள் கங்கை என்ற நீர்மகள். நீரின்மேல் வீற்றிருக்கிறாள் அலைமகள். அலைமகளின் மேலானது ஆக்க மெய்க்கலை. கலைமகள் போற்றி வணங்குவது இந்தக் கானப்பேர் நகரம். இது விதி நிதி பதி கதி இவற்றை அருளும் தலமாகவும் உள்ளது. நல்லறத்தை வழங்குவது விதி. நிலவுவான் முதலானவற்றை அருள்வது நிதி. இன்பத்தை வழங்குவது பதி. இவையெல்லாம் கிடைத்திடும் வகையில் நற்கதியை அருள்வது கானப்பேர் நகரம். பெண்மணியின் முகத்தை ஒத்த தமிழ்நாட்டின் வலக் கண்மணியைப் போன்றுள்ளது. ஏழு குதிரைகள் பூட்டிய கதிரவனின் ஊர்தியைத் தடுத்து நிறுத்திடும் அளவிற்கு உயர்ந்த மரங்கள் பல கொண்ட கானகத்தை உடையது. இந்தக் காட்டில் உள்ள மலர்கள் சிந்தும் தேனானது மதுக்கடல் போன்று தேங்கியுள்ளது.

இந் நகரமானது புறநகர், இடைநகர், உள்நகர், பரத்தையர் வீதி, வேளாளர் வீதி, வைசியர் வீதி, அரசர்வீதி ஆகிய வீதிகளைக் கொண்டது.

கூற்றுவன் நேர்பட்டாலும் அவனது மெய் இரண்டுகூறாகும்படியாக ஆயுதங்களை உடையவர் புறநகரில் காவல் செய்கின்றனர். இவர்கள், சீற்றம் மிகுந்தால் விண்ணில் பாய்ந்தும் போரிட வல்லார். மானத்தையே ஆடையாகப் பூண்டவர். தங்களிடம் போரிட்டுத் தோற்றவர்களையே காண்பர்கள், இவர்கள் தோல்வி காணாத வீரர்கள். தோமரம், வாள், வேல், குந்தம், சூலம், தண்டாழி, நாஞ்சில், காமர் அநாந்தகம், திண்மைப் பணம் வீசும் விஞ்சை, வில்லில் நாண்பூட்டி அம்புகளைத் தொடுக்கும் விஞ்சை, முதலான வீரர்கள் கற்கும் கல்லூரிகள் பல புறநகரில் உள்ளன.

இடைநகரில், குளங்களில் தண்ணீர் நிறைந்து மறுகால் போகும். அவ்வாறு போகும் நீரில் தூம்பு நுண்துளைச் சிவிறியும் துருத்தியும் குழலும் கைக்கொண்டு விளையாடுகின்றனர். காப்புறழ்ந்த தோள் மாதரும் ஓம்பு உகந்தநீர் புயமுலை ஊடுறவீசிக் கூம்பலில் தடநீர் வழியும்படியாக நீராடுவர். குளத்தில் கன்னியர் குளிக்கின்றனர். அவர்களது கொங்கை மறைத்துள்ள நுண்துகில் விலகிடக்கண்டு ஆடவர் புளகித்து அதிகரித்திடும் வியப்பினராய் மகிழ்வடைவார். புதைதனம் வெளிப்பட்டால் அதைக் கண்டு களிப்பு அடையாதவர் எவர் புவிமேல்.

உண்ணகரில் கோட்டை மதில் உள்ளது. அது உயர்ந்து நீண்டு வானின் மேற்புகுந்துள்ளது. அதன் இடைப்பாகம் நீர் நிறைந்த அகழியால் சூழப்பட்டுள்ளது. அதன் அடிப்பாகம் பாதாளத்தில் உள்ள நாகலோகத்தில் உள்ளது. அரி அயன் காணமுடியாத லிங்கோத்பவரின் அடிமுடிபோல் விளங்குகிறது கானப்பேர் கோட்டை. இதன் உச்சியை முயன்று கடந்தோரும் இல்லை, அதன் அடியினை மூழ்கிக் கடந்தவரும் இல்லை.

இதை அடுத்துப் பரத்தையர்வீதி அமைந்துள்ளது. பரத்தையர், வெள்ளை நிறத்திலான நுண்ணிய ஆடையைத் தனது உடம்பு வெளியே தெரியும்படியாக அணிந்து கொண்டு, உள்ளே அழைத்துச் சென்று உள்ளுறுப்பு ஆசை மேற்கொள்ள முன் எதிர் காட்டிக் குலாவியே குமரர் தம் கைப் பொருளைக் கொள்ளை கொள்வர்.

வேளாளர் வீதி அதையடுத்து உள்ளது. உயர்ந்த கங்கையின் ஒண்மைக் குலத்தில் பிறந்து, அயர்ந்திடாமல், ஆசாரம் அனைத்தையும் நயந்து, நல்லற நாடிப் பெறும் பயன் வியந்து, வாழுநர் வேளாண் மரபினர் . எந்த நள்ளிருளிலும் யார் வந்தாலும் காளையார்கோயில் வாழ் வேளாளர் , இளையான்குடி மாறநாயனார் போன்று தட்டுப்படாமல், தாம் உந்தும் அன்பினால் அவர்களுக்கு உணவு ஊட்டுவர்.

வைசியர் வீதியில் வாழும் வணிகர், விலைமலிந்த நாளில் பண்டங்களை நிறைய வாங்கிச் சேர்த்து வைத்து, பண்டம் வரத்து குறைந்த நாளில் அவற்றை விற்று மிக்க இலாபம் கொள்வார். விலைகூடுதலான நாளில் பண்டங்களை வாங்கி, விலைமலிந்த நாட்களில் அவற்றை விற்று நட்டம் அடைய மாட்டார்கள். எந்த தேசத்திலும் வாணிபம் செய்து பொருள் ஈட்ட வல்லார். வாணிபத்திற்குச் செல்லும் தேசங்களில் சைவ அறங்களைச் செய்து, அங்கே அன்னதானக் கொடி நாட்ட வல்லார்.

அரசர்கள் வாழும் வீதியில் முரசு அதிர்கின்ற ஓசையும், சதுரங்கம் விளையாடும் ஓசையும், விரவு சிற்றரசர் வந்து விரைந்து திறை கொட்டும் ஓசையும் , பரவிய பாவலோர்க்குப் பரிசில் பொன் அளக்கும் ஓசையும் அரண்மனை எங்கும் கேட்கும் . தன் வலிமையால் வெற்றிபெற்று அதனால் வளம் மிகுந்த செல்வப் பொலிவினால் கொடையால் சிறப்புப் பெற்றிருந்தனர் கானப்பேரெயில் அரசர்கள்.

அந்தணர் வீதியில் வாழும் அந்தணர், கொலைவினை கூடாது எனக் கூறும் வேதங்களைக் கற்றவர். தொலைவில் பல பசுக்களைக் கொல்வதால் சூழும் பாவம் தம்மைச் சாராதவாறு ஒதுங்கி இருப்பர். சுவர்க்கம் உண்மை அன்றிப் பவர்க்கம் இல்லையில்லை என்றே ஈகை ஏந்தினார். எழுத்தே, சொல்லே, இருவகைப் பொருளே, யாப்பே, நயந்தரும் அணியே, என்ற ஐந்து இலக்கணங்களை இயன்ற மாணவர்களுக்கு ஓதிடுவர். பல இலக்கிய நூல்களைப் போதித்து, உயர்ந்திடும் இரு மொழிக் கல்லூரிகள் பலவும் இந்த வீதியில் உள்ளன.

இவற்றை அடுத்து காளீசர் சோமேசர் சுந்தரேசர் ஆலயங்கள் அமைந்துள்ளன . ஆயிரங்கால் மண்டபம், மாளிகைப் பத்தி, மத்தியில் நூற்றுகால் மண்டபம், சூளிகை மன்றம், சுத்த வேள்வி செய்யும் மண்டபம், பரிவார தெய்வங்களும், வந்து வழிபட்டு உய்வடைந்த தேவர்களின் ஆலயங்களும் சிறந்து ஓங்கி நிற்கும்.

திருக்கானப்பேர் என்ற காளையார்கோயிலில், இவ்வாறாகப் பல எழில் நலன்கள் உடைய கோயிலின் உள்ளே, எல்லா உயிர்களும் உய்யுமாறு நமது காளீசன் சொர்ணவல்லி சமேதனாய், மைந்தர்கள் சூழ, மன்னி வீற்றிருந்து அரசு செய்து என்றுமே நம்மை வாழ வைக்கிறான்.

## *(4) நைமிசப் படலம்*

பற்பல சிகரங்களை உடையது, ஊழிகள் தோறும் நிலைத்திருக்கும் பெருமையை உடையது கைலாய மலை. இது, கருடர் சித்தர் அமரர் காரணர் இயக்கர் போன்றோரும், வேதங்களும் வாழ்த்தித் துதிக்கும் சிறப்புடையது.

அக்கைலாய மலையில், ஆயிரங்கால் மண்டபத்தின் நடுவே பளிங்கு மண்டபம் ஒன்று உண்டு. அது எட்டு யானைத் தந்தங்களை நட்டு, சுற்றிலும் பதினாறு தூண்கள் தாங்கும் வண்ணம் அமைக்கப்பட்டது. அந்த மண்டபத்தில் பகைவர்கள் அஞ்சும் வேலேந்திய குமரவேளும், எவ்வரங்களையும் நல்கும் யானைமுகத்து விநாயகப் பெருமானும் அருகில் இருக்க, அன்பர்களுக்கு எவ்வரங்களையும் அளிக்கும் உமையாள்

இடப்பக்கம் இருக்க, பிறைச் சந்திரன் ஒளிவீச, கங்கை திவலை சிந்த, தேவர்கள் பொன்மாரி பொழிய, அரி வலாரி முதலியோர் விதிப்படி பணிந்து நிற்க, கதிரவன் மதி நெருப்பு என்ற மூன்றையும் கண்களாக உடைய முக்கண்ணனாகிய சிவபெருமான் இனிது வீற்றிருந்தார்.

காசிபன், கபிலன், சத்திகாத்தியாயனன், பரத்துவாசன், முற்கலன், ககோளன், வாமதேவன், வசிட்டன், கோசிகன், பிருகு, வீதிகோத்திரன், துர்வாசன், சீவற்சன், சம்பு, மவுற்கலன், ஆபத்தம்பன், சௌநகன் முதலான தவ முனிவர்கள் சிவபெருமான் திருமுன் சென்று, தலைமேல் குவித்த கரத்தராய், புவனங்கள் யாவற்றையும் புரக்கும் நாயகனை ஆயிரம் திருநாமங்களால் அருச்சித்தனர். திருமால் வராகமாய்ச் சென்றும் காணமுடியாத, சிவனாரின் பாத தாமரைகளைத் தாழ்ந்து வணங்கி நின்றனர்.

“சந்திரனைத் தலையில் தாங்கிய பெருமானே, வலையில் அகப்பட்ட மான் என மயங்கித் தடுமாறித், துரும்பு போன்று அலைந்து உழல்கின்ற எங்களைக் காத்தருள்வாயாக“ என வேண்டினர். அரவத்தைத் தலையிலே அணிந்த பரமனே, “நீ உறைகின்ற தலங்களுள் எத்தலம் மிகவும் உயர்ந்தது? அத்தலத்தின் மான்மியங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல நாங்கள் உணருமாறு எங்களுக்கு ஓதி அருளுங்கள்“ என அனல்சேர்ந்த மெழுகு போன்று உள்ளம் உருகி வேண்டி நின்றனர்.

திங்கள் சூடிய சிவனும், அன்போடு அவர்களிடம் சொல்வார். “யாம் விரும்பி உறையும் தலங்கள் பலவாகும். அவற்றுள் சிறந்தது உத்தரகாளிபுரம், அதனினும் சிறந்தது தக்கணகாளிபுரம். அத்தலத்தில் உறைபவர்களுக்கு சிவப்பேறும், சித்தியும் கைகூடும். தக்கணகாளிபுரத்தின் சிறப்பினையும் லிங்க மான்மியத்தின் சிறப்பையும், தீர்த்தமான்மியத்தின் சிறப்பையும் சூதமுனிவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்க“ என்று முக்கண்ணன் அருள் செய்தார். அதைக் கேட்ட சவுனகன் முதலான முனிவர்கள் உவகையில் மூழ்கினர்.

கருணைக் கடலாகிய பெருமானின் தாள் பணிந்து, மிக்க மகிழ்வோடு அம்முனிவர்கள், கைலயங்கிரியின் தென்கிழக்கில் நைமிச வனத்தை நோக்கி, சூதமுனியைக் காண்பதற்காக விரைந்தனர். சிவனாரின் செஞ்சடைக் காட்டிலிருந்து இழிந்து, இமயமலையில் நுழைந்து, தன்னில் மூழ்கி எழுந்த அறுபதாயிரம் பேரை, நரகத்தில் விழாமல் காத்த பெருமை உடையது கங்கை. தன்னில் மூழ்கி எழுந்தவருடைய பாவத்தை நீக்குகின்ற கங்கையின் கரையில் உள்ளது அந்த நைமிசவனம். இங்கே, ஆல், அகில், மூங்கில், கடம்பு, புன்னாகம், அரசு, வெண்ணாவல், சந்தனம், குருந்து, நிம்பம், பாகல், பூங்கொன்றை, வன்னி, பாடலம், சூதம், தால மந்தாரம் போன்ற விருட்சங்கள் நிறைந்து அடர்ந்த காடாக விளங்குவது. மான்கன்றும் புலிக்குட்டியும் ஒன்றாக நீர் பருகும். சிங்கக் குருளை யானையின் முலைப்பாலை உண்ணும். அவ்வனத்தில் தவம் புரியும் முனிவர்கள் இயற்றும் வேள்விப் புகை விண்ணில் பரவி, இந்திரன் அவி உணவை ஏற்றுக் கொள்வதற்கு விண்ணுக்கு அனுப்பப்பட்ட மேகவாகனம் போல விளங்கும்.

இத்தகைய வளமான நைமிசக் கானகத்தை அடைந்த முனிவர்கள் அங்கு மெய் முழுதும் வெண்ணீறு அணிந்து, தூய உருத்திராக்கம் புனைந்து, நித்திய தவத்தை மேற்கொண்டிருக்கும் வியாசமுனிவரின் மாணாக்கராகிய சூதமுனிவரைக் கண்டனர். அவரை வணங்கி, நீலகண்டராகிய சிவபெருமானின் ஆணையின்படித் தங்களைக் காண வந்துள்ளோம் என்றனர். இனி எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. “பரத கண்டத்தில் இரண்டு காளிபுரங்கள் உள்ளன என்றும், அவற்றுள் ஒன்று வடதிசையில் உள்ளது என்றும், மற்றொன்று தெற்கிலுள்ளது என்றும், இரண்டிலும் பின்னது மிகவும் உயர்வு உடையது என்றும், அத்தலம் அங்கு வசிக்கின்ற எல்லா உயிர்களுக்கும் முத்தி வழங்கிடும் என்றும், அத்தலத்தின் பெருமையை உங்களிடம் தெரிந்து கொள்க“ என்று இறைவன் எங்களிடம் கூறி

இங்கு அனுப்பி வைத்தார். ஆதலால் உங்களைத் தேடி வந்தோம், "எங்களுக்கு அத்தலத்தின் மான்மியங்களை எடுத்துரைப்பீராக" என்றனர் சவுனகாதி முனிவர்கள்.

சூதமாமுனிவரும் காளிமாபுரத்தினை, யானைமடுவை, சொர்ணவல்லி அம்மையை காளீசரை, சுந்தராம்பிகையைச் சோதியாம் சோமேசரைக், கயற்கண்ணியை சுந்தரேசரை, வாளின்மேல் நடந்தாளை ஒரு முகூர்த்த நேரம் தியானித்து, தன் குருவான வேதவியாசரின் திருத்தாளினை நினைந்து வணங்கிப் பின் சவுனகாதி முனிவர்களை நோக்கி, இத்தலத்தின் பெருமைகளை யான் உரைக்க நீங்கள் இரு செவிகளாலும் பருகுவீர் என்று காளிபுர மான்மியத்தைச் சொல்லத் தொடங்கினார்.

"தன்னை வந்து சார்ந்தவர்களுக்கு மாபலம் தருவதாகி, நித்திய சுயம்புவாய் வல்லிக் கொடி சுற்றப் பெற்று விளங்கும் கற்பகம் ஆகிய காளீசரின் ஆணையை நிறைவேற்றுவாராக" என்று வாழ்த்தி, "மெய்தவம் உடையவர்களே, காளீசனார் கதைகளைக் கேட்க விரும்பினீர்கள், நீங்களே முத்தர். உள்ளன்போடு இத்திருத்தல மான்மியத்தைக் கேட்பவர்களின் வினையெல்லாம் நீங்கும், அறம் பொருள் இன்பம் மட்டுமல்லாமல் முத்தியும் கிட்டும். அத்தல மான்மியத்தை ஆதியிலிருந்து கூறுகிறேன், கேளுங்கள்" என்று கூறத் தொடங்கினார் சூதமாமுனிவர்.

முன்னொரு காலத்தில் '**மாகிண்மதி**' என்னும் தொன்மையான நகரைச் சேர்ந்த சிறந்த சிவபக்தனாகிய '**சதாநிகன்**' என்னும் மன்னவன் சைவ உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையில் தீர்த்த யாத்திரை மேற்கொண்டான். செல்லும் வழியில் **உதங்க மாமுனிவர்** இருக்கின்ற வனத்தை அடைந்தான். அம்முனிவரைக் கண்டு வணங்கித் "தக்கண காளிபுரத்தின் மான்மியத்தை விரித்துக் கூறி அருள்க" என வேண்டி நின்றான். உதங்க முனிவரும் காளிபுரத்தின் மேன்மையை அன்போடு கூறினார்.

கோமதி தீரத்தில் உத்தரகாளிபுரம் என்ற தலம் உள்ளது. அத்தலத்தைவிட உயர்ந்ததாய், சுத்தபுத்தியும் காரியசித்தியும் நல்கும் தக்கனகாளிபுரம் என்ற ஒரு திருத்தலம் உள்ளது. இது பாண்டிய நாட்டில், வையை நதிக்கு ஒரு யோசனை வடக்கிலும், கூடல் என்ற மதுரைக்குக் கிழக்கே நான்கு யோசனை தூரத்திலும், சீதளிக் குளத்தையுடைய திருப்புத்தூர்க்கு இரண்டரை யோசனை தெற்கிலும் உள்ளது.

அத்தலத்திற்கு காளிபுரம், சோதிவனம், மந்தாரமாவனம், உத்தம சைவகேந்திரம், காந்தாரம், தவசித்திகரம் தேவதாருமாவனம், பூலோக கைலாயம் என பல பெயர்கள் உண்டு. அப் பெயர்களை உச்சரிக்கினும் நம்முடைய வினைகள் போகும்.

இத்தலப் பெருமையைக் குறித்து நீ கேட்பது உன்னுடைய தவப் பயனினால்தான். உத்தமன் ஆகின்றாய். நான் காளிபுரத்தின் மேன்மையைப் பற்றிக் கூறுகின்றேன், கேட்பாயாக என உதங்க முனிவர் கூறினார்.

பண்டைக் காலத்தில் ஒருநாள் கயிலையில் சிவபெருமானிடம் உமையவள், "தாங்கள் உறைகின்ற தலங்களுள், கெடாத நல்ல தீர்த்தங்களையுடைய அடியார்களுடைய வினையைப் போக்குகின்ற இலிங்கங்கள் நிறைந்த தலங்கள் பல உள்ளன, அவற்றுள் உத்தமமான தலங்கள் யாவை? என்று கூறி அருளுங்கள்" என்று கேட்டார். அதற்குச் சிவபெருமானும், "நாம் உறைகின்ற தலங்கள் பற்பல அவற்றுள்ளும் உத்தமம் ஆயிரத்தெட்டு; அவற்றுள்ளும் ஐந்நூறு தலங்கள் உத்தமம்; அவற்றுள்ளும் உத்தமம் முன்னூறு தலங்கள்; அவற்றுள்ளும் நூறு உத்தமம்; அவற்றுள்ளும் அறுபத்து நான்கு தலங்கள் உத்தமம்; அவற்றுள்ளும் முப்பத்துநான்கு தலங்கள் உத்தமம்; அவற்றுள்ளும் பதினாறு தலங்கள் உத்தமம்; அவற்றுள்ளும் எட்டு உத்தமம்; அவற்றுள்ளும் நான்கு உத்தமம்; அவற்றுள்ளும் இரண்டு தலங்கள் உத்தமம்" என்றும், அவை உத்தரகாளிபுரமும்

தக்கணகாளிபுரமும் ஆகும். எத்தலத்தினும் உயர்ந்தது. மிக்க சீர் ஆலவாய் மதுரையிலும் சிறப்புடையது.

அத்தலத்து சோதிலிங்கத்தில் துவாத சாந்தத்தில், அங்கயற்கண்ணியாகிய உன்னுடன் என்றும் மேவி வாழ்கின்றேன். அதனை என்றும் காணலாம். அத்தலம், ஊழிக் காலத்திலும் அழியாமல் நிலைத்து ஒளிரும். பூலோகத்தில் கோடிக்கணக்கான தீர்த்தங்கள் உள்ளன. அத் தீர்த்தங்களுள் தென்காளிபுரத்திலுள்ள சிவகங்கை தீர்த்தத்தில் மூழ்கினால், புண்ணிய தீர்த்தங்கள் அனைத்திலும் நீராடிய புண்ணியம் கிடைக்கும்.

மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புடையது அத்தலம் என்று, இமவான் மகளுக்கு இறைவன் கூறினார். அதை அவளது மடிமேல் இருந்த குமரகுருபரனாகிய முருகப் பெருமான் கேட்டார். தான் கேட்ட அத்தலத்தின் சிறப்பையெல்லாம், அகத்தியர்க்கு உரைத்தார். அகத்திய முனிவர் எனக்குச் சொன்னார். அதனை நான் உனக்கு ஓதினேன் என்று உதங்கமா முனிவர் சதாநிக மன்னவனுக்குச் சொன்னார். மன்னனும் அக்காளிபுரத்தின் மேன்மையை இன்னும் விரித்து அருளுங்கள் என்று முனிவரை வேண்டிக் கொண்டார். உதங்க முனிவரும் விரிவாகக் கூறலுற்றார். வியாசமுனிவர் விரித்துரைத்த பதினெட்டு புராணங்களுள் சூரியனாருக்கு உரியது, உன்னதம் நிறைந்தது பிரமகைவர்த்த புராணம். அதில் காளையார்கோயில் கதைகள் உள்ளன. அதை நான் இப்போது உங்களுக்குச் சொல்ல, செவிவாயாகப் பருகுமின் என்று சொன்னார் சூதமாமுனிவர்.

**காளிபுர மேன்மை**

சிவன் உமையவளுக்குச் சொல்ல, மடியிலிருந்த முருகன் கேட்டு அகத்தியருக்குச் சொல்ல, அகத்தியர் உதங்க முனிவருக்குச் சொல்ல, உதங்க முனிவர் சதாநிகன் என்ற மன்னனுக்குச் சொன்னார். சவுனகாதி முனிவர்கள் சிவபெருமானைக் கேட்க, சிவன் நைமிச வனத்திலுள்ள சூதக முனிவரைக் கண்டு காளிபுர மான்மியத்தைக் கேட்குமாறு கூறினார்.

# (5) அகத்தியர் ஞானோபதேசம் பெற்ற படலம்

நைமிசப் படலத்தைத் தொடர்ந்து, அகத்தியர் சிவபெருமானிடம் ஞானோபதேசம் பெற்ற கதை கூறப்படுகிறது. முன்பொரு சமயம், கும்பமுனியாகிய அகத்தியர் சிவலிங்க தத்துவத்தைத் தெரிந்துகொள்ள விரும்பி, பல நாடுகளிலும் யாத்திரை மேற்கொண்டு, இறுதியில் நல்வினைப் பயனால் காளையார்கோயில் என்று இப்போது அழைக்கப்படும் சோதிவனத்தை அடைந்தார். இவர், ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் ஆகிய மூன்றாலும் உண்டானதால் ‘முந்நீர்‘ என்று அழைக்கப்படும் கடலை உண்டவர். இவர், இயற்கை வளம் நிறைந்த சோதிவனத்தை அடைந்து, அங்கு உறைந்துள்ள இறைவனை வாயாரப் புகழ்ந்து துதித்தார். “இந்த சோதிவனம், இந்திரலோகத்திலுள்ள வளமான நந்தவனமோ? குபேரனுடைய புஷ்பக ரதமோ? என்றெல்லாம் நினைத்தார். அங்கு தூய்மையான, சான்றோரின் அறிவைப் போலத் தெளிந்த நீரையுடைய மலர்கள் நிறைந்த குளம் ஒன்றைக் கண்டார். அதில் நீராட விரும்பி, அதன் அருகில் சென்றபோது, ஆகாயத்திலிருந்து, “ஓ! அகத்திய, கேட்பாயாக, இத் தீர்த்தம் பெரும் புண்ணியம் நிறைந்தது. இதில் நீராடினால் நினைத்தது எல்லாம் நினைத்தபடியே அடையலாம். இதன் பெயர் சிவகங்கை. இதில் விதிப்படி மூழ்கி நீராடி, கரையில் இருந்து தவத்தை மேற்கொண்டால், நினைத்தற்கரிய சிவஞானம் கிடைக்கும். நீயும் சிவஞானம் பெற விரும்பி, இக்குளத்திலே நீராடி, தவத்தை மேற்கொள்வாயாக“ என்று அசரீரி வாக்கு எழுந்தது.

விந்தியமலையை அடக்கியவராகிய அகத்தியரும், அசரீரியைக் கேட்டு வியந்து, அவ்வாறே விதிப்படி சிவகங்கைத் தீர்த்தத்தில் மூழ்கி எழுந்து, விபூதி உருத்திராக்கம்

அணிந்து, குளத்தின் கீழ்க்கரையிலிருந்து ஐம்பொறிகளையும் அடக்கி , உணவு ஒழித்து , யோக நிட்டையில் அமர்ந்தார். இளவேனில் முதுவேனில் கார் கூதிர் முன்பனி பின்பனி என மாறிமாறி வரும் ஒரு வருடத்தின் ஆறு பருவங்களிலும் யோக நிட்டையில் ஆழ்ந்து, பரம்பொருளை நினைத்துத் தவமிருந்தார் . இவ்வாறாக, பத்து ஆண்டுகள் நிட்டையில் கழிந்தன . பின்பு, அவர் எதிரில் சோதிப் பிழம்பு ஒன்று தோன்றிற்று . மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பரந்த அந்த சோதியைக் கண்ட அகத்தியர் உவப்போடு விரைந்து பணிந்து வணங்கினார்.

“எண்ணிலா அண்டகோடி எதன் ஒளியால் விளங்கும்
எண்ணிலா உலகை என்று ஊழ் எதன் ஒளியால் விளக்கும்
எண்ணிலா மடமைக் கங்குல் எதன் ஒளியால் வீந்தோடும்
எண்ணிலாக் கதிர்சால் அந்த வேகமாம் சோதி போற்றி

எதன் ஒளி தன்னில் கோடியினில் ஒருகூறு கொண்டு
புத்னெனும் புதல்வற் பெற்றோன் புவனம் முற்றும் விளக்கி
இதர சனீகரப் பேர் எய்தினன் உலவுகின்றான்
எது கரையிலாது அந்த வேகமாம் சோதிபோற்றி

எவ்வொளி தன்னோர் கூறு ஏற்று எரி உலகு எல்லாம் விளக்கும்
எவ்வொளியின் கூறு என்றால் எப்பொருளும் தகிக்கும்
எவ்வொளி யரதனங்களின் பிரபைக்கு மூலம்
எவ்வொளி நிறைந்தது அந்த வேகமாம் சோதிபோற்றி

அருமறை முடியும் தேறா அகண்டமாம் வடிவே போற்றி
நிருவிகாரத்து அதாகு நிட்களப் பொருளே போற்றி
ஒருவிலாது எவையும் ஆக்கி ஒடுக்குதல் பரமே போற்றி
இருமைசால் வினைகள் சாரா வேகமாம் சோதி போற்றி “

என்றெல்லாம் துதித்து அகத்தியர் இறைவனை வணங்கி நின்றார் . அப்போது, அவரெதிரே தோன்றிய சோதி மண்டலத்தின் நடுவே, கங்கையும் நிலவும் விளங்கும் சடையராய், ஸ்படிக மேனியோடு, உமையன்னை இடப்பக்கம் இருக்க , அகத்தியருக்குக் காட்சி கொடுத்தருளினார் கருணைக் கடலாகிய எம்மான். பூதகணங்கள் முன்னும் பின்னும் சூழ்ந்து வர, வெள்ளை காளையின் மீது தோன்றி திருமுகம் மலர , மாமுனிவராகிய அகத்தியரை நோக்கி, “மலய மா முனிவ உன்னுடைய தவத்தைக் கண்டு மகிழ்ந்தோம் , நீ வேண்டுவன யாவை? அவற்றைக் கேட்பாயாக“ என்றார். அகத்தியரும், மெய் சிலிர்க்க, “அளவில்லாத கருணை வடிவானவரே சரணம் , நின் திருவருளாலே நின் சுயரூபத்தை , நினது ஆற்றலை, உணர விரும்பினேன். நான் அதை நன்கு உணருமாறு தெரிவிப்பாயாக“ என்றார் . அதைக் கேட்ட இறைவனும், “நன்று, நன்று” என்று புன்னகைத்து , அகத்தியருக்கு அருளோடு பதிலுரைக்கிறார்.

“இன்னவாறு இருக்கிறேன் என்று என்னுடைய தன்மையை யாராலும் உணரமுடியாது. அதையும் நான் உன்னிடம் வைத்த அருளினால் உரைக்கிறேன் , கேள். மண், நீர், தீ, கால்(காற்று), வான், மதி, இரவி(சூரியன்), எச்சன் என்ற எட்டும் எனது மெய் ஆகும். என்னையன்றி ஒன்றுமில்லை. அனைத்துமே எம்மிடத்தில் அடங்கியுள்ளன . உலகத்திலுள்ள அனைத்தினும் யாமே அணுவினுக்கு அணுவாய் வியாபித்திருக்கிறோம் . சச்சிதாநந்தம் ஆகி, தனித்த நிற்குமைதாகி, விருப்பு வெறுப்பு இல்லாமல் நிற்கின்ற எம்மை, நான்கு வேதங்களும் இன்னும் அறியவில்லை . சனகாதி முனிவர்களுக்கும் அரியதே . உணருங்காலை, இப்போது எங்கும் வியாபித்திருக்கும் , நீ பார்த்துக் கொண்டிருக்கிற சோதியே என் திரிபிலா வடிவமாகும் . எவராலும் காணமுடியாத எனது தன்மையை , எனது கருணையால் நீ காணுகிற பேறு உனக்குக் கிடைத்தது , அது மட்டுமல்ல, வாக்கின் பொருள்

எல்லாம் நின் மனதில் நினைத்த அளவிலே தோன்றிடும் . தென்னாட்டு மக்களுக்கு அறிவுறுத்த தமிழ் இலக்கண நூலைச் செய்வாயாக . ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களின் பொருள்களை எல்லாம் உணர்ந்து கொள்க . மேலும் புராணங்களின் உட்பொருளை ஐயமில்லாமல் சான்றுகளுடன் விளக்குக . வேதங்களில் கூறப்பட்ட வழிபாட்டுப் பூசை முறைகளும், ஆகமத்தை ஓதும் வழிமுறைகளும் உன்னுடைய மனத்தில் உதிக்கட்டும். சந்திரசூரியர்களின் இயக்கங்களைத் தடுத்து , பின்னொரு சமயம் விந்தியமலை உயர்ந்து செருக்கு அடையும் , அதை அமிழ்த்தி அதன் செருக்கை அடக்குக . பின்னை நாளில், பெருகி வரும் கடலை உன் உள்ளங் கையால் அள்ளி விழுங்குவாயாக . இந்திரன் முதலான தேவர்கள், தங்கள் துயரங்கள் தீர உன்னை வந்து வணங்கி விமோசனம் பெறுவார்கள். வானளாவும் சந்தனமரங்கள் சூழ்ந்திருக்கின்ற இந்த சோதிவனத்தில் நீ பல்லாண்டுகள் இருந்து, தவம் இயற்றி, “அகத்திய கேத்திரம் இது“ எனும்படி இருப்பாயாக“ என்று சிவபெருமான் அருளிச் செய்தார்.

இவ்வாறு அருள் செய்த, எழில் விடைச் சோதியனை, அகத்திய முனிவர் தாழ்ந்து பணிந்து எழுந்து வணங்கி ‘உயந்தனன் உய்ந்தனன்‘ என்று வாழ்த்தி இறும்பூது அடைந்தார்.

பின்னர் அவர் திருத்தளிநாதர் எழுந்தருளியிருக்கும் தலத்தை அடைந்து மலர்கொண்டு மூல லிங்கத்தினை நீராட்டி அருச்சித்தார் . அகத்திய முனிவர், அஷ்டாங்க, பஞ்சாங்க முறையில் நிலத்தில் உடம்பு படுமாறு வணங்கி மங்கைபாகனை வழிபட்டு விடைபெற்றுக் கொண்டு அவரது பன்னசாலைக்கு ஏகினார்.

## *(6) காளி திரு அவதாரப் படலம்*

சோதிவனம் என்ற கானப்பேரில் சிவபெருமானிடம் பெருந்தவ முனிவனாகிய அகத்தியன் ஞான உபதேசம் பெற்ற சிறப்பினைக் கூறினோம். ஈசன் முதலான தேவர்கள் எல்லாம் உய்வு அடையுமாறு, மகேசுவரி கானப்பேரில் உள்ள கானகத்தில் காளியாய் வாழ்ந்த கதையைக் கூறுவோம்.

சிவபெருமான், குடமுனியாகிய அகத்தியனுக்குச் சோதிவடிவம் காட்டி வரம் அளித்த பின்னர், அந்தச் சோதி உருவத்தை மாற்றிப், படிக உருவம் காட்டி, உமையொடு கணங்கள் சூழ சோதிவனத்துள் உலாவி வந்தார். அப்போது, எம் அன்னை விம லனைப் போற்றி, எதற்காக இந்தப் படிக உருவம் எடுத்துள்ளீர்கள்? ஐயனே, என்று கேட்டாள். படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளுதல் எனும் ஐந்து செயல்களின் பொருட்டு , இது எனது அகக் கண்கள் திறந்துள்ளது போன்று உலகம் பொலிந்து தோன்றும் . எனது கண்கள் மூடினால் எனது ஐந்தொழில்களும் அழியும். எனது ஆடல் அருள் திறமே இவற்றை எல்லாம் வழங்குதற்குக் காரணமாகும் என்று கூறினார். இதுகேட்ட எம் அன்னை உள்ளத்தில் இறும்பூது எய்தி , எண்ணில்லா உலகம் எல்லாம் ஆதலுக்கும் போதலுக்கும் காரண காரியமான பெருமான் விழியை மூடிச் சோதிக்க விரும்பினாள்.

கண்களைக் கட்டிக் கொண்டு விளையாடும் பண்ணை என்ற விளையாட்டில் விளையாடுவது போல, அறம் வளர்க்கும் தனது இரண்டு தாமரைக் கரங்களாலும், பரமனின் பின்னே நின்று அவரது கண்களைப் பொத்தினாள் மரகதவல்லி . இதனால் மூன்று உலகங்களும் இருளில் மூழ்கின . உலக உயிர்கள் எல்லாம் பிரளயம் ஏற்பட்டுவிட்டதோ என்று மயங்கிப் பதைபதைத்தன. வேறு ஒன்றும் தோன்றாது மனம் நொந்து, ‘ஆகா‘ என்றே கூவி நடுக்கம் உற்றார் அனைவரும் . அனைத்து உயிர்களுக்கும் உயிராய் உறைந்த சிவபிரான் சினம் கொண்டார். சிவபெருமானின் சினத்தை உணர்ந்து கொண்ட அம்மையும் பதைத்துப் புதைத்திடும் தன் கைகளை விடுவித்தாள் . சிவபெருமானின் கண்கள் மூடியதால் காலவரை எல்லாமும் தெரிவு இன்றி மாறின . காலவரை மாறிய காரணத்தினால், அந்தணர் முதலானோரின் கருமங்கள் எல்லாம் நசிந்தன . சிவனைக் குறித்துச் செய்யும் மகத்

தொழில்கள் ஒழிந்தன. ஆறு காலப் பூசனைகள் ஒழிந்தன. சிவனை நினைந்திடும் யோகியர் தவமும் ஒழிந்தன. இன்னிசையுடன் சிவனைக் குறித்துப் புகழ்ந்திடும் தோத்திரங்களும் ஒழிந்தன.

தக்கனது மகளே, கேள், "எவரொருவர் எவ்வினை செய்தாலும் அதற்குரிய பலனை ஏற்பர். அறவினை செய்தோர் இன்பம் நிறைந்த சுவர்க்கம் புகுவர். தீவினை இழைத்தோர், நரகம் உற்றுத் தாழ்ந்து இடர் துய்த்து மீள்வர். அந்தந்தோ, நீ செய்த இந்தச் செயலால், மூன்று உலகத்தில் உள்ளாரும் இரண்டு சுடர்களின் ஒளியின்றித் திரிபு அடைந்தனர். இன்ன பெரும் பாதகத்தை உலகுக்கு நீ செய்த காரணத்தால், இந்த நொடியே, தமோ குணம் பெற்று, இருள் நிறமாய், எவரும் வெருண்டு தயங்குமாறு, கோர உருவம் கொண்டு காளியாகுக" என்று குரூர சாபம் விதித்தனன் சிவபெருமான்.

விடைக்கொடியான் கொடுத்த சாபமொழி கேட்ட விடைக்கொடியாள் வெருண்டு, சிவபெருமானது பாதத்தைத் தன் தலைக்கு அணிந்து, 'அடியேன் செய்த பிழையைப் பொறுத்தல் வேண்டும், இதற்குக் கழுவாய் தந்தருள வேண்டும்' என வேண்டி நின்றாள். அதற்குச் சிவபெருமானும், "இச் சோதிவனத்துள் சில நாட்கள் நீ இருந்து, அகிலத்தில் யாவரும் கவலை அடையும்படியான அசுரனை அழித்து, மீள்வாயாக" என்று அருளிச் செய்தார். அதன்படியே அன்னையும், சிவன் பாகம்பிரிந்து, துர்க்கையாகிச் சோதிவனத்தின் உத்தர பூருவ திசையில் யோசனை தூரத்தில் உள்ள மருத மரத்தின் கீழ் சாப விமோசனம் ஆகும் நாள் எண்ணி தவத்தில் இருந்தாள்.

இவ்வாறு இக்கதை நிற்க, திதி என்பவள் காசிப முனிவரை வேண்டி, சண்டனோடு தாரகன் கும்பன் தண்டன் வீமாக்கன் வசுவனன் மகோதரன் வீர ன் என்ற அசுரர்களைத் தோற்றுவித்தாள். அவர்களில், சண்டன் என்பவன் தனது படை சூழ பூமியில் சிறந்த புண்ணிய தலமான திருக்கோகன்னம் என்னும் திருத்தலத்தை அடைந்தான். அங்கே அமர்ந்து ஆயிரம் ஆண்டு அரிய கொடுந்தவம் இயற்றினான். திருக்கோகரணநாதன் காளை வாகனத்தில் உமை சேயுடன் தோன்றினன். அந்தச் சண்டன் தன் கண்களில் நீர் வழிய மெய்யன்பில் தாழ்ந்து எழுந்து அவர்களைத் துதித்தான். 'மகாவிட்ணு பிரம்மா முதலானோர் அறிய முடியாத நின் புகழைச் சிறியேன் நான் எவ்வண்ணம் கூறுவேன். கங்கை தவழ் சடையாய், இடப்பால் உமையை வைத்தவனே, அண்டியவர்களுக்கு நற்கருணை நிறைந்தவனே, அடியவர்களுக்கு கற்பகம் போன்றவனே, கொடிய மன்மதன் எரியுமாறு விழித்தவனே, முப்புரம் பொடிபட எரித்தவனே, உன் நாம குணங்களையே என் செவிகளில் கேட்பேன், உன் அடிமலரில் பாமலர் சூட்டும் கல்வி இல்லேன், பசுபதியே, கருணை நிறைந்த உன் கடைக் கண்ணால் என்னைக் காத்திடுவாய்' என்றான்.

இவ்வாறு, திருக்கோகரணத்தில் இருக்கும் எம்பெருமானை ஏத்தி விண்ணவர்களின் எதிரியான சண்டாசுரன் புகழ்ந்தான். வள்ளல் ஆகிய தயாபரன் கருணை கூர்ந்து, சண்டாசுரனை நோக்கி, நீ வேண்டுவது யாது ? என்று கேட்டார். அதற்குச் சண்டாசுரனும், தேவேந்திரன், கனலி யமன் நிருதி வருணன் வாயு இயக்கன் ஈசானன் ஆகிய எட்டு திசைதெய்வங்களும், பிரமன் முதலான தேவர்களும் உன்னிடத்தில் அடைக்கலம் ஆகாமலும், அவர்கள் என்னை எதிர்க்கும் போது எனது உருவம் அவர்களுக்குத் தோன்றாமலும், ஆனால் அவர்களை நான் காணும்படியாகவும், எனது எதிரிகளின் தலை தூள்தூளாய் விழும்படியாகவும், தேவர் மானிடர் விலங்கு இவர்களால் நான் இறவாத வண்ணமும் வரம் வழங்குக என வேண்டினான். நீ வேண்டியவாறே எல்லாம் ஆகுக என்று வரம் கொடுத்து அரன் மறைந்தனன். இப்படியொரு வரம் பெற்ற சண்டாசுரன் எழுந்து உள்ளத்தில் இறுமாப்புக் கொண்டு, தன்னை வெல்ல யாரும் இல்லை என்ற ஆணவத்தோடு செல்வச் செழிப்பு மிகுந்த மாயாபுரம் எனும் நகர் ஒன்றை உருவாக்கினான். அங்கு தனது ஏழு உடன்பிறந்தோர்களுடன், தானை புடை சூழ, இனிது இருந்தனன்.

அப்போது மூன்று உலகையும் வென்று வெற்றிக்கொடி நாட்டி மீள்வேன் என்று எண்ணினான் சண்டாசுரன். விரி கடலுக்கு நிகரான படைகளுடன் எழுந்து போய், அமரர் பதியான இந்திரலோகத்தை அடைந்து சுற்றி வளை த்தனன். இது கண்ட இந்திரன் சினம் மிகுந்து தனது ஐராவதத்தின் மேல் வச்சிராயுதத்துடன் தேவர்படை சூழப் போர் செய்தான்.

இரு தரப்பினரும் ஒ ருவரோடு ஒருவர் ஒன்று கலந்து பெரும் போர் செய்தனர் . பரசு சில்வாள் கப்பணம் திகிரி தண்டு நீள்சுரிகை கொண்டு எறிந்த அசுரர்களின் உடலிலிருந்து குருதிப் பெருக்கு எழத் தேவர்கள் போரிட்டனர் . அண்டர் வேல் கொண்டு எறிந்து அசுரர்களைச் சாய்த்த னர். இதைக் கண்ட மாயையில் வல்லவரான அசுரர்கள், வானவப் படை மீது மழைபோல் அம்புகளைப் பெய்தனர். பின்னர் அசு ரர்கள் தீய வேதியினால் மோதியதால், அளவிலாத தங்களது வலிமை குன்றி தேவர்கள் வீழ்ந்தனர் . இந்திரன் சினம் கொண்டு, அவனது ஆயிரம் கண்களும் சிவந்து வச்சிராயுதத்தால் அசுரர் தலைகளைப் புடைத்தான். இதுகண்ட அசுரர்படைகள் குலைந்தன. சண்டாசுரனும் தனது தம்பிமாரை அழைத்து, "இந்திரனது தலையை உருட்டி இம் எனும் முன் வாருங்கள்" என்று ஏவினான். அசுரர்களும், கால மழைமுகில் எனத் தோன்றி எண்ணமுடியாத அளவிற்குக் கணைகளைத் தொடுத்துத் தேவர் தலை பிளந்தனர் . இந்திரனும் நூறு சிவந்தகண்களை உடைய வாளியினால் நொடியி ல் கரஞ்சுற்றி வெவ்வேறு வீரர்கள் பிரிந்து இரிந்திட வெகுண்டு அடித்தனன். அசுரர்கள் மதி மயங்கி வீழ்ந்து மெய் மாண்டனர். சண்டனுங் காய்ந்து தீ எனக் கொதித்து எழுந்து, இந்திரனது தேருக்கு ஒத்ததொரு தேரில் ஏறிச் சென்று இந்திரனைத் துரத்தி, முன்பு சிவபெருமானிடம் பெற்ற வரத்தினால் தனது உருவத்தை யாரும் கண்டிடாதவாறு மறைந்து இருந்து பல கணைகளைச் சொரிந்து விண்ணில் மறைந்தான். தீய்ச் சண்டன் மறைந்திருந்து விடும் மாய அம்புக ளை எதிர்கொள்ள முடியாமல் தேவர்கள் சாய்ந்தனர். அசுரன் எங்கு ஒளிந்து நின்று அம்பு விடுகின்றான், என அறிய முடியாத காரணத்தினால் எனது வச்சிராயுதத்தை ஏவி அவனைக் கொல்ல முடியவில்லையே என இந்திரன் வருந்தினான். இங்கு சண்டாசுரனுடைய போர்த் திறமை பெரியதாய் உள்ளது, என் செய் வோம் என வருந்தினான். என்னுடைய ஆயிரம் கண்களுக்கும் அவன் நேர்படவில்லை. எதிரில் நின்று போர் புரிந்தால் நான் அவனை எளிதில் வென்று விடுவேன். ஆனால் அவனோ புன்கண் எய்துமாறு ஒளி ந்து வஞ்சகப் போர் செய்கின்றானே என வருந்தினான். இந்திரன் தனது தேவர்படையை நோக்கி, ஈசானன் முதலான திசைதெய்வங்களின் அத்திரங்கள் அனைத்தையும் ஒன்று சேர்த்து ஏவுங்கள், மின் வலிச் சண்டனைக் குறித்து நானும் என்படையை ஏவுகின்றேன் என்று கூறினான். அவ்வாறே தேவர்களும் அத்திரங்களைக் கொண்டு வில் வளைத்து எய்தனர். ஆனால் சண்டாசுரன் தென்படாமல் மறைந்து தப்பினான். பின்னர் அசுரனும் தனது அத்திரத்தால் தேவர்களைத் தகித்து வெண் சாம்ப லாக்கி மோகனக் கணையை ஏவினன் . இதனால் தேவர்கள் மதி மயங்கிப் போரில் தோற்று, வானவர் தலைவனுடன் பிரமனூர் வழியாகப் போய் விட்டனர்.

மாயை மிகுந்த சண்டனும் விண்ணுலகைத் தன்னுடையது ஆக்கி ஐந்து தருக்களின் நிழலில் உள்ள இருக்கையில் இனிது ஏறியிருந்தான். நல்ல எழில் மிகுந்த தேவ மடந்தையர் நடனம் செய்ய வீற்றிருந்து அரசு அளித்தனன்.

# (7) காளி பட்டாபிடேகப் படலம்

மூன்று உலகங்களும் இருளும் படியாகச் சிவபெருமானின் திருக்கண்ணைச் சாற்றிய குற்றத்தினால் உமையம்மை இருள்நிறைந்து கரியவடிவான காளியாக மாறிச் சோதிவனத்தில் இருந்த கதையைப் படித்தோம். காளிக்குத் தேவர்கள் ஒரு ந ல்ல நாளில் முடிசூட்டி வைத்த கதையைக் கூறுவோம்.

அசுரர்கள் போரில் வென்று இந்திரலோகத்தைக் கைப்பற்றினர் . இந்திரன் தப்பியோடிப் பிரம்மதேவனின் மலர்த்தாள்களில் வீழ்ந் தான். தன்னைக் காக்க வேண்டும் என வேண்டினான். உனக்கு எவ்வாறு இந்நிலை ஏற்பட்டது ? என்று பிரமதேவ ன் இந்திரனிடம் கேட்டான் . ஐயனே, தந்தையாய் இருந்து அனைத்து உயிர்களையும் படைக்கும் நீ அறியாதது உண்டோ , திதி மகன் சண்டன் என்பான் , தான் பெற்ற வரத்தால் என்னை வென்று விண்ணுலகைக் கைக்கொண்டான் . உயிர்களைப் படைப்பதால் **பிதாமகன்** என்ற பேர் பெற்றாய். நீங்காத அன்பு வைத்த நீதி யால் உனக்குப் போக்கறு **சுரோத்தமன்** என்ற பேர் உள்ளது. எனவே, நீயே என்னைக் காக்கவேண்டும், இது உன் கடமை என்று இந்திரன் நான்முகனிடம் வேண்டினான். **சதமகன்** என்ற இந்திரன் இழிவடைந்த நிலையைக் கேட்ட நான்முகன், "சண்டனுக்கு இவ்வாறான வரத்தை அளித்தவர் யார்? இது புதுமையாக உள்ளதே" என்று பரிகசித்தல் செய்தான்.

அப்போது, பேரி ஓசை கேட்டுத் துணுக்குற்று, என்ன என்று புறம் போய்ப் பார்த்தனர். அங்கு சண்டனின் படை சூழ்ந்திருப்பதைக் கண்டார் . அதைக் கண்டு கண்கள் சிவக்க தேவர்களின் சேனைகள் சூழ் ந்திடப் போருக்கு எழுந்தான் பிரமதேவன் . மிகவும் வலிமையுடன் தாக்குகின்ற சண்டாசுரன் தனது சேனைகளுடன் எதிர்த்து அம்பு மழை பெய்து அனைத்தையும் எரித்தான். அசுரனின் கை ஓங்கிய காரணத்தினால், நான்கு வேதங்களுக்கு உரியவனான நான்முகனும் வெகுண்டு சீறித் தனது அத்திரத்தைச் சண்டன் மேல் விடுத்தான். நான்முகன் விடுத்த அத்திரம் சண்டாசுரனை நோக்கி விரைந்தது. கங்கைசுமந்தான் கொடுத்த வரத்தினால் அசுரன் மறைந்து நின்றான் . அசுரனைக் காணாத காரணத்தினால் அந்த பிரம்மாத்திரமானது தன்னை ஏவிய பிரமனையே துரத்திற்று. தான் ஏவிய அத்திரம் தன்னையே துரத்துவது கண்டு வெருண்ட பிரம்மதேவன் பிரம்மலோகத்திலிருந்து ஓட்டம் கொண்டான்.

பிரம்மன் இந்திரன் முதலான அனைத்துத் தேவர்களும் மகாவிட்ணுவைச் சரண் அடைந்தனர். மகாவிட்ணுவும் அவர்களிடம், நீங்கள் அஞ்சாதீர்கள், பிஞ்சு வெண்மதி சூடிய நம் சிவபெருமானிடம் இந் த நஞ்சு மன்னவன் பெருவரம் பெற்று ள்ளான். அவன் இங்கேயும் வருவான். வந்தால் நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, அமர் புரிவோம் என்றான். அச் சொல் கேட்ட நான்முகன் முதல் வானோர் அனைவரும் மகாவிட்ணுவின் பாதங்களை வணங்கி உவப்புற்று நி ன்றனர். அப்போது ஒருவன் அங்கே புகுந்து ப ணிந்து நின்று , 'இங்கும் சண்டாசுரன்' எனக் குழறினான். விட்ணுவும் அது கேட்டு தொல்லை **விநதை** நல்கு ஊர்தி ஊர்ந்து தண்டு நாந்தகம் சங்கு சக்கரம் தனு ஐந்தும் கரத்தில் தாங்கிப் போருக்கு எழுந்தான். கொடுந் தொழில் அசுரசேனை கொண்டல் போல் முழங்கிச் சூழ்ந்தன . மகாவிட்ணுவும் சண்டனும் மாறிமாறிப் பல்வேறு விதமான ஆயுதங்களை ஏவிச் சமர் புரிந்தனர். பலவிதமான ஆயுதங்களை ஏவியும் சண்ட னை வீழ்த்த முடிய வில்லை. பின்னர், சண்டன் மூன்றுகண் உடைய அம்பு ஒன்றை மகாவிட்ணுவின் மேல் ஏவிவிட்டு மறைந்தான். மகாவிட்ணுவும் சினம் கொண்டு சக்கராயுதத்தைச் சண்டன்மேல் ஏவினார் . சக்கராயுதம் சண்டனைக் காணாமல் திரும்பியது . மாயோன் தனது 'நாராயணா' அத்திரம் தொடுத்தான். நாராயணா அத்திரம் எழுந்து சென்று சண்டனை அகில உலகத்திலும் துருவித் தேடியது. எங்கு தேடினாலும் சண்டன் பற்றிய துப்பு ஏதும் கிடைக்காமல் , சண்டனை எங்கணும் காணாது மிகுந்த வெப்பத்துடன் மீண்டது . மறைந்திருந்த சண்டன், அப்போது 'மாகேசா' அத்திரத்தை எடுத்துப் பல்கால் மறையைச் செப்பி விட்டான் . மாகேசா அத்திரத்தினால், மாதவன் படைக்கும் தீங்கு வந்தமை உணர்ந்து தேவர் நொந்தனர் . சிவன்

வரத்தால் நோன்மை மிக்குற்ற சண்டன் , **வாமாலூர் விண்ணூர் போதனூர்** கொண்டு மாயாபுரம் அடைந்திருந்தான்.

இப்பால், தோற்ற தேவர் யாவரும், "இரவில் காக்கையைக் கூகை வெல்லும், கூகையைப் பகலில் காக்கை வெல்லும்" என்று தேர்ந்து, அசுரனை வெல்லும் காலம் வரும் வரை நாம் குகைகளில் மறைந்து வாழ்வோம் என்று முடிவு செய்தனர். இவ்வாறு பலகாலம் சென்றபின்னர், அயன் முதலான விண்ணோர் அனைவரும் மகாவிட்ணுவுடன் திருக்கயிலை சேர்ந்து, அரன் தாள் வீழ்ந்து,

*"உயிரினுக்கு உயிரே எங்கள் உணர்வினுக்கு உணர்வே என்றும்*
*அயர்வற உலகம் எல்லாம் வகுத்து அளித்து அழிக்கும் தூய*
*செயலுறு கருணை பூத்த செழுமலர்க் கடைக்கண் நோக்கி*
*அயர்வற எம்மை நாளும் ஆண்டருள் சிவமே போற்றி"*

என்று போற்றி வணங்கி , அடியில் வீழ்ந்து புன்கணீர் வார நின்றனர் . மகாவிட்ணுவும், சிவபெருமானிடம், 'நான்கு திசை முழுவதையும் வென்று தீயவேல் உடைய சண்டன் எங்களது உலகு அனைத்தையும் கவர்ந்து கொண்டான் . இருப்பதற்கு இடம் ஒன்றும் இன்றித் திரிகின்றோம். ஆதலினால், நீயே எங்களைக் காக்க வேண்டும் , நீ அல்லால் போதரு கதி வேறு எங்களுக்கு இல்லை' என்றார் . அதுகேட்ட சிவபெருமான், நல்லவேளை, சண்டன் எம்மிடமும் அஞ்சா வரம் கேட்கவில்லை என்றான் . அக்கொடியவனை அழித்து உங்களுடைய உலகங்களை உங்களுக்கு அளிக்க ஒரு உபாயம் உள்ளது.

'பரதகண்டத்தில் வியப்புறு தமிழ்நாட்டினுள் சீர்மிகுந்த பாண்டி நாட்டில் சோதிவனம் உள்ளது. அத்தகு வனத்துள் யாமும் சுயம்புலிங்கமாய் தோன்றி இருப்போம். என்னால் சாபம் பெற்ற சக்திதேவி, வல்ல பத்திரகாளியாய் அந்த வனத்தினில் தவம் செய்கிறாள். நீங்கள் அந்தக் கொற்றவையிடம் சென்று உங்களது குறைகளைக் கூறுங்கள்' என்றார். தேவர்கள் மிகவும் மகிழ்ந்து தொழுது வெண்கயிலை நீங்கித் தென்திசை நோக்கிச் சென்று சோதிவனத்தைக் கண்டனர்.

சோதிவனம் எங்கும் தேடி அலைந்து அங்கே ஒரு மருதமர நிழலில் விமலை வீற்றிருக்கக் கண்டு எல்லாத் தேவர்களும் அங்கே ஒன்றுகூடினர் . சிரம் கைகூப்பிக் கண் பனிதுளிர்ப்ப மகிழ்ந்து ஆடினர்.

*"மூன்று உருவாகிச் சீர் சான்மூன்று மண்டலத்து ஆதார*
*மூன்று இரண்டு இடத்து மேலான முளைத் தரு தழைத்த சோதி*
*மூன்றுகண் படைத்தோய் தோன்றும் மூன்று பத்துடன் இரண்டு*
*மூன்று தத்துவங்கள் கடந்தோய் முறைகெழு மறை கடந்தோய்*

*கேடகம் தண்டம் சூல் அங்கிளர் வலிகெழு நாராசம்*
*வாடயம் குறுமலர்க்கை வாய்ந்து முன் மகிடன் செற்றோய்*
*தேடிநின் சரணம் புக்க சிறியோம் கடமையும் காக்க*
*நாடி இங்கு உறையும் அன்னாய் நன்கு அருள் என்னப் போற்றி"*

முறையிடு செய்தனர். அவர்கள் முன் காளிதேவி பிரசன்னம் ஆகி , 'யாரால் உங்களுக்கு இக்குறை நேர்ந்தது' என்று கேட்டாள். சண்டன் செய்த கடுந்துயர்க் கொடுமையும் தங்களது உலகு அனைத்தையும் அவன் கவர்ந்திட்ட நிலையையும் எடுத்துக் கூறி , 'நீ அல்லால் கதி வேறு இல்லை, சண்டனை அடக்கிக் கொன்று நாங்கள் எங்களது உலகை ஆளும்படியாக

அருள் புரிந்திட வேண்டும்' எனக் காளியின் தாள் வீழ்ந்து உள்ளங் கரைந்து வேண்டி நின்றனர்.

தஞ்சம் என்று தொழும் அவர்களிடம், 'நீங்கள் அஞ்ச வேண்டாம்' என ஆறுதல் சொல்லி, 'சஞ்சலம் புரி சண்டனைக் கொன்று, உங்களது உலகை உங்களுக்கு மீட்டுத் தருவேன்' என்றாள் காளிதேவி. அசுரனுடன் போர் செய்திட வேண்டி, நீங்களும் சேனையாகிச் சேருங்கள் என்றாள் காளிதேவி. விண்ணவர்களும் 'நன்று' என வாழ்த்திச் சேனையில் சேர்ந்தனர்.

கண்ணுதல் பெருமான் கடுஞ் சீற்றத்தின் வந்திடு **சாமுண்டி** என்னும் சூர்ப்பெண்ணும், தன் உருக்கொண்டு பெயர்ந்து **மாகேச்சுரி** என்னும் அன்னையும், என இரண்டு மாதர் அங்கு வந்து எய் தினர். தேவர்களுள் **வைணவி**, நீடு **மாகேந்திரி**, பேர் இயற்றும் **பிராமி**, **கௌமாரி**, வான் வாரி எற்றும் **வராகி** என ஐவர் அங்கு வந்து எய்தினர். இவ்வாறாக ஏழு பெருந் தேவியரும் அவரவர் உருக் கொண்டு அங்கே குழுமி னர். மற்று அங்கு உள்ளாரும், வியன் பெரும் பூதமும், சாறுவேட்கும் **இடாகினி சாகினி** ஆறுபட்ட பிசாசும் ஆயினார். செங்கணார், அழல் செம்மயிற் பங்கியர், தொங்கு பூருவர், சூழ் பெருந் திங்களைப் பங்கு செய்து பதித்த எயிற்றினர், எங்கணும் புதை பட்டிட எய்தினார்.

இவ்வாறாகப் படைகள் எல்லாம் காளியைச் சூழ்ந்தன. காளிதேவியும் சென்னிமேனி நிமிர்ந்திடச், செங்கூந்தலுடனும், வன்னி என்ன வயங்குறு கண்ணொடும், மின்னும் விண்ணின் விளங்கினள். வான வெண்பிறை வைத்த எயிற்றொடும், பீனம் உற்ற பெருந் தனக் குன்றொடும், கானகத்தில் கிளர்ந்தனள் காளியே. சங்கு சக்கரம் தண்டாயுதம் தூணி வில் தீக்கலங்கு ஏடகம் தாங்கி அங்கை ஏந்தி அபய வரதம் காட்டிப் போருக்குத் தயாரானாள் காளி. இவ்வாறு துர்க்கையாகத் தோன்றிய காளிதேவியை ஒரு பீடத்தில் அமர்த்தி, வாழ்த்திப் பணிந்தனர், புண்ணியப் பூம்புனல் ஆட்டி னர், தொங்கர் தூசு சுடர்மணி சூட்டி னர், துங்க தீபமும் தூபமும் கோட்டி னர், அங்கு அருச்சித்து அரு ந்துதி செய்தனர்.

துர்க்கை அருளில் சாமுண்டியைத் "தானைக்கு இறைவியாய் மன்னுக" எ ன்று கூறி வாழ்த்தி வளப் புனல் ஆட்டுவித்தனர். தேவியைச் சூழ்ந்து அங்கு இருந்தனர். தேவர்கள் காளிதேவியைக் கண்ட இடமே **கண்டதேவி.** தேவர்படைக்குக் காளிதேவி தலைமை ஏற்று வீற்றிருந்த இடத்தில் தேவர் செய்த மாயாசாலக் கோட்டைதான் **தேவிகோட்டை.**

## *(8) சண்டாசுரன் வதைப் படலம்*

அன்னை துர்க்கை அபிடேகம் கொண்டு அருள் செய்து தேவிகோட்டையில் வீற்றிருக்கும் கதை கூறினோம். அவள், உலக உயிர்களுக்கு எல்லாம் இன்னல் விளைவித்த சண்டாசுரன் என்ற அசுரனுடன் போரிட்டு அவனை க் கொன்ற தனிக்கதையை இப்போது கூறும்.

நல்ல தவத்தை உடைய நாரதமுனிவர் நம் காளீசப்பெருமானைப் போற்றற்கு எண்ணி, தென்கயிலை எ ன்ற சோதிவனத்திற்கு வரும் வழியில், சண்டாசுரன் அவரைக் கண்டான். நாரத முனிவரே, மாயோன் முதலான தேவர்களை நான் போரில் தோற்கடித்துத் துரத்தினேன். அவர்களும் வெருண்டு ஓடிச் சென்று திருக்கயிலை மலைத்தொடரை அடைந்தனர். அவர்கள் எங்கு உள்ளனர் என்று கேட்டான். "விருட்சங்கள் வான் முட்ட வளர்ந்துள்ள சோதிவனத்துள் 'தேவிசாலபுரம்' என்ற இடத்தில் பத்திரகாளி உள்ளாள். தேவர்கள் அவளிடம் சரணடைந்து உள்ளனர். காளிதேவியும் உன்னோடு பெரும் போர்

செய்திட நினைந்து இருக்கின்றாள், இதை நீ உணர்ந்துகொள்" என்று நாரதர் அசுரனிடம் கூறினார்.

பிரமாதி தேவர்களை எல்லாம் நொடியில் துரத்திவிட்ட நான் , ஒரு பெண்ணுக்கு அஞ்சுவேனோ, அவள் என் கால் விரல் தூசுக்குச் சமம் ஆ வாளா! அவளோடு நான் போர் செய்வது எனக்கு இழிவன்றோ ! என்றான். அதுநிற்க, ஒளிந்திருந்து என்னை வெல்ல வேண்டும் என்று நினைக்கும் தேவர்களுக்கு உதவி செய்யும் கொற்றவையையும் கணநேரத்தில் கொல்வேன் என்று நினைந்து நாரதரை போகும்படிக் கூறினான் . கடுஞ் சினத்துச் சண்டனும் போர் ஆள்வினையோடு இருந்தான்.

இங்கே, நாரதன் தேவிசாலபுரந்தனை அடைந்து சே னை புடைசூழ உள்ள காளிதேவி முன் சென்று , சண்டாசுரன் போரிடும் நோக்கில் உள்ளான் என்ற செய்தியைக் கூறினார். அச் சொற்கள் கேட்ட காளிதேவி சினந்து விழித்து, தீ சிதறக் கிளர்ந்து எழுந்தாள். சாமுண்டி முதலான ஏழுபெரும் தேவியரும் இடி முழக்கம் செய்து புறப்பட்டு **கோதாவரி** நதிக்கரையை அடைந்தனர். அந்த நதியில் புனலாடி, கரையில் உள்ள சிவலிங்கத்தை விதிமுறை பூசை செய்து , சந்நிதி நின்று வாழ்த்தினார் . நம் சிவபெருமானும் மகிழ்ந்து பிரசன்னமாகி, நீங்கள் வேண்டும் வரம் என்ன ? என்று கேட்டான். காளியும் நேயமொடு நிகழ்ந்தனவற்றைக் கூறி, மாயன் அயன் முதல் தேவரை எல்லோரையும் துரத்திக் கொடுமை புரிந்த வலிய சண்டன் தோற்கவும், இத்தலம் இன்று முதல் என்றும் என் பெயரால் விளங்கவும் அருள்புரிய வேண்டும் என வேண்டினாள். இறைவனும் அவ்வாறே அருளிச் செய்து, வலிமை மிகுந்த இரண்டு சூலங்களைக் கொடுத்தார் . இச் சூலாயுதம் ஒன்றில் சண்டனை நீ சூழ்ந்து கொல்வாய் , சாமுண்டி மற்றொரு சூலத்தைக் கொண்டு தாரகனை வதைக்கட்டும் என்று அருளினான். தன் கரத்தில் வெற்றிதரும் சூலம் ஏந்திய காரணத்தினால் அன்று தொடங்கிச் **சூலினி** என்னும் பெயர் பெற்றாள். மேலும், அத்திருத்தலம் காளியின் பெயரால் **உத்தர காளிபுரம்** எனப் பெயர் விளங்கிற்று . அங்கிருந்த சிவலிங்கத்திற்கும் **காளீச்சுரன்** என்ற பெயர் உண்டானது. நல்லதொரு வரத்தைப் பெற்ற மகிழ்ச்சியில், காளி குதுகலித்துத் தீசி எனும் வடக்கு திசை நோக்கிச் சேனை சூழ ஆர்ப்பரித்துச் சென்று மாயாபுரத்தை வளைத்தாள். ஒற்றர் சிலர் விரைந்து சென்று சண்டனிடம் இச்செய்தி கூறினர். நாரதமுனிவர் முன்பு கூறியது அவனது நினைவிற்கு வந்திடக் கலகலென நகைத்து இருந்தான். காளியின் சேனையில் இருந்த **சாகினி தாகினி** முதலான பூத கணங்கள் அசுரனின் இறைநகருள் புகுந்து , சின்னாபின்னம் செய்து எதிர்த்தவர்களைக் கையில் பிடித்துப் பிசைந்திட்டன. தேவர்கள் அரிய தேர்களில் பூதங்களுக்கு முன் சென்று சரமாரி அம்புமழை பெய்தனர். தங்களது உலகைக் கவர்ந்தவர் பதைத்திடக் கொடி துடைத்து உடல் வெட்டி இரத்தம் விழச் செய்தனர். இரண்டு தரப்பினரும் போரிடும் செயலினை உணர்ந்து வெகுண்டான் சண்டன். இளைய கும்பனாதியரை வரவழைத்துக் காளியைப் பொருது என்று ஏவினான். அது அறிந்த காளி, ஏழுமாதர்களுள் ஆறுபேர் தண்டாயுதமும் சூலமும் ஏந்தி அசுரனின் முன் நின்று அவன் உள்ளம் நடுங்குமாறு போரிட்டனர். ஆயுதங்கள் முனை மோதி நை ந்த வேளையில், பின் உலாவிய ***பிராமி*** ஆர்ப்பொடு பெயர்ந்து கும்பனை நெருக்கி, தண்டாயுதம் கொண்டு தலை சிதறிடப் பெரிது தாக்கினாள் . உதிரம் வெள்ளமாய் மண்டிட **கும்பன்** தரை உருண்டு சாய்ந்து இறந்தான். ***மகேச்சுரி*** தன் கையில் உள்ள சூலத்தை **தண்டன்** என்ற அசுரனின் வயிற்றில் குத்தி, தண்டாயுதத்தால் தாக்கிப் பிளந்தாள். அவனும் குருதி கக்கி விழுந்து இறந்தான் . ***கவுமாரி*** தன் வேலினால் **வீமாக்கன்** என்ற அசுரனுடன் பொருதி அவனைச் சாய்த்தனள் . வலிமை மிகுந்த ***வயிணவி***யும் வைரம் போன்று உறுதியான உடலை உடைய **வசுவனன்** என்ற அரக்கனை வாட்டி னாள். ***மகேந்திரி*** வச்சிராயுதம் கொண்டு அங்குசப் படையின் தலைவனான **மகோதரன்** என்ற அசுர வீரனைப் பிணம் எனத் தரை உருட்டினாள் . பூதகணங்கள் வெகுண்டு போர் செய்து சண்டாசுரனின் நெடிய தானையை முறித்தனர். இவ்வாறாகப் போரில் காளிசேனையால் இளைய கும்பன் முதலான அசுரர் மல்ழாந்து உட்கி முறிந்தனர் என்ற செய்தி கேட்டுத் துடுக்கெனச் சீற்றம் பொங்கி "என்ன அவமானம் ஈது" என்று எழுந்தனன் சண்டன்.

தரும தேவனும் அஞ்சும் காலதண்டம் ஒன்றைத் தன் கையில் ஏந்தி , ஆயிரம் வேசரி (கழுதை, கோவேறுகழுதை) பூட்டிய தேரில் பெரும் தம்பியோடு , வாள் சூலம் முதலான ஏந்திய படைத் தொகுதிகளுடன் உருமிச் சண்டாசுரன் போருக்குத் தயாரானான் . ஆயிரங் கோடி தேர்கள், ஆயிரங் கோடி யானை, ஆயிரங் கோடி குதிரை, ஆயிரம் கோடி காலாள், ஆயிரங் கோடியாய அரிய கூரிய படை ஆயுதங்களைக் கையில் கொண்ட ஆயிரங்கோடி சேனைத் தலைவரும் அடர்ந்து சூழ்ந்தார்.

பரிதியை விழுங்கும் பாம்பு போன்று கரிய தோற்றத்துடன் சண்டனும் இவ்வாறான சேனை சூழ எழுந்து , **தாரகன்** அவன் தம்பி தன்னொடும் தனது மாயா நகரத்தைவிட்டு நீங்கி விண்ணும் நடுங்கப் போர்க்களத்துள் புகுந்து சங்கு ஒலி செய்தனர் . அவ்வொலி முழக்கம் கேட்டுப் போர் விரும்பும் காளியும் ச ப்தமாதர்களுடனும், பூதகணங்களோடும், தேவர் படைகளோடும் களம் புகுந்து ஆர்ப்பரித்தாள் . இவ்வாறாக இரண்டு தரப்பினரும் பின்னிடாது அமர் புரிந்தனர்.

சூலம் கபாலம் தண்டு இவை கைக்கொண்டு சாமுண்டி சிங்கத்தில் ஏறிப் பறை முழங்கிடப் பாய்ந்து , விண்ணில் சுழன்று , அசுரர் மீது மழைபோல் அ ம்பு பெய்தனள். பின்னர் கொடிய சூலத்தைக் கொண்டு **தாரகன்** மார்பினைக் குறித்து விட்டாள் . அவன் குனிந்து கொண்டு, சாமுண்டி மேல் ஒரே நேரத்தில் ஐந்நூறு கணைகளைப் பொழிந்தான் . அவற்றை எல்லாம் தன் கேடகத்தால் தடுத்துத் தன் கையில் உள்ள தண்டாயுதத்தால் தாரகனின் தலையில் அடித்தாள் . தாரகன் குருதி வெள்ளத்தில் புண்பட்டுச் சாய்ந்து மயங்கினான். பின்னர் தெளிந்து மீண்டும் போர் செய்தான் . இவ்வாறாக சாமுண்டியும் தாரகனும் பல்வேறு ஆயுதங்களால் அடுத்தடுத்து ஒருவரை ஒருவர் தாக்கிப் போர் செய்தனர். சாமுண்டி வெகுண்டு எழுந்து , தண்டாயுதத்தை எறிந்து தாரகனின் ஊர்தி வீழ்ந்திடும்படியாச் செய்தாள் . வலிமைமிகுந்த சூலத்தை ஏந்தித் தாரகன் மார்பில் குத்தினாள். தாரகன் மதி மயங்கிச் சாய்ந்தனன் . பின்னர்க் காளி பாய்ந்து ஓய்ந்திடாது குத்திட்டு ஊழித்தீ என ச் சுழன்று மேலும் காய்ந்தாள் . அப்போது அசுரன் அவள்மீது மோகனம் என்ற பெயருடைய கணையை ஏவினான் . அதனால் காளி மய ங்கி நின்றாள். அதனால் காளியின் கண்களுக்கு அவள் காண்பன எல்லாம் காளியாகவே தோன்றித் தெரிந்தன. அப்போது, சண்டன் வெய்ய காளியை நோக்கிக் கைகொட்டிச் சிரித்து , 'செல்லாதே, நில், உன்னை இத்தண்டினால் கொல்வேன்' என்று கூறினான் . காளியும் தன்கையில் சூலத்தைக் கொண்டு வெல்வதற் கரிய வேக **வேதாள ஊர்தி** ஏறித் திரிந்தாள். தாரகனும் சண்டனுடன் ஒன்று சேர்ந்து போர் செய் தனர். அதைக் கண்ட சாமுண்டியும் காளியுடன் சேர்ந்து சண்டை செய்தாள் . சக்திகள் இருவரும் தங்கள் தடக்கையில் சூலம் கொண்டு அசுரர்களை மொத்தி கொழித்துத் தூளாக்கி முழங்கினர் . இது பெரியதொரு வித்தையாக உள்ளதே என்று வெருண்டனர் அசுரவேந்தர். தனித்துறு சண்டன் தக்க தம்பியை நோக்கி, இப்பாவையர் செய்யும் கொடுமை தான் என்னே , நாமே நம்மை நகும்படியாக நமது சேனைகள் எல்லாம் கழியக் கண்டோம். ஆகையால், இவர்கள் பெண்கள் என்றும் , நாம் ஆடவர் என்றும் நோக்காது போர் புரிவதே நமது கடமை என்று துணிந்தனர் . துணிந்து தாரகனும் சண்டாசுரனும் தத்தம் ஆயுதங்களைச் சரமாரி பெய் தனர். சண்டனும் பேய்க் கணங்களைக் கண்டமாக்கி மறைந்து நி ன்றான். பேய்க்கணங்களுக்கு அரசியான தேவி இதை ஆய்ந்து சண்டன் நின்ற திசை குறித்து அம்பு எய்தாள் . கொற்றவை விடுத்த அம்பு கொடியவன் சண்டனின் படையை வாரி எறிந்தது . காளியின் வலிமை பெரிது , அவளைச் சாய்த்து வெற்றி பெற்றிட முடியாது என்று எண்ணிய சண்டன் மாயாபுரத்தினுள் புகுந்தான் . சண்டாசுரன் ஓடி ஒளி ந்ததமையால் அவனை எப்படி வெல்வது என்று , மனத்துள் பரமனை நினைந்து கூப்பிய கரங்களை முடிமேல் வைத்து நின்று தவம் மேற்கொண்டாள் . இவ்வாறு ஒருவருட காலம் காளிதேவி மாதவத்தில் நின்றாள்.

மாயாபுரத்தில் ஒளிந்து இருந்த சண்டன், 'எங்கணும் யாவரேனும் எனக்கு இணையில்லை என்று பெருமையுடன் இரு ந்தேன், போர்க்களத்தில் ஒருத்தி காளி என்னை அவமதித்தாள், இதன் மாயம் என்ன?' என்று எண்ணி, ஒற்றர்களை அழைத்து, காளி எங்கு உள்ளாள்? அவளது நிலைமை என்ன ? எனக் கண்டறிந்து வாருங்கள் என்று ஏவினான் . அவர்களும் காளிதேவி சோதிவனத்தின் கிழக்குப் பகுதியில் மெய்த்தவம் செய்கின்றாள் என்றனர். அச் செய்தி கேட்ட சண்டன், இதுவே காளியை வேரறுக்க நல்ல தருணம் என்று அறிந்து, பல படைகள் ஏந்தி, மார்பில் கவசம் அணிந்து போருக்குப் புறப்பட்டுச் சென்றான். அப்போது சண்டனின் மனைவி **உருபவதி** என்பாள் அன்னம் என முன் வந்து அடி பணிந்து, மன்னனே, நீ, முன்னாளில் முப்பெருந் தேவர்களால் சாவா வரங்கள் பெற்றாய், ஆனால் பராசக்தி தன்னைக் கேட்டு நீ ஒன்றும் பெறவில்லை. ஆனதால் அவளே காளியாகி நின்னைப் பகைத்தாள். இலக்கறு வரங்கள் பெற்ற மகிடன் என்ற அசு ரனையும் இதேபோன்று ஊனினை வாட்டினாள் என்றாள். இவ்வாறு இல்லாள் கூறக் கேட்ட சண்டன், அவளது சொற்களுக்கு இசையாமல், மங்கையர் மதியால் மானமற்று இவ்வாறு கூறினா ய், காளியைக் கொல்லாமல் நான் திரும்ப மாட்டேன். நீ சென்று பாதாளத்துள் ஒளிந்து உயிர் பிழைத்துக்கொள், என்று கடுங்கோபத்துடன் கூறித் தேரில் ஏறித் தன் சேனை சூழச் சோதிவனம் நோக்கிச் சென்றான். சோதிவனத்தின் அருகே உள்ள **விசாலபுரம்** வந்து சேர்ந்து தம்பியரொடு சேர்ந்து, ஏழு தேவியர்களோடும் போர் செய்தான். சப்தமாதர்களும் அந்தப் போரில் அசு ரர்களை எதிர்க்க முடியாமல் வி சனத்தொடு கலங்கி எத்திசையும் ஓடினர் . சோதிவனத்தில் ஓரிடத்தில் தொடர்ந்து தவம் செய்து வரும் காளியைக் கண்டான் . இதுவே நல்ல தருணம் என எண்ணி, நால் திசையும் சூழ்ந்து மிகுந்த நெருப்பை உடைய அம்புகளை எய்தனர். நெருப்பு அம்புகளின் வெப்பம் த ன் உடலைத் தகித்தமை கண்டாள் காளிதேவி. இவ்வாறு சுற்றிலும் தீ எரியும் போது, முழுதாய்த் திருவுருவாய்த் இத்தீக்கு இடையே தவம் செய்ய முடியாது என உள்ளம் தேர்ந் தாள். வெப்பம் பாய்ந்தரிய யோகமாயை உருவம் மாய்த்து அருவம் ஆனாள்.



உருவாட்டி பெரியநாயகி அம்மன் கோயில்

காளிதேவி அருவமாகிச் சோதிவனத்தில் தவம் செய்த காரணத்தினால் , அத்தலத்தில் உள்ள தேவியைப் **பெரியநாயகி** எனப் பெயரிட்டுப் பெரியோர்கள்

அழைக்கின்றனர். காளிதேவியின் உருவத்தை நெருப் பு வாட்டிய இடம் என்ற காரணத்தினால் அத்தலத்திற்கு **உருவாட்டி** எனப் பெயரிட்டு அழைக்கின்றனர்.

சக்திதேவி தன் உருவத்தை அருவமாக்கி மெய்த்தவம் செய்து வந்தாள். அசுரர்கள் எல்லாத் திசைகளிலும் தேடியும் காளியைக் காணாத காரணத்தினால் கவலை அடைந்தனர் . மாயங்களில் வல்லவனாகிய சண்டன், சோதிவனத்தில் காளிதேவி உருவம் இல்லாமல் இருப்பதைக் கண்டான். இவள் உருவம் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் , தண்டு சூலம் முதலான ஆயுதங்களால் இவளை அழித்தல் இயலாது. எனவே கனல் மிகுந்த பலத்த சூறை வடிவம் எடுத்துக் காளியைச் சூழ்ந்தான் சண்டன் . தன்னைச் சுற்றிய கனல் சூறைக்காற்றைப் பொறுக்க முடியாத காளிதேவி , அருள் பரம்பொருளை நினைந்து வேண்டினாள். கங்கையைத் தலையில் அணிந்துள்ள சிவபெருமானும், "நல்ல தடாகங்கள் நிறைந்த புண்ணிய பூமி இது" என்று அசரீரியாகக் கூறி , காளியை எடுத்து அருகில் உள்ள ஓடைநீரில் அழுத்தினான். ஒடையினுள் மூழ்கி எழுந்த காளிதேவியும் சிவபெருமானின் தாள் தொழுது சண்டனால் வருத்தமுடியாத உடலைத் தருக என வேண்டினாள் . காதில் குழை அணிந்த ஈசுவரன், காளியை நோக்கி, பூத வடிவம் எடுத்திடு என அருளினார் . காளியும் பூதவடிவம் கொண்டு , சோதிவனத்திற்கு மேற்குத் திசையில் இருந்து தவம் செய்தாள்.

சொல்லுதற்கு அரிய உருவத்துடன் தோன்றித் தவம் மேற்கொண்ட தேவிக்கு **நல்ல அரியநாயகி** எனப் பெயர் சொல்வர் . அவள் தவம் இருந்த எல்லையைத் **தாளவனம்** என்பர். அவள் மூழ்கிப் பல வளங்களைப் பெற்ற குளம் **பாற்குளம்** என்ற பெயர் உண்டானது. காளிதேவி பூதத்தின் உருவம் பெற்ற இடம் **பூதபுரம்** என்பார். சண்டன் எய்த பல தீக்கணைகளும் மீண்டு திரும்பிய காரணத்தினால் **விறல் காளி** மடிந்தாள் என அவுணர் எல்லோரும் நினைந்து போர்த் தொழிலை விடுத்தனர்.

வலிமை மிகுந்த காளியும் சிவபெருமானை நோக்கி நல்ல தவம் மேற்கொண்டு , போரில் மறைந்திருந்து தாக்கும் எதிரிகளின் உருவத்தைக் காணும் வரத்தைப் பெற்றாள் . மறைந்து இருப்போரையும் காணும் வரம் பெற்ற காரணத்தினால் **கண்ணுடையள்** என்னும் பெயர் எய்தினாள்.

வான் உயர்ந்த மரங்களை உடைய சோதிவனத்தின் வடதிசையில் இருந்தாள். பூத உருவத்தையும், சண்டனின் மாயா உருவத்தைக் காணும் ஆற்றலும் பெற்ற காரணத்தினால் இனிச் சண்டனையும் வென்றிடுவேன் என்று காளி நினைத்தாள் . திசைகள் எங்கும் கேட்கும்படியாக ஒரு சிங்க ஒலி செய்தாள். அது கேட்ட பிராமி முதலானோர் அங்கே சூழ்ந்து காளியைப் பணிந் தனர். தன்படையை நோக்கித் தான் பெற்ற வரங்களைக் கூறி மகிழ்ந்தாள் காளிதேவி. சிவபெருமானின் இனிய அருளினால் தங்களது இன்னல் தீர் ந்ததை மகிழ்வுற எடுத்துக் கூறிய காரணத்தினால் **சாரங்க நாயகி** எனும் பெயர் பெற்றாள்.

அம்மை இப்படி இங்கு இருக்கும் போது , 'போரில் கொற்றவை யை வென்று விட்டேன், மூன்று உலகத்துத் தேவர்களும் தோற்றனர் , இனி என்னை எதிர்ப்பவர் யார் ?' எனச் சண்டாசுரன் தருக்குற்று இருந்தான். அந்நேரம் அங்கு வந்த நாரதமுனிவரிடம் தனது வெற்றியை எடுத்துக் கூறினான் . அதற்கு நாரதரும், அசுர மன்னனே, நீ உண்மையில் நடந்தனவற்றை முழுவதும் அறியவில்லை என்றார் . அது கேட்டவன், நான் வெற்றி பெற்றதும் பொய்மையோ என்றான். அவ்வேளை ஒற்றர் ஓடி வந்து தாழ்ந்து, 'மன்ன, காளி கடல்போன்ற தன் சேனையுடன் மின்னி வீற்றிருந்தனள்' என்றனர். அதுகேட்ட சண்டனும் உள்ளம் புழுங்கித் தன் இடக்கண் துடிப்பதும் , தன் துணைவி அன்று சொன்ன மாற்றமும் எண்ணினான். கண்கள் சிவக்க, பற்களைக் கடித்து, வாய் உலர்ந்து, இதழ் துடித்திட, மனம் கொதிப்பு ஏற, வில் ஏந்தி, மிக உயர்ந்த தேரில் ஏறினன். அவனுடன் தாரகன் முதலான எழுவரும் விரைந்து , தத்தமக்கு உரியவர்களுடன் கலந்து , யானை குதிரை முதலான படைகளோடு, விண் அதிர பேரிகை முழங்க எத்தலங்களும் நடுங்கிட எழுந்தனர்.

இங்கே, கானகத்தில் உள்ள காளி, வானகத்தவர் வாழ்வுறச் சூலமும் வேல் முதலான பற்பல ஆயுதங்களையும் தாங்கி வேகமான வேதாளத்தில் விரைந்து ஏறினள். சாமுண்டி **பிரேத வாகன** மேல் ஏறி அமர்ந்தனள். பிராமியும் **அன்னவாகனத்**தினில் ஏறினள். **விடையில் ஏறி மாகேச்சுரி** விளங்கினள். **கவுமாரியும்** விரைந்து கடுநடைக் **கலபத்து** இவர்ந்தனள். **வைணவி**யும் **கலுழன்** மேல் பொலிந்தனள். **வராகி சிங்கம்** ஏறினள். **மகேந்திரி கரி** அமர்ந்தாள். இவ்வாறு ஏழு தேவியர்களும் போருக்குப் புறப்பட, ஏனைய கணங்களும் உடன் எழுந்தன.

தேவ அசுர சேனைகள் ஒன்றுடன் ஒன்று எதிர்த்திட்டன. அப்போது, காளிதேவி தானைகளின் ஊடே புகுந்து உழக்கினள். சயிலங்கள் நடுங்கின. சண்டாசுரனின் கேதன மீது சேனம் வீழ்ந்தது, பரிகள் நீர் பெய்தன, செந்நீர் வான மா மழை பொழிந்தது.

வெகுண்ட தாரகன் வீசிய உலக்கையைத் தன் சூலத் தால் தாக்கினள், முறிந்தது. பின்னும் நகுந்திறல் தடி கொண்டு நம் சாமுண்டி நலியப் புடைத்து அடித்தனள். மாயையினால் விண்ணிற்கும் மண்ணிற்குமாக பெரியதொரு உருவத்துடனும், சிறுகுழந்தை போன்றதொரு உருவத்துடனும், இரண்டு உருவம் எடுத்துத் தடி கொண்டு சாமுண்டி முன் சென்றான். சாமுண்டியும் பெரியதாகவும் சிறியதாகவும் இரண்டு உருவமாகி, சிவபெருமான் அருளிய சூலத்தின் மற்றொரு சூலமும் ஆக்கி, அந்த இரண்டு சூலங்களினாலும் தாரகனை ஒரே சமயத்தில் பிளந்தாள். புண்ணீர் குடித்து ஆர்த்தாள். கரை இல்லாக் களிப்பொடு கணங்களும் குதூகலித்தன. அசுரர் படையினர் வெருண்டு சிதறித் திசைதிசை ஓடினர். விண்ணவர் மலர்மழை பொழிந்தனர்.

தனது துணைவனான தாரகன் இறந்துவிட்டதை நினைந்து சண்டன் உள்ளம் சோர்ந்தான், கலங்கினான். உடன் தெளிந்து, கணை வில் ஏந்தி தண்டாயுதத்தோடு சூலமும் கொண்டு, சண்ட மாருதம் எனச் சுழன்று, பரி தாவி, அண்டம் இடிய, அசலங்கள் யாவும் பிளந்து உதிர்ந்திட, வேளைகள் ததும்பிட வெகுண்டு திண் புயம் கொட்டினன்.

காளிதேவியும் பெரு வடிவமாய் ஆகாயம் முழுதும் நிறைந்து, ஆவி உட்குற அந்தரத்து ஆர்த்தனள். வடவைத் தீயும் அஞ்சிடக் கண்கள் தீப்பொ ரி தரச் செறுத்தாள். சண்டன் சினந்து, மதம்பிடித்த ஒரு மிகப்பெரிய யானை போல் தோன்றி எதிர் த்தனன். நம் காளி வனத்தில் உள்ள சிங்க வடிவு கொண்டு தாக்கினாள். சண்டனும் நொடிக்கு ஓர் உருவத்துடன் தோன்றினான். தேவியும் அந்த மிருகங்களின் பகை உருவம் கொண்டு அழித்தாள்.

தான் முயன்று எறியும் ஆயுதங்கள் எல்லாம் காளியால் அழிக்கப்பட்டுப் பயனற்றுப் போவதைக் கண்டு சண்டாசுரன் பெருமூச்சு எறிந்தான். இனி இவளை வெல்வது எங்ஙனம்? இனி காளி இங்கு என்னை விடாள் கொல்வது திண்ணம்! என்று எண்ணினான். அப்போது, விண்ணிடைப் பெருந்தேவியும் சேனையும் விசையில் எழுந்தாள். தனது தேரிலிருந்து கீழே விழுந்த சண்டனைச் சாமுண்டி காலால் அவனது உடல் மேல் மிதித்து ஏறி நின்றாள். வெகுண்டு பத்திரகாளியும் விரைந்து வாங்கிய பல் நகங்கள் ஐந்தையும் நடுங்குறச் சண்டனின் ஐந்து மூலாதாரங்களிலும் சேர்த்து பெருஞ் சூலத்தை ஓங்கி விட்டு, அசுரனின் அகந் தொலைத்தனள், ஆங்கவன் ஆருயிர் துறந்தான். பெருகி வந்த குருதி வெள்ளத்தினைப் பேய்கள் குடித்தன. உடற் தசைகளைப் பலத்த பறவைகள் கவ்வி மேல் பறந்தன.

சண்டனை வீழ்த்திய பத்திரகாளியைச் சாமுண்டி முதலானோர் அடி பணிந்திருந்தார். திருமால் அயன் இந்திராதியர் முதலான தேவர்கள் துதித்தனர்.

*"உலகம் யாவையும் ஈன்று அருள் உத்தமி போற்றி*

*அலகில் ஐந்தொழிற்கு இறைமையும் அளித்தனை போற்றி*
*விலகில் எம்மனோர் வேண்டியாங்கு அருளினை போற்றி*
*நிலவு வேணியன் மகிழ்ந்தருள் நிரஞ்சனி போற்றி*

*மலைய மன்னவன் மகள் என வந்தனை போற்றி*
*கலைகள் யாவையும் அருள் கடைக் கண்ணினை போற்றி*
*சிலை வளைத்தவன் சிந்தையை வளைத்தனை போற்றி*
*அலகின் மாமறை ஆகமம் ஆயினை போற்றி*

*அன்று பண்டனது ஆருயிர் வீழ்த்தினை போற்றி*
*துன்றும் எங்கள் வன்துயர் அறுத்து அருளினை போற்றி*
*இன்று சண்டனை இருத்து அருள் சூலினி போற்றி*
*என்றும் எங்கள்பால் இன்னருள் வைத்தனை போற்றி"*

என அன்பொடு துதித்த தேவர்களை நோக்கி இன்னும் வேண்டிய வேண்டியாங்கு பெறுங்கள். உங்களது உலகங்களை நீங்களே முன்புபோல ஆட்சி செய்யுங்கள் என்று அருளினாள். காளிதேவி சண்டாசுரனை வெற்றி கொண் ட இடத்திற்கு **வெற்றியூர்** என்று உலகம் கூறும். சண்டாசுரனின் தேர்க்கொடி விழுந்த இடத்தைக் **கொடிக்குளம்** என்று அழைக்கின்றனர். சண்டனின் அம்புகள் வீழ்ந்த இடம் , சண்டன் மாண்ட இடம் **மாளக்கண்டான்** என்பர். காளியின் சிரத்தினில் தேவர்கள் மலர்மாரித் தூற்றிய தலம் **பூங்குடி** என்று ஆனது. ஏழுகன்னிமார்களுடன் தேவகணங்களுக்கும் பூத கணங்களுக்கும் அன்னம் இட்ட காளிக்கு **அன்னபூரணி** எனும் பெயர் விளங்கியது . காளிதேவி விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே பெரியவடிவம் எடுத்து நின்ற காரணத்தினால் **வெங்குமாகாளி** என்ற பெயர் வழங்குகிறது.

## *(9) காளி பூசனைப் படலம்*

நம் அந்தரியான காளிதேவி தேவர்களைக் காத்திடுவதற்காகச் சண்டன் என்ற அசுரனுடன் போரிட்டு அவனைச் சாய்த்தமை சாற்றி னோம். காளிதேவி காளீசுர சிவலிங்கத்தினைப் பூசை செய்த மாக்கதையை இப்போது ஓதுவோம்.

அயன் மால் இமையோர் முதலானவரும் ஏழுகன்னியர்களும் , மனதில் மிகவும் மகிழ்ச்சி கொண்டு புடைசூ ழ்ந்து புகழ் முழங்கப் , பத்திரகாளி சோதிவனத்தை நோக்கிச் சென்றாள். கோங்கு கமுகு ஓங்கு கழை குங்குமம் பாடலம் பனசம் வேங்கை அசோகம் குரவு வெள்ளிலோத்தம் படிரம் பூங்கதலி தே க்கு முதலான பல மரங்கள் நிறைந்த மலர்ப்பொழில் சூழ்ந்த சோதிவனத்தைச் சென்று சேர்ந்தாள். காந்தள் நறும்தாழை கடுக்கை இவற்றோடு நரந்தம் கூந்தல் புரசம் கடம்பு கூதாளம் முதலான பல மரங்களும் , ஆறு பருவகாலங்களிலும் தேன் ததும்பும் மலர் நிறைந்து விளங்கும் சோதிவனத்தின் பொலிவு அனைத்தையும் நோக்கினாள் . குயில்கள் மயில்கள் முதலான பறவைகளும் நிறைந்திருந்தன.

இவ்வாறாகச் சிறப்புகள் மிகுந்த சோதிவனத்தின் வளம் எல்லாம் கண்டு உத்தமியாம் எம் அம்மை சுத்த மனத்துடன் சிவகங்கைத் தடம் மூழ்கினாள் . அப்போது அவளது மனக்கண் முன்னே அகண்ட பரஞ்சுடரின் ஒளியைக் கண்டாள் . அது கண்டு எக்காலும் எவராலும் எய்திடமுடியாத இன்பம் உற்றாள் . காளீசரை அருச்சனை செய்து இறைஞ்ச விருப்பம் கொண்டாள் . "தனித்துப் பிரிந்த மெய் உடையவ ளாகிய நான் விரும்பியவாறு எளிதாக உனைப் பூசை செய்ய வேண்டுமே" என வேண்டினாள் . கருணைமிகுந்த இறைவனும், பிராட்டியின் உள்ளப் பண்பு உணர்ந் தான். பெரும் சோதி

வடிவாய பெம்மானும் இரண்டு உருவாய் இருந்தனன். இரண்டு சிவலிங்கங்களைக் கண்ட காளிதேவி மிகவும் மகிழ்ந்து நோக்கினாள்.



**மந்தாரை**

தெற்கே தூல லிங்கம் ஒன்றையும் , வடக்கே சூக்கும லிங்கம் ஒன்றையும் அவற்றின் வடிவையும் நோக்கி வியப்புற்று , சூக்கும இலிங்கத்தை அருச்சித்திட முயன்றாள் . இவ்விரண்டு சிவலிங்கங்களுக்கும் நூல் விதிப்படியே சக்திபீடங்களை நாட்டினாள். சூக்கும லிங்கத்திற்கு **வடக்கே** எழில் **வீரசக்தியை** நிறுவினாள். தூல லிங்கத்திற்கு **ஈசானிய திசையில் மனோன்மணி சக்தி** யை நிறுவினாள். பின் தென்மேற்கில் புனல் பெருகும் சிவகங்கை என்ற ஒரு புனித தீர்த்தத்தை நன்கு உண்டாக்கி, அதில் மூழ்கி, பட்டு உடையும் பலவகையான பூண்களையும் அணிந்து, கண்மணி புனைந்து, திருநீறு இலங்க இருந்து, பல **மந்தார** விருட்சத்தையும் உண்டாக்கி , மந்தாரை மலரையும் பற்பல மலர்களையும் திரவியங்களையும் வில்வத்துடன் கையில் எடுத்துக்கொண்டு சென்றாள் . பன்மறையும் காண்பரிய மணிமிடற்று எம்பெருமானைச் சூக்குமலிங்கத்தில் எழுந்தருளுமாறு வருக என ஆவாகனித்தாள். பூம்புனல் ஆட்டித் , தனி ஆடை கொடுத்து , கொடுபுல் உலர்த்தி , பொன்னாடையும் உடுத்தி , மணிப்பூண் புனைந்து , நெற்றிக்கண்ணை மறைக்கும் இயல்பினில் சந்தனம் சாத்தினாள். மென்மலர் மாலை நன்கு அணிவித்தாள். ஆயிர நாமம் சொல்லி அருச்சனைகள் பல செய்து முடித்தாள் . தூப தீபம் முதலான பதினாறு உபசாரங்களையும் விதிப்படி முடித்து , வீரசக்தியையும் பூசித்து , நலம் மிகுந்த சிவபெருமானை நாடி இவ்வாறு துதித்தாள்.

*“நாரணனே முதற் தேவர் நாடரிய பரம் பொருளே,*
*காரண காரியம் கடந்த கண்ணுதலே, அன்பர் உளப்*
*பூரணனே, புண்ணியனே, பொன்றாத பெருஞ் சுடரே,*
*ஆரணங்கள் அடு திக்கும் உனது அம்புயப் பூங்கழல் போற்றி“*

எனத் துதித்து நின்றனள் . அப்போது காளிதேவியின் கருமேனி வனப்புற்றுப் பொற்கொடியின் வடிவு பெற்றாள். **தேவர் இதைக் கண்டு சொர்ணவல்லி எனப் பெயரிட்டு வணங்கினர்**. **காளி பூசனை செய்த காரணத்தினால் அச்சிவலிங்கத்திற்குக் காளீச்சுரன் எனவும் பெயரிட்டு வணங்கினர்** . கரிய வடிவோடு இருந்த காளியும் மங்கள கரமாய்ப் பரிவொடு இருந்தாள்.

அதனால் தேவர்கள் பூசித்த பத்திரகாளியானவள் ஆலயத்திற்குப் புறத்தே எவரும் போற்றிட வீற்று உறைந்துள்ளாள். பின்னரும் அச் சொர்ணவல்லி பேரிலிங்கம் அருச்சித்துக் **கவுரி உமை** என இரண்டு உருவம் ஆனாள் . அவர்களுள் உமை என்பாள் தூல இலிங்கத்தை மேலே சொன்ன உபசாரமுடன் பூசித்தனள் . ஆகம நூற்படி அருச்சித்து அன்பொடு நின்றள்.

*"வேக பரஞ்சுடரே, என் இதய மணிவிளக்கே,*
*நற்பாகம் உறும் படி அருள், அப் பண்பே முக்கட் கரும்பே,*
*போகம் எல்லாம் அளித்து அருளும் புண்ணியனே"*

எனப்போற்றி நின்று உமை வணங்கினாள் . மனம் மகிழ்ந்த நின்மலன் ஓர் பேரழகுடைய வாலிப வடிவாய்த் தோன்றிப் புன்முறுவலுடன் , 'உனது விருப்பம் என்ன வென்று கூறு' எனக் கேட்டான். அதற்குத் தேவியும் நான் உன்னை விட்டுப் பிரிந்து அ றியேன், என்னை நாடி ஐக்கியம் புரிக, என வேண்டினாள். நின்மலனும் அவ்வண்ணமே அருளித் தூலலிங்கம் மீதில் பிரணவ வடிவான உமையவளுடன் புகுந்தான். தூலலிங்கத்தைக் கருதி உமையம்மை ஐக்கியமான காரணத்தினால் **சோமேசன்** எனும் பெயரால் வாழ்த்தி வணங்குகின்றனர்.

பின்பு, கவுரியும் தன் பெயரால் சோமேசன் ஆலயத்தின் முன்னர் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, அதில் மூழ்கி, காளீசனையும் வீரசக்தியையும் பூசித்து, மனோன்மணி மற்றும் சோமேசனையும் ஆகமப்படி பூசனை புரிந்து சந் நிதியில் ஐந் தெழுத்தும் உச்சரித்து அங்கு அமர்ந்து இருந்தாள் . அப்போது, சிவபெருமானும் காளை உருவில் கவுரியின் முன்தோன்றி, உனக்கு என்ன வரம் வேண்டும் எனக் கேட்டான் . கரிய உருவம் பெற்றுக் காளியாய் இருந்து, சண்டாசுரனை வீழ்த்தித், தேவர் அனைவரையும் காத்தேன். எனது கோர உருவும் தீர்ந்தேன். உனது இனிய அருளால் எனக்குக் குறை ஏதுமில்லை. இன்னும் உனைப் பிரிந்து இருப்பது அ றியேன். என்னை மணம் புரிந்து அருள்க எனக் கவுரி வேண்டினாள் . பொன்னனையாய், அவ்வணமே புரிகுதும் என்று சிவபெருமானும் அருளிச் செய்தான் . கவுரியும் ஆனந்தக் கடலில் மூழ்கி அங்கே இருந்தாள்.

## *(10) சொர்ணவல்லி திருமணப்படலம்*

சண்டாசுரனை வீழ்த்தி வெற்றிபெற்ற காளிதேவி காளீசரைப் பூசனை செய்த கதையைக் கூறினோம். காளியின் கரிய உருவம் நீங்கிப் பொன்நிறம் பெற்ற சொர்ணவல்லி காளீசனைத் திருமணம் செய்து கொண்ட சீர்க்கதை செப்புவோம்.

தனது தலைமுடி மேல் கங்கையை அணிந்துள்ள முக்கண்ணன் ஆகிய எம்பெருமான் முன்பு நேர்ந்து கொண்டபடி கானப்பேரில் காளீயாகத் தோன்றி உலகத்தைக் காத்த சொர்ணவல்லியைத் திருமணம் செய்ய உள்ளார் என்ற செய்தி அறிந்து , அன்பு கனிந்து மூவுலகு உள்ளோரும் , அவரவர் துணைவியருடன் கானப்பேரை வந்து அடைந்தனர்.

மகாவிட்ணு, பிரம்மா, வயிரவாதி உருத்திர கணங்கள், அட்ட வித்தியேச்சுரர், சத்தகோடி மந்திரர் , சசிமணாளன், வானவர், திசை காப்பாளர் , வசுக்கள், கின்னரர், இயக்கர், சித்தர், கருட காந்தருவர், பானுவான பன்னிருவர், பல்லுடுக் கணங்கள் , வசிட்டர், ஆதி இருடிகள் , எழுவரானோர், சனகராதி நால்வர் , பதஞ்சலி முனிவர் , தூலபாதர், நந்தி எம்பெருமான், நாட்டிய சிவ கணங்கள், நாக நாட்டார், பெருநிலத்தவர் முதலானோர் தத்தம் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.

## காளையார்கோயில் தல புராணம் (கதைச் சுருக்கம்)

பாரதி என்று அழைக்கப்படும் கலைமகள் திருமகள் இவர்களோடு , சுகேசி, திலோத்தமை, மேனை, தேவமங்கையர், முனிவர்களின் மனைவியர், நாக நாட்டின் அங்கனை மார்கள், மற்றும் பிறரும் அளப்பிலாதார் அனைவரும் நெருங்கிச் சூழ்ந்து உள்ளன்பொடு நிறைந்தனர். அனைவரும் அணியணியாகச் சோதிவனத்தில் திகழ்வது , மலைமகளைச் சிவபெருமான் திருமணம் செய்த போது கனமுற விளங்கி நின்ற கயிலையை ஒத்திருந்தது.

சுடரெழில் காளீசர்க்கும் சொர்ணவல்லிக்கும் திருமணம் நிகழ்தலாலே மண்டபங்கள் மாடங்கள் கோபுரங்கள் பலவற்றையும் காணும்படியாக நொடியினில் செய்திடுக என்று பிரமன் கூறிட, மயனும் அவ்வாறே செய்திட்டான். நீல மணியினில் குறடு வேய்ந்து, செம்மணித் தூண்கள் ஆயிரம் நட்டுவைத்து , அவற்றின் மீது மாடங்கள் அமைத்து, போதிகை பொருத்தி, வச்சிரத்தால் உத்திரம் விரவி, மரகதப் பலகைகளைப் பரப்பி, விமானங்கள் பலவும் ஏற்றிவைத்து , சூரியனது ஒளி பரவும்படியாக ஒளிமணித்தசும்பு அமைத்து, பொன்நிலவு சாளரங்கள் வைத்து, மண்டபங்கள் எழுப்பி, பொன்மாலை, மாணிக்கமாலை, கமுகு, வாழை, பூரணகும்பம் இவற்றுடன் அலங்கரித்தான் மயன் எனும் தேவதச்சன். தேவர்கள் அனைவரும் அங்கே சூழ்ந்து அவரவர் இருக்கையி ல் அமர்ந்தனர்.

அயனும் மாலும் பரஞ்சுடராகிய சிவபெருமானின் முன்சென்று தலைவணங்கிப் போற்றி வேண்டிடச், சிவபெருமானும் திருமஞ்சனச் சாலைக்குள் எழுந்தருளினார். ஐயனை மணிப் பீடத்தில் அழகுற இருத்திப் பிரமதேவன் பொன் தசும்பில் கௌரி தீர்த்தத்தால் நீராட்டினான். மாயன் மெய்யினை ஈரம் போக்கி, விரி மணிப் பொன் பட்டாடை கையுற அணிந்து, நல்ல கண்மணி நீறு சாத்தி, அணிமணிக் கலன்கள் பூட்டி, சந்தனம் அணிதரச் சாத்தி, மென் பூந்தார் புனைந்து அலங்கரித்து , அன்று காணாத் துணை மலர்க் கழல்கள் தீண்டிப், பணிவுடன் பனிநீர் கொண்டு பரிவுடன் விளக்கினன் . மாலும் அயனும் தன்னருகில் இரண்டு ப க்கங்களிலும் நிற்க, வானவர் கோமானாகிய இந்திரன் முன்னோர் மாமுனிவரானோர் திகழ , மேலவர் மறை வாய் ஓத , வியந்து மங்கலங்கள் எங்கும் மேலவார் குழலார் பாட, எம்பிரான் இருந்தான்.

இங்கே, அன்னையாய் உலகம் எல்லாம் அளித்து அருளும் சொர்ணவல்லியை கலைமகளும் திருமகளும் பணிந்து , அன்பினோடு மங்கள நீராட்டி, மணிவிளிம்புறு பொன்னாடை புனைந்து, பல தூய மணிக்கலன்களை அணிவித்து, நான்மறையும் போற்றும் பொன்னடிக்குச் சிலம்புறு பாதசாலம் கிண்கிணி தண்டை சேர்த்துப், பூப்போன்ற பட்டாடை அணிவித்து, நுண்ணிடை இலங்க ஏழுகோவை அணிக்கலம் அமையப் பூட்டி, முன்கையில் கடகம் இட்டு, மோதிரம் விரலுக்கு அணிந்து , **வளையல்கள்** அணிந்து, கொங்கை மீது பன்மணி மதாணியோடு முத்துமாலை பலவும் சேர்த்து, ஆரமெனக் களபச் சாந்தும் அமைதர எழிலிற் சாத்தி, மூக்கணி இட்டு, இரண்டு காதுகளிலும் குழைகள் பூட்டி, பிறை நெற்றியின் மேல் திலகங்கள் தீட்டி, தலையணி தெய்வ உத்தி பிறைமுதல் சாத்தி , வாசனை மிகுந்த மலர்களைக் கற்பகப்பூவோடு சேர்த்து அணிவித்து, கலைமகளும் திருமகளும் கைகுவித்து வணங்கி நின்றனர்.

பல்வேறான வாத்தியங்கள் இசைத்தன. பல மலர்களால் தூவினர். நல்லோர் மங்கலப் பாடல்கள் பாடினர். சொர்ணவல்லி மெல்லென அடி எடுத்துச் சென்று மாமறைகள் வாழ்த்த எம்பிரான் அருகில் அமர்ந்தாள்.

மங்கலப்பேரிகை ஒலித்தது. மாமறையோர்கள் வாழ்த்தினர். நங்கையர் அரம்பை மாதர் பாடி ஆடினர். சந்திரன் மேடராசியில் இருக்கும்போது, பதின்மூன்றாம் திதியில், உத்திர நட்சத்திரத்தில், திங்கள்கிழமை ஆகிய சுப நன்னாளில், அணிவளர் சொர்ணவல்லி அம்மையை அன்பினோடு , மணிவளர் மாதவன் தன் மடிமிசை இருத்தி , எம்மான்

பணிவளர் மறை நின்று ஏத்தும் பாத பூசனை புரிந்து , திணிவளர் சிரமேல் அந்தத் தீர்த்தமும் தெளித்துக் கொண்டு, அண்ணல் தன் கரத்தில் எங்கள் அம்மை தன் கரத்தை வைத்து , நீர்த் தாரை வார்த்துத் தந்தனன் . மந்திரத்தோடு எண்ணுதற்கு அரிய பெம்மான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டான். விண்ணவர் கற்பகப் பூ மழை பெய்தார்.

அந்தநிலையில், தருப்பை பலா மா இவற்றின் இலைகளுடன் தேன் சேர்த்து , நெய்வார்த்து ஆகுதி கொடுத்தனர் . செந்தீ அவற்றை யெல்லாம் வாங்கி உண்டு வலமாகச் சுழித்து ஓங்கி எழுந்தது . பொரியைத் தனது கையால் இறைவன் ஏற்று செந்தீயில் இட்டு , எமது அம்மையோடும் மும்முறை தீயை வலம் வந்தான் . அம்மியின் மீது எம் அம்மையின் பாதம் தொட்டு இறைவன் வைத்தனன். மறையவர் முனிவர் ஆசி வழங்கினர்.

பெருந்தகை எம்பிரான் தன் பிரிவறு தோழனாய் அங்கு இருந்திடும் பெருமை சான்ற இருநிதிக் கிழவன் குபேரன் என்பவன் , அருந்தவர் முனிவர்கள் அனைவருக்கும் ஆடை ஆபரணங்கள் சந்தன தாம்பூலம் ஆகியனவற்றைச் சிறப்பான முறையில் வழங்கினான். இந்திரன் முதல் வானோரும் , பிற உலகங்களில் உள்ளாரும் வந்தனை செய்து போ ற்றினர். அவர்களுக்கு இறைவன் மகிழ்வொடு காட்சி நல்கிச் சொர்ணவல்லியினோடு எங்கள் சந்திரமோலி வீற்றிருந்தான்.

அப்போது, அருள் வடிவாகிய சொர்ணவல்லி இறைவனது திருவுள்ளத்தை நினைத்து இரண்டு உருவம் ஆகி சிவபெருமான் முன் நின்றாள் . நின்ற ஒரு உருவத்தோடு நிர்மலமான இறைவன் சூக்குமலிங்கத்துள் புகுந்தான். அது கண்ட தேவர் அனைவரும் உள்ளம் மகிழ்ந்தனர். கருமைநிறமான காளீசர் சூக்கும லிங்கத்தின் வாமபாகம் வலப்புறம் பொன்நிறம் மின்னுவதைக் கண்டனர். ஆம் இது என்ன அதிசயம் என்று வியந்தனர் . இக் காரணத்தினால், இந்த இலிங்கத்திற்குச் **சொர்ண காளீச்சுரன்** என்று பெயர் சொல்லி விண்ணோர் அன்பினால் துதித்து வணங்கினர்.

*போற்றி சங்கர சம்பு புராதன*
*போற்றி ஐந்தொழிற் காரண புண்ணிய*
*போற்றி மெய்த் தவர் உள்ளம் புகுந்தவ*
*போற்றி சொர்ன காளீச்சுர போற்றியே*

*போற்றி சொர்னமலைச் சிலைப் புங்கவ*
*போற்றி சொர்ன புரத்தைப் புரந்தவ*
*போற்றி சொர்னவலிக்கு அருள் போதக*
*போற்றி சொர்னகாளீச்சுர போற்றியே*

*போற்றி எங்கும் நிறைந்து அருள் பூரண*
*போற்றி மால்விழி பூண்ட பதாம் புய*
*போற்றி வேதப் புரவி யுகைத்தவ*
*போற்றி சொர்னகாளீச்சுர போற்றியே*

என்று இறைஞ்சிக் காளீச்சுரன் சந்நிதியில் இன்புற்று இருந்தனர்.

சொர்ணவல்லியின் இரண்டு உருவங்களில் ஒன்று காளீசர் சிவலிங்கத்தின் உள்ளே சென்று ஒளிந்திட, மற்றொரு உருவம் கன்னியாய் , காளீசுர சிவலிங்கத்திற்குத் தெற்கில் உள்ள வீரசக்தியுள் ஒன்றினள் . வானவர் இந்தக் காட்சியைக் கண்டு களித்து ஆனந்தம் கொண்டு கூடிக் குதூகலித்து அன்பு நிறைந்து தொண்டர் நாயகியாம் சொர்ணவல்லி தாள் புகழ்ந்து இவை போற்றுவார்.

*அன்னையாய் அகிலாண்டமும் ஈன்றவள்*

*மன்னு மாதிர் அமன் மகளானவள்*
*உன்னு மாமறை ஓதும் பெருமையள்*
*சொன்னவல்லி துணைப் பதம் போற்றுவாம்*

*சென்னி மீது ஒளிர் செம்மணி மோலியள்*
*புன்னகைக் கவின் பூரண மாமதி*
*பன்னவானத்து அம்மை அருள் வளர்*
*சொன்னவல்லி துணைப் பதம் போற்றுவாம்*

*பொன்னும் வாணியும் போற்றும் பதத்தின்*
*அதன் எதிர்ப் பகைச் சண்டனைச் சாய்த்தவள்*
*பன்னு சொன்ன காளீச்சுரன் பால் உறை*
*சொன்னவல்லி துணைப் பதம் போற்றுவாம்*

என்று இமையவர் போற்றினர். உன்னும் அன்பில் துதித்தற்கு மகிழ்ந்தாள் சொர்ணவல்லி. "முன்பு சண்டாசுரனுடன் நான் போரிடும் போது, முந்தியே ஏழு மாதரும் (சப்தமாதர்) ஆயினீர். அந்த இயற் படிவங்களோடு அன்பர்களுடைய வேண்டுதலைக் கேட்டு, அவர்கள் வேண்டியனவற்றை அருள் செய்க, மற்றும் தேவர்கள் அவர்களது நகர்களுக்குச் சென்று, வருத்தமும் பயமும், நீங்கி மகிழ்வுடன் இருங்கள்" என்று அசரீரி கூறியது. இதைக் கேட்ட வானவர் அன்றுமுதல் தங்களது கவலைகள் நீங்கி மகிழ்ந்தனர்.

## *(11) தேவர்கள் பூசித்த படலம்*

அன்னையாய் அகிலத்து உயிர்களை எல்லாம் காத்து அருளும் சொர்ணவல்லியின் திருமணம் நடைபெற்ற கதையைச் சொன்னோம். வானவர் அன்பினால் பூசனை ஆற்றிய கதையை இப்போது கூறுவோம்.

உலகமெல்லாம் வணங்கித் துதிக்கும் சொர்ணவல்லியின் இனிய அருளைப் பெற்ற தேவர்கள் எல்லோரும் ஐயனையும் அன்னையையும் தொழுது வணங்க வேண்டி, மெய் அன்போடு விரைந்து முயன்றனர். திருமால் நான்முகன் முதலான அனைத்துத் தேவர்களும் சிவகங்கைத் தீர்த்தம் ஆடினர். ஆலம் உண்டவனின் ஐந்தெழுத்தை எண்ணி விபூதி அணிந்தனர். எம்பிரான் பூசனைக்கு உகந்த பல பண்டங்களையும் எடுத்துக் கொண்டு சென்றனர். சிறப்பான முறையில் பூசை நடாத்தினர். தயிரும் பாலும் நெய்யும் பழங்களும் குங்குமமும் சந்தனமும் கொண்டு காளீசன் சோமேசனையும், வீரசக்தியை வலங் கொள்ளும் மநோன்மணி தன்னையும் சிவ கங்கைத் தீர்த்தத்தினால் நீராட்டினர். நீரோடு கண்மணி வேய்ந்தனர். பொன்னாடை அணிவித்தனர். செஞ்சந்தனம் பூசினர், வாசனைமிகுந்த மலர் மாலைகள் சூட்டினர். ஆயிரம் நாமங்கள் சொல்லி அர்ச்சனை செய்தனர். தூபமும் தீபமும் நெறிப்படிக் காட்டினர். சாலி அன்னமும், சர்க்கரை அன்னமும், பாலின் அன்னமும், பலவிதமான பலகாரங்களையும் நிறைய வைத்து நீலகண்டன் தனக்கு நிவேதனம் செய்தனர்.

பல்வேறான இசைக்கருவிகள் இசைக்க, நல்ல பாடல்களும் ஆடல்களும் நடைபெற, நூல்களில் கூறப்பட்டுள்ள உபசாரங்களைச் செய்து மகிழ்ந்தனர். கைகளைத் தலைக்குமேலே கூப்பி, ஐந்தெழுத்து மந்திரத்தை நினைந்து வலம் வந்து,

*"நித்தனே உமை நேச யுவேசனே*
*முத்தனே அருள் காளீச உன்னுவார்*
*சித்தனே சச்சிதானந்தம் எம்மனோர்*

*சுத்தனே எமைக் காத்து அருள் செய்கவே"*

என்று காளீசர் சந் நிதி நின்று போற்றினர் . திருமால் நான்முகன் இந்திரன் முதலான தெய்வங்களும், அகத்தியர் முதலான முனிவர்களும் தனித்தனியே சென்று சிவலிங்க த்தை நிறுவிச் சிவனருள் பெற்றனர் என முனிவன் கூறினான் . இவ்வாறு பிரதிட்டை செய்யப்பெற்ற சிவலிங்கங்கள் எவை என்று கேட்க, அவற்றையும் கூறினான் முனிவன்.

பேரண்டத்தின் வடிவாகிய நம் சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள் உண்டு . அவற்றுள் **கிழக்குமுகம்** *தற்புருடம்* யெளவனம் சொர்ணவன்னம், **தென்முகம்** *அகோரம்* தகுமுதுமை கருமை, **அச்சிமஞ்** *சத்தியோசாதம்* தனியாள் தன்மை திகழ் தரு சுத்தம், **வடக்கு** *வாமதேவம்* பெண்மை செந்நீர் வன்னம், **நடுமுகம்** *ஈசானம்* இளம்பருவமொடு படிக நிறம் காட்டும் என்று ஆகமநூல் கூறும். மற்றும் அவற்றுள் கவுரியின் உளப் பண்பை ஓர்ந்த ஈசுவரன், கிழக்கே யெளவனத்துடன், தெற்கே கறுப்பு வடிவமொடு போனதால் **யுவேசன்** காளீசன் என வழங்கும் என்றான். இவ்வாறு முனிவன் கூறிடக் கேட்ட அரசன் மகிழ்ந்து , பிரமன் திருமால் இந்திரன் தேவர்கள் முனிவர்கள் சிவலிங்கங்களை எவ்வடிவில் எவரவர் எத்தலத்தினில் நிறுவினர் அவற்றை எல்லாம் விரித்துக் கூற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டான். தவ முனிவனும் அவ்வாறே அவற்றை எல்லாம் கூறத் துவங்கினான்.

திருமால் **கண்டதேவி** எனும் நகரில் தன் பேரால் கண்டு தொழ சிவலிங்கம் ஒன்றினை நிறுவி அருச்சித்தான். அச் சிவலிங்கத்தைக் கனி வுடன் கண்டு வழிபடுவோர் புவிக்கு அரசராய் வாழ்ந்திடுவர் . சிவஞானம் வாய்க்கும் . அந்தச் சிவலிங்கத்தை **விண்டுவீச்சுரன்** என்று அழைப்பர்.

சோதிவனம் என்ற காளையார்கோயிலுக்கு அருகே **வெற்றியூர்** என்ற ஊரில் **அகத்திய முனிவர்** அவரது பெயரால் சிவலிங்கம் ஒன்றை நிறுவினார். மற்றும் **வசிட்டமுனிவரும் அருந்ததியும்** அன்பர்களுக்கு வரம் அருளும் சிவலிங்கத்தைத் தனித்தனியாக நிறுவி அரிய தலைமை பூண்டார். அந்த வசிட்டலிங்கத்தைச் சென்று தரிசிக்கும் அன்பு உள்ளவர்களுக்கு ஆயுளொடு குலம் செல்வம் மேன்மேலும் உவப்பு அடையும்படியாகக் கொடுக்கும். பின்னர், அருந்ததி பூசை செய்த சிவலிங்கத்தைத் தரிசிக்கும் பெண்கள் தீர்க்கசுமங்கலியாய் நீண்ட ஆயுளுடன் வாழ்வர்.

சோதிவனத்திற்குக் கிழக்கே தாரகனைக் கொன்ற பாவத்தைத் தீர்க்க வேண்டிப் **புருகூதன்** சிவலிங்கம் ஒன்றை நிறுவிப் பூசித்தான். தீமைகள் அகன்றிட அச்சிவலிங்கத்தையும், அந்த இடத்திலிருந்து நாற்கடிகைத் தூரத்தில் தென்கிழக்கே **அகத்திய முனிவர்** இரண்டு சிவலிங்கங்களை நிறுவியுள்ளார்.

சோதிவனத்திலிருந்து நாற்கடிகை தூரத்தில் பிரமதேவன் அருள்மிகுந்த ஒரு சிவலிங்கத்தை நிறுவிப் பூசை செய்தான். அந்த இடத்திலிருந்து முக்கடிகை தூரத்தில் அக்கினி திசையில் மகாலெட்சுமி சிவலிங்கம் ஒன்றை நிறுவிப் பூசித்தாள்.

சோதிவனத்திலிருந்து இரண்டுகடிகை தூரத்தில் அக்கினி திக்கிலும் , தெற்கில் **பூதபுரம்** என்ற ஊரிலும் தீக்கடவுள் இரண்டு சிவலிங்கங்க ளை நிறுவிப் பூசித்தான். சோதி வனத்தின் தென்திசை , தென்மேற்கு, மேற்கு திசைகளில் அவ்வத் திசைக் காவலர் சிவலிங்கம் நிறுவி வழிபட்டனர்.

சோதிவனத்திற்கு மேற்கே நாற்கடிகை தூரத்தில் , **சயபுரத்தின்** மருவோங்கு மகாலெட்சுமி ஒருசிவலிங்கத்தை நிறுவி வழிபட்டாள். ஒரு மூன்று கடிகை தூரத்தில் சூரியனும், நாற்கடிகை தூரத்தில் உள்ள தலத்தில் சந்திரனும் , வடமேற்கு திசையில் வாயுபகவானும் அவ்வாறு சிவலிங்கங்களை நிறுவி மகிழ்வுடன் பூசித்தனர்.

**பூங்குடி** என்றிடும் தலத்தில் **அளகையர்கோன்** தானும், அதற்குக் கிழக்கே மார்க்கண்ட முனிவனும் சிவலிங்கங்களை நிறுவி அருச்சித்தார் . அநேக அமரர்களும் முனிவர்களும் நிறுவிய சிவலிங்கங்கள் அனைத்தையும் கூறுதல் அரிது.

இவ்வாறு அசுரர் முனிவர் பூசித்த தலங்களில் உள்ள சிவலிங்கங்களை யாரேனும் அன்போடு கண்டு வழிபட்டால், அவரவர்க்கு வேண்டியவாறு அறம் பொருள் இன்பமும் வீடும் கிடைக்கும் . சோதிவனத்தைச் சுற்றிலும் சிவலிங்கங்களைப் பதிட்டை செய்து வழிபட்டு வரம் பல பெற்று சிந்தை மகிழ்ந்தவர் எல்லாம் தாங்கள் உறையும் இடங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்.

சோதிவனம் என்ற இத் திருத்தலம் , பல காரணத்தினால் பல பெயர்களைப் பெற்றிருந்தாலும், சொற்சிறப்பு உடைய **காளிவனம் காந்தாரவனம் பெருஞ்சோதிவனம்** என்ற இந்த மூன்று பெயர்களைக் கேட்போ ர் தீவினைகளை அகற்றி நலன்களை எல்லாம் ஈயும் காளீசன் திருவருளில் கலப்பர்.

## *(12) தேவதாசப் படலம்*

தேவர்கள் எல்லாம் சோதிவனத்தில் திகழ்கின்ற தேவதேவனாகிய காளீசரைப் பூசித்த கதையைச் சொன்னோம். தேவிசாலபுரம் என்ற ஊரை ஆண்டுவந்த செல்வந்தனாகிய **தேவதாசன்** என்பவனின் சரித்திரத்தைக் கூறுவோம்.

நாடுகளுள் சிறந்தது பாண்டி நாடு . பாண்டிய நாட்டின் வளம் அனைத்தையும் தன்னகத்தே கொண்டு, தெய்வங்களின் திருவருளையும் பெற்று, நாடி வருகின்ற எவர்க்கும் மிக்க அருளொடு வழங்குகின்ற செல்வர் வசிக்கும் மாடமாளிகை நிறைந்தது **தேவிசாலபுரம்** என்ற ஊர். அத் திருநகரில், வையத்தைக் காப்பவனும், சத்தியம் பொறை ஒழுக்கம் தயை புகழ் இவற்றில் நிகரில்லாதவனும் , சைவபக்தியில் சிறந்து தருமம் தானம் பகர் இவற்றை உடையவனும், பூதிசாதன நெறியினில் நிற்போனும் , திக்கு எல்லாம் சென்று மீளும் தேர்களை உடையவனும் , மிகுந்த செல்வங்களை உடையவனும் , சான்றோனும், சந்திரகுலத்தில் உதித்தவனும், மிகுந்த புகழுக்கு உரியவனுமாகிய தேவதாசன் என்ற மாறன் ஒருவன் வாழ்ந்து வந்தான் . அத்தகு பெருமை வாய்ந்த இந்த வேந்தன், சோதிவனத்தில் உறைந்துள்ள காளீச்சுரனொடு சொர்ணவல்லி, சோமேசன் சவுந்தரவல்லி இவர்களிடம் நிறைந்த பக்தி மிகுந்தவன். ஆழ்ந்த உள் அன்பினோடு அவன் ஒருநாள் , காளீசர் சந்நிதி முன் வந்து நின்று கீழே விழுந்து அடிபணிந்து வணங்கினான் . அப்போது அவன் உள்ளத்தில் உலகெல்லாம் புகழும் காசி நகருக்குச் சென்று கங்கையில் நீராடி , புனிதமான கங்கையின் தீர்த்தத்தைக் கொண்டுவந்து காளீசனுக்கு நீராட்ட வேண்டும் என்ற சிந்தனை எழுந்தது. அவன் தனது தேவிசாலபுரத்தினில் சிறுவனை அர சாள வைத்து விட்டு , நான்மறையோர்களிடம் அனுமதியும் ஆசியும் பெற்றுத் தனது பரிவாரங்கள் சூழக் காசிக்குப் புறப்பட்டான்.

காசியை நோக்கி நெடுந்தொலைவு நடந்து , தான் காணாத நல்ல பல தேசங்களையும், வளமை மிகுந்த பல நகரங்களையும், நன்னீர் ஓடும் பல நதிகளையும் , விரிந்து பரந்த காடுகள் பலவற்றையும், நெடிதுயர்ந்த மலைகள் பலவற்றையும் கடந்தனன். நடப்பதினால் உண்டாகும் துன்பத்தை நோக்கான். நெடுந்தொலைவு நடந்தும் காசி நகரைக் காணோமே என்று தவித்து, முற்றும் இளைத்து மேனி தளர்ந்து கண் துயின்றான். அப்போது, அவனது அன்பின்பால்பட்ட அருள் காளீசன் ஒரு மறையோன் வடிவில் கனவில் தோன்றினான். கங்கை நீராட்ட, நீ உன் உள்ளத்தில் கருதிய கடவுளுக்கு அக்னித் திசையில் அவராலே **பாதாள கங்கை** என்ற தீர்த்தம் உருவாக்கப் பட்டுள்ளது. அகத்தியமுனிவர் அப்பெரும் புனித நீர் கொண்டு, கடவுளுக்கு ஆட்டிச் சித்தி பற்பல பெற்றுள்ளார் . நீயும்,

அந்தத் தீர்த்தத்தில் நீராடி, உனது கடவுளையும் நீராட்டலாம். ஏமாற்றம் இல்லாமல் உள்ளம் தேறுக என்றனன். அதற்கு மன்னனும், நெடுந்தொலைவு கடந்தும், பாவங்கள் அனைத்தும் போக்க வல்ல, காசியினைக் கண்டு மகிழ்ந்தனன் இல்லை , நொந்தேன், சொல்லிய வண்ணம் எவ்வாறு தொடர்ந்து அங்குச் செல்வேன் என்று கூறினான் . அந்த மறையோனும் அங்கு ஒரு குளத்தைக் காட்டி இதில் மூழ்கினால் எளிதில் சென்றிடலாம் என்று கூறி மறைந்தான்.

தேவதாசனும் கனவில் இருந்து விழித்து எழுந்தான் . காளீசன் தாள் நினைந்து வணங்கினான். வைகறைப் பொழுதில், தான் கனவில் கண்ட குளத்தை நோக்கிச் சென்று அடைந்தனன். அப்போது, அங்கே, இரவு கனவில் தோன்றிய மறையோன் நேரில் தோன்றி, மன்னவ, இங்கு இதில் மூழ்குக என்று மன்னனின் கரத்தைப் பற்றி இழுத்துச் சென்று அந்தத் தீர்த்தத்தில் ஆழ்த்தி விட்டுச் சென்றுவிட்டான். கணநேரத்தில் அங்கே சோதிவனத்தில் சிவகங்கைத் தீர்த்தத்தில் தீர்த்தமாடி எழுந்து காளீசன் ஆலயத்தைக் கண் டு களிப்புற்றான் மன்னன். அங்கு வந்தோரிடம் மன்னன் இந்த மகிமையைக் கூறினான்.

சிவகங்கைத் தீர்த்தத்தில் மூழ்கி நீராடி, பூதிகண்டிகை நன்கு அணிந்து , செம் பொன்னால் ஆ ன கலயத்தில் அத்தீர்த்தத்தை எடுத்து , அன்பினால் காளீசனுக்கு நீராட்டினான். நறுமலர்களைக் கொண்டு அருச்சனை செய்து , தூப தீபம் காட்டி , நிவேதனங்கள், பதினாறு உபசாரங்களும் செய்து உள மகிழ்ச்சியோடு , ஐந்தெழுத்து மந்திரத்தை நினைத்து, வலம் வந்து காளீசரைப் போற்றி நின்றான் மன்னவன் . காளீசனும் முன்போல் மறையோன் வடிவில் வந்து தோன்றினான் . தேவதாசனும் அவரை நோக்கி ஆனந்தக் கண்ணீர் மல்க, நிலம் கொள்ளத் தாழ்ந்து எழுந்து நின்று, மெய்சிலிர்த்து, "எங்கள் நாயகன் காளீசனது ஆலயத்தின் பாதங்களையும் உங்களது பாதங்களையும் இடையறாது நினைத்து வணங்கும் பக்தியைத் தந்து அருள்க" என வேண்டினான் . "அது தந்தோம் மற்றும் அன்பினால் ந மது பேர் நினைந்து கங்கையில் நீராடுவோர்க்கும் அவர்கள் கருதிய அனைத்தும் ஈவோம்" என்று அருளிச் செய்து சூக்கும இலிங்கத்துள் மறைந்தான் . அன்று தொட்டு இடைவிடாமல் அவன் அடிக்கு அன்பு பூண்டு , தனது தேவிசாலபுர நகரை அடைந்து தனியரசு உரிமை ஏற்று மக்களது உள்ளம் மகிழும்படியாக வழுதி அரசு வீற்றிருந்தான்.

ஆதலினால் கங்கைக்கு நிகரான இச்சிவகங்கைத் தீர்த்தமாடி , அகத்தியன் உண்டாக்கிய தீர்த்தத்திலும் மூழ்கினால் பாவங்கள் எல்லாம் அகன்று முத்தி கிடைக்கும் . மேலும் சிவகங்கைத் தீர்த்தத்திற்குத் தெற்கே உமையினால் உண்டாக்கப்பட்ட **அயர்வறு தீர்த்தம்** ஒன்று உள்ளது. அதில் மூழ்கினால் அயர்ச்சி நீங்கி முன்செய்த தவப்பலன்கள் கிடைக்கும். சிவகங்கைத் தீர்த்தத்திற்கு நிருதி திக்கில் **காளிதீர்த்தம்** உள்ளது. அதில் தீர்த்தமாடினால், இன்னல் போக்கும். அத் தீர்த்தத்திற்குத் தெற்கே **பாரதி தீர்த்தம்** உள்ளது. அதில் தீர்த்தமாடினால், மனதிற்கு மகிழ்ச்சி கல்வி முதலான அனைத்தும் அளிக்கும் . அதற்குக் கிழக்கே **பிரம்மதீர்த்தம்** உள்ளது. அதில் மூழ்கினால் பிரமஞானம் பெற்று நீண்டகாலம் வாழ்வர். சிவகங்கைத் தீர்த்தத்திற்கு பச்சிமம் **விட்ணு தீர்த்தம்** உள்ளது. அதில் மகாவிட்ணு தீர்த்தமாடி , இத்தீர்த்தத்தினால் காளீசனுக்கும் நீராட்டிப் பூசைகள் செய்து மகாலெட்சுமியை அடைந்தான். இதில் தீர்த்தமாடினால் மிகுந்த செல்வம் கிடைக்கும் . காளீசனுக்கு வாம திசையில் கவுரி உண்டாக்கிய ஒரு தூய தீர்த்தம் உள்ளது. அத்தீர்த்தத்தில் மூழ்கினால் மனத்தில் நினைத்த ன எல்லாம் நடக்கும். அத் தீர்த்தத்திற்குக் குணதிசையில் சொர்ணவல்லியம்மை உண்டாக்கிய தீர்த்தம் உள்ளது . இத்தகு தீர்த்த மேன்மை எடுத்து உரைப்பது அரிதாகும். பக்தியினால் இத் தீர்த்தங்களில் மூழ்கினோரும், அந்தத் தீர்த்தத்தை உடம்பில் தெளித்துக் கொண்டோரும், அவர்கள் நினைத்தன எல்லாம் பெற்று நலமுடன் வாழ்ந்து முத்தி அடைவர் என்று முனிவர் அருளிச் செய்தார்.

# *(13) இலக்குமி சாபந்தீர்ந்த படலம்*

நன்மையும் மேன்மையும் மிகுந்து , உண்மையான தவத்தை உடைய மன்னன் **தேவதாசனின்** சிறப்புகளைக் கூறினோம். செல்வங்களுக்கு அதிபதியான **இலக்குமிதேவி** பெற்ற சாபத்தையும் அது நீங்கிய கதையையும் அன்பினால் கூறுவோம்.

வாலகில்லியர் என்ற பெரிய தவயோகி இருந்தார் . அவர், கலம்புரி கையினர், கவினின் மேனியர், நூல் அணி மார்பினர் , வலம்புரி சடையினர், மறி மென் தோலினர் , நிலம்புரி தவத்தினர், நெறி தவறாதவர், வாமன வடிவினர், வளைந்த மெய்யினர், காமமும் வெகுளியும் கடந்த சிந்தையர் , சாத்திரம் புராணங்கள் மாமறை முழுதும் உணர்ந்தவர் , ஆயிரம் ஆண்டுகள் வாழ்பவர். இவர் மக நட்சத்திரத்தில் சிறப்பு யாகம் செய்ய வேண்டும் என்று நினைந்து , திருமாலைக் காண்பதற்காகச் சென்று சேர்ந்தார் . அங்கிருந்த மகாலெட்சுமி, இவரது குரூப வடிவத்தைக் கண்டு மனத்திற்குள் இகழ்ந்தாள் . மகாலெட்சமியின் மனக்கருத்தை அறிந்த மாமுனிவர் பெரிதும் வருந்தினார் . நீ, சர்வ லட்சணமும் பொருந்தியவள் என்பதால் என்னை இவ்வாறு இகழ்ந்தாய் . எனவே, நீ ஒரு சாதாரண மானிடப் பெண்ணாய் பிறப்பாய் என்று சாபம் அளித்தார்.

வேதமுனிவரின் சாபம் பெற்ற இலக்குமிதேவி பெரிதும் வருந்தியதைக் கண்ட மகாவிட்ணு, தவயோகியை இவ்வாறு நீ ஏளனம் செய்யலாமோ? இருந்தாலும் இதற்கு ஒரு பரிகாரம் சொல்கிறேன் கேள் , நீ போய் சோதிவனத்தை அடைந்து காளீசன் தாள்களைத் தினமும் வணங்கினால், எத்தகைய சாபமும், எவ்விதமான பாவங்களும் அழிந்துவிடும் என்பது உண்மை. நானும் அங்கே வந்து உன்னை அழைத்து வருவேன் என்று கூறினார்.

அது கேட்டு மகிழ்ந்து , மகாலெட்சுமி, மானிடப் பெண்ணாய்த் தோன்றி சோதிமாவனம் வந்து சேர்ந்தாள். இங்குள்ள கவுரி தீர்த்தத்திற்கு அக்னித் திசையிலே ஓர் தீர்த்தம் உண்டாக்கி தீர்த்தம் ஆடினாள் . மேலும் சிவகங்கைத் தீர்த்தம் ஆகியவற்றில் தீர்த்தமாடி காளீசரை அன்புடன் பூசை செய்தனள். எந்தை காளீசனை இறைஞ்சி ஏத்தினள். பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்த பின், வந்த ஓர் வெள்ளிக் கிழமையில் காளீசர் தோன்றி , நீ செய்த வழிபாட்டால் நாம் பெரிதும் மகிழ்ந்தோம் , உனக்கான சாபத்தையும் நீக்கினேன். உனது உருவம் முன்னினும் பதின்மடங்கு அழகுடன் விளங்கும் . நீயும் திருமாலுடன் சேர்வாயாக என்று அருளினார். அன்பினால் நீ உண்டாக்கிய தீர்த்தமும் '**இலக்குமி தீர்த்தம்**' என்று இனி விளங்கும். இதில் மூழ்குவோருக்குக் கங்கையில் தீர்த்தமாடிய பலன்கள் கிட்டும் என்று கூறிச் சிவலிங்கத்துள் சென்றார்.

இதற்கிடையே, வாலகில்லி முனிவர் செய்த **சத்திரயாகம்** முடிவடைந்த காரணத்தினால், மாயவனும் அங்கிருந்து புறப்பட்டு சோதிவனம் வந்து சேர்ந்து '**சுகந்தவனப் பெருமாள்**' என்ற பெயரில் சிவகங்கையில் தீர்த்தமாடிக் காளீசனைப் பூசித்தான். காளீசனும் பெருமாளிடம், "சாபம் தீர்ந்து இலக்குமி முன்னினும் அழகிய உருவத்துடன் அமர்ந்து இருக்கின்றாள். அவளோடு நீயும் நேயம் கொண்டு இங்கே தங்கி என்னை ஏத்துக" என்று கூறினான். திருமாலும் காளிபுரத்தின் புறந்திசை நிருதியில் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி , சுகந்தவனேசன் என்ற பேருடன் தினந்தோறும் காளீசரைத் தொழுது நன்மை பெற்றான்.

முன்னொரு காலத்தின் சண்டாசுரன் என்ற அரக்கனை அழித்திடும் பொருட்டு **முகுந்தன்** (மகாவிட்ணு) ஏவிய **திகிரி** என்ற சக்கராயுதம் அந்த அசுரனை அழிக்காமல் திரும்பிய காரணத்தினால், சாபம் பெற்று அதன் சுடர் ஒழிந்தது . அந்தச் சாபம் தீரும் வகையில், சோதிவனத்திற்கு வந்து ஒளியிழந்த அந்தச் சக்கராயுதம் அன்பொடு தனது பெயரில் குளம் ஒன்றை உண்டாக்கியது . அத் தீர்த்தத்திலும், சிவகங்கை தன்னிலும் மனம் கனிந்து மூழ்கி காளீசன் தாள் மலரைத் தொழுததால் அதனுடைய சாபமும் தொலைந்து ,

**சுதரிசனப்** பெயர் தோன்ற விளங்கியது. சுதரிசனச் சக்கரம் உண்டாக்கிய **சக்கர தீர்த்தத்தில்** மூழ்குவோர் என்றும் நீங்காத தூய்மை அடைவர். எட்டுத் திசை தெய்வங்களும் இசைந்து அவர்களது பெயரில் தீர்த்தங்களை உண்டாக்கினர். **இந்திர** தீர்த்தம் நற்போகம் வழங்கிடும், **அக்னி** தீர்த்தம் நோயற்ற தேகத்தை நல்கும், **அந்தகன்(யமன்)** தீர்த்தம் நீண்ட ஆயுளை வழங்கும், **நிருதி** தீர்த்தம் பயத்தை நீக்கும். **வருண**தீர்த்தம் நோய் நீக்கும். **வாயு**தீர்த்தம் மாண்பு வழங்கும், **புருடவாகன்** தீர்த்தம் பொருள் அளிக்கும். **ஈசானிய** தீர்த்தம் செல்வமும் குழந்தைப்பேற்றையும் நீண்ட ஆயுளையும் மனத்தெளிவையும் சிவகதியையும் முத்தியையும் வழங்கும். போற்றுதற்கு அரிய பற்பல புனித தீர்த்தங்களின் மகிமை எல்லாம் சொல்வதற்கு அரிது.

## *(14) உருத்திர சாபம் தீர்ந்த படலம்*

மாதவன் திருமார்பில் உறைந்துள்ள இலக்குமிதேவி சாபம் அடைந்த கதையையும், அந்தச் சாபம் தீர்ந்த கதையையும் செப்பினோம். சிவபெருமானில் பாதியாக விளங்கும் உமையம்மை கோபம் கொண்டு உருத்திரர்களைச் சபித்ததும் , அவர்கள் சாபவிமோசனம் பெற்ற கதையையும் இப்போது கூறிடுவோம்.

பிறைச் சந்திரனையும் கொன்றைமலரையும் வளர்கின்ற தனது சடைமுடியில் அணிந்தவர், நீலநிறக் கழுத்தை உடையவர், தீ மழு மான் இவற்றைக் கைகளில் ஏந்தி அருள் வழங்கும் கையர், தீ விழியினர், புயங்க மாலை கதிமலர் விபூதி இவற்றோடு கண்மணி விளங்கும் மெய்யர், ஆயிரம் கோடியான உருத்திரர்.

இந்த உருத்திரர்கள் சங்கரனான சிவபெருமானைத் தரிசிக்க வேண்டித் திருக்கயிலாயம் வந்து சேர்ந்தனர். அங்கேயுள்ள அற்புதமான மரத்தின் கீழே வேதவித்தகனான சிவபெருமான் வீற் று இருப்பதைக் கண்டு வீழ்ந்து எழுந்து போற்றி வணங்கினர். உலகம் அனைத்தையும் ஈன்றவள் அம்பிகை . அவள் அங்குள்ள பூஞ்சோலைக்குச் சென்று மல்லிகை சம்பங்கி சண்பகம் பரிமளம் முதலான பூக்களைக் கொய்து வந்தாள். உருத்திரர்களைக் கண்டாள்.

*“தலையினில் கலையும், நெற்றித் தழல் விழி அதுவும், அங்கைக்*
*கலையோடு மழுவும், பூதி கண்டிகை அணியும் மார்பில்*
*அலைவுறு பணியும், கண்டத் தாலமும் பரித்தோ, நாமும்*
*சிலைவில் எம்பெருமான் ஒப்போம், என்றவர் செருக்கி நின்றார்“*

தங்களைச் சிவபெருமானுக்கு ஒப்பாக நினைந்து, உருத்திரர்கள் கர்வம் கொண்டு, தன்னை மதியாததைக் கண்டு உமையம்மை வருந்தி னாள். இன்று தொட்டு நீவிர் **அயிரை** ஆவிர் எனச் சபித்திட்டாள். இக் கொடிய சாபம் பெற்ற உருத்திரர்கள் நடுங்கி அம்மையின் மலரடி வீழ்ந்து வணங்கி, நாங்கள் கெட்டோம், எங்களது பிழையைப் பொறுத்தருள வேண்டும் என வேண்டினர். அவர்களது துன்பம் கண்டு உள்ளம் இரங்கிய உமையம்மை , நீங்கள் காளிபுரத்தை அடையும் போது உங்களது சாபம் தீரும் என்று சாபவிமோசனம் அருளினாள். சாபம் பெற்ற உருத்திரர் அயிரைமீன்களாய் மாறி கடலில் சேர்ந்தனர். அயிரையாய் மாறிய உருத்திரர்களுக்குச் சாபவிமோசனம் கொடுக்க வேண்டிச் சிவபெருமானும் காளிபுரத்தில் சுயம்புலிங்கமாய்த் தோன்றி இருந்தார்.

இங்கு இவை நிற்க, முன்னோர் இட்ட சாபத்தால் தீயவனாகத் **துன்மதன்** என்பவன் இருந்தான். அவனுக்கு **சாரன்**, **கோரன்** என்ற இரண்டு புதல்வர்கள். இவர்கள் விண்ணவரையும் முனிவர்களையும் துன்புறுத்தினர். நல்லோரைப் பதைத்திடக் கொல்லும் இவர்களைக் கொல்ல வேண்டும் என்று இந்திரனும் தனது வச்சிரத்துடன் அங்கே வந்தான். இந்திரனைக் கண்டு இருவரும் அச்சமுற்று மீனாய் மாறி கடலுள் ஒளிந்தனர். அங்கு **நாகரன்**

எதிர்த்துப் பலநாட்கள் போரிட்டான். பெருங்கடலில் இருந்த சிறு மீன்களை எல்லாம் இவர்கள் இருவரும் உண்டு, அயிரை மீன்களையும் தின்னத் தலைப்பட்டனர். அதுகண்ட அம்மையின் திருவருளால் வில்வவன ஈசனும் அவர்கள் இருவரையும் தன் சூலத்தால் குத்தி மாய்த்தார். அவர்கள் இறந்த பின்னர் கடல்தலைவனும் மற்றும் கடலில் உள்ள மீன்களும் அச்சம் விலகி இன்புற்று இருந்தன ர். அவ்வாறு இருந்தபோது, ஒரு பர தன் வீசிய வலிமையான வலையில் அயிரை மீன்கள் எல்லாம் சிக்குண்டு உயிர்நீத்தன. வலையில் சிக்கி இறந்த அயிரைமீன்களை எல்லாம் வெயிலில் உ லர்த்தி வற்றல்களாக்கி விற்பனைக்கு வைத்து இருந்தான் பரதன்.

நல்ல தவமும் சைவபக்தியும் மிகுந்த பாண்டிய நாட்டின் தலைநகரான கூடல் மாநகரில் வசித்து வாணிபம் செய்துவந்தான் **அரவிந்தன்** என்பவன். அவன் ஒருநாள், வாணிப நிமித்தமாகப் பற்பல வணிகரோடு கிழக்குக் கடற்கரையை அடைந்தான் . பொருள்நிறைந்த செல்வ வணிகர் நல்ல முத்துக்களைத் தேடி வாங்கினர் . சொற்ப திரவியங்கள் வைத்திருந்த அரவிந்தன் முத்துக்களை வாங்க முடியாதவனாய்ப் பர தவர் வீதி சென்றான். அங்கு அயிரைமீன்களைக் கண்டு அவற்றை எல்லாம் கணக்குடன் விலை கொடுத்து வாங்கினான். நல்லவிலை கிடைத்தது என விற்றவனும் மகிழ்ந்தான் . அயிரைமீன்களை மூட்டை மூடையாகக் கட்டி காளைமாட்டு வண்டியில் ஏற்றி மதுரை நோக்கிச் சென்றான். இவனுடன் வந்தவர்கள் நெடுந்தொலைவு சென்றுவிட்டனர். இருள் சூழ்ந்தது, ஆனால் இவனோ நெடுந்தொலைவு நடக்கமுடியாமல் எருதுடன் வழியில் இருந்த காட்டில் தங்கினான். துணைக்கு யாரும் இல்லாமல் தனித்து காட்டிலே தங்குவதை நினைந்து அஞ்சி, மெல்லென நடந்து காளிபுரத்தை அடைந்தான். அங்கும் தன்னுடன் வந்த வணிகர் யாரையும் காணாமல் வருந்தி, இன்று இரவு இவ்வூரில் தங்கியிருந்து, இருள் புலர்ந்து விடிந்த பின்னர் போகலாம் என்று எண்ணினான் . அயிரைமீன் மூட்டைகளை இறக்கி ஒருபக்கத்தில் வைத்து உறங்கினான்.

அங்கு, அருணோதய காலத்தில் அருள் கடலான சிவபெருமான், தவ வடிவோடு, சடைமுடி புனைந்து, காலில் தந்தப் பாதுகை அணிந்து, கையில் சொர்ண வான்பிரம்பு ஒன்று ஏந்தித் தோன்றினன். கையில் உள்ள பிரம்பை நீட்டி, அதன் நுனியால் மீன்மூட்டைகளின் கட்டுகளை அவி ழ்த்து, அவற்றின் மீது தன் சடையிலிருந் த கங்கையின் நீரை வார்த்தான். வெயிலில் காய்ந்து கருவாடு ஆன மீன்கள் எல்லாம் உருத்திரர்கள் ஆகிப் பொலிந்தனர் , சாபம் நீங்கினர். பற்றிய சாபம் நீங்கிப் பார்த்தனர் நான்கு திக்கும், சுற்றியுள்ள இந்த வனமே சோதிவனம் என்று அங்கே தங்கினர் . இரவி போன்று ஒளிர்கின்ற காளீசர் சிவலிங்கத்தையும் காணப்பெற்றனர். அவர்கள் காணும்போது, எம்மான் பேரெழில் வடிவு கொண்டான், திரிசடையில் இளஞ் சந்திரனையும் கங்கையையும், தீ மான் மழுவு இம்மூன்றையும் கைகளில் ஏந்தி , நீல கண்டத்தோடு தோன்றினான். இவ்வாறான இறைவனது நிறையருள் வடிவு கண் டு எம்மானின் பாதமலரில் தலைவைத்துப் பணிந்து வணங்கினர்.

*“காரணம் கடந்து நின்ற கண்ணுதல் போற்றி, எங்கள்*
*ஆரணமிசை நின்று ஆடும் ஐயனே போற்றி போற்றி,*
*நாரணன் அயன் முன்னானோர் நாடுதற்கு அரியாய் போற்றி,*
*பூரண அருள் காளீச புராதன போற்றி போற்றி“*

என்று துதித்து, எந்தாய், இனிய உன் அருளினாலே, ஒன்றிய சாபம் நீங்கி உய்ந்தோம். எங்களது அஞ்ஞான இருள் ஒழிய உங்களது சொரூப ஞானத்தைக் காட்டிட வேண்டும் என்று வேண்டினர். அதுகேட்ட காளீசன், புன்முறுவல் பூத்து,

*“பூதங்கள் அனைத்தும் ஆகிப் பொறி புலன்களும் தானாகிப்*
*பேதங்களாய பேத பேதா பேதங்களாகிப்*
*போதங்கள் எல்லாம் ஆகிப் பூரணமாகிப் போற்றும்*

*வேதங்களாகி நின்றான் விச்சுவ உருவில் நின்றான்“*

அண்ட சராசரங்கள் அனைத்தும் அந்த உருவத்தில் இருப்பதை நோக்கினர் உருத்திரர்கள். உள்ளம் அச்சம் கொண்டு நுடங்கினர். காக்க என்று அடியில் வீழ்ந்து, கண்ட இவ்வுருவம் தன்னை நீக்குக, போற்றி, என்று வணங்கி நின்றனர். ஐயனும் முறுவலித்து, முன்போல் இயல்பு வடிவம் கொண்டான். உங்களது ஐயம் அது நீங்கிடக் கண்டீர். ஆதலின் நீங்கள் மெய்யுணர் இன்பம் அடையும் பேறு பெற்றீர். இனி நீங்கள் உங்களுக்கு உரிய உலகத்திற்குச் சென்று ஆங்கிருந்து வாழ்ந்திடுக என்றான். கனிவோடு காளீசன் கூறியதைக் கேட்டு ஆனந்தம் அடைந்து உருத்திரர் போயி னர். பின் தனி முதலாக விளங்கும் காளீசன் தன் சிவலிங்கத்திற்குள் சார்ந்தான்.

இங்கு இவர் இவ்வாறாக, மூட்டைகளில் இருந்த அயிரைமீன்கள் எல்லாம் உருத்திரர்களாக மாறிய காரணத்தால், எம் கையில் இருந்த பொருளும் போனது, வாங்கிய அயிரைமீன்களும் போயின, இனி நான் எவ்வாறு என் நகருக்குச் செல்வேன் என்று மனம் தளர்ந்து புலம்பினான் அரவிந்தன்.

சித்தனாகி வந்த அருள்நிறை காளீசன், அரவிந்தனின் வாட்டத்தைக் கண்டு, நீ உள்ளம் வருந்தாதே, கடினமான சிறுகற்களை எடுத்து பல சுமைகளாக்கி உனது எருதின் மீது ஏற்றிக் கொண்டு சென்று, உனது வீட்டினில் அவிழ்த்துக் காண்பாய், வியப்புறு பொன்னாம் என்று கூறி மறைந்தான். ஈசன் இசைத்த அந்த அருள் மொழியை நம்பி, சிறிய கற்கள் அனைத்தையும் வாரி இறுக்கிக் கட்டி எருதில் ஏற்றிச் சென்றான். அவனது ஊரான மதுரை மாநகர் சேர்ந்து அவற்றை அவிழ்த்துப் பார்க்கும்போது அவை செம்பொன் கட்டிகளாய் இருக்கக் கண்டான். தன்னை நாடி வந்து அருள்வாக்குக் கூறிய சித்தசாமியின் திருவிளையாடலே இது என்று உணர்ந்து பேரின்ப வெள்ளத்துள் ஆழ்ந்தான் அரவிந்தன்.

சோதி வனத்தில் சித்தசாமியாக வந்து, தனக்கு மிகுந்த செல்வத்தை வழங்கிய தன்மையைக், கூடல் கோமான் **வீரசேன பாண்டியனிடம்** கூறித் தனிப்பெரும் உவகையோடு சைவ நன்னெறி மேற்கொண்டான் அரவிந்தன். நித்தமும் பரமனைப் பணிந்து, தனக்குக் கிடைத்த பொருளை எல்லாம் காளீசன் மேல் அன்பு பூண்டு, பூதி சாதன நெறி மேற்கொண்டவர்களின் உள்ளம் பூரிக்கத் தரும தானங்கள் ஆற்றிப் பக்தியிலிருந்து வழுவாது வாழ்ந்தான் அரவிந்தன்.

## *(15) வீரசேன பாண்டியப் படலம்*

மாரவேள் ஆன மன்மதன் உருவத்தை ஒத்த உருத்திரர் அம்பிகையின் சாபத்தால் அயிரை மீன்களாகிக் கானப்பேரில் சாபவிமோசனம் பெற்ற கதையைக் கேட்டோம். அருளாளனாகிய வலிமைமிகந்த தோள்களையுடைய **வீரசேனன்** கதையைக் கூறிடக் கேளுங்கள்.

இந்த உலகம் எல்லாவற்றையும் ஈன்ற அங்கயற்கண்ணி அரசாளுவது கூடல் அணி திகழும் மதுரை மாநகரம். இந்நகரைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டை சைவநெறி நின்று காத்துவந்தான் வீரசேனன் என்ற பாண்டிய மன்னன். அவனுக்கோ தாரம் ஆயிரம். ஆனால் அவர்கள் யார்க்கும் குழந்தையில்லை. இதனால் வருத்தம் மிகுந்து உழன்றான். நூல்களில் சொல்லப்பட்டுள்ளவாறு கழுவாய் பல செய்து, அன்னதானம் கன்னிகாதானம் முதலான பல தானங்களையும் செய்தான். தினமும் சோமசுந்தரக் கடவுளையும், சக்தி அங்கயற்கண் அம்மையும் தாழ்ந்து போற்றி, குழந்தை இல்லாத துயரத்தில் மூழ்கிப் பக்தியால் பலவும் செய்தான் வீரசேனன்.

காளையார்கோயில் தல புராணம் (கதைச் சுருக்கம்)

தானமும் தவமும் செய்தும் , தருமங்கள் பலவும் செய்தும் , மனைவியர் ஆயிரம்பேர் இருந்தும், தனக்கு ஒரு குழந்தை இல்லையே , இது என்ன கொடுமை என்று எண்ணித் தவயோகிகளைக் கண்டு வரம் பெற நினைந்தான் . மதுரைக்கு அருகே பசுமலையில் தவம் செய்து கொண்டிருந்த **காலக்கியன்** என்னும் முனிவனைத் தனது மனைவி **சோபனாங்கி** தன்னொடும் சென்று கண்டு வணங்கினான் . மூன்று காலமும் உணர்ந்தவர் என்று தங்களைப் புகழ்கின்றனர் . அது கேட்டு உங்களிடம் வந்தோம் . எங்களுக்கு ஒரு மகவு தோன்றாத பழவினை யாது ? கழுவாய் ஒன்று கூறி எங்களைக் காத்தருள வேண்டும் என வேண்டினர். அது கேட்ட மாமுனிவனும், சற்றே தியானம் செய்து, நடந்தனவற்றை உணர்ந்து கூறினான் . மன்னனே, நீ ஓர் காலத்தில் உனது சேனைகளுடன் வேட்டையாடும் போது தவயோகி **கபிலமாமுனிவன்** காலில் அம்பு எய்துவிட்டாய். இதனால் அந்த முனிவன் தாங்க முடியாத் துயரம் அடைந்து , உனக்கு ஆயிரம் இல்லாள் இருந்தாலும் குழந்தை இல்லாமல் போகும் என்று சாபம் உரைத்தார் . ஆகையால்தான் உனக்குக் குழந்தை இல்லை என்று கூறினார் . மன்னன் அம்மொழி கேட்டு உள்ளம் வருந்தி, நாங்கள் குழந்தைப் பாக்கியம் பெற்றிட உபாயம் ஒன்று கூறுங்கள் என வேண்டினான். கபிலமுனிவரின் சாபத்திற்கு விமோசனம் கிடையாது , எனவே நீ, சிற்ப இலக்கணப்படிப் பொன்னால் ஒரு குழந்தை செய்து அதனை அன்பினால் உவந்து உனது குழந்தையாகப் பாவிப்பாயாக என்றான்.

மனைவியும் தானும் கூடல் வளநகர் எய்திச் சிற்பிகளை அழைத்துத் தங்கத்தினால் தனையனை வார்ப்பித்து தன்னுயிர் என நோக்குற்றான் . உடல் உயிர் போல நீங்காது உடனுறும் மகன் கண்டு இன்பக்கடலிடை மூழ்கி வேந்தன் களிப்புற்று இருந்தான்.

அவ்வாறு மன் னன் மகிழ்ந்திருந்த நாட்களில், பெருஞ் செல்வந்தனாகிய **அரவிந்தன்** என்ற வாணிபன் வந்து மன்னனைக் கண்டான் . வாணிபம் செய்ய வேண்டித் தான் கிழக்குக் கடற்கரைக்குச் சென்றதையும் , அயிரைமீன்கள் வாங்கி வரும் வழியில் கானப்பேரில் தங்கியதையும், அங்கே காளீசன் திருவருளால் அயிரைமீன்கள் எல்லாம் உருத்திரர்களாய் மாறி மறைந்ததையும் , தான் எடுத்துவந்து கற்கள் எல்லாம் தங்கக் கட்டிகளாகக் கண்டதையும் மன்னனிடம் கூறினான் . காய்ந்த மீன்கள் கணங்கள் ஆகவும், கல்திரள் தங்கமாகவும் மாற்றிய வள்ளல் காளீசனது திருவருளை நினைத்தால் என் கையில் உள்ள பொன்னால் செய்யப்பெற்ற இந்தப் பாவையும் எனக்குப் புத்திரனாக மாற்றித் திருவருள் செய்வார் என்று நினைந்தான் . தன் உயிர்ச் சோபனாங்கி தன்னொடும் , தானும் தன்கையில் உள்ள பொன்மகவினோடும் , சில பரிவாரத்தோடும் நன்மதுரை நீங்கி சோதிவனம் என்ற கானப்பேர் வந்துசேர்ந்து உள்ளம் மகிழ்ச்சி பூத்தான்.

உலர்ந்த மீன்களை உருத்திர கணங்கள் ஆக்கிய காரணத்தினால் உருத்திர தீர்த்தம் என்ற பெயர் பெற்றது. காளீசரின் சிவந்து அலர்ந்த சடையில் நித்தமும் நீராட்டப்படுவதால் சிவகங்கைத் தீர்த்தம் என்ற பெயர் பெற்றது . இதில் தீர்த்தம் ஆடினாலும் பரிசிக்கினும் நினையினும், அன்பில் நாடினும், கொடும் பாவங்கள் நசித்திடச் செய்யும் . தேடிச் சென்று இத் தீர்த்தத்தில் மூழ்கும் சிந்தையர் ஆகி , ஓடி மூன்று அடி எடுத்து வைத்தாலே பாவங்கள் ஒழிந்திடும். இவ்வளவு பெருமை பெற்ற உ ருத்திரதீர்த்தத்தைக் கண்டான் . அதில் தீர்த்தமாட ஆவல் கொண்டான். பக்தியினால் அதில் விதிப்படித் தீர்த்தமாடினான் . பின்பு தன் கையிலிருந்த தங்கப்பதுமையை அந்தத் தீர்த்தத்தில் நீராட்டினான் . இருமுறை தொட்டு பற்றி மும்முறை ஆட்டலும் ஆடகப் பதுமை , “கொற்றவா கரம் விடுக , நீ விடுக“ எனக் கூறிடக் கேட்டு , மகிழ்ந்து பெற்ற சூல் உணர்வில் பிரியம் உற்று எடுத்தான் பாண்டிய மன்னன். நான்கு வயது பருவத்தில் அழகிய மகனை அருமை உற்று , அதன் உச்சி மோந்து மார்பில் அணைத்துக் கொண்டான் மன்னன்.

திருவும் சிந்தையில் நினைத்த னவற்றை எல்லாம் சிறந்து வழங்கிடும் இத்தீர்த்தத்திற்கு இணையானது இவ்வுலகில் இல்லை என வியந்து , தன் மனைவி

சோபனாங்கியின் கரத்தில் தான் பெற்ற மகனைக் கொடுத்தான் . அவளும், மனம் உவந்து தன் மார்பில் மகனை அ ணைத்தாள். காதலால், தனம் இரண்டிலும் பால் பெருகிட த் தன் மகனைத் தழுவி ஊட்டினாள். எனது அரும் பொருளே என வாழ்த்தி உள்ளம் மகிழ்ந்தாள் . தன் மகனுக்குச் **சொர்ணபுத்திரன்** என்று பெயர் சூட்டி, இன்னும் அற்புதங்கள் பல இருக்கும் என்று எண்ணிய மன்னன், அச் சிவகங்கைத் தீர்த்தத்தை ஆராய்ந்தான் . **பரிமளம்** ஆகிய **மந்தாரம்** என்ற மலரைக் கண்டான். அந்த மலரை மன்னன் தன் கையில் எடுத்துச் செல்லும் போது "முனிவர்கள் பூசித்திடும் இரண்டு சிவலிங்கங்கள் அருகே உள்ளன" என்று ஒரு குரல் கேட்டது. அதுகேட்ட வீரசேனபாண்டிய மன்னவன், அங்கே இரண்டு சிவலிங்கங்கள் இருப்பதையும், அருகே ஒருபக்கத்தில் மனோன்மணியோடு சொர்ணவல்லியையும் இருப்பதைக் கண்டு மனம் களிப்பொடு நோக்கினன் வியந்தான்.

*"இகத்தில் அன்பருக்கு அறம் முதல் ஈபவ சரணம்*
*அகப் பெருந் துயர் மாற்றிய வானவ சரணம்*
*அகத்தின் வாக்கினான் அளவிடற்கு அரியவ சரணம்*
*சகத்தின் ஐந் தொழிலுக்கு இறைவ காளீச்சுர சரணம்"*

என்று அருட் கடலாய எம்பெருமானைப் போற்றி வழிபட்டான் . அப்போது, எம்பெருமானும், வானில் அசரீரியாய்த் தோன்றி "நின் துதியை நன்று கொண்டு , நாளும் இத் துதி புகல்வார்க்கு ஒன்றும் **உள்ளம் உற்றன அனைத்தும் அருள்வம்**" என்று உரைத்தான். மேலும் இத்தலம் உத்தம தலத்தினுள் பெரி யது, இது தக்கன கயிலை ஆகும். இத் தலத்து அன்பர் தம் பண்பு உள்ளவாறு உணர்ந்து அருள்வோம் . ஆதலால் இங்கு அரியதோர் ஆலயம் கட்டுவாயாக என்று சிவபெருமான் பாண்டியமன்னனிடம் கூறினார்.

காளீசரின் சொற்களைக் காதுகளில் கேட்ட மன்னவன், மிகவும் களிப்பு அடைந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான். பல சிற்ப நூல் வல்லுநர்களையும் விரைவில் அழைத்து, விமானங்கள், மணிமண்டபம், ஆயிரங்கால் மண்டபம், நாகம் ஊடுலாம் பல கோபுரம் செம்பொன்னால் கட்டி எழுப்பி, சுற்றுமதில் அகழி அதன் புறந்துடவை, மற்றும் நூல் முறை வழாது திருப்பணிகள் யாவும் நடைபெறும்படியாக ஆலயத்தைக் குறைவில்லாமல் கட்டிமுடித்தான். அடர்ந்த காட்டினை யோசனை தூரத்திற்கு அழித்துப் படரும் வீதிகளை அமைத்தான். பற்பல குலத்தவர்களுக்கான தெருக்களையும் அமைத்தான். கடைகளும் கழகங்களோடு அன்ன சத்திரங்கள் உடைய நல்லதொரு நகராக ஆக்கினான் . ஆதிசைவர்கள், ஆகமபண்டிதர், வேதவித்தகர் இவர்களை யெல்லாம் வருமாறு அழைப்பித்து, அவர்களுக்கு உரியன பொருள் முதல் உதவிசெய்து , நித்திய பூசனை வழுவாது நடைபெறச் செய்தான்.

இன்னும் எங்கள் காளீசனோடு அரிய சோமேசன் சொர்ணவல்லி நற்சுந்தராம்பிகை இவர் தமக்கு **விடை மதியின் விசாக நாள்** அதிலும் **தை மதிப் பூசநாள்** தன்னிலும் தொடங்கி திருவிழாக்களை இயற்றிப் பின்னும் பல சிறப்பும் வழுவிலாது நிகழ் ந்திடத் தேவையான அனைத்தையும் மனம் உவந்து புரிந்தான் வீரசேனப் பாண்டிய மன்னன்.

மதுரை சோமசுந்தரனையும் அங்கயற்கண்ணிதனையும் நாள் தொறும் அங்கு போய்ச் சென்று தொழும் விரதம் மேற்கொண்டிருந்தான் மன்னவன் . ஒருநாள் மாலைப் பொழுதில் மழையில் நனைந்து மெய் வருந்தி , "எங்கள் நாயக போற்றி" என்று அடியில் வீழ்ந்து எழுந்தான். அர்த்த யாமமும் தொழுதனன் துதித்தனன். அப்போது அங்கு "பக்தியால் உயர் பஞ்சவ நம் பதம் மறவா நித்தியம் தொழும் விரதத்தால் நின்னை ஒப்பார் இல்லை, நீ வருந்தாதே, ஒன்று நாம் நிகழ்த்துவம், இது கேள், காளிபுரத்தில் காளீச்சுரர் ஆலயத்தில், அங்கயற்கண்ணியும் நாமும் வந்து உறைவோம், இன்று தொட்டு நீ இங்கு வந்து எய்த்துறு வருத்தம் ஒன்றுறாத வண்ணம் நம்மைப் பணிந்திடுக" என்று அசரீரியாக மதுரை சோமசுந்தரேசன் உரைத்தான். இது கேட்டு உவந்து, அன்று இரவு விடியும் முன் காளிபுரத்தினை அடைந்தான். அங்கே தனிவிடைச் சுவடு இருத்தலை நோக்கி , அன்பொடு

வியந்தான். அங்குள்ள மறையோர்க்கு, சுந்தரன் அருளிய இத் திருவிளையாட்டினை எடுத்துக் கூறினான் . அதை அன்போடு கேட்டவர்கள் களிப்பில் ஆழ்ந்தனர் . காளையார்கோயிலில் காளீசற்கும் சொர்ணவல்லிக்கும் நடுவே சுந்தரலிங்கமும் வனப்புமின்னும் அங்கயற் கண்ணியும் விளங்குமாறு ஆலயம் கட்டினர் . மற்றும் ஆலயங்கள் பலவற்றையும் உயரக் கட்டி மகிழ்ந்தான் வீரசேன பாண்டிய மன்னன்.

தினமும் பூசனை புரிதரப் புரிந்து மனம் மெய் வாக்கினால் பக்தியுடன் வணங்கித் துதித்து, நனவினும் கனவினும் மறவாது நம்பெருமானை நினைந்து இருந்தனன் உயர் தென்னவர் தலைவன் . இவ்வாறாகச் சோதிவனம் என்றும் கானப்பேர் என்றும் அழைக்கப்பெற்ற காளையார்கோயிலில் இருந்து பல்லாண்டு அரசாண்டு, அவனது மகனான சொர்ணபுத்திரனுக்கு அரசு உரிமையைச் சூட்டி, மின்னிலங்கு காளீச்சுரனின் கருணையினால் தன்னிகரில்லாது உயர்ந்து விளங்கும் கயிலை வான் பதத்தினை வீரசேனபாண்டிய மன்னன் சார்ந்தான்.

## *(16) வரகுண பாண்டியப் படலம்*

காளீசற்கு அடிமை செய்த வீரசேனனின் சிறப்பு மிக்க கதையைக் கூறினோம் . காமனை ஒத்த அழகுடைய **வரகுண பாண்டியன்** காளீசரின் திருவருள் பெற்ற கதையை இப்போது பேசுவோம்.

வீரசேனபாண்டியனின் மகனான சொர்ணபுத்திரன் நித்தமும் காளீசனார் அடிமலர் தொழுவோன், இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிர்களையும் தன் உயிர்போல் பாவித்து நூல்விதி முறைவழுவாது, ஆறில் ஒருபங்கு அரசர்க்கு என்று வரி வசூல் செய்து , அன்பொடு குடிமக்கள் உவப்புற ஆட்சி செய்து வந்தான் . உமையம்மையை ஓர்பாகமாகக் கொண்ட சிவபெருமானின் ஆலயத்திற்கு அவன் தினமும் சென்று வணங்கி குறைவில்லாமல் உள்ளம் மகிழ் ச்சியடைந்து மற்றோரையும் மகிழ்ச்சியுடன் வாழ வைத்து ச், சத்தியம் தவறாமல் தர்மநெறியில் நின்று , பக்திமிகுந்த அந்தணர்களுக்கு நேயமுட ன் வேண்டியனவற்றைச் செய்துகொடுத் து, தருமம், நீதி, நேர்மை, சுத்தபுத்தி மிக்கவனாக அரசாட்சி செய்து வந்தான் . அவன் காமனை ஒத்த அழகுடையவன் . உத்தம குணங்கள் ஒன்று சேர்ந்தவன் . கருணைமிகுந்த காளீசனார் திருவருள் வளத்தால் சொர்ணபுத்திரன் வரகுணன் என்ற பெயர் பெற்றான்.

கன்னி நாட்டை வரகுணன் இவ்வாறு ஆட்சிசெய்து வரும் காலத்தில் , **பொன்நகர்** துறைவனாம் **வீரசோழன்** என்ற பெயருடைய மன்னவன் நாடுகளை எல்லாம் வெற்றி கொள்ளும் படைத்திறம் படைத்தவன் . அவன் **ஆனைக்கா** என்னும் நகர் சார்ந்து மனம் உவந்து **அகிலாண்டநாயகி**யை வாழ்த்தித் தனது வலிமையை எதிர்க்க வல்லோர் யாரும் இல்லை என்று இருந்தான் . மன்னர் யாரையும் வென்று அவர்களுடைய செல்வங்கள் எல்லாவற்றையும் கவர்ந்து , எதிர்த்த மன்னர்களைச் சிறையிலிட்டு அவனி முழுதும் தன்னுடையதாக ஆக்கினான் வீரசோழன்.

வரகுணபாண்டியனையும் வெல்வேன் என்றுகூறி மதுரையைச் சூழ்ந்தான் . அங்கிருந்து புறப்பட்டு நால்வகைச் சேனையும் சூழ்ந்திட க் காளிபுரத்திற்கு இரண்டு

யோசனை தூரத்தில் உள்ள நகரைச் சேர்ந்தான் . இவ்வாறு சோழன் அங்கு வந்து தங்கிய காரணத்தினால் அந்த நகர்க்கு **சோழபுரம்** என்ற பெயர் வழங்கிற்று. அங்குள்ள மறையவர், பாரதி தீர்த்தத்து மேன்மையையும் சிவலிங்கத்தின் மேன்மை யையும் சோழனுக்கு எடுத்துரைத்தனர். அவற்றைக் கேட்ட சோழன், அந்நகரின் புறத்தே உள்ள பாரதி தீர்த்தம் சென்று தீர்த்தமாடி , பூக்கொண்டு சிவலிங்கப் பூசை செய்து அன்பொடு கை தொழுது வணங்கினான். அப்போது, வரம் மிகுந்த காளீச்சுரன் அருள் பெற்று விளங்கும் தரம் மிகுந்த வரகுணபாண்டியனிடம், திரம் மிகுந்த நமது படையெல்லாம் வெல்லுமோ ? அல்லது தோற்குமோ? எனக் கலக்கம் உற்றனன். இதை உணர்ந்தனர் சோழனின் அமைச்சர், கை தொழுது , நிலத்து மன்னவர் யாவரும் நின்னடி பணிய , வலிமை மிகுந்த வேல் கொண்டு போர் புரியும் திறன் மிகுந்த மன்னவன் நீ , வேங்கை ச**லசலக்கும்** ஓசை கேட்டு அஞ்சுமோ, என்ன இது சலித் துக்கொள்கிறாய், கடல்போன்ற சேனைகளை எல்லாம் கடல்விளையாட்டு எனக் கடந்தாய் இச்சிறுகுளம்படி கடந்திடல் உனக்கு அரிதோ , தடுக்க முடியாத அளவிற்குப் பெரிய சேனையும் நாங்களும் இருக்கிறோம் என்று கூறினர்.

இந்த வாசகம் கேட்டலும் வளவர்கோனாகிய சோழன், வரகுணனோடு போருக்கு எழுந்திடுங்கள் என்றான். வாண் மழு தோமர் அநாந்தகம் சூலம் எனவாம் பல ஆயுத பாணியர் எழுந்தார். எழுந்த வீரர்கள் பரி யானை தேர் ஏறி உழுந்து இடுதற்கு இடம் இன்றி எங்கணும் நிறைந்தனர் . கொழுந்து விட்டு எழுகின்ற சீற்றத்தில் வளவர்கோன் தனது கால்களில் எல்லா மன்னர்களும் தொழும் வீரக்கழல்களை மாட்டிக் கொண்டு தேர்மிசை ஏறினன். இமிர்ந்து அங்கு கடுங்கொடிய நால்வகைச் சேனையும் சூழ் ந்து வந்தன. ஆங்கு நடும் வெற்றிக்கொடி மேல் கருடன் பறந்துவந்து கவ்வியது. கொடிக்கம்பம் நடுவினில் முறிந்தது. குதிரைகள் கண்ணீர் பொழிந்தன . இவ்வாறான தீய நிமித்தங்கள் எதிரில் தோன்றினாலும், சோழமன்னன் அவற்றைப் பொருட்படுத்தாமல் கானப்பேரூர்ப் புறம் சென்று சேர்ந்தான் . ஆங்கு கூர்மையான வாள்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோட்டை ஒன்றை உண்டாக்கினான். சேனைகள் சூழ, யாரும் புகுதற்கு அரியதாய் வானுற நிமிர்ந்த அந்த வாள்கோட்டையின் உள்ளிருந்தான்.

பேரொலி எழுப்பும் பேரிகையை அடித்தனர் . எட்டுத்திசையும் நடுங்க எங்கும் நிறைந்த பேரிகை ஒலிப்பதை வரகுணன் கேட்டனன். பெரிது யார் இது? என்ன என? என்று கேட்டான். அவனது ஒற்றர் போய் யாவையும் உணர்ந்து நேரில் வந்து வரகுணனிடம் கூறினர். அது கேட்ட மன்னன் நடுக்கம் உற்றான் . இங்கு அதற்கு என் செய்வோம் ? சோழன் அரசர் பலரையும் வெற்றிகண்டு அவனது படைபலத்தைப் பெருக்கிக் கொண்டுள்ளான். இவனது பெரிய சேனையை எவ்வாறு நாம் வெல்ல முடியும்? தேர்ப்படை முதலான படைகளும் வலிமைமிகுந்த சேனையும் இங்கு நம்மிடம் இல்லை . பொருளும் மிகுந்து இல்லை. குறைவான பூமியே உள்ளது. நமக்கு இங்கு அருள்மிகுந்த காளீசனை அன்றி பொருளும் ஏவலும் பூமியும் உள்ளதோ ? அருள்நிறை காளீசரிடம் இதனை முறையீடு செய்வோம் என்று எண்ணி ஆலயச் சந்நிதியை அடைந்தான்.

*"சரணம் என்னுயிர்க்கு உயிரென வாழ்பவ சரணம்*
*சரணம் எங்களை வழிவழி ஆள்பவ சரணம்*
*சரணம் வன்பகைக் கடற்கு உறு புணையனாய் சரணம்*
*சரணம் ஆரணம் போற்று காளீசவோ சரணம்"*

என்று காளீசரைச் சரணடைந்தான் . "காளீசா, ஒன்று கேள், விக்கிரமசோழன் என்பவன், மண் மன்னவர் யாரையும் எதிர்த்து வென்று , அவர்களது பொருட்களை எல்லாம் கவர்ந்து , மிகுந்த செருக்கில், இன்று நம் நகர்ப் புறத்தில் வந்து இருந்து, உள்ளம் வெகுண்டு, பாண்டிய நாட்டையும் வென்றிடப் படைகளைத் திரட்டித் தூண்டி , என்னொடும் போர் செயத் தொடங்கினன். அவனை வென்றிடும் வலிமை இப்போது என்னிடம் இல்லை . தானையும் என்னிடம் இல்லை. வேண்டியவர்க்கு வேண்டியன அருளும் அருள்வித்தகா, காளீசா, நான்

இப்போது என்ன செய்வேன்? தமியேன், நீயல்லால் கதி வேறு எனக்கு இல்லை . இந்தப் பாண்டிய நாடு உன்னதே . தாயனாய் என்னைக் காத்து அருள் புரிக" , எனத் தாழ்ந்து வேண்டினான்.

அந்த நேரத்தில், அருள்மிகுந்த காளீசனும் வானகம் நின்று , "ஆங்கு ஏய நின்பகை வெல்லுதும், போர் தொடங்கு" என்றான். விண்ணிலிருந்து அசரீரி கேட்டதும், வரகுணபாண்டியன் உள்ளம் மகிழ்ந்து , தன் துணைச் சேனைகள் சூழ்ந்திடச் சென்றான் . காளீசனும் காளியை அழைத்து , இன்று நம் வரகுணனொடு சோழன் வந்து எதிர்த்தான் , வளவனோ பார் எல்லாம் வென்றவன், முதிர்ந்த சேனையை உடையவன், கொடியவன், மொய்ம் புள்ளான் . ஆனால் நம்பால் அன்புமிகுந்தவன் வரகுணன் . எனவே, நீ வரகுணனுக்குத் துணை எனப் போய் , அதிர்ந்து, சூழ்ந்து, சோழனை வென்று, மீள்க என்றான்.

காளீசன் கூறியதை நம் காளி கேட்டாள் . வெய்ய பூதங்களை எல்லாம் அழைத்தாள். மெய்யராகி நம் வரகுணன் படையொடு நீங்களும் கலந்து சென்று, சோழனின் படையோடு போர் செய்யுங்கள் என்று ஏவினாள் . காளியும் மாயையால் பயங்கர வடிவொடு அங்கு தோன்றினாள். சோழனின் வாள்கோட்டையைக் கண்டு அதிசயித்தாள். மானவேல் வரகுணன் முகம் நோக்கி, நான் இந்த வாள் கோட்டையைத் தகர்ப்பேன், நீயும் நம் கணம் சூழ வந்திடுக எனக் கூறினாள் . காளி, விண்ணொடு மண்ணுலாய்ப் பயங்கர வடிவம் எடுத்து வாள்கோட்டையின் மீது தன் காலை மெல்ல வைத்து அதன் மீது உலாவினாள். விசையால் கோட்டை பொடிபட நொறுங்கிற்று. கோட்டை தூள்பட்டவுடன் கண்களில் கனல் கக்கிட கைகளை நீட்டி சேனைகளை முற்றிலும் ஓட்டித் துரத்தினாள்.

சோழனின் பெரிய சேனைகள் ஓடி ஒளிவதைக் கண்ட வரகுணபாண்டியன், தனது வில்லை எடுத்து சோழனை நோக்கி குணத்தொனி செய்து பல கணைகளை எய்தான் . சோழன் அவற்றைத் தடுத்தான். இவ்விருவரும் இவ்வாறாக இரண்டரை நாழிகை எதிர்த்துப் போரிட்டனர். பின்னர், வில் பூட்டு வெங்கணைகளால் , கை வில்லொடு வ ளவனை வீழ்த்தித், அவனது குதிரையையும் தடிந்தனன் வரகுண சூரன் . பாகனோடு குதிரையும் போனபின்னும் சோழன் மல்யுத்தம் செய்திடத் து ணிந்தான். இதுகண்டு சினம் கொண்ட பாண்டியன் நாகம் போல் சோழனது உடலைச் சுற்றி நசுக்கி அவனைச் சிறைப்பிடித்தான்.

அப்போது பேரிகை யும் சங்கமும் முழங்கின . பரவியிருந்த சேனையின் குதூகலிப்பு எங்கணும் ஆர்ப்பரித்துக் கேட்டது . சீர்த்த தீர்த்தனாய காளீசன் திருவருளால் வெம்பகை தீர்த்து வரகுணன் மீண்டான். விக்கிரம வளவனைச் சிறையிட்டனன். பாண்டியன் மகிழ்ந்து, காளீசனின் மலர்த் தாள் களைத் தன் முடிமேல் சேர்த்தான். அருளின் ஓங்கு காளீசன் அங்கு அரிய சோமேசன் , பெருமை மிகுந்த சொர்ணவல்லி, சுந்தராம்பிகை கருணைமிகுந்த சோமசுந்தரன் கயற்கண்ணி இவர்களுக்கு திருவிழாப் பல செய்து வாழ்ந்தான் வரகுணன்.

விக்கிரமன் என்ற பெயர்கொண்ட சோழனின் வாள்கோட்டைமேல் நடந்து அந்தக் கோட்டையைத் தகர்த்த காரணத்தால், அந்த நாள் முதலாக **"வாள் மேல் நடந்தாள்"** என்ற பேரொடு விளங்கி வருகின்றாள் காளி.

## *(17) சுகந்தகேசிப் படலம்*

அன்பு மிகுந்த வரகுண பாண்டியனின் அன்பு தொக்க வரும் கதையைச் சொன்னோம். துன்பம் துய்த்த **சுகந்தகேசி**க்கு நல்ல இன்பமான இயல்பு கொடுத்த கதையைத் தெரிவிப்போம்.

வரகுணபாண்டியனுடன் போரிடவந்து அவனிடம் தோற்று இருஞ்சிறை உற்ற விக்கிரமசோழன், தனது நிலையை நினைந்து வருந்தி வரகுணபாண்டியனிடம் ஒரு தூதுவனை அனுப்பினான். பாண்டிய மன்னனைத் தூதுவன் தாழ்ந்து நின்று , “சென்னியால் அனுப்பப்பட்டேன், சிறிது அவன் சொன்ன சொற்களைக் கேட்பாயாக” என வேண்டினான்.

தூதுவன் பாண்டிய மன்னனிடம், “அருள் மலி காளீசன் தன் அடிக் கமலங்கள் போற்றும் உன் உள்ளத்தினில் உனது புகழ் கயிலையை ஒக்கும் , செல்வம் நிறைந்த காளிபுரத்தின் வரலாற்றுக் கதைகளையும், சுருள் நிறைந்த கூந்தலோடு மதுரை சுந்தரேசுவரன் இங்கு வந்து அருளுவதையும், மதி வளர் குலத்துள் மிக்க வரகுணப் பெயர்க்குத் தக்க உனது பக்தியைக் கேட்டு வியந்தும் , அன்பு கொண்டு உன்னுடன் உறவு வைத்துக் கொள்ளவே சோழன் போர்புரிந்தான். மற்றபடி அவன் சதி செய்து உன்னுடன் போர் தொடுக்கவில்லை , மன்னனே நீ காண்பாய். வேலின் வலிமையால் வெற்றி கொண்ட மன்னவர் எல்லாம் நின் துணை அடி தொழுவாராக , பெற்ற என் செல்வம் யாவற்றையும் நீ பெறுவாயாக . உனது மாட்சிமையை உணர்ந்து மற்றும் ஒன்று சொல்வேன் கேள் . புத்திரகாமேட்டி யாகம் செய்து கிடைத்த வரத்தினால் சுகந்தகேசி என்ற எனது மகளைப் பெற்றேன் . அவள், கரும்பு வில் பிடித்த காமனது கண்கவர் வனப்பு மிக்காள் , குணம் நிறைந்த அவளை உனக்கு என நிச்சயித்தேன். அவளை, நீ விருப்பம் உற்று அன்பில் கொள்ள வேண்டும்” என்று சோழன் கேட்டான் என்று கூறினான்.

இவ்வாறு கூறிய தூதுவனை அனுப்பி வைத்துவிட்டுப் பாண்டியன் மனதுள் நினைந்து பார்த்தான். சோழனைச் சிறையிலிருந்து நீக்கிக் கொண்டு வாருங்கள் என்றான் . நன்று வந்த சோழனிடம் நான் உனது மகளிடம் நேசம் கொண்டேன் அவளைக் காண வேண்டும் என்று கேட்டான். அதுகேட்ட வளவர்கோன் மகிழ்ச்சியோடும் மகளை அழைத்து வரச் செய்தான். பேரழகியான அவளை அன்பொடு நோக்கி ப் பாண்டிய மாறன் உள்ளம் மகிழ்ந்து அதிசயித்தான். உமையம்மையைப் போன்ற இவளை நீயே திருமணம் செய்து கொண்டு கவினின் வாழ்க என்றான் சோழன் . இதைக் கேட்டு, விண்ணுலகம் வியப்புறும் வண்ணம் நகரம் எல்லாம் சிறப்பாக அலங் கரித்துத் தூரிய முழக்கம் செய்தார் . அன்று நல்லோரை ஓர்ந்து அங்கு அந்தணர் பல்லோர் சூழ்ந்தார் . மென் தளிர்ச் சுகந்தகேசியையும் அலங்கரித்தார். செந்தழல் முன் அமர்ந்து , சோழன் தனது மடியில் தனது மகளை வைத்து அவளது கரத்தைத் தென்னர் மன்னவன் வரகுணன் தன் மலர்க்கரம் சேர்த்து , அன்பில் தனது கையினால் நீர்வார்த்துக் கொடுத்தான் . உன்னிய உவகையோடு கன்னிகாதானத்தை பாண்டியன் ஏற்றுக் கொண்டான்.

மறையவர் ஆசி ஓத , மகளிர் மங்கலங்கள் பாட , நிறை ஒலி ஆடல் பாடல் நிகழ்ந்தன எங்கும். பின்னர் மணிகளாலும் கனகத்தாலும் மலர்களாலும் ஆய்ந்து நனி மணவறை புனைந்தார். மன்மதனை ஒத்த மன்னவனும் மணவறைக்குள் இந்திரன் போன்று வீற்றிருந்தான். தோழிகள் சுகந்தகேசியை அங்கே அனுப்பி வைத்தனர் . அங்கு வந்து தனியாக அமர்ந்த சுகந்தகேசியை மன்னவன் நோக்கி, நீ கலைமகளும் அல்ல, திருமகளும் அல்ல, நிலைமகளும் அல்ல, அரமகளும் அல்ல, தலைமகளும் அல்ல, உலகம் எல்லாம் ஈன்ற அந்த மலைமகள் இவளே , என்று மனத்தினுள் மதித்தான் . உன்னுடைய வடிவத்தையும் குணத்தையும் பார்த்தால் பெருமிதம் உற்ற தெய்வப்பெண் எனத் தோன்றுகின்றாய். **உனது கூந்தலில் இயற்கையாய் வாசனை உள்ள காரணத்தினாலேயே சுகந்தகேசி என்ற பேர் பெற்றாய்**.

எனவே, உனக்குக் கணவன் நான் அல்ல, எங்கள் காளீசன் தானே நல்ல மணமகன் ஆவன். நீ, அவனுடன் இன்புற்று வாழ்க , என்று கூறினான். அதுகேட்ட சுகந்தகேசி, வெட்கம் கொண்டு அன்பினால் தலை குனி ந்து, “இது என்ன பரிகாசம் , எளிய என்

உள்ளத்தைச் சோதிக்கின்றாயா? நீ கூறியது உனக்கு அடுக்குமோ ? உன்னை நாயகன் என்று எண்ணும் என்னை மற்றொருவர் பால் செல் என்பது நீதியோ ? என் மன்னா, வேறொருவர் தன்னை என் மனத்தினுள் நினையேன் என்றாள். இது கேட்ட பின்னரும் மன்னன், பேதைப் பெண்ணே, நீ என்மேல் வைத்த காதல் இனி விடுக . நம் காளீசனே உனக்குத் தலைவன் , என்று சொன்னான் . மன்னனே, எனது தந்தை அக்னி சாட்சியாக என்கரம் பிடித்து உன்னிடம்தான் என்னை ஒப்படைத்தான் , எனக்கு வேறு யாரும் கணவன் அல்ல" என்று கூறினாள். இது கேட்ட மன்னன் மனத்தினுள் நினைந்து , நாம் இருவரும் ஒன்றாகச் சென்று காளீசன் தாள் உவப்பொடு தரிசிப்போம் என்றான் . சுகந்தகேசியும் எழுந்து மன்னனுடன் கோயிலுக்குச் சென்றாள் . இவர்கள் கோயிலுக்குச் செல்லும் முன்பே கோயிலில் பூசை செய்வோர் அர்த்தசாம பூசைகளை முடித்து அவரவர் வீடுசென்று விட்டனர்.

பேசுவதற்கு இனி என்ன உள்ளது என்று சுகந்தகேசி மன்னனுடன் கோயில் வாயிலில் நின்றாள். வீரசேனபாண்டியனின் பொற்பாவைக்கு ஆருயிர் அளித்தது உண்மை என்றால், இக் க தவு திறக்க என்று வரகுணன் கூறினான் . அதுகேட்டு கதவும் திறக்க , இரண்டாம் வாயிலைச் சென்றடைந்தனர் இருவரும் . சேமமார் திருவருளால் சோழனை எதிர்த்து வெற்றி பெற்றது உண்மை என்றால் இக் கவாடம் திறக்க என்றான் . அதுகேட்டு அந்தக் கதவும் திறந்ததப்பா ! மன்னன் மூன்றாம் வாயிலுக்கு நடந்தான் . அன்பர் வேண்டியாங்கு அருள்வோய், அன்பால் கண்டு இப் பார் எல்லாம் நீ காத்திடல் உண்மை என்று கூறிட, மூன்றாம் வாயிற் கதவும் திறந்து வழி விட் டது. மன்னன் நான்காம் வாயில் சென்றடைந்தான். சுகந்தகேசியைப் பார்வதிதேவி என்று நான் மதித்தது இங்கு உண்மை என்றால் இக் கவாடம் திறக்க என்றான் . அதுகேட்டு, நான்காம் வாயில் கதவும் திறந்தது . ஐந்தாம் வாயிலை அடைந்த மன்னவன், சுகந்தகேசிக்கு நீயே சிறந்த கணவன் ஆவாய் என்று நான் கூறியது உண்மை என்றால் இக் கவாடம் திறக்கட்டும் என்றான் . அதுகேட்டு ஐந்தாம் வாயில் கதவும் திறந்தது. எங்கள் புண்ணியன் காளீசனைக் கண்டு மன்னன் வணங்கினான்.

தொழுது, காளீசன் தன்னைச் சுகந்தகேசியைக் கண்ணோக்கி , இவளுக்கு நீயே கணவன், இவளை அழைத்துக் கொள் என்று கூறி உடைவாளைக் கையில் எடுத்து உயிரை மாய்த்துக் கொள்ளத் துணிந்தான் . அப்போது காளீசர் தோன்றி முகத்தில் முறுவல் பூத்து , "மன்னனே, நீ அக்னி சாட்சியா க இவளைத் திருமணம் செய்த பின்னர் இவளை இங்கே எதற்காக என்னிடம் கொண்டுவந்தாய் ? நீயே கொண்டு செல்" என்றார் . அதற்கு மன்னவனும், நான் நின்னை உத்தேசித்தே இவளை மணம் செய்து கொண்டேன்.

*"மன்னன் கொடுப்பது எல்லாமும் நீயே*
*பெண்டு நற்பொருளும் உள்ள பெரும் புவி அனைத்தும் நீயே*
*பண்டு தந்தனை எல்லாம் காப்பவனும் நீ"*

ஆதலாலே இன்று இவளையும் ஏற்றுக் கொள், மறுத்தால், இங்கு எனது உயிரை மாய்ப்பேன் என்றுகூறி அவனது க ழுத்தில் கத்தியை வைத்தான் . இதுகண்ட நம்பெருமான் காளீசரும் தோன்றிச் சுகந்தகேசியை அன்போடு தன் திருக் கரங்கள் நீட்டித் தழுவி லிங்கத்துள் புகுந்தார். சுகந்தகேசி காளீசர் சிவலிங்கத்தில் கலந்தமை தோன்றும் படியாகச் சுகந்தகேசியின் **கால் சதங்கைக் குறியானது காளீசர் சிவலிங்கத்தின் வாமபாகத்தில் தோன்றித் தெரியும்** . கேசசுகந்தம் (சுகந்தகேசியின் கூந்தல் வாசனை ) எங்கும் சூழ்ந்து விளங்குவதால் , அவ் வனத்தை **சுகந்தவனம்** என உரைப்பர். சுகந்தகேசியைக் காளீசர் சிவலிங்கத்திற்குள் அழைத்துச் சென்றது கண்ட மன்னன் ஆனந்தக் கடலுள் மூழ்கி, எம் பெருமானை அன்போடு வாழ்த்திச் சத்திய நெறி மேற்கொண்டு தன் அரண்மனையை அடைந்து இருந்தான்.

எழில் மிகுந்த சுகந்தகேசியை மணம் புரிந்த வரகுணன் , அவளைக் கவுரியின் வடிவம் என்று உணர்ந்து கொண்டதையும் , வள்ளல் காளீசர் அவளைத் தனது இனம் என்று சிவலிங்கத்துள் அழைத்துக் கொண்டதையும் சொன்னோம்.

முன்னொரு காலத்தில் பெரும் தவத்து சனகராதி முனிவர் நால்வர் கயிலைக்குச் சென்று, எம் பெருமானின் பொற்றாள் வீழ்ந்து துதித்து எழுந்து நின்று, விமலா, எங்கள் இன் உயிரே, யோகத்தின் பண்பை எங்களுக்கு அருளிச் செய்ய வேண்டும் என வேண்டி நின்றனர். அன்னவனும் அஃது உணர் ந்து கூறினார். அது காலத்தில், எம் அன்னையும் சிவபெருமானைத் துதித்து , அருந்தவருக்கு அருள் புரிந்த யோக நூல் பண்புகளை இப்போது நானும் உணர்ந்திட உள்ளம் கொண்டேன் என்று கூறினாள் . இதுகேட்ட சிவபெருமான், யோகநூல் பண்புகளை நான் முனிவர்களுக்கு உணர்த்திய போது நீயும் என்னுடன் இருந்தாய், இருந்தும் அப்போது மதியாது , இப்போது வந்து அதை மீண்டும் கேட்கிறாய். ஆதலால், நீ, ஆதி மானிடப் பெண்ணாகக் கடவாய் எனச் சபித்தான் . இது கேட்ட உமையம்மை மிகவும் வருந்தி சிவபெருமானைத் துதித்துத் தனது இப்பிழையைப் பொறுத்து அருளுமாறு வேண்டினாள். எம்பிரானும் மகிழ்வுற்று, தக்கண காளிபுரம் என்று ஓர் ஊர் உள்ளது. அதில் நாம் அமர்ந்து இருப்போம். நீ போய்ச் சோழ தேசத்து அரசனது மகளாகத் தோன்றி பன்னிரண்டு ஆண்டில் என்னிடம் வருவாய், சேர்த்திடுவோம் என்றனன். சிவபெருமான் சொல்லிய வண்ணம் உமையாளும் , சோழன் செய்த புத்திர காமேட்டி யாகத்தில் தோன்றி அவனது புதல்வியாக வளர்ந்தாள். சென்னி குலதிலகம் எனத் தோன்றிய சிறுமியின் எழில் வளம் நோக்கி , அருளால் உலகம் எல்லாம் ஈன்றவளே இன்று எனக்குப் பெண்ணானாள் என்று உவப்பு அடைந்தான். அவளது கூந்தலில் இயற்கையாகவே மணம் இருப்பதைக் கண்டு, அவளுக்குச் சுகந்தகேசி எனப் பேர் வைத்தான் சோழமன்னன்.

பெண்ணரசி இவ்வாறு வளர்ந்து வரும் காலத்தில், அவளது எழிலும் குண நலனும் பெரிது நோக்கி, அரசர்கள் பலரும் ஆசைகொண்டு வளவனிடம் வந்து மணம் பேசினர் . வளவனும் தன் மகளைத் தன் மடிமேல் வைத்துக் கொண்டு , மகளே, உனக்குப் பிடித்த அரசரிளங்குமரர் யார் ? உனது எண்ணம் எவனிடம் உள்ளது , அவனுக்கே உன்னை அளிப்பேன் என்றான். அதுகேட்ட சுகந்தகேசியும் வெட்கம் கொண்டு, மன்னனே, உன்னை எவர் வெல்கின்றாரோ அவரே என்னைத் திருமணம் செய்யட்டும் என்று கூறினாள். மகளின் திருமண வார்த்தைகளையும் அவளது பருவக் குறிப்பையும் மன்னன் தன் மனத்துள் உணர்ந்து கொண்டான். அதனால், தான் எதிர் கொள்ளும் அரசர்களிடம் சமர் புரிந்து , அவர்களைத் தனது காலில் விழுந்து வணங்கச் செய்தான் . அதே சினத்தொடு பாண்டிநாட்டை வெல்லக் கருதி வரகுணனொடு போர் செய் யவும் வந்தான். காளீசனே வரகுணன் வடிவத்தில் வந்து சோழனை வென்றான். பாண்டியன் வென்ற காரணத்தினால், சோழன் தனது பன்னிரண்டு வயதான செல்வச் சிறுமி சுகந்தகேசியைப் பாண்டியனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான் . சுகந்தகேசி காளீசருக்கு உடையவள் என்பதை உணர்ந்த பாண்டியனும் அவளைச் சிவலிங்கத்துள் கலக்கச் செய்தான்.

## *(18) விக்கிரமசோழன் சிவலிங்கப் பிரதிட்டைப் படலம்*

விக்கிரமச் சோழனின் மகளாகத் தோன்றி காளீசர் சிவலிங்கத்துள் ஒளிந்த சுகந்தகேசியின் தூய கதையைச் சொன்னோம் . மகம் தழைத்த சோழன் தன் அன்பில் சிவலிங்கம் உகந்து பதித்துள்ள கதையை இப்போது கூறுவோம்.

குலக் கொடியான சுகந்தகேசியைத் தனிக் காளிபுரக் கடவுள் தன் மின்மலிந்த இலிங்கத்துள் விழுங்கினான் என்ற செய்தி கேட்டு , அதைக் கண்டிட வருவான் போன்று செங்கதிரோன் எழுந்தான். காலையில் நித்திய கருமம் கழித்து அமைச்சருடன் எழுந்து சீல

வரகுணன் அவையில் சேர்ந்து இருந்தான் . எழில் சுகந்தகேசிதனை எல்லா இடமும் தேடிக் காணவில்லை என்று கூறிடக் கேட்ட சோழன் அறிவு மிகக் கலங்குற்று , உடல் பதறி , இன்மொழியால், “வரகுண என் கன்னிதனை அரண்மனையில் கண்டிலம் என்று இசைக்கின்றார், அன்னவள் எங்கு உறைகின்றாள்” என்று கேட்டு அயர்வுற்றான்.

தவயோகிகளும் காண்பதற்கு அரிய காளீசனின் சிவக்குறியான சிவலிங்கத்துள் தன்மயமாய்ச் சுகந்தகேசி கலந்து அவனுடன் சுகித்து இருக்கின்றாள் எனவுரைத்தனர் . இதுகேட்டு வியப்பு அடைந்து சோழனும் பாண்டியனும் அவர்களது அமைச்சர்களோடும் குடும்பத்தினருடனும் ஆலயத்திற்குச் சென்றனர் . கோயில் வாரியரும் பூசகரும் காளீசப் பெருமான் முன் அடைந்தனர். திருக் காப்பு அகற்ற மன்னவரும் முன்சென்று அருள்மிகுந்த காளீசன் சிவலிங்கத்தில் திருவளரும் ஒரு பாகத்தினில் செழிய கங்கணமும் மருகினில் கிண்கிணிக் குறியும் புதிதாக அழகுடன் ஒளிர் தரக் கண்டு வியந்தனர் . வளவன் கண் பனிப்ப ஆனந்தம் கொண்டான். வரகுணனுக்கு எனது மகள் சுகந்தகேசியைப் பண்டைய விதிப்படி அக்னி சாட்சியாக அளித்திட்டேன் . இன்று அவளது கை வளையலும் , கிண்கிணியும் இச் சிவலிங்கத்தின் உள் உருவத்தில் விளங்குகின்றன . மிகவும் வியப்பாக உள்ளது. இவற்றைக் கண்டால் , “சிவபெருமானே பாண்டியனாக உள்ளான் என்பது நிச்சயம்” என்று எல்லோரும் கேட்கும்படியாகச் சோழன் வியந்து சொன்னான்.

அந்த நேரத்தில் சடைமுடியும் பூதி கண்டிகையும் உடலெங்கும் அணிந்த வயோதிக மறையோன் ஒருவன் வந்து , சந்நிதியில் பத்தியோடு காளீசன் பதம் பணிந்து , சோழனின் மகள் சுகந்தகேசியின் வளையல் மற்றும் சதங்கை இவற்றின் குறிகளைக் காளீசன் சிவலிங்கத்தில் இருப்பதை நோக்கி அகம் மகிழ்ந்தான் . ஆடுவான், அண்ணல் அருள் விளையாட்டை அன்பு ஊறப் பாடுவான் , அயன் மாலும் காண்ப தற்கு அரிய பாதமலர் சூடுவான், குதுகலித்தான். அந்த மறையோனைப் பாண்டியன் தொழுது , “ஏது? நீர் எதற்காக வந்தீர்? நீவிர் யார்?” கூறுங்கள் என்றான்.

நான் **காஞ்சி** நகரில் மறையோர் குலத்தில் தோன்றியவன் , எனது பெயர் **சிவகர்ப்பன்**. பூதி சாதன நெறியே கடைப்பிடித்தேன் . சிவ நிசியில் **ஏகாம்பரேச்சுர**னைச் சிந்தித்தேன். அவன் அருளினால் விண்ண கத்தில் அசரீரி கேட்டது . “பூமியில் யாம் இருக்கும் புண்ணியத் தலங்களில் , தவ மகிமை மிகு ந்தது மதுரைக்கு கிழக்கே உள்ள காளிபுரம் ஆகும். மக்களின் அன்பிற்குப் பாத்திரமான மன்னன் வரகுணன். அவனிடத்தில் தோற்ற வளவன் மகிழ்ந்து விருப்பமுடன் அவன் வளர்த்த சுகந்தகேசிதனைத் திருமணம் செய்து கொடுத்தான். சுகந்தகேசியைக் காளீசர் சிவலிங்கத்திற்குள் தோன்றும்படிச் சேர்த்தோம். அக் குறியை முழுமதி (பௌர்ணமி) நாளில் காண்பவருக்குக் சுகந்தகேசியின் கைவளையலும் கால்சதங்கையும் கண்கூடா கத் தோ ன்றும். அதைத் தக்க மனத்து அன்பினொடு தாழ்ந்து இதில் சாயுச்சியமும் அக்கணமே பெரும் புகழும் பெறுவார்கள் . ஆதலினால் நீ , முத்தி நலம் வேண்டினால் , காளிபுரம் சென்று ப க்தியொடு தரிசிப்பாய்“ என்றனன். அசரீரி வாக்குப் படி நான் இங்கு வந்து சித்தியுறக் கண்டேன் , என் சித்தம் மகிழ்ந்தது, எனக்கு முத்தி நிச்சயம் , ஐயம் இல்லை இதற்கு என்றான் அந்த முதியவன் . அப்போது காளீசர் சிவலிங்கத்தில் ஓர் ஒளியுண்டானது. மறையோன் அந்த ஒளியில் சேர்ந்து ஒளிந்தான். அங்கிருந்த பலரும் இதுகண்டு ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

விக்கிரமசோழ மன்னன், காளீசரை மனத்தில் நினைந்து கரம் கூப்பிக் கீழ்க்கண்டவாறு துதித்தான்.

*“அன்பர் தமக்கு அன்பாகி, ஆருயிருக்கு உயிராகி,*
*என்பு உருக ஆண்டு அருளும் எந்தாய் எம் காளீச,*
*நின் பெருகு கருணையினால், ஏயம் இல்லா எளியேற்கு*
*மன் பெரும் என் குலம் துலங்க வளர் மகப்பேறு அருளுகவே.*

*கோல மதி புனைந்து அருளும் குளிர் சடையும், மன்றுவரும்*
*ஆலம் உவந்து அணி மிடறும், அழகு தரும் காளீச,*
*சீல மிகு கருணையினால் சிறியேன் தன் குலம் விளங்க*
*ஞாலம் எல்லாம் பாலனம் செய் நன் மகப்பேறு அருளுகவே.*

*ஆரணமும் ஆகமமும் அரி அயனும் போற்று பரி*
*பூரணனே, அருள் வாரி பொருவும் எழில் காளீச,*
*பேரணவு தவத்தால் யான் பெறு சுகந்தகேசி கையும்*
*ஏரண நின் தனக்கு அளித்தேன், எழில் மகப்பேறு அருளுகவே“*

என்று உருகித் துதித்தான் . “இனி அஞ்சேல் , நான் வழங்கும் கனியை உனது துணைவியிடம் கொடுத்து உண்ணச் செய்க, நினக்கு ஒன்று தனிச் சந்ததி ஒன்று உண்டாம்“ என்று அசரீரி வானில் இருந்து ஒலித்தது. காளீசன் திருவருளால் ஒலித்த அந்த அசரீரியைக் கேட்டதும், அங்கே கனி ஒன்று இருக்கக் கண்டான் சோழன் . மகிழ்ந்து அதை எடுத்து தன்மனைவி கையில் அளித்தான் . வேண்டி அவள் உண்ணவும் கரு விளங்கி ஒரு புத்திரனை வாட்டம் இல்லாமல் பெற்றனள். விக்கிரமசோழனும் மகிழ்வுற்றான்.

விக்கிரமசோழன் நேர்ந்து கொண்டதற்கு அருள்செய்து , நிலம் விளங்கக் காளீசன் அவனுக்கு ஒரு குழந்தையை அருளிச் செய்தான் . தன்குலம் விளங்கப் பெற்றதனால் கோழியர் கோன் அன்பு நிறைந்து , தலம் விளங்கு **தாளவனம்** எனப்படும் **நாட்டரசன்கோட்டை** என்னும் நன் நகரில் மகிழ்வுடன் வீற்றிருந்து அருளும் **கண்ணுடையநாயகியின்** ஆலயத்திற்குத் தெற்கே , ஆகம நூல் விதிப்படியே ஓர் சிவலிங்கத்தைத் தன் பெயரால் நிறுவி குடமுழுக்கு செய்தான் . பூசை முறைகளைக் கண் குளிரக் கண்டு, சிரம் கை கூப்பி நின்று துதிசெய்து, பண் குளிரப் பல பாடிப் பணிந்து, விடை பெற்று, மனைவியொடும் புதல்வனொடும் பெரிது உவந்து மண்குளிரும் திருவானைக்கா நகரில் மகிழ்ந்திருந்தான்.

## *(19) புட்கரப் படலம்*

திருச்சிராப்பள்ளி அருகேயுள்ள திருவானைக்காவில் இருந்து ஆட்சி செய்தான் விக்கிரமசோழன். இவன் நாட்டரசன்கோட்டைக்குத் தெற்கே ஒரு சிவலிங்கத்தைத் தன் பெயரால் நிறுவி வழிபட்ட கதையை மேலே படித்தோம் . தீமைமிகுந்த செயல்களில் தேர்ச்சியுடைய **புட்கரன்** என்பவனின் பாவம் தோய்ந்த வரலாற்றை இப்போது எல்லோரும் அறியக் கூறுவோம்.

மூழ்குவோர் பாவங்களைப் போக்கும் புண்ணிய மாநதி **கோதாவிரி**. அதன் கரையில் புராணங்களில் போற்றப்படும் **கரவீரம்** என்னும் ஓர் நகரம் உள்ளது . அந்த மாநகரில் அந்தணர் குலத்தில் தோன்றிய ஒருவன், கொலை வஞ்சகம் பொய் நிறைந்தவன். நண்பரைச் சூழ்ந்து கெடுப்பவன். கள் உண்டு கொடும் பழி செய்பவன். புலைய மாதரைப் புணருவோன். பிறர் பொருளைக் கொள்ளை யடிப்பவன் . குலமாதரைக் கறுவி அவர் கற்பும் கெடுப்பவன். மாயம் முற்ற ‘பல்வாகடம்‘ என்ற வைத்தியநூல் கற்றவன். தீய பற்பல மருந்துகள் செய்பவன். நோயால் நுடங்கினர்க் கொல்லுவோன். வன் சொலால் வலியாரை மயக்குவன். இன் சொலால் எளியாரையும் ஏய்ப்பவன். இவ்வாறு புன்செயல் பல புரியும் புட்கரன் என்ற இவன், நல்லறம் மேவிய வித்தகன் போன்றும், நன்நெறி உடைய பரிசுத்தன் போன்றும் காட்டிக்கொண்டு , மோகம் கடைப் பிடித்து தீயவழிகளில் பொருள்களை ஈட்டி வாழ்ந்து வந்தான்.

**கம்ப மா நதி**யின் கரையில் உள்ள ஓர் ஊரில் மற்றொருவன் வாழ்ந்து வந்தான். இவன் மறைகளை விதிப்படி ஓதுபவன் . சட்கர்மம் என்று சொல்லப்படுகின்ற ஆறு கருமங்களையும் கடமையாக நினைந்து தவறாமல் செய்பவன் . வித்தகன். பெரியோர்கள் போற்றும் இவன் பெயர் **கன்மசீலன்.** இவனது மனையாள் **அஞ்சுபாடணி.** இவனும் இவனது மனைவியும் நெடும் தீர்த்த யாத்திரை செய்ய நினைந்து உத்தம தீர்த்தங்கள் பலவற்றில் தீர்த்த மாடிக் **கோதாவிரி** ஆற்றின் கரையிலுள்ள கரவீரம் நகரத்திற்கு வந்துசேர்ந்தார்கள். நகரின் நுழைவாயிலில் இருந்த புட்கரன் அந்தணனைக் கண்டு வணங்கினான். ஐயா உங்களுக்கு எந்த ஊர் ? என்று கேட்டான். ஊரையும் பேரையும் கன்மசீலன் கூறினான். அஞ்சுபாடணியின் ஆரமும் குழல் பந்தியும் கண்டு உள்ளத்திலே ஆசை கொண்டான். எவ்வாறேனும் இணக்கி இவளை என்சொந்தம் ஆக்கிக் கொள்வேன் என்று மனவுறுதி கொண்டான். கன்மசீலனை நோக்கி, ஐயா, இவ்வளவு நெடுந்தொலைவு எவ்வாறு நடந்து வந்தீர்கள் என்று பரிவுடன் கேட்டான். அது கேட்ட கன்மசீலனும் நாங்கள் மோட்சம் வேண்டிப் புனிதமான கங்கையில் மூழ்கி த் தீர்த்தமாட எண்ணி வந் தோம் என்றான். புட்கரனும், நான் இங்குள்ள தங்களைப் போன்ற பெரியோரைக் கண்டு அருங்கலைகளை ஓதவும் என்னுடைய பொருள் யாவற்றையும் எனது குருவிற்குக் கொடுக்கவும் எண்ணியிருந்தேன், நல் வினையால் உங்களைச் சந்தித்தேன், எனது பொருள் யாவும் உங்களுடையதே, எனப் பலவாறு உபசாரம் செய்து புட்கரன் அவனது இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்.

கன்மசீலனும் அவனது மனைவியும் தீய புட்கரனது வஞ்சகம் அறியாமல் அன்பின் மிகுதியால் அவனைத் தங்களது புதல்வன் போல் பாவித்தனர் . நேசம் மிகுந்து, ஆய நூல்கள் அனைத்தையும் அந்தணன் புட்கரனுக்கு ஓதினான். மகநட்சத்திரத்தில் திங்களும் (சந்திரனும்) வியாழனும்(குருவும்) சேர்ந்திருக்கும் கும்பமேளா வந்தது. அன்றைய தினம் கங்கையில் மூழ்கி மீண்டும் இங்குவருவேன் . எனது மனையாள் தளர்ந்து விட்டாள் . எனவே இவளுக்கு நல்ல மருந்து ஒன்றைக் கொடு எனக்கூறி க் கன்மசீலன் தனது மனைவியை புட்கரனி டத்தே ஒப்படைத்துவிட்டு கங்கைக்குச் சென்றான் . வேதியன் சென்றபின்னர், அவனது மனைவிக்கு நல்லதொரு மருந்து கொடுக்கிறேன் என்று புட்கரன் சொல்லி மயக்கமருந்தைக் கொடுத்து அவளைப் புணர்ந்தனன். மஞ்சுபாடணி பின் மயக்கம் தெளிந்து வெருவி உள்ளம் வெகுண்டு , அட பாவி நீ குருவின் மனைவியைக் கூடுதல் நன்றோ, என்னருகே நிற்காதே, கெடுவாய் என க் கத்தினாள். மஞ்சுபாடணி, உனது சொல்லை நான் மறுக்கவில்லை , பாவத்திற்கு அஞ்சுதல், குருவினை மதித்தல் என்று அறநூல்கள் கூறுவன எல்லாம் வஞ்சமே, அவை சுகம் தராது. கலைகள் யாவற்றையும் பிழைப்பிற்காக உண்டாக்கினர். மலையில் வாழ்ந்திடும் மாதவரை ஆராய்ந்து பார்த்தால் , தொலைவு இல்லாத சுகத்தினை அல்லது இவ்வுலகில் வேறு ஒன்று உணர்ந்தவர் யார் ? தருணைப் பருவம் உடையவள் நீ, வேதியனோ மெய் தளர்ந்தவன், பருவ வயதில் உள்ள எனது பண்பும் நீ உணர்ந்த வள், இருவரும் கலந்து இன் புறுதலே இனிக் கருமம் என்று உணர், கண்மணியே என்றான் புட்கரன். மாய வஞ்சகன் சொன்னதை எல்லாம் கேட்டு மஞ்சுபாடணியும் அவனுக்கு இணங்கினாள். ஆய அன்பின் இருவரும் ஒன்றியே உடல் இன்பக் கடலிடை மூழ்கினார்.

இவ்வாறு புட்கரனும் மஞ்சுபாடணியும் இருந்துவரும் நாளில் , கன்மசீலனும் கங்கையாடித் திரும்பி வந்து சேர்ந்தான் . புட்கரனது வஞ்சகம் யாவையும் நினைந்து மனதுக்குள் உண்மையை உணர்ந்து கொண்டான். கொடிய புட்கரனும் தனது மனைவியும் மது அருந்தி சிற்றின்பம் கொண்டு மயங்கிக் கிடப்பதைக் கண்டான் . கன்மசீலன் கண்டுவிட்டதை அவர்களும் கண்டனர் , அவனைக் கொலை செய்தனர் . இருவரையும் பாதகம் பற்றியது. உள்ளம் வருந்தினர். அறிவு இழந்தனர். அச்சம் உற்றனர். இனி ஆவது ஒன்றுமில்லை என வருந்தினர். ஊரும் இழந்தனர். மறவர் வாழும் காடுகளுள் ஓடிப் பற்பல நாடுகளையும் கடந்தனர். முன் ஊழ்வினை காரணமாக அன்னை காளி அருள்பெற்ற

காளிபுரத்தை அடைந்தனர். சீர் மிகுந்த உருத்திர தீர்த்தத்தில் தங்களது தாபம் தொலைந்திட மூழ்கினர். புண்ணியப் புனல் ஆடிய காரணத்தினால் அவர்களது தீவினை யாவும் தீர்ந்தன.

உமையும் பாகனும் ஒத்தனர் . விண்ணிடை அமைய, தேவர்கள் அலர் மழை தூவினர். இவ்வாறாக இவர்களுக்கு இங்கு ஆளுடை நாயகன் தண் அருள் மேவி ட இனிது வாழ்ந்தனர். ஆதலால் சிவகங்கையில் நீராடுவோர் பாதகங்களைப் போக்கிடுவர் என்பது திண்ணம். ஆயினும் இதைவிட ஏற்றம் மிகுந்தது ஒன்று உள்ளது, அதைக் கேட்போம்.

## *(20) பேய்கள் சாபம் நீக்கிய படலம்*

கொலைகள் பல செய்த புட்கரனது பாவங்கள் தீர்ந்த கதையைப் படித்தோம். பல பாதகங்கள் செய்து பேய்களாக மாறியோர் பெற்ற சாபத்தை மாற்றி அவர்களும் முத்தியடைந்த கதையைப் படிப்போம்.

நறுமலர் மரங்கள் நிறைந்த காடுமலைகளில் உற்பத்தியாகி வ ளைந்து நெளிந்து செல்லும் **நிருமதா நதி** யின் கரையில் உள்ளது **மாகிண்மதி** என்ற நகரம். அந்நகரில் புண்ணியம் போற்றும் **தருமபந்து** என்ற மறையோன் வாழ்ந்து வந்தான் . அவன் வேத நூல்களின் பொருள் எல்லாம் ஆராய்ந்தவன் . தனக்கு உரிய கடமைகளில் இருந்து சிறிதும் பிசகாமல் வாழ்ந்து வந்தான் . அவனது மனைவி **தருமசீலை.** இவர்களுக்கு ஒரு மகன் . அவனுக்கு உபநயனாதிய சடங் குகளை உறவினர்கள் மகிழும்படியாக நடத்தி முதுமறைகளைச் சொல்லிக் கொடுத்தான் . தருமபந்துக்கு இவன் ஒருவனே புத்திரன் ஆகையால், அதிகமான அன்பினால் இடைவிடாது அவன்மீது பாசம் கொண்டு வாழ்ந்து வந்தான். ஆனால் அவனது மகனோ , வஞ்சகக் கொடும் கள்வர்கள் நேயத்தின் மயங்கி வேசியரின் மையலில் விழுந்தான் . கள்ளுண்ணுதல் களவு பொய் இவைகளில் தேர்ச்சி பெற்றிடத் துவங்கினான். இவை அறிந்த அந்தணனும் உள்ளத்துள்ளே வெதும்பினான்.

மகனை அழைத்துப் பலவாறு இன்சொற்களால் நல்வழிப்படுத்தினான் . மேலும் முதியவர் பலரிடமும் கூறித் தன்மகன் தீயவழி செல்லாமல் தடுத்துப் பார்த்தான் . ஆனால் அவை எதையும் அவன் மகன் கேட்கவில்லை . சில நாட்களில் அந்த ஊர் மக்கள் அவனது தீச்செயல்களைக் கண்டித்து அவனை ஊருக்குள் வரவிடாமல் விரட்டிவிட்டனர் . அவன் வேசி ஒருத்தியின் துணிமுதலான பொருட்களைக் களவாடும் போது பொதுமக்கள் அவனைப் பிடித்து அடித்தனர் . அங்கிருந்து தப்பித்து ஒரு சேரியில் சென்று ஒளிந்து திரிந்தான். இறைச்சியும் மதுவையும் உண்டு , ஒரு புலைச்சியின் தனம் தழுவினான் . இது கண்ட புலையர் அவனை அடித்துத் தீயில் போட்டனர் . அவனது உடல்கருகி அழி ந்தது. அவன் பேயுருக் கொண்டு தீராத தாபம் அடைந்து வனங்களில் வெருண்டு திரிந்தான் . அந்த அடர்ந்த காட்டில், தான் செய்த தீய செயல்கள் பலவற்றின் பலனாகப் பேயுருவம் பெற்றுப் பேய்கள் பலவற்றுடன் சேர்ந்து பல துன்பங்களை அனுபவித்து வருவதை நினைந்து அழுது புலம்பிக் கண்ணீர் விட்டுக் கதறினான்.

அந் நேரத்தில் காளீசரைக் கண்டு தரிசிப்பதற்காக மாதவம் செய்த **கவுதமமுனி** அவ்வழியாகச் சென்றான் . அவன் பேய்களின் துயரம் எல்லாம் கண்டு , நீங்கள் ஏன் இவ்வாறு வருந்துகின்றீர்கள் ? எனக் கேட்டான் . அதற்கு அந்தப் பேய்களும் , ஐயா, கேளுங்கள் எனக் கூறித் தங்களது வாழ்க்கைக் கதையைக் கூறத்துவங்கின.

**மாகிண்மதி** என்ற அருமையான நகரில் வாழ்ந்த நல்லதொரு வேதியனுக்கு மகனாகத் தோன்றி, ஓர் புலைச்சி மெய்யுறப் புணர்ந்து இன்புற் றேன். அதனால் இகழ்ச்சி அடைந்து, அருவருப்புடைய பேய் ஆனேன், உய்யும் வழி அறியாமல் தவிக்கிறேன் என்று ஒரு பேய் கூறியது. பழமையான **பாஞ்சால** தேசத்தின் அரசர்குலத்தில் வந்தனன் **துன்மதன்** என்பது எனது பெயர் . நல்ல தவமுடைய அந்தணர் பொருட்களை எல்லாம் கவர்ந்தேன் ,

நசித்தேன், பேய் ஆயினேன் என்றது ஒன்று . **கலிங்கதேய**த்தில் **தோடசிகாமணி** என்ற பெயருடைய வைசியன் மகன் எனத் தோன்றினேன் . மறையோர் நலம் தரும் பொருள் வஞ்சித்துக் கவர்ந்து உடல் நலிந்து, பேய் ஆயினேன் என்றது ஒன்று . மற்றிரண்டு பேய் மா **மலையாள** நாட்டில், சூத்திர சகோதரியோடும், மறையோர்கள் பெற்ற பெண்ணோடும் புணர்ந்தேன். புலி அடித்து இறந்தேன், பேய் ஆனேன் என்றது ஒன்று. இனம் திரிந்தேன், எனக்காக நீ ஏன் அழுகிறாய்? என்று கேட்டது மற்றொருபேய்.

இவ்வாறு பேய்களின் இரக்கமான வார்த்தைகளைக் கேட்ட கௌதமன் கருணை மிகுந்து நீவிர் அஞ்சற்க, உங்களைப் பேயாக மாற்றிய சாபங்களை நீக்கிடலாம் என்னுடன் வாருங்கள் எனக் கூறினான். அவனைப் பின் தொடர்ந்து பேய்கள் சென்றன . கவுதமனும் முன்சென்று, நிலவு அணிந்து அருள் நிறைந்த சிவபெருமானின் திருவருளை நினைந்து கொண்டே **சுகந்தவனம்** என்ற காளையார்கோயிலை அடைந்தான்.

பொலிவு மிகுந்த உருத்திர தீர்த்தத்தைக் கண்டு மகிழ்ந்தான். வினைப் பலன்களைத் துடைத்து எரிப்பதும், நெருப்புப் போன்ற துன்பங்களை நீர் ஊற்றி அ ணைப்பதுபோல் நீக்கிவிடும் தன்மை உடையதுமான இந்த உ ருத்திரதீர்த்தத்தில் யார் ஒருவர் மூழ்கினாலும் அவர்கள் திருக்கயிலையை அடைவர் . இங்கு **மார்கழி**த் திங்கள் **ஆதிரை**யின் **பூரணை(பௌர்ணமி)**யில் கங்கை முதலான நதிகளும் மூழ்கித் தங்களது பாவங்களைப் போக்கிக் கொள்கின்றன. ஆகையால் அத்திதியில் இத்தீர்த்தம் ஆடுநர் கயிலை வான்பதம் சேர்தல் நிச்சயம். அன்போடு தீர்த்தமாடி இதன் கரையினில் அமர்ந்து , தெற்குதிசை நோக்கி முன்னோர்களை நினைந்து எள் தர்ப்பணம் செய்தால் முன்னோர்களுக்கு மோட்சம் கிடைக்கும். இதில் நீராடி எங்கள் காளீசனை வாழ்த்தி , ஆதிமறையவர்க்கு அன்னம் அளித்தால், வையமும் வானமும் பணிந்திட மகிழ்ந்து கயிலையைச் சார்ந்து இனிது இருப்பர்.

இத் தீர்த்தத்தை மனதில் நினைத்தாலும் நிறைந்த செல்வமும் , நன் மக்களும், நீண்ட ஆயுளும் கிடைத்திடும் என்றால், இதன் பெருமையை யாரால் சொல்ல இயலும் . இவ்வளவு சிறப்பு மிகுந்த இத்தீர் த்தத்தில் நீராடுவது நான் செய்த தவத்தின் பயனே என்று கவுதமமுனிவர் போற்றிப் புகழ்ந்தார் . இவற்றை எல்லாம் அங்குள்ள மறையவர் நன்கு கேட்டு உள்ளம் மகிழ்ந்தனர். அன்று மார்கழி மாதம் பூரணை (பௌர்ணமி) நாள், முனிவன் தீர்த்தமாடித் தூய காளீசனைத் துதித்தான்.

பின்னர் அ ந்த தீர்த்தக் கரையில் அமர்ந்திருந்த பேய்களின் மீது ம் புண்ணிய நீரினை வாரி இறைத்தான் . அதனால் அவைகளின் பேய் உருவம் அகன்று, அவை பொன்மயமான விமானத்தில் ஏறி அரிய வான் கயிலை யை அடைந்தன. தவம் மிகுந்தோரும், மறையவர்களும், எல்லோரும் புண்ணிய தீர்த்தத்தைப் புகழ்ந்து போற்றினர். இந்த உலகில் இத் தீர்த்தத்திற்கு இணையான தீர்த்தம் இல்லை என்று வியந்து, தாழ்ந்து மிகுந்த அன்பொடும் காளீசரை வணங்கினர்.

## *(21) கங்கை பாபந்தீர்த்த படலம்*

காளையார்கோயிலில் உள்ள உருத்திர தீர்த்தத்தைக் கவுதம முனிவன் எடுத்து ஐந்து பேய்களின் மீதும் தெளித்த தனால், அப்பேய்களின் பேயுருவம் நீங்கப் பெற்று அவை திருக்கயிலாயம் சென்றடைந்த கதை படித்தோம். முங்கி மூழ்கியோர் பாவங்களை எல்லாம் போக்குவது கங்கை . இப்புனித கங்கையின் பாவம் நீங்கிய கதையை இப்போது படிப்போம்.

ஐராவதத்தின் சாபத்தை நீக்கிய சிவகங்கைத் தீர்த்தத்தில் மறையவர் தீர்த்தம் ஆடினர். அங்கிருந்த கௌதமர் முன்பு வந்து "அருந்தவ ம் உடையவனே" என்று புகழ்ந்து அவரது திருவடியைத் தாழ்ந்தனர். பேய்கள் மீது உருத்திர தீர்த்த நீரை வாரி இறைத்து அவைகள் வான்செல்லும்படிச் செய்தீர்கள். இவர்கள் எந்த ஊர்? இவர்களுக்கு இத் துயரம் வந்தது எவ்வாறு? என்று கேட்டனர். அது கேட்ட கௌதமனும், **சேதுக்கரை**யில் தை மாதத்தில் இப்பேய்களின் துயரைக் கண்டேன். அந்த ஆணவப் பேய்கள் செய்த பாவங்களை எனது நா வால் எப்படிக் கூறுவேன். அவைகள் உருத்திர தீர்த்தத்தின் மகிமையால் பேயுருவம் நீங்கிக் கயிலையைச் சேர்ந்தன என்று கவுதமமுனிவன் கூறினான்.

அதுகேட்ட மாமறையோரும் மகிழ்ந்து, இன்று **ருத்திர சீர்த்தம்**. இந்த நாளுக்கு இப் பெயர் எவ்வாறு வந்தது? அந்த வரலாற்றைக் கூறிடுங்கள் என்று வேண்டினர்.

அந்தணர்களது விரு ப்பம் கேட்ட முனிவரும் அக்காரணத்தைக் கூறலானான். சிவகங்கைத் தீர்த்தத்தினாலும் உருத்திர தீர்த்தத்தினாலும் காளீசனாருக்கு நீராட்டல் நடைபெறுகிறது. ஈசானியத்தில் உள்ள உத்தரதீர்த்தத்தில் இருந்த மீன்களை எல்லாம் காளீசர் உருத்திரர் ஆக்கினார். இத் தீர்த்த மீன்கள் உருத்திரர் ஆன காரணத்தினால் இத் தீர்த்தத்திற்கு **உருத்திரதீர்த்தம்** என்ற காரணப் பெயர் உண்டானது. எந்த தீர்த்தத்தில் தீர்த்தமாடினாலும் உருத்திரதீர்த்தத்தை நினைந்து தீர்த்தமாடினால் நற்பலன்களைப் பெறுவர். இத் தீர்த்தத்தில் மூழ்கியோர் எழுந்து மூன்றடி வைக்கும்போதே அவர்களது கொடுமையான தீவினைகள் நீங்கிவிடும். இந்தத் தீர்த்தத்தில் **திங்கள்கிழமைகளில்** நீராடினால் அறுபத்தாறுகோடித் தீர்த்தங்களிலும் நீராடிய பலனை அடைவர்.

கங்கை முதலான நதிகள் எல்லாம் தங்களிடம் நீராடுவோரின் பாவங்களைப் போக்குகின்றன. பூமியில் உள்ள மானிடர் பலரும் ப க்தியினால் எங்களிடம் வந்து நீராடுவதால் அழுக்குகள் சேர்ந்து நதிகள் மாசு அடைகின்றன. இதனைப் போக்கிக் கொள்ளவேண்டி இந்நதிகள் யாவும் சிவபெருமானை வேண்டின. சிவபெருமானும் மனம் மகிழ்ந்து, மதுரைக்குக் கிழக்கே உள்ள காளையார்கோயிலில் உ ருத்திரதீர்த்தம் உள்ளது, நீங்கள் அனைவரும், **"வின்மதி ஆதிரை உற்ற பூரணை நன்னாளில்"** அன்பொடு அ ந்தத் தீர்த்தத்தில் மூழ்குங்கள். உங்களது வினைகள் தீர்ந்து வெள்ளை மெய்யினர் ஆகுவீர்கள் என்று அருளிச் செய்தார்.

சிவபெருமான் கூறிய இந்த உபாயத்தைக் கேட்டதும் நதிகள் எல்லாம் சிவபெருமான் திருவடிகளை வணங்கி விடைபெற்று காளையார்கோயிலை அடைந்து திருவாதிரைப் பூரணை (பௌர்ணமி) நாளன்று அன்போடு உ ருத்திரதீர்த்தத்தில் நீராடிப் பாவங்களைப் போக்கிக் கொண்டன. காளையார்கோயில் உருத்திர கங்கையின் பெருமையைப் போற்றி எல்லா நதிகளும் அவரவர் தேசங்களைச் சென்றடைந்தன. எனவே வருடந்தோறும் திருவாதிரைத் திருநாள் அன்று இந்த உருத்திர தீர்த்தத்தில் நீராடினால் பாவங்கள் நீங்கி உயர்வு அடைவர்.

இவ்வாறு கவுதம முனிவரும் உ ருத்திரதீர்த்தத்தின் பெருமைகளைக் கூறினா ர். இவை கேட்ட அந்தணர் அனைவரும் சந்ததம் துதி செய்தனர்.

## *(22) கவுதமப் படலம்*

வானிலிருந்து பூமிக்கு வந்து இறங்கிய கங்கைநதி க்கு ஏற்பட்ட அகந்தையை நீங்கிய கதையைப் படித்தோம். இப்போது காட்டினில் தவம் மேற்கொண்ட **கவுதமன்** ஞானம் பெற்ற நல்லதொரு கதையைப் படிப்போம்.

புண்ணிய தவத்துக் கவுதம முனிவன், பெருமைகள் மிகுந்த உருத்திர தீர்த்தப் புண்ணிய மகிமை அனைத்தையும் புகன்று போற்றி நித்தியக் கடன் முடித்து, எழில் **சிவகாமி** தன்னொடும் **கனகசபேசன்** காளை வாகனத்தின் மேல் வீதி உலாவரும் காட்சியை மகிழ்வுறக் கண்டு துதித்தான். எங்கள் காளீச வள்ளல் தன் விமானமும் போற்றிக் கோயிலின் உள்ளே புகுந்து, மும்முறை வலம் வந்து , ஐந்து முறை தொழுது எழுந்து , எட்டு சுலோகத்தில் துதித்தான். அப்போது எம் கண்ணுதல் பெருமான் கருணையில் தோன்றி நின்றான் . இருகண்ணீர் ஆரத் தழுதழுத்து அரற்றும் அருந்தவ முனிவனை நோக்கிச் சிவபெருமான், "மகிழ்ந்தனம், உனக்கு வேண்டிய எல்லாம் பெறுக" என்றான். "காளீச, சச்சிதாநந்த பூரண, நின்னருள், அதனால் மீண்டும் பிறவா நிலை பெற்றிட எளிய வழியை அருளிச் செய்ய வேண்டும்" என்று கவுதமன் வேண்டி நின்றான்.

அரிக்கும் அயனுக்கும் அரியதான எனது உருவம் , அடியார்கள் அன்பினால் வணங்குதற்கு எளிதாய்த் தல ந்தோறும் இலிங்கப் படிவத்தின் வாயிலாக நின்று அருள்கின்றேன். பேரறிவுடையோர் என்னைச் சுவசொரூபத்தினில் காண்பார். திருவாரூர், ஆனைக்கா, அருணை, தில்லை, காளத்தி, காசி போன்ற தலங்களில் சுவாதிட்டானம், நாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் இம்முறை அறிந்து, என்னைத் தலங்கள் தோறும் தரிசித்துத் தாண்டினால், கயிலையில் கண்ணுறலாம். கயிலை கடந்திடில் **ஆலவாய்**, சோதிமாவனம் இதில் எக்காலமும் பூரணசோ தி வடிவாய் உறைவேன். பிரளயம் ஏற்பட்டாலும் இங்கு நான் குலைவுறாது இருப்பேன் என்று அறிவாய்.

மாத்தும தத்துவமாய், பிரம தத்துவமாய், சுத்த நித்தனுமாய், காரணனாகிப் பூரண புராணனாய், அணுவாய், மகத்தாய், வான் பொருளாய், மண் நீர் தீ காற்று விண் என்ற ஐந்து பூதங்களாய், இரவி மதி என்று எண்ணற்ற உருவங்களாகிச் சராசரம் அனைத்திலும் நானே உள்ளேன். இதை உணர்பவரே வினைகள் அகன்று கண்ணுறும் என்னுள் கலப்பவர் ஆவார். இவ்வாறு இங்கு என்னை உணர்வோன் பேரின்ப முத்தனாம் என்று அருளிச் செய்தார்.

சிவபெருமான் கவுதமனை நோக்கி, "பல முநிவர் தவம் செய்ய வேண்டி, உன் ஒருவனுக்காகப் பலநாள் காத்து இருப்பதனால், நீ, முன்னிய தீர்த்தமாம் **தனுக்கோடி** மூழ்கி வந்து என்னை வழிபடு, மிகவும் நல்லதொரு வரம் இங்கு அளிப்பேன்" என்று அருளிச் செய்தார். திங்கள் கிழமைகளில் (சோமவாரத்தில்) அன்பொடு சுத்தராய் என்னைப் பக்தியில் துதிப்போர்க்கு எண்ணிய எல்லாம் பரிவொடும் அளித்திடுவேன். பின் முத்தியும் அளிப்பேன் என்று காளீசன் அருளிச் செய்து மூலலிங்கத்தினுள் சேர்ந்தான்.

மனம் மகிழ்ந்த கவுதம முனிவன் சிலநாள் செல்லப் பின் **தனுக்கோடி** தீர்த்தமாடி, **ராமலிங்கத்தைப் பருவதவர்த் தினியை வழிபட்டு**, **சேதுக்கரை சேர்ந்து சேதுமாதவனை** வழிபட்டு உத்தரகோசமங்கை சென்று **மங்களேச்சுரன்** சந்நிதி முன் நின்று வழிபட்டான். அப்போது மெய்யெல்லாம் நீறு அணிந்த அந்தணன் ஒருவன் தோன்றினான். "முப்பிறப்பு ஒழிக்கில் தன்னிகர் முத்தி தருவேன் , இப்பிறவியிலேயே முத்தி வேண்டும் என்றால் , சோதிவனத்தினைச் சேர்க" என்று மங்களேச்சுரன் சந்நிதியில் அசரீரி கேட்டது. இதைக் கேட்ட முனிவனும் புளகம் அடைந்து உத்தரகோசமங்கையை விடுத்து சோதிவனத்தினை அடைந்து காளீசனை வணங்கி மகிழ்ந்தான்.

அங்கு உள்ள முனிவர் அனைவரும் குழுமி அருந்தவக் கவுதமனைக் கண்டு வணங்கினர். கவுதமனும் உத்தரகோசமங்கையில் நிகழ்ந்தனவற்றைக் கூறினான். அப்போது உத்தரகோசமங்கையில் பூதி கண்டிகையும் சடாமுடியுமாகக் காட்சியளித்த **சிவதத்தன்** என்னும் அதே அந்தணனும் அங்கு வந்து சேர்ந்தான். அங்கிருந்த அனைவரும் அவரை எதிர் கொண்டு பூசித்து அழைத்தனர் , அதிசயம் உற்றனர். சிவதத்தனும் கவுதமமுனிவர் உரைத்த வண்ணமே நிகழ்ந்ததை நிகழ்ந்தவாறு கூறினார் . இப்பிறவியிலேயே முத்தியடையும் வகையை ஒருவருக்கு ஒருவர் தெரிந்திடக் கூறி உள்ளம் களித்தனர். சந்ததம்

காளீசன் தனை நினைத்து வந்த மறையோனொடு கவுதம முனிவரும் மூல லிங்கத்து முளைத்த அருள் சோதியுள் கலந்தார்.

## *(23) வெள்ளையானை சாபந்தீர்த்த படலம்*

தீமைகள் அகன்று , பொய் தீர்ந்து , முத்தியடைந்த கோதமன் என்பவனது கதையைப் படித்தோம். இப்போது காளீசரை வணங்கித் தனது பாதகத்தைத் தீர்த்துக் கொண்ட வெள்ளையானையின் கதையைப் படிப்போம்.

தேவேந்திரன் தனது குருவைக் காணாமல் நான்கு தந்தங்களை உடைய ஐராவதம் என்ற வெள்ளையானையின் மீது ஏறிச் சென்று தேடினான். திருக்கைலாயத்தில் குருபகவான் இருக்கிறார் என்ற செய்தி அறிந்து அங்கு சென்று சிவபெருமானை வணங்கித் தனது ஆசானைத் தன்னோடு அழைத்து வந்தான் . அந்த வேளையில் வெள்ளையானையானது சிவபெருமானின் சந்நிதியில் நின்ற நந்தியைத் தனது துதிக்கையால் பற்றி , “நந்தி மூப்பு உற்றது என்ன?” என்று நகைத்து அசைத்தது. இதைக் கண்ட சிவபெருமான், இந்திரன் முதல் வானோர்கள் ஏவரும் காண , நீ, இரண்டு தந்தங்களை உடைய கருமையான யானையாகி ஆயிரம் வருடங்கள் திரிவாயாக என ஐராவதத்திற்குச் சாபம் கொடுத்தார் . தனது செய்கையால் சாபம் பெற்றதை நினைந்து நொந்து வருந்திய வெள்ளையானை சிவபெருமான் முன் வீழ்ந்து வணங்கிப் பலவாறு போற்றிச் சரண் அடைந்தது . அதற்குச் சிவபெருமானும், ஆலவாய் என்று அழைக்கப்படும் மதுரை நகர்க்கு கிழக்கே திருக்கானப்பேர் உள்ளது. அங்கே பிரளயத்திலும் அழியாத சோதிவனம் உள்ளது. அங்கே சீல மாமுனிவர் போற்றும் செழிப்பு உள்ளது . ஆங்குச் சென்று ஆயிரம் வருடம் சஞ்சரிப்பாயாக, பின்னர் அவ்வனத்தில் நாமே உன்னை மீட்டு அருள்வோம் என்று அருளிச் செய்தார்.

நான்கு தந்தங்களை உடைய வெள்ளையானை தான் செய்த தவறால் , இரண்டு தந்தங்களையுடைய கருமையான யானையாக மாறிப் பூமியில் வீழ்ந்தது. நிலை கலங்கியது. விந்தியமலையை அடைந்து, நிருமதா நதிக் கரையில் உள்ள காட்டிலே பலநாட்கள் நலிந்து மெலிந்து திரிந்து, “சய்ய“ மலையை அடைந்தது. அங்கு உள்ள பெண்யானைகள் நீட்டிய காமக் கரத்திற்குத் தலைப்படாது இரு ந்தது. சில யானைகள் பரிவோடு சூழ்ந்தன . சில இருளிலும் களிப்பு அடையாத விதியை எண்ணி வருந்தின . இவ்வாறான பல காடு மலைகளைக் கடந்து சோதிவனத்தை அடைந்தது அந்த யானை.

மானின் கன்று புலியின் மடியில் பால் உண்ணும் மகிமையையும், மலர்களில் தேன் ஊற்றெடுத்து ஓடுவதையும் , வண்டுகள் பாடுவதையும் , தேங்கனிகளை உண்டு கிளிகள் பேசுவதையும், மாந்தளிர்களை உண்டு கருங்குயில்கள் கூவுவதையும் , வானில் பறந்து சென்று உயரமான மலைமீது நின்று மயில் ஆடுவதையும் கண்ட யானை அதிசயத்து அடி மெல்ல எடுத்து வைத்துச் சென்றது . இறைவனது ஞானநோக்கால், இதுதான் சோதிவனம் என்பதை உணர்ந்து அங்கேயே தங்கியது. எம்பெருமான் சொல்லிய வண்ணம், இங்குதான் தனது சாபம் தீரும் என்பதை நினைந்து , கவலை நீங்கி சோமேசருக்கும் காளீசருக்கும் பூசைகள் செய்ய ஆரம்பித்தது.

அண்ணல் ஆலயத்திற்கு அக்னி (தென்கிழக்கு) திசையில் குளிர்ச்சி மிகுந்த சிவகங்கைத் தீர்த்தத்தைக் கண்டு அதில் நீராடி இறைவனை வழிபடும் வழக்கத்தைக் கொண்டது. யானையின் உள்ளத்தைச் சோதிக்க விரும்பிய இறைவன், தீர்த்தநீரை விரைவில் வற்றச் செய்தான் . தண்ணீர் இல்லாமை கருணையின் விளையாட்டு என்று எண்ணிய

யானை, தனது தந்தத்தினால் பூமியைக் குத்தி அங்கு இடித்துத் தள்ளியது . இதனால் பூமி பிளவுபட்டு பாதாளத்திலிருந்து தண்ணீர் பீரிட்டு வந்தது . விரைந்து அந்த நீரில் மூழ்கித் தொண்டர் தம் பெருமானைத் தொழுதலுக்கு எழுந்தது.

அப்போது, யானை தோண்டிய மடுவிலிருந்து தண்ணீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடத் துவங்கியது. அதில் பாம்புகளும் ஆமைகளும் மிதந்து வந்தன . நாங்கள்தான் இந்தப் பூவுலகைத் தாங்குகின்றோம் என்று அகந்தை கொண்ட காரணத்தினால் எங்களது வலிமையை இழந்து, இங்கு பாதாளத்தில் அடைபட்டுக்கிடந்தோம். நீலகண்ட மந்திரத்தை உச்சரித்ததன் பலனாக, இன்று உனது இந்தச் செயலால் நாங்கள் விடுதலை பெற்றோம் என அவை யானையைப் போற்றின.

யானையும் அதிகாலையில் இத்தீர்த்தத்தில் மூழ்கி , தனது துதிக்கையில் நீர் எடுத்துச் சென்று காளீசற்கும் சோமேசற்கும் நீராட்டி , வாசனை மலர் புனைந்து , சீர்மிகுந்த தனது வாயினால் வாத்திய ஒலி முழக்கி நின்று இறைவனைத் துதித்து வணங்கியது . கருணை கூர்ந்து சோமேசன் அருட்கண் நோக்கினான் . இதனால் சாபவிமோசனம் பெற்ற ஐராவதம் தனது வெண்நிறத்தையும் நான்கு தந்தங்களையும் பெற்று மிகவும் மகிழ்ந் தது. தனது தந்தத்தினால் தோண்டப் பெற்ற இத் தீர்த்தத்திற்குத் தனது பெயரால் **ஆனைமடு** என்ற பெயர் உண்டாக வேண்டுமென்று வேண்டியது. சோமேசனும் அவ்வாறே அருள் செய்தார். இதன் காரணமாக இத்தீர்த்தத்திற்கு ஆனைமடு என்றும் , பாதாளம் தன்னின் நின்று எழுந்த காரணத்தினால் **பாதாளகங்கை** என்றும் பெயர் உண்டானது.

மேலும், ஊழ் வினையினால் உண்டான அனைத்துப் பாவங்களையும் போக்கும் தீர்த்தம் இது , ஆகையால் இதற்கு நற் **சிவகங்கை** என்ற பெயர் உண்டானது . யானை வணங்கிய காரணத்தினால் இத் திருத்தலத்திற்கு **ஐராவதப்பேர் எழில் நகர்** என்ற பெயரும் உண்டானது.

## *(24) இந்திரன் சாபம் நீங்கு படலம்*

இந்திரனது வெள்ளையானையின் பாவம் முழுவதையும் நீக்கிய படலத்தைப் படித்தோம். இந்திரன் மீது கோபம் கொண்டு குரு சாபம் அளித்தார் . இந்திரனைப் பீடித்த அந்தச் சாபம் காளையார்கோயிலில் எவ்வாறு முழுவதுமாக நீங்கியது என்ற கதையை இப்போது படிப்போம்.

இந்திரன், முன்னொரு காலத்திலே , மிகுந்த வலிமையுடைய **சம்பன்** என்பவனையும் அவனைச் சார்ந்த அசுரர்களை எல்லாம் கொன்று , மலிந்த பேர் உவகை எய்தினான். பேரிகை முழங்க, தேவர் மலர் மாரி தூற்ற, மின்னல் போன்று அரம்பை ஆட, கந்தருவர் பாட, தும்புரு நாரதாரி சூழ்ந்து வாழ்த்து க்கள் கூறினர். இந்திரன், பாற்கடலின் மீதுள்ள பங்கயக் கண்ணன் போன்று , கிம்புரி அணிந்த நான்கு தந்தங்களை உடைய ஐராவதம் என்ற யானையின் மீது ஏறி , தேவர்களின் அரசனான தனது உயர்மணி பீடத்தில் அமர்ந்தான். போர்க் களத்தில் உதவி ஆற்றியோருக்கும் , புலவர் கந்தருவர் முதலானவர்களுக்கும் அவரவர்களுக்கு ஏற்ற இனிய சன்மானம் கொடுத்து, அங்கு ஈர்க்கும் நல் அன்பினோடும் எழுந்து சிவந்த இதழ்களையும் கார்குழலையும் உடைய இந்திராணி தன்னொடும் களிப்புற்றான்.

தனது இந்திரசபையை அடைந்து சிங்காதனத்தில் வீற்று இருந்து சூழ்ந்துள்ள அனைவரையும் பார்த்தான். ஆனால் கூடியிருந்தோரில் தனது குருவைக் காணாமல் தேடி , அவர் எங்குள்ளார் என்று வினவினான் . அவரை எங்கே காண்பேன் என்று நினைத்த போது, நாரதன் வந்துள்ளமை அறிந்து அவரை வணங்கினான் . முனிவரே, உங்களது வரவால் உய்ந்தேன் என்று நன் முகமன் கூறி , என்னையும் ஓர் பொருளா எண்ணி இங்கு வந்த காரணம் யாது? எனக் கேட்டான். அதற்கு நாரதரும், கயிலைப் பெம்மான் சந்நிதியில் நான் நிற்கும் போது , உனது அருள் குருவைக் கண்டேன் . அவர் முகம் துயரத்துடன் இருப்பதையும் கண்டேன் . உனது வெற்றியை நான் அவரிடம் கூறினேன் என்றான் . அதுகேட்ட இந்திரனும், நாரதனைத் தொழுது மாமுனிவரே , எங்களது குருவான பொன்னவன் தனக்கு நான் என்ன குற்றம் புரிந்தேன் ? என்மீது அவருக்குள்ள வருத்தம் தான் என்ன? அதை என்னிடம் கூறுங்கள் என்று வேண்டி அயர்ந்து நின்றான்.

குருவினது உபதேசம் பெற்றே , நீ உனது எதிரியான அரக்கனைக் கொன்றா ய். ஆனால் அவருக்கு வேண்டிய மதிப்பு மரியாதைகளை நீ செய்யவில்லை , எனவே அவரும் வருத்தம் கொண்டு இங்கிருந்து சென்றுள்ளார் என்றார் நா ரதர். குருவின் திருவருள் இருந்தால்தான் செல்வமும் புகழும் சேரும் , இல்லையேல் குலைந்திடும் செல்வம் எல்லாம் , ஆதலின் இப்போதே சென்று நாரியனாகிய சிவபெருமானைத் தஞ்சம் அடைவாயாக என்று நாரதன் இந்திரனுக்கு அறிவுரை கூறினான் . அதுகேட்ட இந்திரனும், வெள்ளி வெண்கயிலையை அடைந்து, நந்தி எம்பெருமானிடம் விடை பெற்று உள்ளே சென்றான் . அங்கே, கேசம் இல்லா முண்டிதர் , மிகப் பருத்த தொந்தியர், நெடியர், குள்ளர், தூலர், மெல்லியருமான பந்தியர், பூதி கண்டி பரித்துறை கணங்களைக் கண்டான் . எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் அவனது இந்திரலோகத்தில் உள்ளோரின் செல்வநிலையையும் கயிலாயத்தில் உள்ள பூதியர்களின் நிலையையும் ஒப்பீடு செய்து , செருக்குடன் சென்றான்.

“அன்னியம் இல்லை , எவ்வண்ணம் அரசன் அவ்வண்ணந்தானே துன்னுறும் உலகம்“ என்று எண்ணி இகழ்ந்து நினைந்து சென்று, கண்ணுதல் பெருமான் தன்னைக் கண்டு தாழ்ந்து நின்றான். அண்ணலும் அவனை நோக்கி , நீ உனது குருவையும் மதிக்கவில்லை எனது கணங்களையும் இகழ்ந்தாய் . ஆகையால், செருக்கடைந்துள்ள உனது திமிர் தீரும் வகையில் நீ காசி நகரில் மனிதனாகப் பிறப்பாய் எனச் சாபம் அளித்தார் . ‘குளிக்கப் போய்ச் சேறு பூசிக் கொண்டவன் போன்று‘ , இந்திரனும் கண்ணீர் மல்க , சிவபெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி,

*“கண்ணகன் ஞாலம் காக்கும் கருணையம் கடலே என்று*
*விண்ணிடை எழுந்த நீல விடம் உண்ட விமல உள்ளக்*
*கண்ணிடை அகலா அன்பில் கரையும்* ***மார்க்கண்டன்*** *காண*
*மண்ணிடைக் காலன் வீழ மாய்த்த நின் மலர்த்தாள் போற்றி“*

*“பொன்னணி நிறத்தினானும் போதகப் புத்தேள் தானும்*
*இன்னமும் அறிதற்கு எட்டா எந்தை நின்றனையே நம்பும்*
*என்னரும் பிழை பொறுத்து இங்கு இனிது அருள் புரிதல் வேண்டும்*
*நின்னலால் கதி மற்றில்லை நிரஞ்சன போற்றி போற்றி“*

எனப் பலவாறு போற்றித் துதித்தான் . அதற்குச் சிவபெருமானும் அருள் கண் நோக்கி , அவனியில் பாண்டி நாட்டில் **மருத்துவான்** என்ற பெயரில் அரசனாகி, நமது காளிபுரத்தினில் நம்மைப் போற்றி , கோபுரங்கள் மண்டபம் முதலானவற்றை உண்டாக்கி , திருவிழாப் பலவும் செய்து, பூசனைகள் ஒன்றும் வழுவாது நடத்தி, மறைக்குலம் முன் **நான்கு குலத்தவர்** தமையும் காத்து, நூறு ஆண்டுகள் வாழ்ந்த பின்னர் உனது இந்திரலோகத்தை அடைவாயாக என அருள் செய்தார்.

அவ்வண்ணமே, இந்திரனும் சீர் திகழும் பாண்டி நாட்டினில் மருத்துவான் என்ற பெயருடன் அரசனாகி அரசநீதி அறம் வழுவாமல் நாட்டை ஆண்டு வரும் போது , ஒருநாள், சோதிவனமாக இருந்த காளையார்கோயிலை அடைந்தான் . அப்போது, அவனுக்கு முன்பு நடந்தன எல்லாம் நினைவிற்கு வந்தன . உடனே அவன், அங்குள்ள தீர்த்தங்களில் மூழ்கிச் சோமேசன் காளீசன் தாள் வணங்கினான் . காடுகளை அழித்து காளீசன் முதலானோர்க்கு விமானம் கர்ப்பக் கிரக மண்டபங்கள் பல கோபுரங்கள் ஆகியனவற்றைக் கட்டினான் . வீதிகளை அமைத்தான் . மயன் தன்னால் சோமாக்கந்தர் முதலான உற்சவ மூர்த்திகளைச் செய்வித்தான் . காஞ்சிநகர் **ஆதிசைவரை** அழைத்து விதிப்படி உற்சவமூர்த்தியை நிறுவி ஆறுகாலமும் விளக்கு பூசை செய்வித்தான் . எட்டுத்திசைகளிலும் காளி வணங்கிய கோயில்களை அமைத்தான். மேலும் பலகோடி நிதிகள் வீசி நிசிமணிப் பணிகள் செய்தான் . கண்ணுதல் காளீசற்கும் கருதுறு சோமேசற்கும் **மேடம் ஓடு விடை வரும் மதியில்** விழாக்கள் பலவும் பரிவொடு நடத்தி , அளவில்லாத பணி வினை யாவும் செய்தான்.

ஆண்டு நூறு ஆனது. அங்கு ஒரு நாள் அதிகாலைப் பொழுதில், புண்ணிய நீராடி ஈசனை வணங்கிப் போற்றி பேரன்போடு புளகாங்கிதம் அடைந்து இறைவனிடம் வேண்டி நின்றான். அருள்நிறை காளீசனும் அவன்முன் தோன்றி , நின் துதி மகிழ்ந்து கொண்டோம் சாபமும் நீங்கிற்று, இப்போது உனக்கு வேண்டிய வரத்தை வேண்டிக்கொள் என்று கூறினார். அதற்குப் பாண்டிய அரசனாக அவதரிந்து இருந்த இந்திரனும் , "மிகுந்த வலிமை பொருந்திய வச்சிராயுதம் ஏந்தி இந்திரனாகி உனது திருவடியை என்றும் போற்றும் நினைவு உள்ளவனாக அருள்க" என்று வேண்டினான். "அவ்வாறே ஆகுக, ஒவ்வொரு வருடமும், **இடபத்தில் திங்கள் பூரணை** தன்னில் என்னை அமைவுறத் தொழுக," என்று அருளிச் செய்து காளீசரும் மூல லிங்கத்துள் சென்றார்.

ஆயிரம் கண்களை உடைய இந்திரனும் , மூன்று மதங்களையும் நான்கு தந்தங்களையும் உடைய ஐராவதத்தில் ஏறித் தேவர் செம்மலர் மாரி தூவ இந்திரலோகம் சேர்ந்து, மிகவும் பெருமிதத்துடன் ஐந்து விருட்சங்களின் நிழலின் கீழிருந்து அரசு செய்தான்.

## *(25) கண்ணுவப் படலம்*

சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலையங்கிரியில், **இந்திரன்** தான் செய்த பிழையால் சாபம் அடைந்த வரலாற்றையும் பின்னர் அவன் சோதிவனத்திற்கு வந்து இறைவனை வணங்கிச் சாபம் நீங்கிய வரலாற்றையும் கூறிய சூதகமுனிவர், அடுத்து **கண்ணுவ முனி**வரின் கதையைச் சௌநகாதி முனிவர்களுக்குச் சொல்லத் தொடங்கினார்.

இயற்கை வளம் நிறைந்த கன்னட தேசத்தில் '**மா வராக புரம்**' என்ற நகரில் அந்தணராகிய கண்ணுவ மாமுனிவர் வாழ்ந்து வந்தார். அவர் நியமப்படி ஆறுகாலமும் இறைவனை வழிபடுபவர். திருநீறு உருத்திராட்சம் அணிந்த மேனியர். நற்சிந்தைகளின் இருப்பிடமானவர். பல்கலையும் பயின்றவர். அவர் செய்த நற்கருமங்களின் பயனாக அவருக்கு மகன் பிறந்தான். மகனுக்குச் '**சுசரிதன்**' என்ற பெயரிட்டு வேதமுதல் ஏனைய நூல்களையும் கற்பித்து வளர்த்தார். மகனும் தந்தை வழி நின்றனன். உரிய பருவம் வந்ததும் மகனுக்கு மணம் முடித்து இல்லறத்திலே இருத்தி கண்ணுவ முனிவர் தேசாந்திரம் புறப்பட்டார். வழியில் வைதீக சமயக் கொள்கைகளோடு அவைதீக சமயக் கொள்கைகளையும் பின்பற்றும் **பாசண்டர்** என்ற சமயப் பிரிவினரைக் கண்டார். அவர்கள் வழிநின்று அவர்கள் கொள்கையைச் சார்ந்து ஒழுகினார். பண்டைய நிலை மறந்து பாசண்டர்களுடன் சேர்ந்து நற்குணங்கெட்ட காரணத்தால் பிணியில் பீடிக்கப்பட்டு வருந்தினார். பல விதமான மருந்துகள் உண்டும், பிணி அவரை விட்டு நீங்கவில்லை.

"வேதமெய் நெறியை நீங்கி பொய்யர்களாகிய தீயவர்களைச் சேர்ந்து பாவியேன் பாதகம் பல செய்து விட்டேனே", இப் பிணியால் என் இறுதிக்காலம் வந்துற்றது. இனி நான் பிழையேன். இறுதி வருவதற்கு முன் என் மகனிடம் செல்ல வேண்டும். தீய நரகம் கிடைக்கினும் நான் செய்த தீவினைக்கு கழுவாய் செய்ய வேண்டும் என்று எண்ணி மகனிடம் சென்றடைந்தார். மகனிடம், "நீ **சேது சமுத்திர**த்திற்குச் சென்று என்னை நினைத்து என் பாவம் தொலைய வேண்டும் என்று மனத்திலே நினைத்து நீராடி வணங்கி வருவாயாக" என்றார். மைந்தனும் தந்தையை வணங்கி, நாடும் நகரும் நீங்கிச் சேதுக்கரை நோக்கிச் சென்றான்.

போகும் வழியில் சோதிவனத்தை அடைந்தான். அத்தலத்தின் மேன்மையையும் கீர்த்தியையும் கேட்டான். மிக்க சிறப்புடைய **சோதிவன**த்து இறைவனையும் **ஆனைமடு**வையும் கண்டான். விடிந்தவுடன் முறைப்படி ஆனைமடுவில் நீராடி இறைவனை வணங்குவோம் என்று நினைந்து, நீண்ட தூரம் நடந்து வந்த களைப்பினால் படித்துறையில் படுத்து உறங்கலானான். அயர்ந்து உறங்கிய அவனது கனவில், அவனது தந்தை பிணியாவும் நீங்கி முந்தைய நல்லுருவம் பெற்று எதிர் நின்றனன். எதிர் நின்ற தந்தையை நோக்கி, "நின் பிணி எவ்வாறு ஒழிந்தது? நீ எவ்வாறு இங்கு வந்தனை?" என வினவினான்.

அதற்கு தந்தையாகிய கண்ணுவமுனிவர், மகனே நீ அகன்ற பின் எமதூதர்களாகிய **காலர்கள்** வந்து எனக்குத் தண்டனைகள் தந்து, என்னைக் **கும்பி** என்ற நெருப்பில் வீழ்த்தினர். அப்போது என் முன் **அமந்தகன்** வந்தனன். வந்தவன் கண்ணுவனாகிய இவனது மகன் நல்லன்போடு சோதிவனத்திடைச் சென்று புண்ணியம் நல்கும் ஆனைமடுவினில் மூழ்கிட எண்ணி அங்கு உறங்கிக் கொண்டிருக்கின்றான். இவனை விட்டுவிடுங்கள் என்றனன். உடனே காலர்கள் என்னை விட்டு விட்டார்கள். என் பிணியும் ஒழிந்தது. நீ உன்னுடைய இடத்திற்குச் சென்று இனிது வாழ்வாயாக என்று விடை கொடுத்தனர். நான் மீண்டு வந்துவிட்டேன் என்றார்.

இவ்வாறு கனவு கண்டு விழித்த கண்ணுவர்மகன் மகிழ்ந்து ஆனைமடுவினில் மூழ்கி ஆனந்த வெள்ளத்தில் திளைத்திருந்தான். அப்போது கனவில் கண்டவாறே கண்ணுவர் அவரது மகனை நாடி சோதிவனத்திற்கு வந்து சேர்ந்தார். அவரது பிணியும் அவரை விட்டு அகன்றிருந்தது. ஆனைமடுவைப் போற்றித் துதித்தனர். ஆதலால் ஆனைமடுவில் ஒரு பொழுது மூழ்கி நீராடினாலும் ஏழுகடலில் நீராடிய பலன்களைப் பெறுவர். மேலும் கங்கையில் நீராடிய புண்ணியமும் கிடைக்கும்.

## *(26) தேவசேனப் படலம்*

கண்ணுவ முனிவரின் பாலநோய்த் துயரம் மாறிய வரலாற்றைத் தொடர்ந்து **தேவசேனன்** என்பவனுடைய வரலாறு கூறப்படுகிறது.

சிங்கள நாட்டில், நீர்வளம் நிறைந்த **விசாலையா** என்னும் ஊரில் தேவசேனன் என்ற பெயருடைய மன்னன் நீதிநெறி வழுவாது அரசாட்சி செய்து கொண்டிருந்தான். தருமசீலனாகிய அவன், வேதங்கள் கற்ற மறையவரின் அருமை உணர்ந்து அவர்களைப் போற்றுபவன். பகைவர்கள் அஞ்சும்படியாக, அவர்களை வீழ்த்தி நாட்டைச் சிறப்புடன் ஆள்பவன். வீபூதி ருத்திராட்சம் புனைந்தவன். வேதங்களைக் கற்றுத் தெளிந்த தீதிலாத சிந்தையன்.

ஒரு சமயம், கானகத்தே சென்று வேட்டையாட எண்ணி, சேனைகள் சூழ, யானை மீது ஏறி வேட்டைக்குச் சென்றனன். ஒரு மானைக் கண்டு, வேட்டையாடுவதற்காக அதைத் தொடர்ந்து சென்றான். அவனைக் கண்டு வெருண்டு ஓடிய மானும், அருகிலிருந்த அடர்ந்த சோலைக்குள் புகுந்து, அங்கு தவம் செய்து கொண்டிருந்த ஒரு மறையவன் அருகில் சென்று

ஒளிந்து கொண்டது. மானைப் பின்தொடர்ந்து அங்கு வந்த தேவசேனன், மானின் தோலைப் போர்த்துத் தவம் செய்து கொண்டிருந்த முனிவரை மான் என்று நினைத்து அவர் மீது அம்பு எய்தான். அம்பு பட்டு தவத்தில் இருந்த மறையவனும் மாண்டான். தவறை உணர்ந்த மன்னன் அஞ்சி நின்றான். அப்போது மறையவனின் தர்மபத்தினி, கணவனை இழந்து மனந் தளர்ந்து வருந்தியவள், தன் கணவரைக் கொன்ற மன்னனைப் பார்த்து, "எனது கணவரைக் கொன்ற உன்னுடைய வாழ்வு அழியட்டும்" என்று சாபமிட்டாள். மறையவனைக் கொன்ற காரணத்தால் பிரமகத்தி என்ற பாவம் மன்னனைத் தொடர்ந்தது. மன்னன் நிலை குலைந்து தளர்ந்தான். அவனுடன் வந்த சேனைகள் அரசனுடைய நிலையைக் கண்டு சோர்ந்து ஊர் திரும்பின. அவனுடைய நாட்டைப் பகைவர்கள் கவர்ந்தனர்.

பிரமகத்தி தோசம் தொடர அலைந்து திரிந்த மன்னன், தான் முன்னர் செய்த நல்வினைப் பயனால் 'சோதிவனம்' என்ற காளையார் கோயிலை வந்து அடைந்தான். வந்தவன் அங்குள்ள 'யானைமடு'வைக் கண்டு மூழ்கி எழுந்தான். அவனுடைய வினைகள் ஒழிந்தன. அவனைப் பிடித்த பிரமகத்தி நீங்கியது.

அதைக் கண்ட அனைவரும் வியந்து ஆனைமடுவின் சிறப்பினைப் புகழ்ந்தனர். பாவம் நீங்கிய மன்னனும் மகிழ்ந்து காளீசரைத் துதித்தான். அப்போது காளீசர் அரசன் முன் தோன்றி "நீதி வேந்தனே, நின் பாவம் தொலைந்தது. உன் பகைவர்கள் அழிந்து ஒழிந்தனர். உன் நண்பர்கள் இன்னும் நான்கு தினங்களில் உன்னைக் காண வருவார்கள். அவர்களுடன் ஊருக்குச் சென்று நாட்டைச் சிறப்புடன் ஆள்வாயாக" என்று அருளினார். அங்ஙனமே, அரசனுடைய நலம் நாடும் நண்பர்கள் சேனைகள் சூழ அரசனை அவனது நாட்டிற்கு அழைத்துச் சென்றனர். சோதிவனத்திலுள்ள ஆனைமடுவில் மூழ்கி, தன் பாவங்கள் தீர்ந்து, தேவசேனன் சீரும் சிறப்புமாக 'விசாலையா' என்ற நகரில் வாழ்ந்திருந்தான்.

ஆகையால், ஆனைமடுவினில் உவகையோடு மூழ்கி நீராடுபவர், மாதொருபாகன் வீற்றிருக்கும் கைலாயத்தை அடைந்து நிலைபெற்று வாழ்வர்.

## *(27) மகா காளேசப் படலம்*

மன்னன் தேவசேனனைப் பற்றிய பிரமகத்தி தோசம் நீங்கிய கதையைக் கேட்டோம். அதைத் தொடர்ந்து **'மாகாளன்'** சரிதையைக் கேட்போம்.

இமயமலையில் **காசிபமுனிவர்** என்றொரு முனிவர் வாழ்ந்து வந்தார். ஏனைய முனிவர்களால் போற்றப்படும் மேலோராகிய அவர், மெய்ந்நூல் நன்கு உணர்ந்தவர். விபூதி, ருத்திராட்சம் அணிந்தவர். ஒருசமயம் ஏனைய முனிவர்கள் அவரை அணுகி, வேத நற்பொருளை தெரிவிக்கும்படியாக அன்போடு கேட்டனர். காசிபமுனிவரும் நன்று என்று மறையின் உட்பொருளை உரைக்கத் தொடங்கினார்.

அப்போது, சைவ கணங்களுள் மேலோனாகிய மாகாளன் என்னும் தூயவன் ஒருவன் காசிப முனிவரை நோக்கி, அது பொருளன்று என்று நிராகரித்தான். நன்கு கற்றுத் தெரிந்து தான் சொன்ன உரையை மறுத்ததால் மாகாளனை '**மூங்கை** (ஊமை)' ஆகும்படிச் சபித்தார். உடனே மாகாளன், காசிப முனிவரை வணங்கிச் சாபவிமோசனம் வேண்டி நிற்க, முனிவரும் சீற்றமடங்கி, "உன்னடி மேலோங்க, நீ காளிபுரம் சென்று யானைமடுவினில் மூழ்கி எழுந்து, காளீசன் தன்னைப் பூசித்தால், அவரருளால் குற்றம் நீங்கும்" என்றார்.

காசிபமுனிவர் கூறியபடியே மாகாளன் சோதிவனம் சென்று யானைமடுவில் மூழ்கி எழுந்து ஆறுகாலமும் வழிபாடு செய்து தவம்புரிந்து வந்தான். ஒருநாள் கருணை

வள்ளலாகிய காளீசர் மாகாளன் முன் தோன்றி, "மாகாளனே, உன் தவத்தைக் கண்டு மகிழ்ந்தோம். உன்னுடைய மூங்கைத் தன்மை மாறிவிடும், வேதங்களின் பொருள்களை எல்லாம் ஓதி உணர்க" என்று அருளினார். மாகாளனும் பல்கலை வல்லோனாய், காளீசர் தாளை சொல்மாலையாலும், பூ மாலையாலும் வழிபட்டான். மாகாளனுடைய துதிக்கு மகிழ்ந்து, காளீசர் உமையுடன் காளைவாகனத்தில் காட்சி கொடுத்து **'பட்டபரண்'** என்னும் பேரைப் பெறுவாய் என்று அருளிச் செய்து, "இன்னும் வேண்டிய வரத்தைக் கேள்" என்றார். மகாகாளன், "எம்பெருமானே, உங்களைப் போற்றி வணங்கும் எனது பெயர் இறைவனாகிய தங்களுக்கும் இத்தலத்திற்கும் விளங்க வேண்டும்" என்று வரம் கேட்டான். முக்கண்ணனும் அப்படியே ஆகுக என்று வரம் தந்து மூலலிங்கத்துள் ஒளிந்தனன். அன்று முதல் சோதிவன இறைவனுக்கு **மாகாளேச்சுரன்** என்னும் நாமமும், ஊருக்கு **மாகாளபுரம்** என்னும் பெயரும் விளங்கிற்று. மாகாளனும் கயிலையங்கிரியை அடைந்து சிறந்த கவியாக இன்புற்று வாழ்ந்தான்.

## *(28) சோம நாதப் படலம்*

மாகாளனுடைய நற்கதையை அடுத்து சந்திரன் வெம்பிணியிலிருந்து மீண்ட செய்தி கூறப்படுகிறது. உமையம்மையினால் சிவபெருமானுக்குச் **சோமேசன்** என்ற பெயர் உண்டானது போல, காளையார்கோயிலில் இறைவனுக்குச் **சோமநாதர்** என்ற பெயர் வந்ததற்கான காரணத்தை உரைக்க வேண்டும் என்று அரசன் கேட்டான். உதங்க முனிவரும் அதற்கான காரணத்தைக் கூறத் தொடங்கினார்.

பிரமனின் கால்கட்டைவிரலில் பிறந்தவன் தக்கன். இவன் தன் பெண்களில் இருபத்துஏழு பேரைச் சந்திரனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். சந்திரனும் அவர்களுள் **ரோகிணி**யைத் தவிர மற்ற பெண்கள் மீது விருப்பம் இல்லாமல் இருந்தான். அப்பெண்கள் அவர்களது தந்தையாகிய தக்கனிடம் சென்று முறையிட்டனர். அதைக் கேட்டு வெகுண்ட **தக்கன்,** "சந்திரன் கயரோகி ஆகுக, அவனது கலைகள் தேயட்டும்" என்று சபித்தான். இந்தச் சாபத்தால் வருந்திய சந்திரன் தக்கனைப் பணிந்து இரக்க, அவனும் சினத்தோடு தன் சாபத்தைச் சிவனாலும் மாற்ற முடியாது என்று கூறினான். சந்திரனும் மனம் புழுங்கி பிரமன் முதலாகிய தேவர்களிடமும், பல முனிவர்களிடமும் சென்று இரந்தும், தக்கன் இட்ட சாபம் நீங்கப் பெறாமையால் வருந்தினான்.

இறுதியில் **ககோள முனி**வரிடம் சென்று தன் துயரைக் கூற, அவரும், "இவ்வுலகில் மிகவும் புண்ணிய பூமியாகிய சோதிவனம் சென்றால் விமோசனம் கிடைக்கும்" என்றார். உடனே சந்திரனும் சோதிவனத்தை அடைந்து புண்ணிய தீர்த்தங்களில் நீராடி உவப்புற்று காளீசரை வணங்கினான். சன்னிதிக்கு கிழக்கில் மூன்று விற்கடை தூரத்தில் தனது பெயரால் "சோம தீர்த்தம்" என்றதொரு தடாகத்தை உண்டாக்கி, அந்தத் தடாகநீரால் சோமேசருக்கு அபிடேகம் செய்து, விதிப்படிப் பூசை செய்ய, ஒரு நாள் காலை, லிங்கத் திருமேனியிலிருந்து சிவபெருமான் வெளிப்பட்டு, சந்திரனை நோக்கி, "தக்கனுடைய சாபத்தை என்னால் மாற்றுதல் அரிது. இருப்பினும் ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேட்பாயாக. "தேவர் முதலிய யாவர்க்கும் அமுத தாரைகளை பதினைந்து நாட்கள் கொடுக்காதே. பதினைந்து நாட்கள் மட்டும் உன் கலைகள் வளரும்படியாக அருள் செய்வோம்" என்றார். இவ்வாறு அருள் செய்தலால் தேவர்களும் மகிழ்வர். உன் உடலிலும் அமுதம் ஊறி ஒளிர்தர வளரும். தக்கன் சாபத்திற்கும் தாழ்வு இல்லை" என்றார். இதைக் கேட்ட சந்திரன், 'உய்ந்தேன், உய்ந்தேன்' என்று மகிழ்ந்து, இன்று முதல் என்னுடைய பெயரால் இத்தடாகம் விளங்க வேண்டும் என்று வேண்டினான். சிவபெருமானும் அவ்வாறே அருளினார். அமாவாசை முதல் சந்திரனும் பதினைந்து நாட்கள் கலை வளர்ந்தும், பிறகு பதினைந்து நாட்கள் கலை தேய்ந்தும் இருந்தான்.

அந்நாள் தொட்டு சோதிவனத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனுக்குச் **சோமநாதர்** என்ற பெயரும், தீர்த்தத்திற்கு **சந்திரபுட்கரணி** என்ற பெயரும் விளங்கலாயிற்று. அந்த தீர்த்தத்திலே நீராடி சோமநாதரை வழிபடுவோருக்குப் புகழ் செல்வம் கல்வி வனப்பும் எல்லாமும் ஒரு சேரக் கிடைக்கும். மேலும் **கயரோகம்** போன்ற துன்ப நோய்கள் நீங்கி இவ்வுலகில் சிறப்புற்று வாழ்வர்.

## *(29) சுந்தரமூர்த்திப் படலம்*

சோதிவனத்துக் காளீசருக்கு 'சோமநாதர்' என்ற பெயர் வந்த கதையை அடுத்துச் **சுந்தரர்** வரலாறு கூறப்படுகிறது.

சோழவளநாட்டில் **ஆரூர்** என்னும் நகரில் எழுந்தருளியிருக்கும் '**தியாகேசர்**' பால் அன்புடைய சுந்தரமூர்த்தி என்பார் மறையவர் குலம் விளங்க வந்தவர். சிவபெருமானைக் கனவிலும் மறவாது துதிக்கும் இயல்புடையவர். தலங்கள்தோறும் அடியார் கூட்டத்தோடு சென்று, சிவபிரானைப் பாமாலையால் வணங்கி வருபவர், **வையை** வளம் நிறைந்த பாண்டிய நாட்டின் கண்ணுள்ள **திருச்சுழி** என்னும் தலத்தை அடைந்தார். அத்தலத்து இறைவனை வணங்கி, **குண்டாற்றின்** கரையிலுள்ள மடத்தில் தங்கியிருந்தார். அவரது கனவில் காளீசர் '**காளை**' வடிவில் தோன்றினார். அவரைக் கண்ட சுந்தரர், தாங்கள் யார்? என வினவினார். அதற்குக் காளை வடிவில் கனவில் தோன்றிய காளீசரும், "யாம் சோதிவனத்து உள்ளோம். மையணி கண்டத்தானாகிய சிவபெருமானைப் பாடும் பணியையே பணியாகக் கொண்ட நீ, எம்மையும் பாடுக" என்றார்.

சுந்தரரும் அங்கிருந்தவாறே காளீசரை அன்போடு பாடித் துதித்து திருப்புனல்வாயில் தலத்திற்குச் சென்றார். அப்போது காளீசர், உமையவளோடு ஓர் மறையவர் வடிவத்தில் சுந்தரர் முன் தோன்றினார். வந்த மறையவரை நோக்கிச் சுந்தரர் 'நீவிர் யார்? எங்குள்ளீர்?' எனக் கேட்டார். மறையவரும், "நான் யார் என்பதைச் சொல்லுகிறேன், அதற்கு முன்னர் என் பசிக்கு அன்னம் வழங்குவாயாக" என்றார். சுந்தரர் விரைந்து உணவு ஏற்பாடு செய்து, மறையவரை அழைக்க, மறையவரைக் காணவில்லை. சமைத்த உணவையும் காணவில்லை. இறைவனது திருவிளையாடலே இது என்று சுந்தரர் நினைத்தார். அப்போது, "சோதிவனத்தில் என்னை வந்து காணாது எங்குபோக நினைக்கிறாய்?" என்று ஓர் அசரீரி விண்ணிலிருந்து ஒலித்தது. அசரீரியைக் கேட்ட சுந்தரர், அடியார் கூட்டமொடு சோதிவனத்திற்கு எவ்வாறு செல்வோம்? என்ற அளவிலேயே, இறைவனும் விடையின் மீது தோன்றி, "யாம் முன்னர்ச் செல்வோம், நீ குண்டாற்றை யொட்டி என்னைத் தொடர்ந்து வருவாயாக" என்றார். சுந்தரரும் வியப்போடு அக்காளையைப் பின்தொடர இறையருளால் சிறிது பயணம் செய்தபின்னர் காளையின் அடிச்சுவட்டைக் காணவில்லை. அடர்ந்த அவ்வனத்தில் வழி தெரியாது அடியவர்கள் தயங்கியதைக் கண்ட சுந்தரர், காளீசரை வணங்கித் துதிக்க, காளீசரும், அக்காட்டிலுள்ள மானின் அடியைத் தொடர்ந்து வருக என்று கூறியருளினார். மானைத் தொடர்ந்து சிறிது தூரம் சென்றபின் வழியெல்லாம் சிவலிங்கமாய்க் காட்சியளிக்க, அடிவைத்து நடக்க அஞ்சி, ஒருசார் ஒதுங்கிச் சென்ற சுந்தரர் முன்பு கோயில், விமானம், கோபுரங்கள் காட்சியளித்தன. அதைக் கண்டு மகிழ்ந்த சுந்தரர் அடியவருடன் கோயிலுக்குச் செல்ல விரைந்தார். இறைவன் திருவிளையாடலால் அந்த ஆலயம் மறைந்தது 'இதுவும் அரன் விளையாட்டே' என்று காளீசரைச் சென்று வணங்காததால் இங்ஙனம் நிகழ்ந்தது, என்று நினைத்த சுந்தரர், காளீசர் மீது பாடல்கள் பாடித் துதித்தார்.

காளீசர் அருளால், சிகரம் முதலாக கோயிலின் அங்கங்கள் ஒவ்வொன்றாகச் சுந்தரர் எதிரே காட்சியளித்தன. ஆலயத்திற்கு அடியார்களோடு சென்று சொல்மாலை புனைந்து காளீசரை வணங்கி அங்கிருந்து பல தலங்களுக்கும் சென்று, பாடிப் பரவினார்.

இவ்வாறு சுந்தரருக்கு காட்சி கொடுத்து அருளிய காளீசர் உறையும் இத்தலத்தின் பெருமையை யாரால் இயம்ப இயலும்?

## *(30) தேவராதப் படலம்*

சுந்தரமூர்த்தி காளீசரைக் கண்டு வணங்கி பாடிப் பரவியதைத் தொடர்ந்து, காளீசரால் '**தேவராதன்**' என்பவன் பெற்ற நன்மையை எனக்குத் தெரிந்தவரை சொல்லுகிறேன் என்கிறார் ஆசிரியர்.

**திருவாடானை**க்கு வடகிழக்கில், **திருப்புனவாயில்** அருகில் '**இந்திரபுரம்**' என்று ஓர் ஊர் உள்ளது. அந்நகரில் ஒழுக்க சீலனும், மறையில் வல்லோனும், சோமயாகம் செய்தவனுமாகிய '**தேவராதன்**' என்ற மறையவன் வசித்து வந்தான். அவனுக்கு இரண்டு மகன்கள். மூத்தவனாகிய **வினதனுக்கு** உபநயனம் செய்வித்து, நூல்கள் பல கற்பித்து வளர்த்தான். பின் தேவராதன், கங்கைக்குச் சென்று நீராட வேண்டும் என்ற விருப்பம் கொண்டான். மூத்தமகனைக் காளீசர் உறையும் காளிபுரத்திலுள்ள மாமன் இல்லத்தில் தங்க ஏற்பாடு செய்து, இளைய மகனோடும் மனைவியோடும் **வாரணாசி**க்குச் சென்றான்.

தேவராதன் சென்றவுடன், இந்திரபுரத்திலுள்ள அவனுடைய பொருள்களை எல்லாம் அங்குள்ள சிலர் அபகரித்துக் கொண்டனர். '**காந்தன்**' என்ற பெயருடைய மாமன் இல்லத்திலே வளர்ந்து வந்த வினதனுக்குத் திருமண வயது வந்தது. மாமனும் வினதனுக்குத் திருமணம் செய்ய எண்ணி அதற்கு வேண்டிய பொருளுக்காக மருமகனை அழைத்துக் கொண்டு, இந்திரபுரம் சென்றனன். அவ்வூரில் உள்ளவர்களிடம் வாரணாசிக்குச் சென்ற தேவராதன் இன்னும் வரவில்லை, அதனால் தேவராதன் மகனுக்குத் திருமணம் முடிக்க எண்ணி, அதற்கு வேண்டிய பொருளுக்காக இங்கு வந்துள்ளேன். தேவராதனுடைய நிலத்தை அனுபவிப்பவர்கள் அதற்குரிய ஊதியத்தைத் தாருங்கள் எனக் கேட்டான். இந்திரபுரத்தில் உள்ளோர் அனைவரும் தேவராதன் சென்றபின், அவன் அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரிப்பணத்திற்காக நிலத்தை விற்றுக் கொடுத்து விட்டோம். "ஒன்றும் மீதமில்லை" என்றனர். மாமனையும் மருமகனையும் ஊரை விட்டே துரத்தவும் செய்தனர். மாமனும் உள்ளம் வருந்தி இவ்வூரில் நன்னெறி இல்லையோ, கேட்க நாட்டார் இல்லையோ, மன்னர் தாம் இல்லையோ என்று புலம்பிய வண்ணம் மருமகனோடு காளிபுரம் வந்து சேர்ந்தார்.

சிறிது காலத்தில் மாமனும் இறந்து போனான். ஆதரவற்று வருந்திய வினதன் பிரம்மச்சரிய விரதத்தில் தவறாதவனாகி இல்லம் தோறும் பிச்சை ஏற்று உண்டு வாழ்ந்து வந்தான். காளீசரே தஞ்சம் என வணங்கி நின்றான். அவன் நிலைகண்ட காளீசரும், உமையவளோடும் இளையகுமரனோடும், 'வினதனின் தந்தை தாய் இளையசகோதரன்' போலக் காசியிலிருந்து கங்கை நீரைக் காவடிபோலக் கட்டிக் கொண்டு வருபவர்போல வந்தார். மகன் வினதனைக் கண்டு தழுவி மகிழ்ந்து சில நாட்கள் காளிபுரத்தில் இருந்தார். பிறகு வினதனை அழைத்துக் கொண்டு தேவராதன் வடிவில் வந்த காளீசர் இந்திரபுரத்திற்குச் சென்றார்.

இந்திரபுரத்தில் உள்ளவர்கள் தேவராதனைக் கண்டு கலங்கினர், ஆனாலும் உவகை கொண்டவர்கள் போல உபசரித்தனர். தேவராதனும் ஊரிலுள்ளோரை நோக்கி "நான் காசி சென்று பலநாட்கள் ஆகி விட்டன. இதுவரை எனது பங்கிலுள்ள ஊதியத்தை வரிச்செலவு போகக் கணக்குப் பார்த்துத் தாருங்கள்" என் மூத்த மைந்தனுக்கு மணம் முடிக்க வேண்டும் என்றான்.

ஊராரோ, நீ காசிக்குச் செல்லும் போது உன்னுடைய நிலத்தை யெல்லாம் பிறரிடம் விற்று விட்டாயே, இப்போது வந்து ஊதியம் கேட்டால் யார் கொடுப்பார்? "பித்தனோ நீவிர்" என்றனர். அதற்கு தேவராதனாகிய காளீசர், "நான் பித்தன்தான், அது இருக்கட்டும்,

நான் ஊராருக்கு நிலங்களை விற்றதற்கான ஆவணத்தில் என் கையொப்பத்தைக் காட்டுங்கள்“ என்றார்.

ஊரார், பொய்யான ஆவணங்களை எல்லாம் காட்ட, உண்மையறிய அரசனிடம் செல்வோம், என்று கூறித் தேவிகோட்டையில் சிறந்து வாழும், செங்கோலனாகிய பாண்டியகுல மன்னனான ‘**பூடணன்**‘ என்ற பெயருடைய மன்னனைச் சார்ந்தார். அரசனும் இரு பக்கத்தார் வாதங்களையும் கேட்டு உண்மையை ஆராய்ந்து, இந்திரபுரத்து ஊரார் காட்டிய சான்றும் ஆவணமும் பொய் என்று உணர்ந்து, இந்திரபுரத்திலுள்ள தேவராதன் நிலங்களை முன்போல் அவனுக்கு உரிமையாக்கினான். தேவராதனும் சில நாட்களில் தங்கள் குலத்திற்கு ஏற்ற பெண்ணை வினதனுக்கு மணஞ் செய்வித்தான். அப்போது காசிக்குச் சென்ற தேவராதனும் அவன் மனைவியும் இளையமகனும் வந்து சேர்ந்தனர். இதைக் கண்டு அங்குள்ளோர் அதிசயித்தார். காளீசரும் சொர்ணவல்லி அம்மையும் இளையமகனும் மறைந்தனர். தேவராதன் மகன் வினதனுக்கு ஆதரவாகக் காளீசரே உமையோடும் இளைய மகனோடும் வந்ததை அறிந்த தேவராதன், காளீசன் தாளைப் புகழ்ந்து பெரு வாழ்வு வாழ்ந்து வந்தான்.

காளீசரும் சொர்ணவல்லித் தாயாரும் வீற்றிருக்கும் காளீபுரத்திற்கு அன்றுமுதல் **அழகிய மங்களம்** என்ற பெயர் ஏற்பட்டது.

## *(31) காந்த புராண சங்கர சங்கிதையில் உள்ள கதாசங்கிரகப் படலம்*

பதினெட்டுப் புராணங்களுள் ஒன்றான பிரமகைவர்த்தபுராணத்தில் கூறப்பெற்றுள்ள கானப்பேரூர் என்ற காளையார்கோயிலின் கதைகளைக் கேட்டு மகிழ்ந்த முனிவர்கள், இத்தலம் பற்றி மற்றபிற நூல்களில் கூறப் பெற்றுள்ள கதைகளையும் கேட்க விரும்பினர். அவர்களது விருப்பத்தைக் கேட்ட சூதமாமுனிவரும் மிகவும் மகிழ்ந்து, சோதிவனத்துப் பெருமானின் சிறப்புக்களை எல்லாம் காந்தபுராண சங்கர சங்கிதையில் உள்ள கதாசங்கிரகப் படலத்தில் உள்ளதை உள்ளவாறு சொல்லத் தொடங்கினார்.

ஒரு சமயம் கயிலையங்கிரியில் சிவபெருமான் உமாதேவியாருக்குச் சோதிவனத்தின் சிறப்புகளை எல்லாம் சொல்வதைக் கேட்ட முருகப்பெருமான், அக்கதைகளை அகத்திய முனிவர்க்கு உரைத்தார். அதைக் கேட்ட அகத்தியரும் சோதிவனத்தை அடைந்து தவத்தை மேற்கொண்டார். அப்போது ஈசனார் பேரொளியாய்த் தோன்றி, “எல்லாவற்றிற்கும் ஆதாரம் யாமே“ என்று புகன்று, பூசனை விதிகளையும் கூறினார்.

பின்னர் ஒருமுறை, உமையம்மை அரனாரின் கண்களைப் பொத்தினாள். அதனால் உலகமே அக்கணம் செயலற்றுப் போனது. இதனால் இறைவன் கோபித்து, உமையைக் காளியாகுமாறு சபிக்க, அவளும், சாபவிமோசனம் வேண்ட, இறையனாரின் அருளுரைப்படி சோதிவனம் வந்து சாபம் தீர்ந்து இன்புற்றாள். முன்பு, அயன் அரி அரன் மூவருமே தாங்கள் படைத்துக் காத்து அழிக்கும் தொழிலால் மேம்பட்டவர் என்று அகந்தை கொண்டதால், இறைவனது சாபத்தைப் பெற்று, கானப்பேரூர் என்னும் இத்தலத்திற்கு வந்து தனித்தனியாக மூன்று தீர்த்தம் ஏற்படுத்தி காளீசரை வணங்கி மீண்டும் தத்தமது தொழிலைப் பெற்றனர். இந்திரனுடைய சபையிலே அரம்பை காரணமின்றி சிரித்தாள். இதனால் இந்திரன் கோபம் கொண்டு சாபமிட்டான். அரம்பையும் மணலூர் என்ற ஊரிலே தாசியாகப் பிறந்து, பிறகு சோதிவனத்திலுள்ள ஆனைமடுவில் மூழ்கி காளீசரை வணங்கி, சாபம் நீங்கப் பெற்று வானுலகு அடைந்தாள். ஊர்வசியின் சாபமும் இங்குதான் தீர்ந்தது. கைலாய

வெற்பில் ஈசனாரின் முன் நடனமாடிய ஊர்வசி மீது, அன்னத்தை ஊர்தியாகக் கொண்ட பிரமன் ஆசைப்பட்டான். இதனால் ஈசனின் சாபம் பெற்றான். இச்சாபம் கானப்பேரில் வந்து வழிபட்டவுடன் தீர்ந்தது. தாமரை மலரிலே வாழ்கின்ற இலக்குமியும், வாலகில்லியர் என்ற அருந்தவ முனிவரை இகழ்ந்து நிந்தை செய்தாள், அதனால் முனிவரின் சாபம் பெற்று கானப்பேரூருக்கு வந்து தவம் நோற்று தன் பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கி, காளீசரைப் பூசை செய்ததால் சாபம் நீங்கப் பெற்று திருமாலின் மார்பை மீண்டும் அடைந்தாள்.

**நைந்திருவன்** என்ற முனிவருடைய மகளைக் கண்டு வாயுதேவன் இச்சை கொண்டான். இதை அவள், அவளது தந்தையிடம் தெரிவித்தாள். இது கேட்ட, நைந்திருவ முனிவன், “உன்னை அவன் தொட்டால் அவனது தலை சுக்குநூறாக வெடிக்கும்“ என்று சாபமிட்டான். வாயுவும் அப்பெண்ணைப் பேயாகும்படி சபித்தான். பேயாக மாறிய தன் பெண்ணோடு நைந்திருவன் **காத்தியாயனர்** என்ற முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார். அவரும் “**மாசிமாதம் பௌர்ணமி** அன்று கானப்பேரூரில் வழிபட்டால் வாயுவால் உங்களுக்கு ஏற்பட்ட துயரம் போகும்“ என்று சொன்னார். நைந்திருவனும் தன் பெண்ணை அழைத்துக் கொண்டு கானப்பேர் சென்று மாசிப் பூரணையில் (பௌர்ணமியில்) ஆனைமடுவில் மூழ்கி நீராடிய அளவில் அவரது மகளின் பேய் உருவம் நீங்கிச், சுய உருவம் பெற்றாள்.

வாயுவும் அவ்வாறே செய்ய அவனது சாபமும் நீங்கியது. பின்னர் அனைவரது விருப்பப்படியும் நைந்திருவனது மகளுக்கும் வாயுவிற்கும் முறைப்படி திருமணம் நடைபெற்றது. இவ்வாறு காந்தபுராண சங்கர சங்கிதையுள்ள கதாசங்கிரகப் படலத்தில் சோதிவனத்தின் மான்மியங்கள் கூறப்பட்டுள்ளன.

## *(32) தல விசேடப் படலம்*

சங்கரனது கதைகளை எடுத்துக் கூற அவற்றை எல்லாம் உங்களது இயல்பிற்கு ஏற்றவாறு அறிந்து கொண்டீர்கள் . சிவபெருமான் தங்கியுள்ள காளிபுரமாகிய காளையார்கோயில் திருத்தலத்தின் சிறப்புகளைப் பொங்கிவரும் அன்பினால் இப்போது பொருந்தச் சொல்கிறேன்.

இமயமலை, தேவலோகம், காசி, தில்லை என்ற சிதம்பரம், கூடல் என்ற மதுரை, சீர் உலவும் அருணை, திருவாரூர், திருவாலங்காடு, திருவேளுர், பேரிடை மருதை, மாயூரம், சீர்காழி, திருக்குற்றாலம், காரோணம், சையம், திரிசிரபுரம் என்ற திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா முதலான பல சிறந்த சிவத்தலங்களுக்கான எல்லா மேன்மையும் ஓங்கி உள்ளதாகி இச் சீர்மிகு காளிபுரம் உள்ளது என்றார் முனிவர்.

பக்தி எல்லாமும் வேண்டுமானால் , பாவங்கள் போக வேண்டுமானால், சித்தம் நல்லமுறையில் சுத்தமாக இருக்க வேண்டு மானால், திகழ்தரு முத்தி வேண்டுமானால் , காளிபுரத் திருத்தலத்திற்கு வந்து ஒரு நாளேனும் அமர்ந்திட வேண்டும் . இவ்வாறான சிறப்புகளை எல்லாம் ஒரே நாளில் அளிக்க வல்லதால் இத்தலம் ஏனைய தலங்களி லும் சிறப்பானதாக உள்ளது.

எந்தக் குலத்தில் பிறந்தவராக இருந்தாலும் , எவ்வகை உயிர்களானாலும், இவ்வளவு சிறப்புகளையுடைய இத்திருத்தலத்தி ற்கு வந்து ஒரு மாத காலம் அமர்ந்து இருந்தால், அளவரிய குற்றமற்ற இன்பம், முத்தி பெறுவர். அதில் ஐயம் இல்லை.

ஒரு வாரம் தங்கியிருந்தால் தீய பாதகங்கள் தீரும், தரம் நிறைந்த மூன்று நாளில் சம்பாதகம் தீய்ந்து ஓடும் , பரவிய இரண்டு நாளில் சங்கலிகரணம் பாறும் , பெருகும் ஓர் நாளில் சாதிப் பிரமிச பாவம் போகும் , பகரும் ஏழு முகூர்த்தத்தில் ஏய பாத்திரி கரணம்

பாறும், திகழ் மூன்று முகூர்த்தத்தில் சங்கீரணத் தீதுதீரும் , அரிதாக நிகழும் கிரகண காலங்களில் நேர்ந்திடில் சனனம் நீங்கிப் , புகழ்வதற்கு அரிய கயிலையை அடைந்து புனிதராய் வாழ்வர்.

சிறப்புடைய அமாவாசை பௌர்ணமி முதலான பல பருவ நாட்களில் அன்னம் அங்கு ஒருவர்க்கு வழங்கினால் , அரிய வான்கயிலை கிடைக்கும், முன்னும் ஏகாதசினிருத்ரை ஆதிவேதம் சன்னிதியில் இருந்து ஓதினால் நினைத்த எல்லாம் தந்திடும்.

பேணி அத்தலத்தில் என்றும் பிதிர் சிராத்தம் செய்தால் , மேன்மை மிகுந்த கயையில் செய்த மாபலன் அடைவர் . மற்றும் சிவபெருமானுக்கு உகந்த திங்கள் கிழமையில், சிவபக்தர்க்கோ சந்நியாசிக்கோ அன்னம் வழங்கி உண்ணச் செய்வோர் , கயிலையை அடைவார்கள்.

தருமங்கள் செய்வோர் அந்தத் திருத்தலத்தில் ஒன்று செய்தாலும், அது பல ஆயிரங்களாகப் பல்கிப் பரவும். அன்பினால் ஒருவருடைய பசிக்கு அங்கு அன்னம் ஊட்டினால் மற்ற இடத்திற்கு வரும் பதினாயிரம் பேர்களுக்கு அன்னம் வழங்கியதற்கு ஒப்பாகும்.

இப்பெரிய உலகத்தில் வந்து பிறந்தவர் யாவரேனும், அவர்கள் இறக்கும் முன்னர், ஒரு நிமிடமாவது அன்போடு, அத்தலத்தில் வணங்கினால், தரணி யாவும் வந்து தன்னடி தாழ வாழ்ந்து, முத்தி அடைவர். அன்பு இல்லாதவரும், சற்றும் அறிவு இல்லாதவரும், வேசை இன்பமே கருதினவரும், யாது காரணத்தினாலோ, உயர்வுடைய அத்தலத்தில் வாழ்ந்தால், ஓர் நாள் அவர்களது துன்பங்கள் எல்லாம் நீங்கித், தூய பேரின்பம் வழங்கும். தெரிந்து பல பாவங்களைச் செய்த தீய சண்டாளன் முன்பு செய்த நல்வினையால் இங்கு வந்து வாழ்ந்தால் அவனது பாவங்கள் எல்லாம் மாறிப் புனிதம் அடைந்து நற்கதி அடைவான். இத்தலத்தில் தவம் செய்தால் உண்டாகும் பலனைக் கூறமுடியுமோ!

போற்றும் மாண்புகளை உடைய காளிபுரத்திற்கு ஈடான திருத்தலம் ஏதும் இல்லை. போற்றுதற்கு உரிய காளீசனின் நாமத்திற்கு இணையானது ஏதும் இல்லை. இதன் பெருமைகளைக் குறைத்து எண்ணினாலும் சொன்னாலும் நீசன் ஆவார். முன்பிறவில் செய்த கொடுஞ் செயல்களால் கொடிய நோய் கண்டாலும், கொடிய வறுமை நோயால் வருந்தினாலும், காளீசன் சன்னிதி அடைந்தால், சஞ்சலம் அனைத்தும் நீங்கி, மாற்றுதற்கு அரிய பேரானந்தக் கடலில் மூழ்குவர். சோதிவனத்தில் வாழ்வோரும், வந்து வழிபடுவோரும் எண்ணிய எண்ணியாங்கு எய்திச் சுத்தராய் முத்தர் ஆவார் . சொல்லும் அத்தலத்தின் மேன்மையைச் சூழ்ந்து யார்தான் கூறமுடியும்!

## *(33) முனிவர் பூசித்த படலம்*

என்றும் நிலைத்திருக்கக்கூடிய கயிலை நாதன், நில உலகிற்கு ஒரு நிலவு போன்று காளீசன் ஆகி , சிறந்த மெய்யன்பர்களுக்காகக் காளையார் கோயிலில் வீற்றிருந்து அருளுகிறான். இந்த உலகத்தில் உத்தம த் தலமாகிய காளிபுரம் என்ற காளையார் கோயிலின் புராண வரலாற்றை அன்பினால் அரும் தவம் மேற்கொண்ட சூதமுனிவன் கூறினான்.

பெரும் தவம் செய்தோர் அனைவரும் காளையார்கோயில் புராணக் கதைகளைக் கேட்டுப் பெரிதும் மனம் மகிழ்ந்து , உவகை பூத்து , மிகுந்த அன்பினால் அத்தலத்தைக் கண்டு கை தொழ வேண்டும் என விரும்பி , மேதகும் அன்பினோடு விமானத்தில் சென்றனர். சடாமுடியில் கொன்றை மலரை அணிந்து , உலக உயிர்களுக்கு எல்லாம்

தந்தையான சிவபெருமானை மனத்திற்குள் நினைத்துக் கொண்டே சோதிவனம் என்றும், கானப்பேர் என்றும், தென்காளிபுரம் என்றும், காளையார்கோயில் என்றும் அழைக்கப்படும் இத் திருத்தலத்தை நெருங்கினர்.

வானத்தில் இடைத் தோன் றிய காளையார்கோயிலைக் கண்டதும் , தனது சடாமுடியில் கங்கையை வைத்துள்ள சிவபெருமானை எண்ணி வியந்து புகழ்ந்தனர் சிலர் , நீண்ட நெடிய நிலைக் கோபுரங்களைக் கண்டு கை தொழுதார் சிலர் , காளையார்கோயிலின் சிறப்பான புராணத்தை வாசித்து அவற்றில் உள்ள கருத்துக்களை மதித்து , அதில் கூறியுள்ளபடி இறைவனை வணங்கி மகிழ்ந்தார் சிலர்.

முனிவர்கள், மிகுந்த சிறப்புகளையும் நல்லபல வளங்களையும் அளக்க முடியாமல் பெற்றுத், திருக்கயிலாயம் போன்று விளங்குகின்ற இத் திருத்தலத்தைக் கண்டு , சூழ்ந்து புண்ணிய தீர்த்தங்களில் விதிப்படி மூழ்கிப் புனித நீராடினர் . கையில் கமண்டலம் ஏந்தி, உடலில் விபூதியை நேர்த்தியாகப் பூசிக் கொண்டு , காளீசர் கோயிலுக்கு ஈசானியத்திசையில் உள்ள , **“வாள் மேல் நடந்த அம்மன்“** கோயிலுக்குச் சென்று வணங்கினர். பின்னர் காளீசனையும், மற்ற பிற தெய்வங்களையும் தாழ்ந்து வணங்கினர் . சந்நிதி மண்டபங்களின் நின்று ஏத்தும் நான்மறை ஓதுபவர்களையும் , திருமுறை ஓதுபவர்களையும் கண்டு வாழ்த்தினர்.

ஐங்கரன் நந்தி முதலான அனைவரையும் தொழுது சூழ்ந்து , சங்கரனைக் காண்பதற்கு ஏற்றதான பொருட்களைத் தங்களது கைகளில் எடுத்துக் கொண்டு கோயிலிலுக்குள் சென்றனர் . அங்கு எழில் பொருந்திய காளீசனையும் , சோமேசனையும் கண்டு அபிடேகம் செய்து , அவர்களுக்கான ஆயிரம் திருநாமங்களைக் கூறி அர்ச்சித்தார்கள். சந்நிதிகளில் நின்று தாழ்ந்து பணிந்து, வேதப் பொருள்களாலே காளீசனை நினைந்து துதித்து, உள் அன்பில் உருகினர் . அப்போது அங்கே காளீசன் அருள் ஒளி வடிவில் தோன்றி, “உங்களுக்கு வேண்டும் வரங்கள் என்ன? அவற்றை நான் அளிப்பேன்” என்றான்.

பெரும் பாவமாகிய இப் பிறவிக்கடலைக் கடக்க விருப்பம் கொண்ட , அந்த முனிவர்களும், “நாங்கள் பற் றற்று உள் அன்போடும் , உனது திருவடித் தாமரையை அடையத் திருவருள் செய்ய வேண்டும்” என வேண்டி நின்றனர் . “தவத்தில் சிறந்தோர்களே, நீங்கள் எனது புராணக் கதைகளைக் கேட்டு , அன்பினால் இங்கு வந்து , என்னை வணங்கித் துதித்துள்ளீர்கள் . பக்தி இல்லாதவர்களும் ஞானபா தம் இல்லாதவர்களும் விரும்பி , இத் திருத்தலம் வந்து வணங்கினால் , எல்லாவற்றிற்கும் மேலான முத்தி வழங்குவேன். பின்னர் அவர்களுக்கு கூறிக்கொள்வது என்ன என்றால் , சத்தியம், இத்தலம் வந்து வணங்கியோரை நான் என்றும் விட்டு அகலமாட்டேன” என்றான் சிவபெருமான்.

இவ்வாறு காளீசன் அருளியது கேட்ட முனிவர் எல்லோரும் , எங்கள் காளீசனின் பொன்மயமான திருவடித் தாமரையில் தாழ்ந்து , மனத்துள் ஐந் தெழுத்தைச் சிந்தித்து , ஆனந்தக் கடலுள் மூழ்கி, சிவபதத்தில் வாழ்ந்து இருந்தார்கள்.

*வாழி அந்தணர் மாமழை வாழியே*
*வாழி மன்னவர் வையகம் வாழியே*
*வாழி சோதிவனத்தின் காளீசன்தாள்*
*வாழி அன்பர் மலர்ப்பதம் வாழியே !*

**காளையார்கோயில் புராணம் முற்றிற்று.**

**சுபம்.**

# காளையார்கோயிலில் நகரத்தார் திருப்பணிகள்

காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர்.நா.வள்ளி
அவர்களது இல்ல நூலகத்திலிருந்த நூல்களில் இடம் பெற்றுள்ள
காளையார்கோயில் திருப்பணிகளின் தொகுப்பு

வித்துவான் வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் அவர்கள் தொகுத்து, பண்டிதமணி மு.கதிரேசச் செட்டியார் அவர்களால் திருத்தி விளக்கி அமைக்கப்பெற்று, சென்னை நகர முன்னாள் மேயர் திரு. ராம. இராமநாதன் செட்டியார் அவர்களால் 1953-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட, "நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு" என்ற நூலில் உள்ளபடி.

## 107. திருக்கானப்பேர் (காளையார்கோயில்)

சுவாமி பெயர் - காளையீசுரர், சுந்தரேசுரர், சோமேசுரர்
அம்மை பெயர் - சொர்னவல்லி, மீனாட்சி, சவுந்தரநாயகி

இத்தலத்தில் உள்ள சோமேசர் கோவில் அமராவதி புதூர் வயிநாகரம் வேங்கடாசலம் செட்டியாரால் ரூபாய் ஒரு லட்சம் (1,00,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்று, பார்த்திப தை 13-ம் நாள் (24.1.1886) கும்பாபிடேகம் செய்யப் பெற்றது.

காளையீசுரர் கோவில் தேவகோட்டை ஜமீந்தார் அழ.அரு.இராமசாமிச் செட்டியாரால் ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் (2,50,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றும், சொர்னவல்லியம்மை கோவில் தேவகோட்டை தி.ராம.சு. & தி.ராம.தி., மேற்படி குடும்பத்தினரால் ரூபாய் எழுத்தையாயிரம் (75,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றும் விகாரி தை 23-ம் நாள் (22-1-1900) கும்பாபிடேகம் செய்யப் பெற்றுமுள்ளன.

சவுந்தரநாயகியம்மை கோவில் ஒக்கூர் சி.கரு.ஆ. கண்ணப்ப செட்டியாரால் ரூபாய் ஐம்பதாயிரம் (50,000) செலவில் திருப்பணி செய்யப் பெற்றுச் சாதாரண ஆனி 14-ஆம் நாள் (27-6-1910)கும்பாபிடேகம் செய்யப் பெற்றது.

தேவகோட்டை அழ.அரு.ராம. அருணாசலம் செட்டியாரால் ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் (1,50,000) செலவில் தெப்போற்சவ மண்டபம், சொக்கட்டான் காய்ச்சாரி மண்டபம் முதலியன நிறுவப் பெற்றுள்ளன.

குறிப்பு - ரூபாய் இருபத்தொன்பதாயிரம் (29,000) செலவில் கொ.அழகாபுரி உ.தெ.மெ.சோம., சோழபுரம் சுப.க.அ.சித.ராம., கொ.அழகாபுரி உ.நா.ராம., க.மெ., கரு.கண. இவர்களால் வேதாகம பாடசாலைகளும், கானாடுகாத்தான் க.வெ.வால் தேவார பாடசாலையும், நகரத்தார்களால் ரூபாய் ஒரு லட்சம் (1,00,000) செலவில் வேதாந்த மடமும், ரூபாய் ஆறாயிரம் (6,000) செலவில் நடராசபுரம் முரு.ராம.முரு.வால் குருபூஜை மடமும், ரூபாய் இரண்டாயிரம் (2,000) செலவில் வெற்றியூர் ஈரோடு முத்தையா செட்டியார், மேற்படி மு.அரு.மு. சோமசுந்தரம் செட்டியார் இவர்களால் திருநீறு மடமும், ரூபாய் பதினாயிரம் (10,000) செலவில் பனங்குடி முரு.உ.பழ.முரு.வால் குங்கிலியக்கலய நாயனார் மடமும், ரூபாய் முப்பதாயிரம் (30,000) செலவில் தேவகோட்டை அழ.அரு.கீழைவீட்டார், கொ.அழகாபுரி. க.மெ., தி.ராம.தி. இவர்களால் திருநந்தனவனமும், ரூபாய் முப்பத்தையாயிரம் (35,000) செலவில் தேகோட்டை சொ.மெ.பழ., அழ.வீர.சித., பழ.ப.பழ. இவர்களால் பசுமடங்களும், ரூபாய் இருபத்தையாயிரம் (25,000) செலவில் நற்சாந்துபட்டி கும.பெரி.வால் அன்னசத்திரமும் ரூபாய் பதினாயிரம் (10,000) செலவில் தேவகோட்டை பெரி.சோம.வால் திருநடனமடமும், ரூபாய் ஏழாயிரம் (7,000) செலவில் வெற்றியூர் ஈரோடு முத்தையா செட்டியாரால் சருவேசுவராலயமும் சங்கேசுவராலயமும், ரூபாய் எண்பத்திரண்டாயிரம் (82,000) செலவில் தேவகோட்டை ஜமீந்தார் வகையினரால் ருத்திரசெப பிரம்மாலயமும், ஆனைமடுத் திருக்குளமும், மையமண்டபமும், ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் நாட்டரசன் கோட்டை கிருஷ்ணன் செட்டியாரால் பன்னீர் மடமும், ரூபாய் ஐயாயிரம் (5,000) செலவில் அழ.அரு.சொக்கலிங்கம் செட்டியாரால் சந்தன மடமும், ரூபாய் பன்னீராயிரம் (12,000) செலவில் அமராவதிபுதூர் வெ.ராம.ஆ., நாட்டரசன் கோட்டை ஆ.சுப.சு. இவர்களால் திருக்குளமும், ரூபாய் முப்பதாயிரம் (30,000) செலவில் சோழபுரம் சுப.க.அ., நடராசபுரம் முரு.உ.பழ.முரு. இவர்களால் பெருமாள் கோவிலும், ரூபாய் பதினாயிரம் (10,000) செலவில் பாகனேரி பெரி.அழ.மு.வால் திருவாய்மொழிப் பாராயணமும் ஏற்படுத்தப் பெற்றுள்ளன.

---

## கும்பாபிடேகக் கவித்திரட்டு

ஆசிரியர் கண்டனூர் நா.பெ.நா.மு. முத்துராமையா **1913-**இல் விவேகபாநு அச்சியந்திர சாலையில் பதிப்பிக்கப் பெற்றது.

# காளையார்கோயில் கும்பாபிடேகம்

## பார்த்திப வருடம் **(1886)**

சுயமான கலியுகம் நாலாயிரத்துத் தொளாயிரத்தெண்பதேழிற்
சூழ்கின்ற பார்த்திபநல் வருடத்தின் மகரமதி தூய பதின்மூன்றுதேதி
சுத்தமாம் பானுவாரத்தின் உத்திரம் வருஞ்சொல் இடபலக்கினஞ்சேர்
சுபதினத்து உயர்வான பாண்டிநாட்டிற் சிறந்தொளிர்கின்ற யானைமடுவோடு
இயலான காளையார்கோவிலென்று இசைபெறு நல் எழில் கானப்பேரமர்ந்த
இனியநற் சுயமான காளீசமூர்த்தியோடு இனியகாஞ் சுவர்னவல்லி
யேர் வேங்கடாசலச் செட்டி புதுமையதாய் இயற்றிடும் பணியில் அன்பாய்
இன்புடன் உவந்து எழுந்தருளும் நம்சோமேச இறைவற்கு இடதுபங்கில்
நயமாஞ் சவுந்தரநாயகிக்குந் தேவநகரரசு ராமசாமி
நாமுறு வணிகன்முதல் அனைவருங்கூடி யெந்நாளும் இஃது அரிதென்னவே
நலமான மந்திரங்கிரியை பாவனை யெலாம் யாதுமொரு குறைவின்றியே
நன்மையா யஷ்டபந்தன நடப்பித்த புகழ் நான்கூற எளிதாகுமோ
செயமுடைய காளீசர் பொன்வல்லி கோவிற் றிருப்பணி பழமையாலே
சீரணோத்தாரணஞ் செய்துமேற் கும்பாபிஷேகமுஞ் செய்வதற்குச்
செல்வர்கள் யாவரோ அவர்கட்கு மேன்மேலுஞ் செயமதுண்டாகி இன்பச்
சிவபதம் அடைவதிற் சந்தேகமில்லெனச் செப்பினேன் அறிக மாதோ.

---

## விகாரி வருடம் **(1899-1900)**

திருவான கலியுகம் ஐயாயிரத்தொன்று சேர்ந்திடும் விகாரி வருடந்
தேர்மகரமதி தேதி இருபத்து மூன்றினிற் றிகழ் ஞாயிறமா பக்கந்
தெளிவான பஞ்சமி திதியும் ரேவதியினிற் செய மீன லக்கினத்தே
தென்னவன் தேசத்தின் நன்னகரமானதொரு தேவை நகரதனில்வாழுந்
தருவான ராமசாமிப்பிரபு  மகவான தாஷ்டீக அருணாசலத்
தனதனொடு தம்பிமார் மூவரும் காளையார் கோவிலெனும் மாதலத்தில்
தற்பரமரான நம் காளீசமூர்த்தியொடு தன்மையுள சொன்னவல்லித்
தாயினுக்கும் மயன் விஸ்வகன்மன் செயாத் தகைமையுள பணிகள் செய்தே
அருமையுள அஷ்டபந்தனமோடு கும்பாபிடேகமுஞ் செய்து அன்பில்
அளவிடக்கூடாத மறையோர்கள் அடியார்கள் அரசர்கள் வணிகர் சூத்ரர்
அறிவான உத்யோக முறையிற் சிறந்தவர்க்கு அணியணி சாகைகண்டு
அன்னமுஞ் சொன்னமும் நன்னயமதாகவே அள்ளிஅள்ளிக் கொடுத்தும்
பெருமையுள பிரபுக்கள் விசாரணை செய்திடப் பிஞ்ஞகன் தனையும் இரவு
பெரிதான ரதரிஷப வாகனத்திற் பவனிவந்திடப் பெற்ற பெருமை
பேசவோ சேடனும் பின்னிடுவன் இப்பணி பிரியமாச் செய்வர் தம்மைப்
பெருக்கமாய் வாழ்வரென முன்னநான் சொன்னகவி பேணியே பார்க்கமாதோ.

---

## குரோதி வருடம் **(1904-**05)

சீர்பெறு குரோதி சம்வற்சரம் வைகாசி தேதி பதினாலதனிலே
தேவநகர் வாழ் ராமசாமி நற்செடியார் செய்தவத்தாலுதித்த
பாருறுஞ் சீரகத்தார் அருணாசல பாக்யவான் தம்பிகளுடன்
பரமான காளையார் கோவிலில் யானைமடு பார்ப்பதற்கு அழகு செய்யக்
காருறும்படி மையமண்டபம் விமானங் கணக்குடன் தானமைத்துக்
காண்பதற்கு இன்பஞ்செய் தெப்பமதுகண்டு நங்கடவுள் சோமேசர் வரவே
யேருறும்படி தீபமேற்றி எங்கணும் உலகர் இன்புறச் செய்து தினமும்
இப்படி நடக்கக் கிராமஞ் சமர்ப்புவித்து இருமை நலம் எய்தினாரே.

---

பாண்டிதேச சிவஸ்தலங்களில் காளையார்கோவிலென்று பெயர் விளங்கிய கானப்பேரென்னும் ஸ்தலத்தில் சோமேசுரர் காளீசர் சுந்தரேசருக்கு நாட்டுக் கோட்டை நகரத்தார் பார்த்திப வருடம் தைமீ **23** உ நடப்பிவைத்தை கும்பாபிஷேகச் சிறப்பைப் பற்றி மேற்படியூர் காளையார்கோவிலிலிருக்கும் முத்துகாளை பிள்ளையவர்கள் இயற்றிய சில பாடல்கள்.

வெண்பா

(1)

நன்நாட்டுக்கோட்டை நகரத்தார் கானப்பேர்
பொன்னாட்டுக் கோட்டானை பூசிக்கு - முன்னோனுக்கு
அற்புதக் கும்பாபிஷேகஞ் செய்வித்தார்
கற்பக நேராகவே காண்

(2)

கானப் பேரூரிற் கடவுள்ர்க்கு உள் அன்பாய்
ஞானப் பேராகு நகரத்தார் - வானப்பேர்
கொண்டாடச் செய்வித்த கும்பாபிஷேகத்தைக்
கண்டார்கட் குண்டாங் கதி.

(6)

கூடெழிற் கானப்பேரூர் கும்பாபிஷேகங் காண
நாடலுற்று வந்தோர்க் கெல்லா நகரத்தார் அமுது உண்பித்த
பீடமர் இனிமைபோல் முன்பிறங்கா வாறேனுஞ் செய்தால்
ஆடரா நஞ்சுமண்ணும் அரன் மாலன்றருந்திடாரே

(7)

பொன்மலி தென்கானப்பேர் ஈசர்க்கு அன்பாய்
புகழ் கும்பாபிஷேகஞ் செய்வித்தற்கு
நன்மதி நல்லறந்திகழு நாட்டுக்கோட்டை
நகரத்தார் ஈந்தநிதி நவில எண்ணிற்
றன் மனமார்ந்தின்பநிலை பெற்றுவாழும்
தனபதி தன்பொருணிகரதாகும் என்றால்
மின்மினியீதது நிறைமாமதி ஒப்பென்றே
விளம்புதுமிவ்வுலகம் இனி வேறென் சொல்வாம்.

---

## சங்ககாலப் பாடல்களில் கானப்பேர்

**1)** சங்கப் புலவர் **" ஐயூர் மூலங்கிழார் ",** வேங்கைமார்பனோடு பொருதிய கானப்பேரெயில் *கடந்த உக்கிரப்பெருவழுதியைப் பாடிய புறநானூற்றுப் பாடல். (புறம்:21)*

*"**புலவரை யிறந்த புகழ்சால் தோன்றல்**
**நிலவரை இறந்த குண்டுகண் அகழி**
**வான்தோய் வன்ன புரிசை விசும்பின்**
**மீன்பூத் தன்ன உருவ ஞாயில்**
**கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை**
**அருங்குறும்பு உடுத்த கானப் பேரெயில்**
**கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய**
**இரும்புண் நீரினும் மீட்டற்கு அரிதென**
**வேங்கை மார்பன் இரங்க வைகலும்**
**ஆடுகொளக் குறைந்த தும்பைப் புலவர்**
**பாடுதுறை முற்றிய கொற்ற வேந்தே**
**இகழுநர் இசையொடு மாயப்**
**புகழொடு விளங்கிப் பூக்கநின் வேலே**".*




வேங்கைமார்பனின் கானப் பேரெயில் இருந்ததாகக் கூறப்படும் இடம் படத்தில் (1) வட்டமிட்டுக் காட்டப் பெற்றுள்ளது.

இந்த இடத்தில், மிக அடர்ந்த காடு இருந்துள்ளது. அதில் மிகவும் ஆழமான, சுமார் 1500 அடி விட்டம் கொண்ட அகழியின் நடுவே, மிக அகண்டு உயர்ந்த வேங்கைமார்பனின் கோட்டை இருந்துள்ளது.

---

2) சங்கப் புலவர் "**பேரெயில் முறுவலார்**" காளையார்கோயிலைச் சேர்ந்தவர். இவர், புறநானூறு 239 "இடுக சுடுக எதுவும் செய்க......" என்ற பாடலில் நம்பி நெடுஞ்செழியனைப் பாடியள்ளார்.
திணை: பொதுவியல் துறை: கையறுநிலை

3) இவர், குறுந்தொகை 17 பாடலையும் பாடியுள்ளார்.
குறிஞ்சி - "தலைவன் கூற்று"

---

4) சங்கப் புலவர் "**ஔவையார்**" புறநானூறு 367 "வாழச் செய்த நல்வினை....." என்ற பாடலில் சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் **கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி**யும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரைப் பாடியுள்ளார்.
திணை: பாடாண் துறை: வாழ்த்தியல்

---

**தனிப்பாடல்கள்**

## காளையார்கோயில் தல புராணம் (கதைச் சுருக்கம்)

**1)** தென்கா குலதிலகன் கானப்பேர் ஊர் வளரும் திங்கள் ஒளிவதன சீராளன், மங்கா சொர்ணம் ஒளிர் தொன்முலையாள், கர்ணனும் பின்னடைந்தான் காண்.

**2)** நஞ்சை யெல்லாம் தின்று, நமதிறைபையையும் பிடுங்கி,
புன்செய்யெலாம் பூந்தழித்துப் போட்டதே,
செஞ்சொல் மறைக்காளை, சுகந்தவனக்காளை,
கண்டங்கரைக் காளை, காளைநகர்க் காளை.

(இத் தனிப்பாடல்கள் இரண்டும் சொர்ணகாளீசுவரனின் தகப்பனார் சுப்பையா பிள்ளை அவர்கள், ஜமீன்தார் அள.அரு.சோம.நா. அவர்களிடம் சொன்னவை)